http://www.magudammichael.blogspot.com

# மகுடம்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்


இதழ் - 02

ஏப்-ஜூன்

2012

ஆசிரியர் : வி. மைக்கல் கொலின்





தாமரைத்தீவானின் தடங்கள்



அர்த்தநாரிஸம்



ச. ராகவன் நேர்காணல்

மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்

தானதுவாகி தழைப்பதும் மகுடம்

விலை

ரூ.100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HDFC BANK

HDFC BANK

உங்களுக்கான வீடமைப்பு வங்கி

# GOLD LOAN அடகுக் கடன் சேவை

## எமது வாடிக்கையாளர் நலன் கருதி.......

தற்போது தங்க நகை அடகுக்கடன் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

★ குறைந்த வட்டி ★ பாதுகாப்புத் தன்மை ★ நம்பகரமான துரித சேவை

எமது "PALM TOP" நடமாடும் கணனி வங்கி உங்கள் காலடியில்

★ நீங்கள் அதிக வேலைப்பளு மிக்க வியாபாரியா....?
★ வங்கியில் நீண்ட வரிசையில் நின்று நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை......
★ உங்கள் சேமிப்புகளுக்கு அதிகூடிய வட்டி.....
★ இலகுவாக கடன் ஒன்றினை பெறும் வகதி.....
★ நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு உத்தரவாதம்....



இலகுவான தோழமையுள்ள சேவை தரும் அரச வங்கி

HDFC வங்கி

58, பெயிலி வீதி, அரசடி, மட்டக்களப்பு.

தொ.பே. : 065 2222792, 065 2227573



REG No. D.380

# ஸ்ருடியோ ஜயனி

307, திருமலை வீதி
மட்டக்களப்பு.



சகல விதமான
படப்பிடிப்புகளும்,
பழைய படங்களை திருத்தியமைத்து
பெரிப்பித்தும் தரப்படும்.

# வெஜி & புறூட் பாம்

நாவற்குடா & கல்லடி



மரக்கறி வகைகள்
பழ வகைகள்
மற்றும் கொச்சி, கத்தரிக் கன்று
வகைகளும் விற்கப்படும்.

தொடர்புகளுக்கு:

அலுவலகம் : 0652223201


வதிவிடம் : 0652224599 / 0770475254


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடம்

கலை இலக்கிய சமூகபண்பாட்டு காலாண்டிதழ்

இதழ் – 02 ஏப்ரல் – ஜூன் –2012

சிறுகதைகள்


25. அகங்கார மூர்த்தியின் அலுவலகக்கோப்பு
– சித்தாந்தன் –

31. எண்களுடன் பயணித்தல்
– திசேரா –

39. ‘‘எல்லாம் நிறைவேறிற்று’’
– வி.மைக்கல் கொலின் –


நூல் மதிப்புரை


18. கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ்
உமாவரதராஜன் கதைகள்

03. தலையங்கம்

10. கவிஞர் வாசுதேவன்
பத்தி

79. நூல் அறிமுகம்

82. கடிதங்கள் – கருத்துக்கள்


பயணக் கட்டுரை


42. தீர்க்கதரிசனங்களின் நிலம்
– அ.ச.பாய்வா –




கட்டுரைகள்


05. அர்த்தநாரிஸம்
– பேராசிரியர். சி.மௌனகுரு –

11. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தாமரைத்தீவானின் தடங்கள்
– பேராசிரியர். செ.யோகராசா –

33. கீதாஞ்சலி கே.நல்லையாவின் கலைப்பணிகள்
– சி.மேகிலா –

35. உலக வரலாற்றில் இடம்பிடித்த முக்கியபுரட்சிகள்
– பொன்னுத்துரை நிலாந்தினி –

52. மட்டக்களப்பின் கேலிச்சித்திர ஓவியராக அருள் சஞ்சித்
– சு.சிவரெத்தினம் –

81. புரிதலை நோக்கிய நகர்வு
– திசேரா –


நேர்காணல்


55. மௌனமே வாழ்க்கையாக
– ச.ராகவன் – பா.துவாரகன்


கவிதைகள்


02. ராஜாத்தி

04. கருணாகரன்

24. தில்லைநாதன் பவித்திரன்

30. முல்லை வீரக்குட்டி – சீ.என்.துரைராஜா –

34. கோ.பா.நாதன் – புலோலியூர் வேல்நந்தன் –

38. கனகரமேஸ்

78. கு.றஜீபன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரங்களும் கருவிகளும்

கரங்களில் எதுவிதகருவிகளுமின்றி
கரங்களின் வலிமைபற்றி
கற்பித்தக்கொண்டிருக்கின்றேன் நான்
அவரவர் கரங்களின் தேவைபற்றி
அவரவர் கரங்களின் வலிமைபற்றி
அவரவர் கரங்களின் பெருமைபற்றி
அது. இது. இன்னும் பிறவென
கற்பித்துக் கொண்டிருக்கின்றேன்

எனதுகரங்களில் கருவிவந்தபோது
கருவியின் வலிமைதெரிந்தேன்
கரங்களின் வலிமைசொன்னவர்க்கெல்லாம்
கருவியின் வலிமைசொன்னேன்
கரங்களில் கருவி இருக்கும் வரைதான்
கரங்களிற்குவலிமை
கருவிகளுக்காகவேகரங்கள்
கருவிகள் இல்லாதபோது
கரங்களுக்கென்னவேலை
கருவியா.. கரமா..
கருவிதான்வலிமைநிறைந்தது


கருவிகள் என்னைகதாநாயகனாக்கியது
வெற்றுக் கரங்களுடன்
மற்றவர் என்னைவேடிக்கைபார்த்தனர்
வெற்றுக் கரங்களைநான் வேடிக்கைபார்த்தேன்
மகிழ்ச்சியல் உள்ளம் பூரித்துப்போனேன்
மற்றவர் கரங்களிலும் கருவிகள் முளைத்தது

ஒருவர்..இருவர்..பலபேர்..
கருவிகளுடனேஉலாவரத் தொடங்கினர்
கருவிகள் கதைத்தன
கருவிகள் சிரித்தன
கருவிகள் முறைத்தன
வெற்றுக் கரத்தோர்
வேற்றுவாசியாய் புறந்தள்ளப்பட்டனர்

மறுகரத்திலேமுளைத்ததோர்கருவி
என்கரம் களைந்தவேளை
கரங்களின் தேவை உணர்ந்தேன்
கரங்களின் வலிமைதெரிந்தேன்
கருவியா.. கரமா..
கரங்கள்தான் வலிமைநிறைந்தது
கரங்கள் இருக்கும் வரைதான் கருவி

31.01.2012

## நான் காதல் செய்து கொண்டிருக்கிறேன்...



எப்போதுமேதிரும்பிவராதஒருவனிடம்
நீஎப்போதுவருவாய் என்றுகேட்பதுபோல
எனதுகாதலியின் காதலும்
நான் அவளைக் காதலிக்கவில்லை
காதல் செய்துகொண்டிருக்கிறேன்
அவளோ என்னைக் காதலித்துக் கொண்டிருக்கிறாள்

அவளதுவிரல் தடவிதலைகோதி
காதல் கதைபேசவிருப்பம் எனக்கு
அவள் கழுத்தில் முத்தமிட்டு
இருகைகளாலும் இறுக்கிஅணைத்து
இதழ்களில் முத்தம் கொடுப்பதில்
இன்னும் விருப்பம்

அவள் இடைதடவி இடையின் மேலுள்ள
மார்புகள் தடவிஅவளது மூச்சிக்காற்றை
சுவைப்பதில் தனி இன்பம்
எப்போதாவதொருநாள் எல்லாம் சுவைத்தபின்
அவள் யாரேநான் யாரோ

ஒருபோதுமேநான் அவளைக் காதலிக்கவில்லை
காதல் செய்துகொண்டிருக்கிறேன்
ஆனால் அவளோ
என்னுடன் காதல் செய்யவில்லை
ஒவ்வொருபொழுதும்
என்னைக் காதலித்துக் கொண்டிருக்கிறாள்

23.01.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுடம்
கலை இலக்கிய சமூகபண்பாட்டு காலாண்டிதழ்

மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகிதழைப்பதும் மகுடம்

இதழ் - 02 ஏப்ரல் - ஜுன் -2012

ஆசிரியர் :
வி.மைக்கல் கொலின்.

E-mail:
w.michaelcollin@ymail.com
w.michaelcollin@gmail.com

Web:
www.magudammichael.blogspot.com

Layout by : Michael

கணனி வடிவமைப்பு :
ஜெயலக்ஸ்மி அரவிந்தன்

முன் அட்டை : அ.ச.பாய்வா

உள் ஓவியங்கள் : பா.கோபிறமணன்

'மகுடம் பப்ளிகேஷன்ஸ் (பி)
லிமிட்டட்டிற்காக மட்டக்களப்பு வணசிங்கா
அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்
ஹஜேந்தினி மைக்கல் கொலின்

சகல விதமான தொடர்புகளுக்கும்

ஆசிரியர்
'மகுடம்'
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை
Tel : 0774338878

Contact :
EDITOR
MAGUDAM
90, Bar Road,
Batticaloa - Sri Lanka.

படைப்புக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

# 2009க்கு முன் 2009க்கு பின்

மகுடம் கலை இலக்கிய சமூகப் பண்பாட்டுக் காலாண்டிதழின் இரண்டாவது இதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ் வடைகின்றோம். மகுடத்தின் வருகை ஈழத்து இலக்கிய உலகில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? அதன் படைப்பு நிலைசார் கருத்துருவாக்கத்தின் மீள் பெறுமானம் என்ன? என்பது தொடர்பாக நாம் எம்மை நோக்கி எழுப்பிய வினாக்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான வாசகர் மத்தியிலும், புதிய தேடல்களுடனான ஈழத்தின் நவீன படைப்பிலக்கிய வாதிகளிடமிருந்தும் கிடைத்த வரவேற்பும் நாளைய ஈழத்து இலக்கிய வளர்ச்சி ஆரோக்கியமான சூழ்நிலையில் பயணிக்க வேண்டிய புதிய தளத்தை மகுடம் திறந்திருக்கிறது என்பதை பதிலாகத் தந்துள்ளதும் மகிழ்ச்சியே.

•

(கி.மு) கிறிஸ்துவுக்குமுன் (கி.பி) கிறிஸ்துவுக்குப்பின் என காலவரையறையின் பால் செயற்படும் உலக ஒழுங்கைப் போன்று இன்று ஈழத்து தமிழ் இலக்கிய படைப்பு நிலைகளில் பெரும்பாலானவை அதுவும் வடக்கில் மையங் கொள்ளும் பல புனைவுகள் 2009 மேக்கு முன் 2009 மேக்கு பின் என ஒரு புதிய வடிவம் கொண்டு அமைவது எம்மையே நாம் மீள்பரிசீலனை செய்து கொள்ள வேண்டிய ஒரு கட்டாய சூழ் நிலையைத் தோற்று வித்துள்ளது.

இதுவரை காலமான சகலவிதமான அர்ப்பணிப்புக்களும், தியாகங்களும், படைக்கப்பட்ட எழுத்துருக்களும், வெறுமனே போலித்த னமான அவிசுவாசத்தின் பாற்பட்ட சுயலாபம் கருதிய முயற்சிகள் தானா என்ற கேள்விகளை எம்முள் எழச்செய்வது தவிர்க்க வியலாததே.

•

தமது இருப்பைக் காப்பாறிக் கொள்வதற்காக ஒரு இனத்தின் சுயமரியாதையையும் இது காலவரையான தமிழ் பேசும் மக்களின் இழப்புக்களையும், சோகங்களையும், வெள்ளைப்பிரதி, கருப்புப்பிரதி என்ற மாய் மாலங்களுக்குள் தம்மை கட்டவிழ்த்துவிடும் மிக மோசமான நடைமுறை எழுத்துக்கள் எம்முன் தலைவிரித்து ஆடுகின்ற நிலையில் மல்லாந்து படுத்துக்கொண்டு வான் நோக்கி துப்பப்படும் எழுத்துக்கள் ஈழத்து இலக்கியத்திற்கு என்னதான் செய்துவிடப்போகின்றன?

வாழ்தல் வேண்டி வக்காளத்து வாங்கும் சோரம் போன எமது அரசியலைப் போலவே எமது எழுத்தும் சோரம் போன நிலையில் சுட்டுவிரலை நீட்டுவதற்கு முன் மனக்கதவுகளைத் தட்டித் திறந்தால் அது நாளைய தமிழ் இலக்கியத்திற்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கே நலமாக இருக்கும்.

மகுடத்தின் வருகை ஓய்வு நிலையில் இருந்த பல படைப்பாளிகளுக்கு புதுரத்தம் பாய்ச்சியுள்ளது. மீண்டும் தம் எழுது கோலுடன் எம்முடன் பயணிக்க தயாராகவிருக்கும் அனைவரது எழுது கோலுக்கும் மகுடம் நிச்சயம் 'மகுடம்' சூட்டும்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாகரன் கவிதைகள்

## தொலைந்த பின்னும் இருத்தல்

அவர்கள் எங்கே சென்றனர்
என்னவாகவோ ஆயினர்

சென்ற பின்னும்
செல்ல முடியா நிழல் உறைந்துளது
இம் மண்ணடுக்கில்
இரத்தச் சூட்டுடன்
ஆழத்தே
ஒரு பெரும் மயான வெளி


எரிந்தழிந்த உடல்கள்
துப்பாக்கிகளால் எரிக்கப்பட்ட துப்பாக்கிகள்
எல்லாம் அவ்வெளியின் கோரமாகி
சாட்சியாகி
அவ்வெளியின் நினைவாகின

ஓலங்களின் படிகை
காயாத குருதியின் மணம்
அவ்வெளியின் அடியில்
ஆழ்மையம் வரையில்
சென்றிறங்கி
ஆயிற்றொரு வரலாறு

வரலாறென்பது அகாலமாயிற்று
வாழ்வென்பது ஓலமாயிற்று
செல்ல முடியாத பயணத்துக்காக
அவர்கள் எல்லாச் சவாரிகளையும் நடத்தினர்
எல்லாச் சவாரிகளுக்காகவும் சவுக்குகளைச்
சொடுக்கினர்.
அத்தனை சவுக்குகளின் சொடுக்கும்
அழியவில்லைக் காற்றில்

போகாத பயணங்கள் காலடியில்
விசைகுன்றாச் சவுக்குகளின் சொடுக்குதல்கள்
ஒவ்வொரு சொடுக்குக்கும்
ஓராயிரம் ஓலக்குரல்கள்

பலி கொள்ளப்பட்ட இதயத்துக்கு
அளிக்கப்பட்ட பரிசு
அவமானமும் கண்ணீரும்.




## சொல்லின் பொருள்

எதுவெனச் சொல்லமுடியவில்லை
ஒரு சொல்
ஒரு போது மகிழ்ச்சியாக இருந்ததையும்
பின்னொரு போதில் துக்கமாக மாறியதையும்
மடியூறும் அன்பின் சுரப்பாக இருந்த
அச்சொல்
ஓர் நாள் பாலையில் கைவிட்டுச் சென்றதையும்

**02**

காதல்
மலராகவும் முள்ளாகவும் மாறும்
வித்தையும் விநோதமும் கொண்டதொரு
வஸ்துவா, சொல்லா
சொல்லடி மக்தலேனா?

**03**

என்னவென்று சொல்ல
ஒரு சொல்லுக்கு அப்பால்
செயல்களும் விளைவுகளும் நிகழ்த்தும்
உணர்தலின்
கோரத்தை
அச்செயல்களும் விளைவுகளும் நிகழ்த்தும்
உணர்தலின் கோரமே
அச்சொல்லின் பொருளாகப்
புலரும்வித்தையையும்
என்னவென்று சொல்ல?
காதல், அமைதி, அன்பு, சமாதானம், கருணை,
நீதி, நியாயம், தோழமை, ஜனநாயகம்
எதுவாயினும்
ஆமாம் எதுவாயினும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அர்த்தநாரீஸம்

## திருநங்கை நர்த்தகி நடராஜும் அவரது ஆடலும்

பேராசிரியர் சி.மௌனகுரு

### நர்த்தகி நடராஜனின் அறிமுகம்

திருநங்கை நர்த்தகி நடராஜா பற்றி நான் அறியவந்தது தமிழினி மூலமாகவும் வாசுகி மூலமாகவுந்தான். நோர்வே ஒஸ்லோ நுண்கலைக் கல்லூரி மாணவர் சிலருக்கு கூத்து பழக்கும்படியும், விரிவுரைகளாற்றும்படியும் என்னை அந்த நிர்வாகம் அழைத்திருந்தது. ஏற்கனவே நர்த்தகி நடராஜ் அங்கு வந்து தமிழினியையும் மாணவர்களையும் தஞ்சாவூர் பரத நடனப்பாணியில் பழக்கியுள்ளார். தமிழினி அக்கல்லூரியின் நடன ஆசிரியை. வாசுகி அக்கல்லூரியின் சங்கீத ஆசிரியை. இருவரும் நர்த்தகி நடராஜ் பற்றி என்னுடன் வாய் ஓயாமல் புகழ்ந்து கொண்டிருந்ததுடன் அவருடன் பேசும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தித் தந்தார்கள். 2009ல் ஒரு நாள் நோர்வேயிலிருந்து தமிழ் நாட்டில் இருந்த நர்த்தகி நடராஜ்வுடன் தொலைபேசியில் பேசினேன்.

நர்த்தகியின் குரல் ஆண்மையும் பெண்மையும் கலந்த குரலாயிருந்தது. நளினமும் கம்பீரமும் அக்குரலில் கலந்திருந்தன. அக்குரலின் நிதானம், அழுத்தம், தொனி மாத்தரமின்றி அவர் ஆழமாக நடனம் பற்றி பேசிய விடயங்களும் என்னைக் கவர்ந்தன.

இருவரும் நண்பர்களானோம். அவர் பற்றி இணையத்தில் தேடிய போது அவரின் புகழ் எனக்குத் தெரியலாயிற்று. அவர் 'வெள்ளியம்பலம்' எனும் நடனப் பள்ளியை நடத்தி வருவதையும் நாட்டியக் கலைக்கே தன்னை அர்ப்பணித்து மிகத் திறமை வாய்ந்த ஆற்றுகைக் கலைஞராகத் திகழ்வதையும் தஞ்சாவூர் நடனப் பாணியை முழுமையாக உள்வாங்கி வெளிப்படுத்தும் கலைஞர் என்பதையும் அவருக்கு கனடா, அமெரிக்கா, லண்டன், நோர்வே, இந்தியா முதலாம் நாடுகளில் 200க்கு மேற்பட்ட சிஷ்யர்கள் உள்ளனர் என்பதையும் இணையம் தந்தது. இத்தனை புகழுக்கும் சிறப்புக்கும் பின்னால் அவர் சந்தித்த சவால்களும், துயரங்களும், சோகங்களும், வலிகளும் மிக மிக அதிகம். ஒரு நாவல் போன்றது அவரது வாழ்வு.

அண்மையில் கொழும்பு கம்பன் விழாவுக்கு வந்த நர்த்தகி நடராஜாவைக் காணவும் பேசவும் அவரது நடனத்தை ரசிக்கவுமான சந்தர்ப்பம் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கிடைத்தது. உண்மையில் அது ஓர் அருமையான அனுபவம்தான்.

### நர்த்தகியின் இளம் பருவம்

ஆண் ஒரு பாலினம், பெண் இன்னொரு பாலினம். ஆணாகப் பிறக்கும் பலர் இயற்கைத் திரிபு காரணமாக பெண்களுக்குரிய உணர்வுகளும் உடல் அமைப்பும் குணாம்சங்களும் பெறும் போது சமூகம் அவர்களைத் தமது குடும்பத்திலிருந்து ஒதுக்கி வைக்கும் மரபு இருந்து வந்துள்ளது. சமூகம் கூட அவர்களை ஏளனமாகப் பார்க்கும் நிலையும் இருந்தது. ஆனால் அவர்கள் தம்மை ஒரு பாலினமாகப் பிரகடனம் செய்கிறார்கள். விளிம்பு நிலை மக்கள் ஆய்வு (Subaltern studies) அவர்களை சமூகத்திற்குச் சரியாக அறிமுகம் செய்கிறது. அவர்களுக்கும் உணர்வுண்டு உலகுண்டு என்பதை அவர்கள் பால் அனுதாபம் கொண்ட கலைஞர்களும் எழுத்தாளர்களும் தம் படைப்புக்களில் கூறுகின்றார்கள்.

இவ் அரவாணிகள் ஒன்றிணைந்து பலம் பெற்று சமூகத்தில் தம் இருப்பை நிலை நிறுத்துகிறார்கள். மிகப் பெரும் சாதனைகள் புரிகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவாணிகள் என்று தம்மை அழைப்பதை விடுத்து திருநங்கையர் என அழைக்கிறார்கள். நர்த்தகி நடராஜாவும் இத் திருநங்கைக் கூட்டத்துள் ஒருவர்.

ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறியவர். **'நடராஜன்'** பெற்றோர் இட்ட பெயர். **'நர்த்தகி'** அவர் குருநாதர் கிட்டப்பா பிள்ளை சூட்டியபெயர். **'திருநங்கை'** நடராஜன் தானாக விரும்பி எடுத்துக்கொண்ட பெயர். திருநங்கை நர்த்தகி நடராஜன் என்ற பெயரினுள் அவரும், அவர் குருநாதரும் அவரது பெற்றோர்களும் அடங்கியுள்ளனர்.

நர்த்தகி நடராஜா மதுரை நகரைச் சேர்ந்தவர். பத்துச் சகோதரங்களைக் கொண்டவர். ஆணாகப்பிறந்த அவர் சிறு வயதிலேயே தன் பெண்மையை உணர்ந்து கொண்டார். இயற்கை நிகழ்வான பால் திரிபு நிலைக்கு உட்பட்ட மனிதர்களுள் அவரும் ஒருவர். பெண்ணை போல நடந்து கொண்ட அவரை மற்றவர்கள் கிண்டல் பண்ணினார்கள். குடும்பமும் சமூகமும் ஒதுக்கியது. அவரது குழந்தைப் பருவம் தடுக்கப்பட்டது. குழந்தையின் கனவுகள் நொறுக்கப்பட்டன. இளம் வயதிலேயே அழகாக, லாவகமாக நடனம் ஆடிய நடராஜன் தனக்குள் இந்த ஆட்டம் எப்படி வந்தது என்று தெரியாது என்று கூறுகிறார். கோயில்களிலும் பொது இடங்களிலும் அவர் ஆடிய நடனம் அவரை ஒரு ஆடல் வல்லானாக மக்களுக்கு அறிமுகமாக்கியது. தனக்குள் இருந்த பெண்மையை கண்டு கொண்ட நடராஜன் தனக்குள் இருக்கும் ஆட்டத்தை வளர்க்க பெண்மையையும் பெண்மையை வளர்க்க ஆட்டத்தையும் பயன்படுத்திக் கொண்டதாகக் கூறுகிறார்.

தனது ஆட்டம் செறிவானதாக, காட்டாற்று வெள்ளம் போல் கட்டுக் கோப்பற்றதாக, வரையறை அற்றதாக சிறு பராயத்தில் இருந்ததாகக் கூறுகிறார் நடராஜன்.

### பார்த்துப் பழகல்

சினிமாவில் வைஜயந்தி மாலாவின் பெரிய விசிறி இவர். சினிமாவில் பரத நடனம் ஆடும் பரத நடன காரிகளைப் பார்த்து அவர்களைப் போல ஆடுவதே அவரது சிறு வயது நடனமாக இருந்தது. பெண்ணைப் போல ஆண் ஆடுவதையும் நெளிவதையும் நடப்பதையும் சமூகத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் சமூகத்தில் எந்தக் கிண்டல்களாலும் அவர் பயணத்தை தடுக்க முடியவில்லை. சிறு வயதில் இவரைப் போல பால்நிலை திரிபடைந்த சக்தி இவரின் தோழியானார்.

### முறையான பயிற்சி

இருவரும் முறையாகப் பரதம் பயில முடிவு செய்தனர். மதுரையிலிருந்து 90 நிமிடம் நடந்து சென்று சிவகங்கையை அடைந்து அங்கு நம்மனூர் ஜெயராமனிடம் முறையாகப் பரத நடனம் பயில ஆரம்பித்தனர். கோயிலுக்குப் போவதாக வீட்டில் பொய் சொல்லி இதனைச் செய்தனர். நடையாக நடந்து பரதத்தின் முழு மார்க்கத்தையும் பயின்ற நர்த்தகி நடராஜ் 1983ல் தன் அரங்கேற்றத்தை செய்தார்.

### உயர்தரப் பயிற்சி

பரதத்தை மேலும் சரியான குருவின் கீழ்க் கற்க ஆசையுற்ற பரதத் தாகம் கொண்ட நர்த்தகி நடராஜ் தஞ்சாவூர்க் கிட்டப்பா பிள்ளையை நாடினார். தஞ்சாவூர்க் கிட்டப்பா பிள்ளை தஞ்சை நாட்டிய நால்வரான பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேல் மரபில் வந்த அவர்களின் மிக மிகக் கொள்ளுப்பேரன், ருக்மணி அருண்டேலுக்கு நாட்டியம் பழக்கிய மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பேரன் சங்கீத



வித்துவான். மிருதங்கக் கலைஞர். தனக்குப் பிடித்தமான நாட்டியத்தாரகை வைஜந்திமாலாவின் குருநாதரிடம் முறையாகக் குருகுல நாட்டியக்கல்வி பயில வேண்டும் என்ற தணியாத தாகம் நர்த்தகி நடராஜுக்கு. ஆரம்பத்தில் தயங்கினாலும் பின்னால் நடராஜனின் கண்களில் பொறியாய்ப் பறந்த கலை வெறியைக் கண்டு கொண்டார் குருநாதர். அவரிடம் பழகும் மாணவிகளோ உயர் குடியினர் மிகப் பெரும் பணக்காரப் பிள்ளைகள். நடராஜ் எதிர் வளமானவர். 75 வயதுக்கு மேற்பட்ட குருவிடம் தங்கி அவரைத் தந்தைபோல் பாவித்து பரதம் கற்றார். தஞ்சை நால்வரின் சங்கதிகளை ஒருவர் முழுமையாகக் கற்க வேண்டுமானால் ஆறு வருடங்கள் எடுக்கும். ஆனால் நடராஜ் தனது ஆர்வத்தாலும் குருவின் சிரத்தையாலும் ஒரு வருடத்துக் குள் கற்றுக் கொண்டார். தன் குருநாதர் கிட்டப்பாபிள்ளை பற்றிக் கூறும்போது ஒரு சித்தராக, யோகியாக அவர் வாழ்ந்தார் எனவும் அவர் மூளை ஒரு கணணியைப் போன்றதெனவும், பரதம் பற்றிய சகல அறிவும் அம் மூளைக்குள் புதைந்து கிடந்ததென்றும் அத்தகைய மகானுடன் 15 வருட காலம் குருகுல வாழ்வு நடத்தியதையும் பரவசத்துடன் நர்த்தகி நடராஜ் நினைவு கூர்ந்தார்.

அவரிடம் வைஜயந்திமாலா, யாமினி கிருஸ்ண மூர்த்தி சுதாராணி ரகுபதி, ஹேமமாலினி, அஞ்சனா பானர்ஜி போன்ற இந்தியாவின் மிகப் பிரபல நடன மணிகள் பரதம் பயின்றனர் எனவும் தன்னையே மொடலாக வைத்து அவர்கட்கு தனது குரு பழக்கியதாகவும் நர்த்தகி கூறினார்.

தனது குருநாதரிடம் பல அபூர்வ நடன வகைகளைக் கற்றார். நவசக்தி கௌத்துவம் முதலான கோயில் நடனங்களில் மிகுந்த தேர்ச்சி பெற்றார். தன் அசைவைக் கூட ஓர் ஆடலாக மாற்றிய, தன் மூச்சைக் கூட ஒரு அர்த்தத்தில் இசையோடு வெளிப்படுத்த வைத்த அற்புத குரு என கிட்டப்பா பிள்ளையை நர்த்தகி நடராஜ் வர்ணித்த போது நர்த்தகியின் மூச்சும் அசைவும் அனைத்தும் பரதமே என்பதும் பரத நடனமாகவே அவர் வாழ்கிறார் என்பதும் புலனாகியது.

திருநங்கை நர்த்தகி நடராஜுடன் பேசிக்கொண்டிருந்த போது அவரது ஆளுமையின் பல கூறுகளை அறிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அவர் ஒளிவு மறைவின்றித் தன் வாழ்வையும் தான் பெற்ற கசப்பான அனுபவங்களையும் இன்றும் மறைக்காமல் மறக்காமல் கூறுகின்ற மனத்துணிவு, வாழ்க்கை நோக்கு

2. அவர் பரதம் மீதும் அதன் வளர்ச்சியிலும், வெளிப்பாட்டிலும் கொண்டிருக்கும் அளவிடமுடியாத ஈடுபாடும் அர்ப்பணமும்

3. தமிழ்இசைமீதும் தமிழ்ப்பண்பாட்டின்மீதும் கொண்டிருக்கும் மாளாக்காதல்

4. சைவ சித்தாந்தத்துடன் அதன் தத்துவார்த்தங்களிலும் அதற்கு ஆதாரமாக இருக்கும் தேவார திருவாசகங்களில் முக்கியமாக தேவாரங்களில் அவருக்கு இருக்கும் உணர்வுபூர்வ மான தொடர்பும் தெளிவும்.

5. நவீன இலக்கியங்கள் பால் அவர் கொண்டிருக்கும் ஈடுபாடு. ஜெயகாந்தனின் தீவிர இரசிகையான அவர் அவரது ஒரு சிறு கதையைக் கூட நாட்டியமாக்கியுள்ளார் என்பதனை உரையாடலில் அறியமுடிந்தது.

6. தமிழ் இலக்கியங்கள் மீது அவருக்கு இருக்கும் அறிவு.

இவையாவும் இணைகையில் , நர்த்தகி நடராஜ் ஏனைய பரத நர்த்தகிகளிடமிருந்து வேறுபட்டு நிற்பதற்கும் தனித்துத் தெரிவதற்குமான காரணங்கள் புரிந்துவிடும். she is a unique personality பரதநாட்டிய உலகில் இவரைப் போன்றவர்களைக் காணுதல் அருமை.

பரதத்தை வாழ்வாகக் கொண்ட இக்கலைஞரின் பரத நிகழ்வு எம்மை வெவ்வேறு உலகங்களுக்குள் கொண்டு சென்றது.

## நர்த்தகி நடராஜனின் நடனம்

ஒன்றரை மணிநேரம் நடைபெற்ற நர்த்தகி நடராஜனின் பரத நிகழ்வில் தமிழ் மணம் கமழ்ந்தது. நர்த்தகி நடராஜன் தமிழ் இலக்கிய புலமை கொண்டவர் என்பதனை அந்நிகழ்வு நிரூபணமாக்கியது.

சொற்கட்டுக்களுடன் ஆரம்பமான அவர் நடனம் அபிராமி அந்தாதிப் பாடலுடன் வீச்சுப் பெறத் தொடங்கியது. தொடர்ந்து அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம், திருப்புகழ் என தமிழ்ப்பதங்கள் தொடர்ந்தன. பதம் பரத நடனத்தில் ஓர் அம்சம். பல்லவி அனுபல்லவி, சரணம் ஆகிய அமைப்புக்களுடன் அமைந்த பாடலான பதத்திற்கு அபிநயிக்கும் ஒரு நடனக்காரரின் ஆங்கிக அபிநயங்களையும் முழு உணர்வுகளையும் கொண்டு வரும் பகுதி இது. பதத்தை தேவார பாடல்களில் கண்ட நர்த்தகி நடராஜ் அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகத்தில் ஒன்றான 'முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்' என்ற பாடலை சஞ்சாரி பாவமாக செய்தார். இதற்கு அவருக்கு அரை மணிநேரம் பிடித்தது.

நாயகன் நாயகி பாவத்தில் இப்பாடல் அமைந்ததென கூறுவது மரபு. இறைவனுடன் ஜீவன் கலப்பதென இதற்கு விளக்கமும் கொடுப்பர். இறைமை எனும் ஆண்மைக்கு முன் தன்னைத் தலைவியாக எண்ணித் தன்னையே இறையுள் இணைக்கும் வழக்கம் உலக சமயங்கள் அனைத்திற்கும் பொதுவான ஒன்று. இந்நிலைப்பாட்டினையே நடனத்தின் வாயிலாக நர்த்தகி வழங்கி வருகிறார் என்று அவர் பற்றி துண்டுப் பிரசுரம் கூறினாலும் இப்பதத்திற்கு அவர் செய்த பாவமும் கற்பனையும் நடனமும் இதற்கும் அப்பால் அவர் மன உணர்வுகளையிட்டு எம்மைச் சிந்திக்க வைத்தது.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தாள் ஆசாரத்தால்
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

என்ற திருநாவுக்கரசர் தாண்டகத்தில் சிவனின் நாமம், சொல்கள், ஊர் என்பன கேட்டு அவற்றில் மயங்கி, அன்னையையும், தந்தையையும் விட்டு நீங்கி தன்னை மறந்து; தன் நாமம் மறந்து பைத்தியம் பிடித்தவள் போல தலைவனுடன் இரண்டறக் கலக்கிறாள் அப் பெண்.

இந்த வரிகளைக் காட்சிப் படிமங்களாக்கி எம்மை வேறுலகு ஒன்றினுக்கு அழைத்துச் செல்கிறார் நர்த்தகி நடராஜ். சிவனின் நாமமும் வண்ணமும் கேட்கையில் சிவனை நம் மனக்கண் முன் கொண்டு வரச்செய்யும் வகையில் பாய்ந்து வந்த புலியின் தோலை உரித்து இடுப்பில் ஆடையாகக் கட்டியமை, கொல்ல வந்த யானையை மடக்கி உரித்து அதன் தோலை ஆடையாகப் போர்த்தியமை, பாய்ந்து வந்த கங்கையைச் சடாபாரத்தில் அடக்கியமை. சீறி வந்த பாம்பை பிடித்து மாலையாக அணிந்தமை, தேய்ந்து வந்த சந்திரனுக்கு அருள் புரிந்து தலையிற் பிறையாகச் சூடியமை என்று புராணக் கதைகளுக்கு தன் கற்பனையாலும் உடல் அசைவாலும் ஆங்கிக - அங்க பிரத்தியங்க- அசைவுகளாலும் உயிர் ஊட்டி இவையெல்லாம் அணிந்த பரம சிவனாக காட்சியளித்து அப்பரம சிவத்தில் பைத்தியமாகும் பெண்ணாக மாறுகிறார் நர்த்தகி.

பிச்சியாகும்- அதாவது பைத்தியகாரியாகும் இடம் அற்புதமானது. சிவனுடைய அருட்செயல்களாலும், திருவுருவச் சிறப்பாலும் கவரப்பட்ட அவளுக்குள் சீவத்துடன் கலந்த சிவானந்த உணர்வு உண்டாகிறது. சிவானந்த லாஹிரி என்று இதனை நாம் அழைக்கலாம். சிவவழிபாட்டில் இரு மரபுகள் உள்ளன. ஒன்று பக்தி மரபு, இன்னொன்று யோக மரபு. பக்தி மரபு பாடி ஆடிப் பைத்தியமாகி சிவத்துடன் ஒன்றிப்பது. யோகமரபு யோக மூலமாக குண்டலினி சக்தியை எழுப்பி சிவனுடன் ஐக்கியமாவது. யோகமரபின் மூலக்கூறுகளை சிந்துவெளி நாகரிகத்திற் காணுகிறோம். இது வேதமரபுக்கு அந்நிய மரபு. பண்டைய இந்திய மரபு ஒரு வகையில் திராவிட மரபு. அம்மரபின் தமிழ்ப்பண்பாட்டின் சிறந்த பிரதிநிதி திருமூலர், சித்தர்கள் அவரது மரபில் வந்தோர். குண்டலினி மார்க்கம் சித்தர்களது மார்க்கம். அதுயோக மார்க்கம் யோகிகளுக் கெல்லாம் மகா யோகியாகச் சிவனைக் கூறுவர்.

குண்டலினி சக்தியானது அடி மூலாதாரத்தில் பாம்பு போல சுருண்டுள்ளது என்பதும் தியானம் மன ஒடுக்கம் மூலம் இக் குண்டலினி சக்தியை 7 சக்கரங்களுக்கூடாகச் செலுத்தி சகஸ்ரநாமத்தில் உள்ள சிவனுடன் இணைக்கவேண்டும் என்பதும் பொதுவான கருத்தாகும். மூலப்பகுதியில் **மூலதார** சக்கரமுள்ளது அடிவயிற்றிலே **சுவாதி ஸ்தானம்** என்ற சக்கரமுள்ளது தொப்புளிலே **மணிப்பூரகம்** என்ற சக்கர முள்ளது. நெஞ்சில் **அனாகதம்** என்ற சக்கரமுள்ளது. கழுத்திலே **விசுத்தி** என்ற சக்கரமுள்ளது. புருவ மத்தியிலே **ஆக்ஞா** என்ற சக்கரமுள்ளது. உச்சந் தலையிலே **சகஸ்ரநாமம்** என்ற சக்கரம் உள்ளது. சுருண்டு கிடக்கும் குண்டலினி சக்தியை மெல்ல மெல்ல எழுப்பி இந்த 7 சக்கரங்களுக்கூடாகச் செலுத்தி உச்சந் தலைக்குக் கொண்டு வருதலே குண்டலினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகமாகும். உச்சந்தலையிலுள்ள சகஸ்ர நாமத்தின் மூலம் வெளிப்படும் சக்தி யோகியைச் சுற்றிப் பரந்து பிரபஞ்சமெங்கும் பரவும்.

இக் குண்டலினி யோகத்தை அப்பரின் தாண்டகத்துள் கொண்டு வருகிறார் நர்த்தகி நடராஜ்

மூலதாரத்தினின்று உற்பத்தியாகும் குண்டலினி சக்தி 7 சக்கரங்களையும் கடந்து தலையிலிருந்த சகஸ்ரநாமத்தி னுடாக வெளியாவதும் அவ்வுணர்வு பிரபஞ்சம் எங்கும் பரவுவதும் பிரபஞ்சமும் - அதனுள் ஒன்றான உயிரும் ஒன்றுள் ஒன்றாக மாறுவதும், அந்த மாறுதலில் சிவனின் உடுக்கையொலியும் காற்சிலம்பொலியும் மாத்திரம் காதுகளிற் கேட்க அவளே அவ்வொலியாகி பித்தின் உச்ச நிலைக்குச் சென்று தானே அதுவாக மாறுவதுமான காட்சிப் படிமங்கள் நர்த்தகியால் அற்புதமாகச் செய்யப்பட்டன.

தாண்டகத்தின் முடிவில் விஸ்வரூப தரிசனம் தருவது போல சிவன் காலைத்தூக்கி கையை விரித்து கம்பீரமான தோற்றத்தில் பிரபஞ்சம் முழுவதையும் நிறைத்து நிற்பது போல ஒரு தோற்றம் காட்டுகிறார். இந்த இடத்தில் நர்த்தகிக்குள் இருந்த ஆண் விஸ்வரூபம் கொள்கின்றான். ஆண் ஒருத்தர் கால் தூக்கி பிரமாண்டமாய் நின்ற தோற்றத்தையே அந்த நிலை எமக்குத் தந்தது.

திடீரென அத்தோற்றத்தினின்று மாறிப் பெண்ணாகி, பிச்சியாகி நொய்ந்து தனை இழந்த தோற்றத்தில் நர்த்தகி தோற்றம் காட்டுகிறார். ஒரு உடலுக்குள் இந்த இரண்டு பாலின் பண்புகளையும் இம்மிதவறாது புலப்படுத்தி நம்மை உணர்வுக்குள்ளாக்குகிறார் நர்த்தகி. தாண்டவமும் - லாஸ்யமும் பெண்மையும் - ஆண்மையும் மிடுக்கும் நளினமும் கலந்த அர்த்தநாரிஸமாக முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள் என்ற பத அபிநய ஆட்டத்தில் காட்சி தருகிறார் நர்த்தகி.

மாணிக்க வாசகர், கோயில் மூத்த திருப்பதிகத்தில் தன்னுடலிடம் கொண்ட சிவ ஒளி மெல்லென வெளியில் பரவி பார்பதம் அண்டம் எல்லாம் பரந்தது எனப்பாடுவார். தான் என்ற ஒன்று பிரபஞ்சத்தின் ஓர் அம்சமாகக் கலக்கின்ற நிலை அது. தேவாரம், திருவாசகங்களில் தாடனம் கொண்டோருக்கும் பிரபஞ்சமும் தானும் ஒன்றெனெ உணருவோருக்கும்தான் நர்த்தகி நடராஜா கொண்டு சென்ற உலகைப் பூரணமாக ரசிக்க முடியும் உணர முடியும். மிக உயர்ந்த ரசனையாளரை வெகுவாகத் திருப்தி படுத்துவதென்பது எல்லா நடனமணிக ளாலும் செய்ய முடியாத ஒன்று. அந்த ஒரு பதமும் அதனை நர்த்தகி காட்சிப்படுத்திய விதமுமே அவர் ஒரு மகா நடனக்காரர் என்ற உணர்வை எமக்கு ஏற்படுத்தியது.

நாயகனை நாயகி நினைத்தல் ஏங்குதல் என்பதனை இன்றைய சில பெண்ணியலாளர்கள் விரும்புவதில்லை. ஏற்பதில்லை.

தலைவன்/தலைவி என்பது இரண்டு சொற்களே தவிர அவற்றுள் ஏற்றத் தாழ்வில்லை. இரண்டும் தலைமைகள்தான் பண்பாடு ஆணுக்கு உயர் இடத்தையும் பெண்ணுக்கு அடுத்த இடத்தையும் ஏற்படுத்தியது. இது பால் நிலை இந்த இரண்டு தலைமைகளும் ஒன்றிணைதல் என்பது நாம் காணும் கனவு. இரண்டு தலைமைகளின் ஒன்றிணைவில் வரும் சக்தி மிகப் பெரும் மகா சக்தியாகும்.

இயற்கையால் வகுக்கப்பட்ட பேதங்கள் அற்று அபேதமாகின்ற; அசமத்துவங்களற்று சமத்துவமாகின்ற உன்னத நோக்கையே மானுடம் கனவு காண்கிறது. நடனத்தை முடிக்கின்ற போது கூட சுந்தரரின் திருத் தொண்டத் தொகைப்பாடலில் இருந்து பதம் எடுத்திருந்தார். தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் எனத் திருத் தொண்டத் தொகை தொடங்குகிறது.

சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் தமது முதல் வணக்கத்தைத் தில்லையில் வாழும் அந்தணர்கட்கே தெரிவிக்கிறார். பல்லவ காலத்திலும் சிறப்பாகச் சோழர் காலத்திலும் அந்தணர் சமூகத்தில் பெரும் ஆதிக்கம் பெற்றுவிடுகிறார்கள்.

சாதிகளாகப் பிரிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தில் அவர்கட்கே பண்பாட்டடிப்படையில் முதலிடம் தரப்படுகிறது. அவர்களுள் உயர்ந்தோர் தில்லையில் சிவன்கோயிலை அண்டி வாழ்ந்த அந்தணர்கள். பறையரான நந்தனரை கோயிலுக்குள் அனுமதிக்காதவர்கள் இவர்கள். அவர்கள் வாழ்கின்ற தில்லைக்குள் நுழைய அஞ்சினர், திருநாளைப்போவாரான நந்தனார். ஆனால் பக்தராய்ப் பணிபவர்கள் சாதி பேதமற்றவர்கள். அவர்களுள் வேடரான கண்ணப்பரும் வருவார். ஏகாலியரான திருக்குறிப்புத் தொண்ட நாயனாரும் வருவார்.

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்ற திருத்தொண்டர் தொகையில் வரும் சுந்தரர் பாடலில் தில்லை வாழ் அந்தணர் என்ற ஆரம்பத்தை விட்டு பக்கராய்ப் பணிவார்கள் அடியார்க்கும் அடியேன் என்ற வரியில் இருந்து ஆரம்பித்து நடத்தை முடிக்கின்றார் நர்த்தகி நடராஜன். அந்தணரை விட்டு சாதாரண பக்தர்களை முதன்மைப்படுத்தும் நர்த்தகியின் துணிச்சலையும் ஆழமான பார்வையையும் கட்டுடைத்துப் பார்க்கையில் நமக்குப் பலவிடயங்கள் புலனாகின்றன. சின்ன வயதிலிருந்தே அடக்குமுறைக்குள்ளாகி வந்த மனதின், பேதங்களை எதிர்த்து வளர்ந்த அடிமனதின் கலகக்காரச் சிந்தனையின் வெளிப்பாடு இது.

"பாரதியார் பாடலில் சின்னஞ் சிறு கிளியே" என்று மழலையைக் கொஞ்சுகையில் நர்த்தகிக்குள் இருந்த தாய்மை என்ற பெண்மை பூரணமாக வெளிப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்றரை மணிநேரம் அனைவரையும் சமயம், தத்துவம், இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, ஆண்மை, பெண்மை, சமத்துவம், மானுடம் என்ற பல உலகங்களுக்குள் இழுத்துச் சென்றார் நர்த்தகி. நர்த்தகியின் நாட்டியத்தை ரசிப்பதற்கும் பார்வையாளருக்கு ஒரு பக்குவம் வேண்டும்.

## நர்த்தகி பற்றிய சிறு கணிப்பு

நாட்டியத்தில் லாஸ்யம்/ தாண்டவம் என்ற இரு பிரிவுண்டு. பரத நடனத்தை ஆண்கள் ஆடுகையில் அவர்கள் ஆட்டத்தில் தாண்டவம் சற்றுத் தூக்கலாக இருக்கும். பெண்கள் ஆடுகையில் லாஸ்யம் சற்றுத் தூக்கலாக இருக்கும். நர்த்தகி நடராஜ் ஒரே நேரத்தில் ஆணாகவும் பெண்ணாகவும் இருப்பதனால் அவரிடம் இரண்டும் சமாந்தரமாகக் காணப்படு வது ஏனைய நடன காரர்களிடமிருந்து இவரைப் பிரித்துக் காட்டும் முக்கிய அம்சமாகும்.

சிவனாக அவர் நிற்கும் போது சிவன்தான். பக்தையாக மாறும் போது அவர் பக்தைதான். ஒரு உடலுக்குள் இரண்டு பாத்திரங்கள்.

நர்த்தகியிடம் காணப்படும் குறிப்பிடப்படும் அம்சம் அவர் உடலிற் காணப்படும் சக்தியாகும். ஏனைய பெண் நடன க்காரர்களுக்கில்லாத உடல் வலுவும் சக்தியும் அவரிடம் காணப்படுகின்றன. வேகமான சுழற்சியான ஆட்டங்களின் பின் அவர் எந்தவித களைப்புமின்றி அனாயசமாக அடுத்த ஆற்றுகைக்குச் சென்று விடுகிறார். இப்படிச் செல்வதற்கு அசாத்தியமான உடல்வலு வேண்டும். அவரது ஆட்டம் நமக்கு பிரமிப்பை ஏற்படுத்துவதற்கு இந்த உடல் வலுவும் ஒரு காரணமாகும்.

நர்த்தகியிடம் எனக்குப் பிடித்தமான இன்னொரு அம்சம் நமது தமிழ் நடன மரபு இழந்துவிட்ட ஆட்ட மரபுகளையும் தாளகட்டுக்களையும் கூத்து மரபுக்குள் தேடுவதாகும். கூத்துக்கலை எனும் நூலில் நான் தொகுத்துக்கூறிய வடமோடித் தாளக்கட்டுக்களையும் அதன் ஆட்ட முறைகளையும் வெகுவாக என்னிடமும், கூறி மாணவர்க்கும் அதனை எடுத்துக் கூறிய நர்த்தகி, தேடல் நாட்டம் கொண்ட ஒரு நர்த்தகியாக எனக்குத் தோன்றினார்.

தமிழ் மரபுக்கு அழுத்தம் கொடுப்பது இவரது இன்னொரு முக்கிய பண்பாகும். ஏனைய நாட்டிய மணிகளோ வடமொழி, தெலுங்கு பதங்களையும் கையாளுகிறார்கள். இவர் தமிழ்ப் பதங்களையே கையாளுகிறார். சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய 11 வகைக் கூத்துக்களையும் மீள உருவாக்க எண்ணியுள்ளார். மாதவி ஆடிய வீழ்ந்தாடலை ஆடியுள்ளார்.

தஞ்சாவூர் நடன பாணிபற்றி இவருக்கு மிகுந்த கர்வமுண்டு. அப்பாணியைப் பின்பற்றிப் பழகிய ருக்மணி தேவியின் காலஷேத்ராவில் கூடியாட்டம், கதகளி, குச்சுப்புடி, பாகவதமேளா முதலிய பல நடன முறைகளும் கலந்து விட்டதால் தஞ்சாவூர் மரபின் தனித்துவம் பேணப்படவில்லை என்பதும் தஞ்சாவூர்பாணிக்குள் இருந்த நளின சிருங்கார, அசைவுகள் என்பன விடப்பட்டுவிட்டன என்பதும் இவரது அபிப்பிராயங்கள் என்பதைப் பேச்சுவாக்கில் அறியக்கூடியதாக இருந்தது.

இவர் சிவபக்தையாக இருப்பதும் **வெள்ளியம்பலம்** எனத் தன் நடனப் பள்ளியை அழைப்பதும் நுனித்து நோக்குதற் குரியவை. சைவ மரபில் சிவனுக்கு அர்த்த நாரீஸ்வர உருவம் ஒன்றுண்டு. பெண்ணும் ஆணும் சரிசமனாகக் கலந்த உருவம் அது.

உயிரின் வளர்ச்சி பலபரிமாணங்களுக் கூடாக வளர்ந்தது என்பர்.

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி ஊர்வனவாய், பறவையாய், முலையூட்டிகளாய் குரங்குகளாய் என வந்த உயிர் சங்கிலித் தொடரில் மானுடம் ஒரு பரிணாமம். அதுவும் ஆண் பெண் என்ற பிரிவுகளூடாக. இந்த இரண்டும் இணையும் ஓர் உருவம். அடுத்த பரிணாமமாகவும் இருக்கலாம் அல்லவா? அடுத்த பரிணாமத்தை நமது முன்னோர் கற்பனை செய்த உருவமே அர்த்த நாரீஸ்வர உரு என விளக்கமளிப்போரும் உள்ளனர்.

ஆணும் பெண்ணும் கலந்த அர்த்தநாரீஸ்வர உரு அடுத்த பரிணாமம் ஆயின் தாண்டவமும் லாஸ்யமும் கலந்த அர்த்த லாஸ்ய பரதம் பரதத்தின் அடுத்த பரிமாணமாக இருக்கலாகாதா?

பரதத்தின் அடுத்த பரிமாணத்தைச் சுட்டும் குறியீடாக எனக்கு நர்த்தகி நடராஜா தெரிகிறார். இது பற்றி நாம் விவாதிக்கலாம்.

மிகவும் இளம் வயதில் குடும்பத்தாலும், சமூகத்தாலும் ஒதுக்கப்பட்ட ஒருவர் தன் கலைவெறியினாலும், விடாமுயற்சியி னாலும் சமூகத்தால் தனக்கு ஏற்பட்ட அத்தனை துயரங்களை யும் எதிர்கொண்டு தாண்டிச் சென்று இன்று கணிப்பிற்குரிய ஏற்புடைமைக்குரிய ஒரு கலைஞராக மிளிர்கிறார்.

தமிழக அரசின் கலைமாமணி விருது ஸ்ரீகிருஷ்ண கான சபாவின் நிருத்ய சூடாமணி விருதுகளுடன் இந்திய சங்கீத நாடக அக்கடமியால் தேர்வு செய்யப்பட்டு 2011ஆம் ஆண்டுக்கான பெருமைக்குரிய புரஸ்கார் விருதினை இந்தியக் குடியரசுத் தலைவரிடமிருந்து பெற உள்ளார்.

ஒதுக்கப்பட்ட ஒருத்தர் இன்று போற்றப்படுகின்றார். கழிக்கப்பட்ட ஒருத்தர். இன்று தூக்கப்படுகின்றார், வாழ்த்தப்படு கின்றார். இவ் விருதுகளை விட தனது உழைப்பாலும், துணிவாலும் அர்ப்பணத்தாலும், திறனாலும் நம் மனதில் உயரிய இடத்தைப் பெறுகிறார் **திருநங்கை நர்த்தகி நடராஜ்** அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலக் குறிப்புகள்

**கவிஞர் வாசுதேவன்**

1. போர்க் காலத்தில் உயிர் விளையும், பெருகும், பூத்துக் குலுங்கும், கொழுந்துவிட்டெரியும். போர்க் காலத்தில் உயிரின் அர்த்தமும் ஆழமும் தெரியவரும். அதன் முடிவற்ற பரிமாணங்கள் பிரமிக்க வைக்கும். அதன் வர்ணங்கள் துலங்கும்.

2. போர்க்காலம் உயிரைக் கையில் எடுத்துத் தரும். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிய அனுபவம் ஒன்றுக்கு பத்துத் தடவைகள் எனக்குண்டு. உயிரைக் கையில் எடுக்கும் போதுதான் அதன் கனம் விளங்கும். அதை கையில் தாங்கும் போதான பதட்டம், வாழ்வின் அசலை தோலுரித்து முகத்தின் மிக அருகே காட்டி விடும். அவ்வளவு நெருக்கமாக வாழ்வின் சுயரூபத்தை சந்திப்பது, வானில் நேருக்கு நேர் விமானங்கள் மோதுவதைப் போல் தெளிவான அனர்த்தமாகும். வெடிக்கும் வெடித்துச் சிதறும். துகள் துகளாகும். அக்கினி குபீரிடும். பிளம்பின் நுனியில் சாம்பல் பறக்கும்.

3. போர்க் காலத்தில் உயிர் விழித்திருக்கும். அது பார்க்கும் கேட்கும் முகரும் கவனிக்கும் அறியும். அமைதியாகத் தெரியும் நீர் நிலையின் அடியில் ஓடித் திரியும் மீன் போல அது உடலின் உள்ளே ஓடித் திரியும். ஓய்ந்திரா. ஓய்ந்திருந்த காலம் கனவாய்ப் போயிற்று. உயிர் ஓய்ந்தால் அது தேனாகும். உடல் பூவாகும். உயிர் விழித்தால் அது சுமையாகும். உடல் சுமைதாங்கும் பையாகும். போர்க் காலம் உயிரைச் சுமக்கும் காலம். பிரக்ஞையில் உயிர் நிறையும் காலம். உயிரே பிரக்ஞையாகிவிடும் காலம். உயிரை மறந்திருத்தல் ஆரோக்கியத்தின் பயமின்மையின் அறிகுறி. உயிரை நினைந்திருத்தல் நோயின் பயத்தின் அறிகுறி.

4. போர்க் காலத்தில் ஊரெல்லாம் உயிர் மணக்கும். உயிரின் மணத்தை நாசியினால் நுகர முடியாது. அது மனதில் தொற்றிக் கொள்வது. எங்கேனும் ஒரு திசையில் இருந்து உயிரின் மணம் ஊர்களைக் கலக்கியடித்துக் கொண்டு வரும். தீயோடு தீ சேர்ந்து பெருகுவது போல் மனங்களில் தொற்றித் தொற்றி அது திரளும். அகதி முகாம்களை நிறைக்கும். வீடுகளைக் காலி செய்யும். ஊரை உறைய வைக்கும். மணம் தீவிரமாக ஆக எங்கெங்கோ ஏதேதோ பழுக்கும்.

5. போர்க் காலத்தில் உயிரை வைத்துக் கொண்டிருப்பது என்பது, வழுவழுக்கும் சவர்க்காரத்தை கைக்குள் பொத்திப் பிடிப்பது போன்றது. வாழ்வின் பிரமாண்டமான பிடிமானமும், அது நொடியில் கைநழுவிவிடக் கூடிய அபத்தமும் ஊசலாடும்.

6. உயிர் தொடாமற் சுருங்கி. தொட்டாற் சிலிர்ப்பி. உயிரைக் கைகள் தொடா கவனமே தொடும். போர்க் காலத்தில் கவனம் உயிரைத் தொட்டபடி இருக்கும். உயிர் சிலிர்த்தபடி இருக்கும். உயிர் சிலிர்க்க உடல் கூசும்.

7. உயிர் தூரத்தே இருந்திடல் வேண்டும், குளிர் காயும் நெருப்புப் போல. உயிர் ஆழத்தில் இருந்திடல் வேண்டும், பூவுக்கு இரை தேடும் வேர் போல.

8. யுத்தம் மூழ்வதற்கு முந்தைய காலத்தில் உயிர் என்பது உடலின் எங்கோ ஒரு ஆழத்திற்குள் புதையுண்டிருந்தது. அது இருப்பதே தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருக்க வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. உயிர் பற்றி பிரக்ஞை அற்றிருந்த காலம் அது. தீவிர நோய்வாயுறும் போது அதுபற்றி நான் பிரக்ஞை கொண்டிருந்திருக்கக் கூடும். முதுமையின் சிகரத்தில் உள்ளவர் சீவன் போவதற்கு இழுக்கும் போதும், சுடலைக்குச் செல்லும் போதும் உயிர் பற்றி யோசிப்பதுண்டு. அதுவும் சில நிமிடங்களுக்குத்தான். மற்றப்படி உயிரென்பது அக்காலங்களில் எனக்கில்லை. உயிர் என்பது உயிரில் இல்லை. அது அதன் மீதான என் கவனத்தில்தான் இருக்கிறது. அக்காலங்களில் உயிரின் மீது எனக்கு கவனம் இருக்கவில்லை என்பதால் உயிரும் எனக்கு இருக்கவில்லை.

9. உயிர் இல்லாத வாழ்க்கை பயம் இல்லாத வாழ்க்கை. உயிர் இல்லாத வாழ்க்கை பலம் நிறைந்த வாழ்க்கை. உயிர் இல்லாத வாழ்வு விளைச்சல் நிலம். உயிர் இல்லாமை இன்பத்தின் அடிப்படை, செயலூக்கத்தின் ஊற்று. உயிர் இல்லாத வெற்றிடம் பிரமாண்டமானது. அவ்வெற்றிடத்திலிருந்துதான் வாழ்வு தொடங்கி பெருக்கெடுக்கிறது. அவ்வெற்றிடத்தில் எதையும் இட்டு நிரப்பலாம். ஆதலால் உயிர் இல்லாதபோது எல்லாமே இருக்கிறது. உயிர் இருந்தால் உயிர் மட்டும்தான் இருக்கும். உயிர் இல்லாத வாழ்வு ஓடும் நதி, பாயும் மான், பூக்கும் மரம்.

10. சட்டென்று உறைந்து விடுகிறது ஊர். கதவுகள் சாளரங்களை உள்ளீர்த்துக் கொள்கிறது ஆமை. காகத்தின் கரைதல், குருவிகளின் கீச்சொலி, அணிலின் கிறீச்சிடல், வண்டுகளின் ரீங்காரம் எல்லாமே காற்றுத் திரையில் வரையும் ஓவியங்களை தெளிவாகக் கேட்கமுடிகிறது இப்போது. அந்த ஓவியத்தை கிழித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி வருகிறது வாகனத் தொடரணி. அவை ஒன்றன் பின் ஒன்றாக நிறுத்தப்படும் 'பிறேக்' ஒலி, என் உடலின் முக்கிய சந்து பொந்துகளுக்குள் எல்லாம் பட்டாசுக் கட்டுகளைக் கொழுத்திப் போடுகிறது. நான் கலங்கி சின்னாபின்னமாகிச் சிதறுகிறேன். விஞ்ஞானப் புத்தகத்தில் படித்த உடல் உறுப்புக்களின் தொழிற்பாடுகளுக்கும், இப்போது எனக்குள் நடக்கும் சமாச்சாரங்களுக்கும் சம்பந்தம் ஏதுமில்லை. இது இயற்கை விஞ்ஞானத்தினதும் சமூக விஞ்ஞானத்தினதும் கலவையில் விளைவது. விஞ்ஞானப் புத்தகத்தில் இதயம் இடிந்து நொறுங்குவது பற்றி, ஈரல் குலை நடுங்குவது பற்றி, விதைகள் இரண்டும் தொண்டைக் குழிக்குள் வந்து சிக்கிக் கொள்வது பற்றி நான் படித்ததே இல்லை. சப்பாத்துக்களின் சத்தம் நெருங்குகிறது. பட்டாசுக் காயங்களூடிருந்து ஊறத் தொடங்குகிறது உயிர். ஊறிப் பாய்ந்து உடலை நிறைத்து விடுகிறது. இப்போது நான் மிக மிக உயிருடன் இருந்தேன். என் காதுகளினூடாக அது கேட்டுக் கொண்டிருந்தது. கண்களினூடாக பார்த்துக் கொண்டிருந்தது. அது திசையற்று யோசித்துக் கொண்டிருந்தது. சிறு கூண்டினுள் அடைபட்ட பெரும் விலங்கு போல என்னுள் அது ஒருவிதமாய் புரண்டு புரண்டு தவித்தது. **(குறிப்புக்கள் தொடரும்)**

**கவிஞர் வாசுதேவன் ஈழத்தின் மிக முக்கியமான கவிஞர்களில் ஒருவர். நீண்ட கால இலக்கிய அஞ்சாத வாசத்திற்குப்பின் மீண்டும் மகுடத்தின் மூலம் தனது எழுது கோலிற்கு 'மகுடம்' சூட வருகிறார்.**
**- ஆசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















– பேராசிரியர் செ.யோகராசா –

# ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தாமரைத்தீவானின் தடங்கள்




தாமரைத்தீவான் (சோ. இராசேந்திரம்) ஈழத்து இலக்கிய உலகத்தினுள் 1952ல் பிரவேசித்தவர். கவிதை, கட்டுரை, உரையாடல், சுயசரிதை ஆகிய இலக்கிய வடிவங்களைக் கையாண்டு ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தி வந்திருப்பவர். ஏறத்தாழ அறுபதாண்டுகளாக அவரது இலக்கிய முயற்சிகள் இடம்பெற்றுவந்திருப்பினும் 24 நூல் தொகுப்புகள் வெளிவந்திருப்பினும் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அவருக்குரிய இடம் உரியவிதத்தில் இன்று வரை இனங்காணப்படவில்லை.

மேற்குறித்த நான்கு வகையான இலக்கிய வடிவங்களுள் கவிதைத்துறை சார்ந்தே கூடுதலான படைப்புகளைத் தாமரைத்தீவான் தந்துள்ளார்.

தாமரைத்தீவான் ஈழத்துக்கவிதைத்துறையில் பிரவேசித்த ஐம்பதுகளிலே ஈழத்துக்கவிதைப்போக்கிலே மொழியுணர்ச்சி வெளிப்பாடு மேலோங்கி இருந்தது. அன்றைய கால இலங்கையரசு சட்டரீதியாக சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கியமையும் (1956) அதற்கெதிரான தமிழரசுக்கட்சியின் சாத்வீகப்போராட்டமும் இனக்கலவரமும் (1958) மொழி உணர்ச்சி பிரவாகித்துப் பாய வழிவகுத்திருந்தன. கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கவிஞர் காசிஆனந்தன், இராஜபாரதி, ஜீவா ஜீவரத்தினம், நீலாவணண், எருவில் மூர்த்தி, ஆரையூர் அமரன், பாண்டியூரான், புரட்சிக்கமால், திமிலைத் துமிலன், வாகரைவாணன், சி. மௌனகுரு, செங்கதிரோன், பரமஹம்சதாசன், என கவிஞர் பட்டாளமே உருவாகியிருந்தது. இச் சூழலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து புறப்பட்டவரே தாமரைத்தீவான். எனினும் தாமரைத்தீவான் மேற்கூறியோர் தடத்தில் மட்டுமன்றி, அதனை அடியொற்றி வேறு தடங்களிலும் கால்பதித்துள்ளார். என்பதே கவனத்துக்குரியது.

தொடர்ந்து செல்வதற்கு முன், இடைப் பிறவரலாக, கிழக்கிலங்கை இலக்கிய உலகினைப்பீடித்துள்ள சாபக்கேடு பற்றிக் குறிப்பிடுவது இவ்வேளை அவசியமாகின்றது. அதாவது கிழக்கிலங்கை இலக்கிய வளர்ச்சி ஓட்டமானது அடிக்கடி ஏற்பட்டு வந்த இயற்கை அனர்த்தங்களினாலும் (புயல், வெள்ளம், சூறாவளி முதலியன) செயற்கை அனர்த்தங்களினாலும் (இனக்கலவரம், இடப்பெயர்வு முதலியன ஒரு புறம்; இலக்கிய அமைப்புக்களினதும் முன்னோடிகளினதும் உந்தல்களின்மை இன்னுமொருபுறம்) பேரவலங்களை (கையெழுத்துப்பிரதிகள், பத்திரிகை நறுக்குகள் தொலைந்து போதல்) சந்தித்து வந்துள்ளது என்பதே அதுவாகும். இத்தகைய அவலங்களால் பெரும் பாதிப்புற்ற கிழக்கிலங்கைக் கவிஞர்களுள் தாமரைத்தீவான் முதன்மை இடம் பெறத்தக்கவர் என்பதில் தவறில்லை. ஏனெனில் எண்பது வரையிலான அன்னாரது கவிதைகள் பலவும் அனர்த்தங்களினால் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன.

நிற்க, ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் ஐம்பதுகளிலே மொழியுணர்ச்சி முக்கியத்துவம் பெற்றமையில் தமிழக திமு.க. வின் செல்வாக்கு, குறிப்பாக பாரதிதாசனின் பங்கு கணிசமானளவிலுண்டு. பாரதிதாசனின் செல்வாக்கு, முற்குறிப்பிட்ட கிழக்கிழங்கைக் கவிஞர்களை விட தாமரைத்தீவானின் கவிதைகளில் அதிகமாகவும் வெவ்வேறான விதங்களிலும் இடம்பெற்றிருப்பது இன்று பின்னோக்கிப் பார்க்கின்ற போது நன்கு புலப்படுகின்றது.(பாரதிதாசன் தவிர, பாரதியார், கி. தேவநேயப்பாவணார், கி, ஆ. விசுவநாதம், புலவர் குழந்தை, சுத்தானந்தபாரதியார், கவிஞர் காசி ஆனந்தன் முதலானோரும் தாமரைத்தீவானை ஆகர்ஷித்துள்ளமை கவனத்திற்குரியது). இவ்விதத்தில் தாமரைத்தீவானின் மொழியுணர்ச்சிக் கவிதைப்பண்புகளைப் பின்வருமாறு இனங்காணமுடிகிறது. அ) (ஏனைய கவிஞர்கள் போன்று) மொழியுணர்ச்சி, இனவுணர்ச்சிச் சார்பு ஆ) பழந்தமிழ்ப் பெருமையையும், பழந்தமிழ் இலக்கியச் சிறப்புக்களையும் இன்றைய தலைமுறையினருக்கு உணர்த்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கு (முற்குறிப்பிட்ட சமகாலக் கவிஞர்களின் கவிதைகளில் இப்பண்பினைக் காண்பதரிது)

தாமரைத்தீவான் எழுபதுகள் வரை எழுதிய மொழியுணர்ச்சிக்கவிதைகள் முற்கூறிய காரணங்களால் கிடைக்காத துர்ப்பாக்கிய நிலையில், எண்பதுகள் தொடக்கமான கவிதைகளே பார்வைக்குக் கிடைக்கின்றன எனினும் 'சுதந்திரன்' பத்திரினையினதும் 'சுடர்' சஞ்சிகையினதும் பழைய இதழ்கள் கிடைக்குமாயின் அத்தகைய கவிதைகளுள் கணிசமானவற்றைப் பெறக்கூடிய வாய்ப்புள்ளது. இக் கவிதைகளில் மொழியுணர்ச்சிப் பண்பானது இன உணர்ச்சி சார்ந்ததான பரிணாமத்தைப் பெற்றமைகின்றது. அதாவது எழுபதுகளின் பிற்பகுதியில் ஆரம்பமான ஆயுதப் போராட்டத்தினதும் தனி ஈழப்போராட்டத்தினதும் இனக்கலவரத்தினதும் (1983). உச்ச விளைவுகளாக ஈழத்துக் கவிதைகளில் பேரினவாத ஒடுக்குமுறையின் உச்ச வெளிப்பாடுகளும் போர்க்கால அவலங்களும் இடம்பெறலாயின. இவை தாமரைத்தீவானின் கவிதைகளில் வித்தியாசமான முறைகளில் வெளிப்பட்டன!

அன்றாட அவலங்களென்ற விதத்தில் சடுதியாக இடம்பெறும் ஓட்டங்களும், அடிக்கடி நிகழ்கின்ற உள்ளூர் இடப்பெயர்வுகளும்(கிழக்கிலங்கை இடப்பெயர்வுகள் ஏனைய பிரதேசங்கள் போலன்றி பகலில் வீடு, இரவில் காடு என்ற விதத்தில் நாளாந்த இடப்பெயர்வுகளாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது) தனித்துவமான முறையில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. வாடி என்ற கவிதை இவ்விதத்தில் முக்கியமானது.

**வாடி**

ஆமியாம் பசளைப் பையில்
ஆறேழைக் கொண்டுவாடி!
மாமியைக் கூட்டி வாடி!
மச்சாளும் வரட்டும், எங்கள்
சாமியே முருகா இந்தச்
சாமானைக் காப்பாற்றப்பா!
நாமிதைக் கட்டிக்காவி
நடந்திடா நாள் வராதோ!
சுருட்டடி பாயைக் கட்டுச்
சுருட்டையும் எடுத்துக்கொள்ளு!
உருட்டடி இடித்துச்சப்பும்
உரலையும் மறந்திடாதே!
வெருட்டுவார் இடையில் கண்டால்
விரித்தெலாம் காட்டவேண்டும்!
இருட்டிலும் நடக்க வேண்டும்!
எடுத்ததெல்லாம் கட்டித்தூக்கு!
ஆக்கிய சோற்றைத்தின்ன
அவகாசமில்லையென்றால்
தூக்கடி கறியும் கொஞ்சம்
சொதியையும் விட்டுத்தூக்கு!
நாக்கெல்லாம் காஞ்சும் போச்சு!
நடநட ஆமிவந்தால்
போக்குவான்! அதற்குமுன்னர்
போகலாம் காணாக்காடு!
இல்லையாம் ஆமி வாடி!
இறக்கடி சோற்றைப்போடு!
சொல்லியே பொய்யை நம்மைச்
சோதித்தும் பார்க்கிறார்கள்!
தொல்லைதான் இனிமேல் மூட்டை
தூக்குதல் வேண்டாம்! வந்தால்
கொல்லட்டும்! கைலாயம் போய்க்
குடியமர்ந்திருந்து பார்ப்போம்!

அகதிநிலை அனுபவம் முன்னைய நினைவுக்கிளறல்களோடு இவ்வாறு வெளிப்படுகின்றது:

**அனுபவம்**

அகதியைக் கண்ட துண்டு!
அகதியாய் வந்ததில்லை!
அகதியாய் வந்தபின்பே!
அனுபவம் புரியுதின்று
சகலரும் அகதி ஆகிச்
சமத்துவம் பெற்றதாலே
பகலிரா எதுவும் தோன்றாப்
பார்வையாம் பெற்றுள்ளோமே!
மூட்டையும் முடிச்சுமாக
முன்பவர் போகும் போதெம்
பாட்டிலே தெருவில் நின்று
பார்த்தநாம் வெறுங்கையோடு
காட்டையும் விட்டு நீங்கிக்
கால்நடைப் பயணஞ்செய்து
நாட்டிலோர் மூலை தன்னில்
நம்பியே கிடக்கின்றோமே!
ஒன்றுமில்லாது வந்தோர்க்
குதவினோம்- ஒத்துழைத்தோம்!
அன்று நாம் செய்த வாறு
ஆருளார் செய்வதற்கே?
இன்று யார் அகதியின்றி
இருப்பவர் எவருமில்லை!
நன்றுதான் இல்லையென்றால்
நாம்எதிர் பார்த்திருப்போம்!
தலைவலி காய்ச்ச லெல்லாம்
தனக்குமே வந்தபோதே
நிலைமைகள் புரியும்! இன்றேல்
நிகழ்த்தலாம் மேடைப்பேச்சே!
இலை இனி இழப்பதற் கிங்
கெதுவுமே! இவ்வுடற்குள்
அலைந்திடு முயிருங் கூட
அகலுமோ யார் கண்டார்கள்?

சமகால அவல நிலையின் உன்னதமான வெளிப்பாடு சித்திரம் என்று சொல்லத்தக்கவாறு காணப்படுகிறது பின்வரும் கவிதை:

**சவம்**

ஒரு சவம் வீழ்ந்ததென்றால்
ஊரெல்லாம் திரண்டேபோகும்!
பெருமொலி கேட்கும் வீட்டில்
பெண்களோ கத்திச்சாவார்!
அருமையாய்க் கழுவிப்பூசி
அழகியப்பெட்டிக்குள்ளே
பெருமையோடிட்டுத்தூக்கிப்
பேரிகை முழக்கிச் செல்வார்!
வெட்டிய குழியில் மண்போய்
வீழ்ந்திடா வாறு வைத்துத்
தொட்டுமே மண்ணை அள்ளித்
தூர்த்த பின் வீடு வந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















எட்டுகள், முப்பத்தொன்று,
இறுதியாண்டெதையும் தப்ப
விட்டிடா வண்ணம் சும்மா
வீண்செலவெனினும் செய்வார்!

எத்தனை சவங்கள் தீயில்
எரிகிறதின்று நாட்டில்!
செத்ததோடுயிரு மன்றோ
சேர்ந்தெரிகின்ற தின்று!
பத்திரமான பெட்டி
பாடைகள் ஏதுமுண்டா?
கத்திட ஆள்தானுண்டா?
கண்ணினால் காண்பதுண்டா?
மானமாய் மதிப்பாய் மண்ணுள்
மறைந்திடும் சவங்கள் இன்று
ஈனமாய் இழிவாய் நாட்டில்
எங்கெல்லாம் கிடந்தெவ்வாறு
போனதென் றெண்ணிப் பார்த்தால்
புதுமையாய்த் தோன்றக்கூடும்?
நானுமென்றெங் கெவ்வாறோ?
நடப்பனசொல்வார் யாரோ?

இப்பாடல்களின் தங்கு தடையற்ற ஓட்டமும் சுவைப் பாங்கும் ஏனைய கவிதைகளிலும் காணப்படு வது மனங் கொள்ளத்தக்கது. மேலும் விடுதலை இயக்கச் செயற்பாடுகள், இந்திய அமைதிகாக்கும் படையினரின் நடவடிக்கைகள் முதலியன பற்றி தாமரைத்தீவான் எழுதியுள்ளமை பற்றியும் சமகாலப் பத்திரிகை கள், சஞ்சிகைகள் (உ+ம்: தாகம்) சிலவற்றில் இவை வெளிவந்திருக் கின்றமை பற்றியும் இவ்வேளை குறிப்பிடுவதவசியம் 'தாகம்' சஞ்சிகையில் நினைவிலிருந்து இங்கு தரப்படுகின்றது.

"புலி பிடிக்க வந்ததோ?
பூனையாக வந்ததோ?
எலி பிடித்து நின்றதோ?
.............................." (தாகம்)

**வீழ்க**

காந்தியைக் கொன்று போட்டான்
கடும் வெறி கொண்டோன் என்றோம்
காந்தியின் பெயரைக் கொண்டோன்
கடும் வெறி கொண்டுள்ளானே?
நீந்தியே குருதியாற்றில்
நெடுந்தசை தேடுகின்றான்
மாந்த னென்றி வனைச் சொல்வோன்
மனிதனாய் இருப்போன் தானா?
(தாகம்)

**பார்**

அடக்கு முறைகள் பார் பார்!
ஆக்கிரமிப்பைப் பார் பார்!
வடக்கர் வெறியைப் பார் பார் - மனிதா
வந்துள்ள நோக்கமும்பார்
(தாகம்)

மேற்கூறிய விதங்களில் பொதுவாகக் கிழக்கினதும் சிறப்பாகத் திருகோணமலை மாவட்டத்தினதும் கவனத்திற்குரிய கவிஞராக தாமரைத்தீவான் தன்னை வெளிப்படுத்துகின் றாரென்பது மிகையன்று. மரபுக்கவிதை வடிவங்களையே கையாண்டவரென்ற விதத்தில் ஈழத்துக்கவிஞர் வரிசையில் இடம்பெறும் முக்கிய கவிஞராகவும் தாமரைத்தீவான் திகழ்வது கவனத்திற்குரியது.

மேற்கூறிய கூற்றினை மேலும் உறுதிசெய்வனபோன்ற மைகின்றன, சமகால அவலங்கள் பற்றித் தாமரைத் தீவான் புனைந்த "போரும் பெயர்வும்" (1999), "வீழ்ச்சிக்கும்மி" (2010), இணைப்பு (2005) ஆகிய மூன்று காவியங்களாகும்.

"போரும் பெயர்வும்" என்பது உள்நாட்டுப் போரும் இடப்பெயர்வும் என்பதன் குறுவடிவமாகும். "எம்மூர் மக்களும்பட்ட 90 இன் போர்ப்பெயர்வுப்பாடுகள் கவிதை நடையில் உண்டு. தமிழீழத் திருமலை மாவட்டப் போர்க்காலப் பதிவுகளில் இதுவும் ஒன்றாகலாம்" என்று தாமரைத்தீவான் அக்காவியம் பற்றி கூறியுள்ளவற்றை (இதுவும் ஒன்றாகலாம் என்று தாமரைத் தீவான் அக்காவியம் பற்றிக் கூறியுள்ளவற்றை 'இதுவும் முக்கியமாகலாம்' என்ற திருத்தப் பிரேரணையுடன்) ஏற்பதில் தவறில்லை.

"வீழ்ச்சிக்கும்மி" என்பது தமிழ் இன வீழ்ச்சிக்கும்மி என்பதன் குறுவடிவமாகிறது. பரந்த, பண்டைய, தமிழ் வரலாற்றுப் பின்னணியில் நின்று இன்றைய தமிழரது வரலாற்றை நோக்குவது என்ற விதத்தில் முன்னைய "போரும் பெயர்வும்" காவியத்திற்கும் இதற்கும் ஒற்றுமையுண்டு. ஈழத்தில் இவ்வித நோக்குடனான காவியங்கள் வேறெவையும் வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. அதே வேளையில் போர் முடிவுற்றமைக்குப் பிற்பட்ட ஈழத்தமிழர் நிலைபற்றிக் கூறுவது என்ற விதத்தில் 'போரும் பெயர்வும்' காவியத்திலிருந்து வேறுபட்டமைவது வீழ்ச்சிக்கும்மிக்காவியத்தின் சிறப்பாகின்றது. இவ்வாறான (அதாவது, போருக்குப்பின்னரான தமிழர் நிலைபற்றிக் கூறுகின்ற) காவியங்கள் இன்றுவரை வெளி வந்திருக்கவில்லை என்ற விதத்தில் பாராட்டிற்குரிய முயற்சியுமாகின்றது: பொருத்தங்கருதி இக்காவியத்தின் இறுதிப்பகுதியினை இங்கு தருவது அவசியமானது:

எஞ்சிய மக்களோ முள்வேலிக் குள்ளேயே
இருந்தபடி இருப்பார் !
கஞ்சி குடிப்பாரோ, காயத்தைப் பார்ப்பாரோ,
கடவுளர் அருள் வேண்டுவாரோ?
எந்தெந் நாடுகள் எவ்வாறு தவினும்
இருப்பதெலாம் முகாமலவோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்த உளங்களில் வெந்நீரை ஊற்றியே
வேடிக்கை காட்டுவார் வீழ்த்தியவர் !

எங்கள் பழநிலம்எதிர் அணிக்கெனில்
எல்லா வரலாறும் பொய்யாமே !
தங்கள் பெரும்பான்மை தமிழ் இனத்தவர்
தந்தது கூடப்பழங்கதையே !

படைப் பெருக்கமும் வீண் செலவாம், எனின்
பழந்தமிழர் அடங்குவாராம் !
நடை முறைக்கிது நன்றெனக்கண்டுமே
நல்ல டக்கத்தை மேற்கொண்டனரே !

உலகப் பேரவை ஐ.நா வுக்கு கூட
ஒன்றுமே செய்யும் துணிவிலையே
கலகநேரத்துச் சம்பவங்களைக் கூடக்
கண்டவர் சொல்லிடும் வாய்ப்பில்லையே !

தீர்வினைக் கேட்கும் தலைமையர் யார், அதைச்
செய்து முடிக்கும் திறமையர் யார்?
ஆர்வமெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு
அடிமைச்சங்கிலி பூண்டிடுவோம் !

'மீளா அடிமையாம் நாம் உமக்கே' என
மீண்டும் மீண்டும் உரைத்திடலாம் ?
ஊழையும் உட்பக்கம் காணலாம் என்றினி
உஞற்றும் வாய்ப்புக்கிடமில்லையே

திட்டமிடப்பட்ட இனப்படுகொலை
செய்தி ட்ட கிட்லரை யாமறிவோம் !
விட்டு விட்டுச் செய்யும் ஆடல்களால் நாமும்
வீடடைதல் திட்டமானதுவே !

மூன்றாம் உலகத்துப் போரின் தளமிதாய்
முடிந்த போதும் வியப்பில்லையே ?

சான்றோரும் இங்கில்லை
சான்றாண்மையும் இங்கில்லை,
தப்பிழைக்குமோ இவ்விலங்கை?
நாடிரண்டும் நுழைந்தாய்வுகள் செய்வது
நன்மையோ தீமையோ யாரறிவார் ?
பாடுகள் பட்டவர் பறி கொடுப்பதும்
பாரில் வழக்கமோ யாமறியோம் !
முடியாட்சிக் காலத்தில் முல்லைக்கும் தேர் உண்டு,
மூப்பு மயிலுக்கும் போர்வை உண்டு !
குடியாட்சிக் காலத்தில் கூழுக்கும் கஞ்சிக்கும்
குடிகள் படும் பாடு கொஞ்சமல்ல !
யாதும் ஊர் என்றதால் யாங்கள் பிறந்த ஊர்
யாவருக்கும் பொது ஆகுவதோ ?
ஏதும் இலாமலே ஏதிலியாக நாம்
இருந்து மாள்வது நல்லதுவோ ?

மற்றுமொரு காவியமான 'இணைப்பு' மேற்குறிப்பிட்ட இருகாவியங்களும் போலன்றி புனைவும் உண்மையும் இணைந்த காவியமாக பரிணமித்துள்ளது. அதுமட்டுமன்றி (இணைப்பு என்ற) பெயருக்கேற்ப, பன்முகவாசிப்பிற் குரித்தானதாகவும் மிளிர்கிறது. கவிஞர் வில்வரத்தினம் கூறுவது போன்று சங்ககால - இக்கால வீரத்தின் இணைப்பு, சங்ககால- இக்காலக் காதலின் இணைப்பு, 2ம் உலகப் போரினதும் சமகால ஈழப்போரினதும் இணைப்பு, வடக்கு/ கிழக்கு இணைப்பு எனப் பலபடவிரிந்தது செல்கிறது. இத்தியாதி காரணங்களினால் ஈழத்து அரசியல் சார்பான நவீன காவியங்களிலிருந்து வேறுபட்டதாக வும் தனித்துவமான சிருஷ்டியாகவும் இணைப்பு மிளிர்கின்ற தென்பதை வற்புறுத்துவதவசியமாகின்றது.



ஏறத்தாள முப்பதாண்டுக்காலப் போர் முடிவும் போருக்குப் பிறப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் நிலையும் பேரினவாதப் புத்தெழுச்சியும் சர்வதேச நாடுகளின் நாடகங்களும் கண்டுதாமரைத்தீவானுக்கு ஏற்பட்ட ஏமாற்றம், விரக்தி, மனக்கொதிப்பு முதலான உணர்வுகளை அங்கதச்சுவை விரவ வெளிப்படுத்துவனவாக 'சுதந்திரன் கவிதைகள்' (2010) தொகுப்பு (தமிழ் நாட்டிலிருந்து இது வெளிவந்தமையால் பரவலாக அறியப்படவில்லை.) தரும் கவிதைகள் காணப்படுவது கவனத்திற்குரியது. உ+ம்: 'விழாக் கொள்வீர்'

"ஓரீழம் வந்தாச்சு ஒரு மொழி தான் இனிமேலே
ஒரு மதந்தான்
பேரீழம் ஆச்சுதினி, பேசமுடியாதெவரும்
பிளவே இல்லை
ஆராரோ ஏதேதோ அசைபோட்டுப் பார்த்தார்கள்
அனைத்தும் பாலே!
வேரோடும் வீழ்ந்தாச்சு வெங்கொடுமை - ஆசிரிய
வென்றோம் - வென்றோம்.
வந்தீரே, எம்மோடும் வளர்ந்தீரே குறுக்காலே
வள மீழத்தைத்
தந்துள்ளோம், திராவிராம் தமிழரெலாம் மாளட்டும்
தரணி பார்க்க!
பிந்தியதால் போராட்டம் பிசுபிசுத்துப்போன கதை
பேச வேண்டாம்!
வெந்துயரம் எமக்குரிமை - வெற்றியெலாம் உமக்குரிமை
விழாக் கொள்வீரே!"

பழந்தமிழ்ப் பெருமையையும் பழந்தமிழ் இலக்கியச் சிறப்புகளையும் இன்றைய தலைமுறையினருக்கு உணர்த்து வெதென்பது, மொழி உணர்ச்சி, இன உணர்ச்சி, என்பவற்றின் ஆக்கபூர்வமான வெளிப்பாடு என்றே கூற வேண்டும். இன்னுமொரு விதமாக கூறின், "முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும் மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்" பற்றிய சிரத்தை "பின்னைநாடுறு பெற்றிக்கு இன்றிமையாதது என்பது, வெளிப்படையாக இத்தகைய தூரநோக்குடன் செயற்பட்ட படைப்பாளர்களுள் முதன்மையிடம் பெறக்கூடியயவர் தாமரைத்தீவான் என்பது இன்று ஆழமாகவும் நுணுக்கமாகவும் நோக்கும் போதுதான் தெரியவருகின்றது. அன்னாரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













படைப்புகளூடாகப் பலவிதங்களில் அது வெளிப்படவும் செய்கிறது.

தாமரைத் தீவான் தமது படைப்புகளுக்கு வைத்த பெயர்கள் கூட அவ்விதத்தில் கவனத்தைக் கோருபவை. தமது 'போர் நாற்பது' 'நூல் என்னுரை' யில் கவிஞர் இவ்வாறு கூறுவது மனங்கொள்ளத்தக்கது. " ....... ஆனால், பதின்மூன்றாம் நூலாக இதையும் எழுதிவிட்டேன். ஏனென்றால் இன்னா நாற்பது என்றெல்லாம் நல்ல கருத்துக்கள் கொண்ட சங்கச்சார்பு (பதினெண்கீழ்கணக்கு) நூல்கள் பலவும் தேடுவாரற்று (ஒதுக்கப்பட்டுக்) கிடக்கின்றன. பார்ப்பார் படிப்பார் கிடையாது...... எனவே அவற்றை நினைவு கூரும் விதமாக " போர் நாற்பது" எனும் இச்சிறுநூலைக் காலப்பொருத்தமாக வெண்பாவாக எழுதி முடித்தேன்".

இவ்வாறே (குறுந்தொகை, நெடுந்தொகை முதலான, சங்க இலக்கியங்களை நினைவூட்டும் வகையில்) "ஐந்தொகை", (ஐங்குறுநூறு என்ற சங்ககால இலக்கிய நூலில் இடம்பெற்றுள்ள இயல் உள்ளடக்கம் சார்ந்த பத்து மரபினை அடியொற்றி அமைந்த) 'பத்துப்பத்து', (அந்தாதிப் பிரபந்த மரபினை பின்பற்றி) 'வள்ளுவர் அந்தாதி - குறட்பிழிவுகள் (பாக்கள்)' முதலியனவும் அமைந்துள்ளன.

பழந்தமிழ் இலக்கிய நூல்களில் சிறப்பானவையான சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருக்குறள் ஆகியவற்றில் திருக்குறளே தாமரைத் தீவானை அதிகம் ஈர்த்துள்ள நூலாகும். அதற்கான காரணம் பற்றியும் அது இன்றைய சமூகத்தில் பரவவேண்டிய அவசியம் பற்றியும் தாமரைத் தீவான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "எழுத்தாளர் சிலர் எதையெல்லாமோ எழுதுகிறார்கள். ஆரியமே அதிகம் விதைக்கப் படுகின்றது. தமிழ் எனும் பெயரில் மகாபாரதம் வியாசர் விருந்தாகிறது. இராமாயணம் சக்கரவர்த்தி திருமகனாகிறது. கோதண்டம் ஏந்திய கோமகனாகின்றது. மீண்டும் மீண்டும் உயிரூட்டப்படுகிறது. திரும்பித்திரும்பி சலிப்பின்றி வரையக் கூடிய ஒரு நூல் உண்டென்றால் அது குறள் மட்டுமே. அதில் மினைக்கெடுவது பொழுதை வீணடிப்பதாகாது. கற்றவற்றில் யான் விழைந்த ஒரு நூலாகிய குறளை நம்மவர் மத்தியில் மீண்டும் முழுமையாய் நினைவூட்ட விரும்பியதன் பேறே இவ்வள்ளுவர் அந்தாதி (அபிராமிக்கும் அந்தாதி உண்டல்லவா?) கரும்பு தந்த தீஞ்சாறோ கனிதந்த நறுஞ்சுளையோ....... எனும் பாவேந்தர் பாணியில் (தமிழ் இலக்கியம்) அடி (அந்தம்) முடிப்பாகும். (ஆதி) முறையில் (96 சிற்றிலக்கியங்களுள் ஒன்று) புதிய போக்கில் - நல்லதமிழ் - பத்துக்களின் எண்களுடன் எழுதியுள்ளேன்" நூலின் பெயருக்கேற்ப (133 இயல்கள் கொண்ட) குறளின் ஒவ்வொரு இயலினதும் சாராம்சத்தை பிழிந்தெடுத்து ஒவ்வொரு வெண்பாவில் தருகின்ற புதிய முயற்சியே தாமரைத்தீவானின் இந்நூலாகும்.

"மும்மறை குறள் - கீறல்கள் - கவிதைகள்" பெயரில் வெளிவந்த, தாமரைத் தீவானின் நூலும் திருக்குறள் சார்பானதே. அதன் நோக்கமும் திருக்குறளின் சிறப்புகளை பரவச்செய்வதுதான். ஆயினும் அடிப்படையில் அது ஆய்வுநூல் வகை சார்ந்ததே. " இந்நூலில் ஈரிதழும் ஒட்டாக்குறள் தொடக்கம் வியங்கோள் குறள்கள் வரை, தாமரைத்தீவான் இலக்கண ஆய்வுத் தேடலை செய்து நமக்குத்தந்துள்ளார். இலக்கியங்களை அறிவு மங்கி தவிர்த்துக் கொண்டு போகும் போது இக்கால மொழிப்பாய்வில் இது ஒரு சிறப்பான ஆய்வாக இருக்கின்றது" என்பதை மறுப்பதற்கில்லை.

பழந்தமிழ்ச் சிறப்பினை உணரச்செய்தல் ஒரு புறமாக சமகால தமிழின் சீரழிந்த நிலை பற்றிய சிரத்தையிலும் கவிஞரது கவனம் குவிந்திருப்பது பற்றி இவ்வேளை வற்புறுத்து வதவசியமாகிறது. "அன்பழைப்பு" என்ற நூல் அத்தகையது. நூலின் முன்னுரையில் கவிஞர் இவ்வாறு கூறுவது மனங்கொள்ளற்பாலது.

"அறுபதுகளின் பின்னர் நம்
அருந்தமிழ் குன்றித் தேய்ந்தது
பெறுமதி குறை நந்தாய் யான்
பெரும்பாலும் உணர்ந்ததாலே
உறுதி நாற்பாவில் ஒன்றும்
உயர் ஆசிரியத்து மூன்றின்
அறுசீரில் அன்பழைப்பாய்
ஆம் எட்டு நாலு தந்தேன்"

"பாவேந்தர்" தமிழ் இயக்கப் பாடலின் அதிர்வினாலும் பாவாணர்மலையர் தந்த பைந்தமிழ் பற்றினாலும் நாவேந்து தமிழால் செய்த நற்றமிழ் முயற்சி "யான இந்நூலில், தமிழைக் காப்பதன் பொருட்டு மாணவர், மாணவியர், எழுத்தாளர், மருத்துவர், வணிகர், குருவார், துறவியர், கோயிலார், அரசியலார், கூத்தார், இசைஞர், அச்சகர், ஓவியர், சிற்பியர், இதழாளர், பேச்சாளர், திரைப்படத்தார், பெயரிடுவோர் ஆகியோருக்கு அன்பான அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது: நோக்கிலும் சிந்தனை வீச்சிலும் புத்தெழுச்சி ஊட்டும் வண்ணமமைந்துள்ள இந்நூற் பாலின் சுவை அறிய பின்வரும் பகுதி பேருதவி புரிகின்றது:

**அச்சகர்**

அச்சகர் தன்னில் கற்றோர்
ஆளுமை இருக்குமானால்
எச்சொல்லும் தமிழாய் ஆகும் !
எடுத்துரைத் திடலும் சாலும் !
இச்சை கா சொற்றே யானால்
எதுவுமே திருந்திடாது !
உச்சத்தில் தமிழைத் தூக்கி
உயர்த்திடும் எண்ணம் வேண்டும் !
கழியினில், செம்பில், கல்லில்,
கனமிலா ஓலை தன்னில்
எழுதிய நாளில் எல்லாம்
இத்தவறேதும் இல்லை !
வழுவழுப்பான தாளில்
வரைவுகள் வந்த போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதுகள் காணு கின்றோம் !
பலகைப் பாக்கி யுள்ளோம் !
அச்சகம் சரியாய்ச் செய்தால்
அனைவரும் வந்தே தீர்வார் !
கொச்சையாய்க் குறையாய் இன்றிக்
கூட்டையும் தனிமை யாக்கி
மெச்சிடும் படியாய் - ஆய்வாய் -
மிகுந்த பற்றோடும் செய்தால்
உச்சத்தைத் தமிழும் சேரும் !
உள்ளத்தின் பிடிப்பும் கூடும் !

எழுத்தினை மேன்மை யாக்க
இன்தமிழ் நூலை யாக்க
அழுத்தகப் பங்களிப்பே
அதிகமாய் தேவையாகும் !
பழுத்தவர் ஆக்கம் கூடப்
பார்வைசெய் அச்சகத்தை
வழுத்துவோம் - நன்று செய்தால்
வாழ்த்துவோம் - போற்றுவோமே !

மொழியுணர்ச்சி, மொழிப்பற்று என்ற விதங்களில் ஈழத்துக்கவிஞர்கள் பலரிடமிருந்தும் விலகி தனிவழி சென்ற தாமரைத்தீவானின் கவிதைகள் மற்றொரு விதத்திலும் கவனிப்பைப் பெற்றுள்ளன. நவீன கவிதைக்குரிய நவீன பார்வைகளிளொன்று பகுத்தறிவுப்பார்வை. தமிழில் நவீன தமிழ்க்கவிதையில் பகுத்தறிவுச்சிந்தனைகளை விதைத்தவர் களுள் பாரதிதாசன் முதன்மையானவர். பாரதிதாசன் செல்வாக்கு மொழி, இன, உணர்ச்சி சார்ந்து. ஈழத்து கவிதையூடாக செல்வாக்கு செலுத்தியிருப்பினும் பகுத்தறிவுச் சிந்தனை சார்ந்த செல்வாக்கு இங்கு அரிது என்றே கூற வேண்டும். இந்நிலையில் இக்குறைபாட்டினைப் போக்குவதாயுள்ளது, தாமரைத்தீவனின் ஐந்தொகை (வினா விளக்கம்):

"எதைக் கடவுள் என்கிறார்?" "சமயமுண்டா வாழ்க்கையிலே?" "தமிழ் தனியாய் வாழ்ந்திடுமோ?" "ஆண் பெண் சரிசமமா?" "முயன்றால் முடிந்திடுமா? ஆகிய ஐந்து சிக்கலான விடயங்களுக்குமான பகுத்தறிவு சார்ந்த கவிஞரது பதில்களே ஐந்தொகை (வினா விளக்கம்) யாக விரிந்துள்ளது. ஈழத்துக்கவிதை உலகிற்கு இத்தகைய பார்வை புதிது என்றே கூறவேண்டும் !



மொழிப்பற்றுப் போன்றதே ஊர்ப்பற்றுமாகும். ஈழத்து நவீன கவிதையைப் பொறுத்த வரையில் அது முகிழ்த்த காலத்து மஹாகவி, நீலாவணன் தொடக்கம் ஈழத்துக் கவிஞர்கள் பலரும் வெவ்வேறு விதமான உணர்வுத்தளங்களில் நின்று அது பற்றிப் பாடி வந்துள்ளனர். எண்பதுகளில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், ஊர் இழப்புகள் அவ்வாறான உணர்வுப்பற்றிற்குப் புதிய பரிணாமத்தை வழங்கியுள்ளன. சு.வில்வரத்தினம் (உ-ம்: காற்று வெளிக்கிராமம் முதலியன) நிலாந்தன் (வன்னிமான்மியம்) முல்லை முஸ்ரீபா (இருத்தலுக்கான அழைப்பு முதலியன) முதலானோரின் நவீன கவிதைகள் இவ்விதத்தில் கவனிப்பைப் பெற்றிருப்பது இலக்கிய ஆர்வலறிந்த விடயமே. தாமரைத் தீவானும் ஊர்பற்றினை வெளிப்படுத்தும் விதமாக "வில்லுப்பாட்டினைத் தந்துள்ளார்". ஊரின் முன்னாள் இயற்கை அழகுக் கோலம் மணம் வீசும் கோட்டுச் சித்திரங்களாக, இருவரிக் குறட்பாக்களில் வரையப்பட்டிருப்பதே இந்நூலின் தனித்துவமாகின்றது. உ-ம்:

**தீவு**
வில்லின் அயலூரை விளை வீச்சந் தீவன்றே
சொல்லுவார் பழமும் சுவை

**காடு**
கோடை எருக்கட்டிக் கொள்ளை பயிர் செய்தால்
வீடெல்லாம் மிளகாய் விழும்

**குளம்**
பந்து பூ வம்மி பகல் வெள்ளி காற்றோடு
வந்து விழும் மூக்கில் மணம்

அதே வேளையில் அலங்கோலங்களும் ஆங்காங்கே அழுக்குக்கோலமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. உ-ம்:

**கிண்ணியா**
ஊற்றடியில் தமிழர் உயர்வாய் இருந்த கதை
நேற்றாச்சு இன்றோ நிழல்.
அலையின் அரிப்பாலே ஆறாம் தெருவும் போய்
வலை இன்று ஏழாவதே!

**வெம்பு 2**
காலைக் கடனைக் கழிக்கும் இடம் வெம்பன்
மேலைப் புறம் ஆகுமே.

**கடற்கரை 3**
தொலைவில் வரும்போது தோணாவர் தோணாரே
இலை இன்று வில் எல்லையே

ஊர்ப்பற்றுப் போன்றுதான் குடும்பப்பற்றுமாகும். ஊர்பற்றுடன் ஒப்பிட குடும்பப் பற்று கவிதைப் பொருளானமை அரிதினும் அரிதென்றே கூறவேண்டும். தாமரைத்தீவானின் 'சோமம்' இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கது. தமது குடும்பத்தவர் பற்றிக் கவிதை பாட கவிஞர் முயன்றமைக்கான காரணம் சமூக நோக்குடையது என்பதனை இவ்வேளை மனங்கொள்வது அவசியம். கவிஞர் உரையூடாகவே அதனைக் கேட்போம்:

"முன்னையோர் செயல்கள் பற்றி
முறையாகச் சொல்லி வைத்தால்
பின்னையோர் பேணி வைத்துப்
பின்னாளில் கற்றறிந்தால்
அந்நாளைச் செய்தி யெல்லாம்
அறிந்திடு வதுவு மன்றி
தன்னையும் கால மாற்றத்
தயார் படுத்திடலாமன்றோ?"

விரிவஞ்சி இங்கு எடுத்துக்காட்டுக்கள் தரப்படவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் வடகிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. ஜீ கிருஸ்ணமூர்த்தியிடம் இருந்து ஆளுநர் விருது பெறும் கவிஞர் தாமரைத்தீவான்

ஈழத்துக் கவிதையுலகில் தாமரைத்தீவான் நடை போட்ட மற்றொரு பாதை முன்னைய காலத் தனிப்பாடல் மரபினை பெருவிருப்பத்துடன் அவர் பின்பற்றி வந்திருப்பதாகும். தனிப்பாடல் மரபு என்றவுடன் இலக்கிய வரலாற்றார் பலருக்கு விஜய நகர, நாயக்கர் காலத்தனிப்பாடல் மரபே நினைவிற்கு வருவதுண்டு. ஆயினும் சங்கஇலக்கிய மரபிலும் தனிப்பாடல் ஆட்சி செலுத்தி வந்துள்ளதென்பதைப் பலரும் உணர்வதில்லை. எனினும், சங்ககாலத் தனிப்பாடல் மரபு காதல், வீரம், அறம் முதலியனவற்றிற்கு மட்டும் முக்கியமளிக்க விஜய நகர, நாயக்கர் காலத் தனிப்பாடல் மரபு பல்வேறு பொருள் மரபுகளுக்கு இடம் அளித்திருந்தது. 20ம் நூற்றாண்டு கவிஞர்கள் சிலர் பெரும்பாலும் பின்பற்றியிருப்பது விஜயநகர நாயக்கர் காலத் தனிப்பாடல் மரபினையே. நவீனகால ஈழத்து கவிஞர்களுள்(தாமரைத் தீவான் போற்றும் கவிஞர்களுள் ஒருவரான) சில்லையூர் செல்வராசன் (ஊரடங்குப் பாடல்கள்) போன்ற சிலரே இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கோர். அவர் வழியில் சென்ற தாமரைத் தீவானின் படைப்புக்களில் 'என்பா நூறு' விதந்துரைக்கப்பட வேண்டியதொன்று. இந்நூலில் முருகன் எலி, பட்டு, தாய், கூட்டம், சட்டம்பி, கடன், மந்திரம் என ஒன்றோடொன்று தொடர்பற்ற விடயங்கள் கவிப்பொருளாகியுள்ளன. பொருளெதுவாயினும் கவிஞர் வெண்பா இயற்றும் திறனுக்கும், இரசனை நயத்திற்கும், புதுமைச்சுவைக்கும் சான்று பகர்வனவாக வெண்பா நூறு உள்ளமை குறிப்பிடத்தக்கது:

உ-ம்:

**வள்ளி**

வள்ளி பிடுங்கி உரி ! வடி வாகச் சீவிவிடு
அள்ளி அலசி அடுப்பில் வை - கொள்ளிஎரி
கொஞ்சம்பால் சீனி குழப்பி இறக்கிப் பார்
பஞ்சாய்ப் பறக்கும் பசி

**ஓட்டை**

ஆறறையில் வீடுண்டு ! ஆறேழுபேர் வந்தால்
வேறறையிலேதான் விடவேண்டும் - கூறுகிறாள்
என் மனைவி அவ்வளவே ! எங்கும் மழை ஒழுக்காம்
பின் என்ன பேணி மயம்.

**புயல்**

மட்டக்களப்பென்னும் மாநகரம் உண்மையிலே
மட்டக் களப்பாக மாறியதோ? - திட்டங்கள்
போட்டோ தமிழ் மண் புதைப்பாய், புயலே நீ
காட்டாமல் மூடுவாய் கண்

சிறுவர் பாடல் உருவாக்கமும் நவீன காலத்திற்குரிய இலக்கிய முயற்சிதான். ஈழத்துச் சிறுவர்பாடல் வளர்ச்சியைப் பொறுத்தளவில் 1935ம் ஆண்டு புத்தெழுச்சிக்காலமாகின்றது. அக்காலக் கல்வி வித்தியாபதியாகவிருந்த திரு.க.அருள் நந்தியின் முயற்சியால் இடம்பெற்ற சிறுவர் பாடற் போட்டி ஈழத்துச் சிறுவர் பாடலாசிரியர் பலரை இனங்காட்டிற்று. அவ்வாறு இனங் காணப்பட்டவருள் ஒருவராகிய மா. பீதாம்பரம் அவர்களையே திருகோணமலை பிரதேச சிறுவர் பாடல் முன்னோடியாக கருத இடமுண்டு. அவருக்குப் பின்னர் திருகோணமலையிலிருந்து ஐம்பதுகளில் கவிதையுலகில் பிரவேசித்த தாமரைத் தீவானே சிறுவர் பாடல் முயற்சியிலும் ஈடுபாடு கொள்கிறார். அவரது சிறுவர் பாடல்களும் அனர்த்தங்களுள் அகப்பட்டுக்கொள்ள, ஏறத்தாழ எண்பதுகள் தொடக்கமான அவரது சிறுவர் பாடல்களே காணக்கிடக்கின்றன. பிற்பட்ட காலப் பாடல்களே கிடைத்திருப்பினும் அவை இன்றுவரை ஐந்து தொகுப்புக்கள் அவரால் வெளியிடப் பட்டுள்ளமை முக்கியமானதொரு விடயமே. எவ்வாறாயினும் ஐம்பதுகள் தொடக்கம் ஈழத்தில் சிறுவர் பாடல் வளர்ச்சி வேகம் பெற்ற சூழலில் தாமரைத்தீவானே திருகோணமலை பிரதேசச்சிறுவர்பாடல் முன்னோடியாக வெளிப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் விரும்புகின்ற பொருட்களும் விடயங்களும் எளிமையும் இசையும் கொண்ட பாடல் வடிவில் தாமரைத் தீவானால் எழுதப்பட்டுள்ளமைக்கு அவரது தொகுப்புக்களுள் சில சான்று பகிர்கின்றன. ஈழத்து சிறுவர் பாடலாசிரியர்களுள் சிறுவர் விரும்புகின்ற பழங்களும் உணவுகளும் பற்றி கூடுதலான பாடல்கள் தாமரைத் தீவானாலேயே பாடப்பட்டுள்ளமை ஆழ்ந்து நோக்கும் போது புலப்படுகின்றது. உ-ம்: ரொட்டி

கோதுமை மா ரொட்டி !
குடல் விரும்பும் ரொட்டி !
போதும் என்ப தின்றி
போடவைக்கும் ரொட்டி !
சோறும் தேவை யில்லை !
சொதியும் தேவை யில்லை !
வேறும் தேவை யில்லை !
வெள்ளையான ரொட்டி !
சொட்டுப் பூவும் போட்டே
சுட்டெடுத்த ரொட்டி !
வட்டத்தோசை போலே
வாயில் சப்பும் ரொட்டி !
காலைநேரம் போட்டால்
கடும் பசியைத் தீர்க்கும் !
மாலை மட்டும் போகும் !
மற்ற நாளும் கேட்கும் !

ஆயினும், தாமரைத்தீவானின் கவனம் இன்றைய சிறுவர்களுக்கு எழுதுவதை விட இளைஞர் ஆகவுள்ள சிறுவர்களுக்கு எழுதுவதிலேயே குவிந்துள்ளதென்பதை அவரது தொகுப்புக்கள் சிறப்பாக உணர்த்தி நிற்கின்றன. இளைஞர் இலக்கியத்தில் கூடுதலான கவனஞ் செலுத்தியமைக்கான காரணமும் கவிஞரது இனப்பற்றேயாகும். ஈழத்துக் கவிதைகளுள் பாரதி தாசன் செல்வாக்கிற்கு பலவிதங்களில் ஆட்பட்டவரான தாமரைத் தீவான், இளைஞர் இலக்கிய உருவாக்கத்திலும் அவர் வழியிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கலாபூஷணம்' விருது பெற்ற கவிஞர் தனது மகள் மற்றும் மருமகனுடன்
இரா.நெடுஞ்செழியன் ( திட்டமிடல் பணிப்பாளர்)

சென்றுள்ளமை வியப்பிற்குரியதன்று!

கட்டுரை முயற்சியில் ஈடுபட்ட தாமரைத் தீவான் தமது நூல்களாக தந்திருப்பவை, 'கட்டுரைப்பத்து', 'உணர்ந்தேன் உரைத்தேன்' ஆகிய இரண்டுமே. 'கட்டுரை' முயற்சியும் இலக்கிய வடிவங்களுள் ஒன்றென்பதனை அதுவும் நவீன இலக்கிய வடிவமென்பதனை இலக்கிய ஆர்வலர்கள் பலரும் உணர்வதில்லை. அதனாற்றானோ என்னவோ தாமரைதீவானின் இம் முயற்சியைச் சிலர் கண்டித்துள்ளனர். இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலிலே தாமரைத்தீவான் இம்முயற்சியில் ஈடுபட்டமை வரவேற்கக் கூடியதொன்று.

தாமரைத் தீவானின் கட்டுரை நூல்களிரண்டும் வெவ்வேறான நோக்குடன் எழுந்துள்ளன. "கட்டுரைப்பத்து" மாணவர்களுக்காக எழுதப்பட்டது. மாணவர்க்கேற்ற விதத்தில் தெளிவும் செறிவும் எளிமையும் கொண்ட மொழிநடையால் உருவானது. கட்டுரை எழுத விரும்பும் பாடசாலை மாணவர்கள் இவற்றை ஆழ்ந்து தோய்ந்து வாசிப்பின் பயன்பெறுவார்கள் என்பது நிச்சயமானது. சிறுவர் பாடல்களை எழுதுவது கடினமானதொன்றாகவிருப்பது போன்று, சிறுவர்களுக்கான கட்டுரைகள் எழுதுவது கடினமானதொன்று. இக்கடின முயற்சியில் ஈடுபட்ட தாமரைத் தீவான் கணிசமானளவு வெற்றி பெற்றிருக்கிறாரென்பது புகழ்ச்சியுரையன்று!

"உணர்ந்தேன் உரைத்தேன்" சாதாரண வாசகர்களை மனங்கொண்டு எழுதப்பட்ட 32 கட்டுரைகளைக் கொண்டுள்ளது 'பாமரனும் படிக்காத மேதையும்' 'மட்டும்ம் களப்பும்' 'சுதந்திரனும் மகேசனும்' 'காசியும் கவிதையும்' 'வி.க.வும் திரு.வி.க.வும்' "உணர்ந்தேன் உரைத்தேன்" "பாகவதரும் பட்டபாட்டும்" முதலான - ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத - விடயங்களாகவும் சுவைப்பாங்குடையனவாகவும் அவை இருப்பதால் சாதாரண வாசகர்களையும் கவரக்கூடியனவாக அவை காணப்படுகின்றன!

அத்தகையதான கட்டுரைத்துறையில் தொடர்ந்தும் ஈடுபட்டிருப்பின் தாமரைத்தீவான் சாதனை படைத்திருக்கவியலும்

"சுயசரிதை" என்பதும் நவீன இலக்கியத்திற் குரியதொரு இலக்கிய வடிவமாம். கட்டுரை இலக்கியம் போன்றே சுயசரிதை இலக்கியமும் ஈழத்தில் வளர்ச்சி எய்தாதிருப்பது கண்கூடு. ஊரின் நினைவு, இலக்கிய நினைவு, இளமைக்கால நினைவு, தொழில்சார் நினைவு என பன்முகப்பட்டமைகின்ற சுயசரிதை இலக்கிய முயற்சியில் தானும் நாட்டங்கொண்டதன் விளைவே தாமரைத் தீவானின் 'நினைவில் நிற்பவை' என்ற தொடராகும்!

தாமரைத் தீவு, மூதூர், திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம் சார்ந்த "ஊர்" நினைவுகளும், பாடசாலை அனுபவங்களும் பிற்பட்ட கால இடப்பெயர்வு அனுபவங்களும் பத்து இயல்களில் டயரிக்குறிப்புகள் போன்று வெளிப்பட்டுள்ளன. டயரிக்குறிப்புகளாயினும் பல்வேறு புதிய தகவல்களைத் தருவன என்பதும் காலத்தின் பதிவுகள் என்பதும் ஈழத்தின் அனர்த்தச் சூழ்நிலையில் அவை அவசியமானவை என்பதும் கவனத்திற் குரியவை. டயரிக்குறிப்புகளாக இல்லாவிடின் இந்நூல் ஏற்கனவே கிழக்கிலிருந்து வெளிவந்த வ. அ. இராசரத்தி னத்தின் 'இலக்கிய நினைவுகள்', எஸ். பொ. வின் 'நீலாவாணன் நினைவுகள்' எம். சீ.எம். சரீப்பின் 'ஊர்சார்ந்த, பணியகம் சார்ந்த நினைவுகள்' முதலானவற்றிற்கு நிகராக வும் இது திகழ்ந்திருக்கக் கூடும்! எது எவ்வாறாயினும் ஏனைய நூல்களின் உருவாக்கத்திலே காட்டிய சிரத்தையை தாமரைத்தீவானின் இந்நூல் உருவாக்கத்தில் காட்ட முற்பட வில்லை என்பதுதான் ஜீரணிக்க வேண்டிய உண்மையாகிறது.

தாமரைத்தீவான் மிக அண்மையில் எழுதி வெளியிட்ட "கற்றதும் பெற்றதும்" என்பது தாமரைத்தீவான்தான் படித்த நூல்கள் அல்லது புலவர்கள், எழுத்தாளர்கள் பற்றிய சிறப்புக்களை ஒவ்வொரு வெண்பாவில் எடுத்துரைப்பதாக அல்லது மிகச்சிறு குறிப்புக்களில் தருவதாக அமைந்துள்ளது. சிறப்பாக இளம் மாணவர்களுக்கு பயன் தருவதோடு தாமரைத்தீவானின் ஆளுமை உருவாக்கம் பற்றி நன்கறியவும் உதவி புரியக்கூடியது. எனினும் இந்நூல் அகரவரிசை ஒழுங்கில் அமையாமை பெரிய குறைபாடே என்பதனை மறுப்பதற்கில்லை.


இதுவரை கூறியவற்றைத்தொகுத்து நினைவு கூருகின்ற போது தாமரைத் தீவான் மொழிப்பற்று, இலக்கியப்பற்று, இனப்பற்று, ஊர்ப்பற்று மிக்கவர், என்பதும் தான் பயன்படுத்திய இலக்கிய வடிவங்களுள் மரபுக்கவிதை வடிவங்களை உயிர்த்துடிப்புடன் பயன்படுத்தியவரென்பதும் அவ்விதங்களில் திருகோணமலைக் கவிஞராக மட்டுமன்றி முக்கியமான ஈழத்துக் கவிஞராக தாமரைத்தீவான் பரிணமித்துள்ளாரென்பதும் நன்கு புலப்படுமென்பதில் ஐயமில்லை! சுருங்கக்கூறின், **ஈழத்துத் தமிழ் தேசியக் கவிஞர் வரிசையில் தாமரைத்தீவான் தனித்துவமானவர் என்பதும் சாவினிலும் தமிழ் படித்துச் சாகவேண்டும் எந்தன் சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்' என்ற பேருணர்ச்சிக்கு ஆட்படாமல் மொழிபற்றியும் இலக்கியம் பற்றியும் அறிவு பூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் சிந்தித்தவர் என்பதும் மனங் கொள்ளப் படவேண்டியவை!**

❋❋❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி மனிதனுடைய பல்வேறுபட்ட அனுபவங்களை கலாபூர்வமாகச் சித்தரிப்பதில் வல்லவர் உமாவரதராஜன்




கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ்

ஈழத்தின் சிறுகதை ஆளுமைகளில் மிக முக்கியமானவர் உமா வரதராஜன். 1998ல் வெளிவந்த இவரது உள்மனயாத்திரை என்ற சிறுகதைத் தொகுதி ஈழத்து சிறுகதை வரலாற்றில் ஒரு மைல்கல். அண்மையில் வெளிவந்த இவரது மூன்றாம் சிறுவை (2009) நாவல் பல வாதப்பிரதி வாதங்களுக்குட்பட்டதும் குறிப்பிடத்தக்கது. உள்மனயாத்திரையில் இடம்பெற்ற சிறுகதைகளுடன் மேலும் 05 சிறுகதைகளையும் சேர்த்து உமாவரதராஜன் கதைகளாக வெளிவந்திருக்கும் தொகுப்பு பற்றிய ஒரு மதிப்பீடே இது. ( ஆசிரியர்)

அறிமுகம் :

பாண்டிருப்பிலே 1956.11.19இல் பிறந்தவர் உடையப்பா மாணிக்கம் வரதராஜன். இவரது அப்பா தென் இந்தியாவைச் சேர்ந்தவர். உ.மா. வரதராஜன் ஆன இவர் பிற்காலத்தில் உமா வரதராஜன் என்ற பெயரிலே எழுதத் தொடங்கினார்.

பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பயின்ற இவர் பின்னர் மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி, வெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி போன்றவற்றில் பயின்றார். திரு. யோகம் வேலுப்பிள்ளை, அருட் சகோதரர் மத்தியூ, மருதூர்க்கனி, அருட் சகோதரர் மார்டின், இப்றாகீம் மாஸ்டர் முதலானவர்களிடம் பயின்ற இவர் சிறந்த வாசிப்புப் பழக்கம் உடையவர்.

இவருடைய தந்தையார் மூலம் மு.வ., கல்கி, அகிலன், பெரியசாமி தூரன், ரா.பீ. சேதுப்பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை முதலியோரையும் 'ஆனந்த விகடன்', 'அம்புலிமாமா', 'பொம்மை', 'அன்னம்' முதலிய சஞ்சிகைகளையும் வாசிக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. தொழில் காரணமாகக் கொழும்பு சென்ற இவருக்கு, பல்கலைக்கழகத் தொடர்புள்ள சண்முகதாஸ், மௌனகுரு, சித்திரலேகா, நுஃமான் முதலானோரோடும் சண்முகம் சிவலிங்கம், தாசீசியஸ் முதலானவர்களுடனும் ஏற்பட்ட தொடர்பின் காரணமாகச் சிறந்த இலக்கியப் பரிச்சயம் உருவானது. 'சிங்கர்' தனியார் நிறுவனத்தில் விற்பனை முகவராகச் சேர்ந்த இவர் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனைப் பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றி சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெற்றார்.

கல்முனை எழுத்தாளர் சங்கத்திலே அங்கத்துவம் வகித்த இவர், சுய வாசிப்பினூடாகவே ஆளுமை உள்ள ஒரு படைப்பாளியாக ஆகியிருக்கிறார். உமா வரதராஜன் காத்திரமான விமர்சகருமாவார். இவரும் மீலாத் கீரனும் சேர்ந்து 'காலரதம்' என்ற சஞ்சிகையை வெளியிட்டனர். 'காலரதம்' இரண்டு இதழ்கள் மட்டுமே வெளிவந்தன. இந்த இரண்டு இதழ்களிலும் உமா வரதராஜன் கதை எழுதியிருக்கிறார். அவருடைய முதற் கதை 'அந்தப் பார்வை அப்படித்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிருந்தது'. இது 1972இல் 'காலரத'த்தில் வெளிவந்தது. இவருடைய 'ஏணிகள் சரிவதில்லை' என்ற கதையும் 'காலரத'த்திலேதான் வெளிவந்தது. தனது சொந்த அனுபவங்களைக் கலைத்துவம் ததும்ப அற்புதமாகச் சொல்லுவதே உமாவரதராஜனுடைய திறமையாகும். உமா வரதராஜன் கதை சொல்லும் நேர்த்தியால் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை உலகிலே தனக்கென்று தனியான ஓர் இடத்தைப் பிடித்துள்ளார்.

உமா வரதராஜனின் ஒட்டு மொத்த ஆளுமையைப் புலப்படுத்துவது அவர் வெவ்வேறு காலகட்டங்களில் எழுதி வெளியிட்ட கதைகளின் தொகுதியாக வந்துள்ள 'உள் மன யாத்திரை'யாகும். அத்தொகுதியே இன்று மேலும் ஐந்து சிறுகதைகளையும் சேர்த்து 'உமா வரதராஜன் கதைகள்' ஆக வெளிவந்துள்ளது. ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலே இத்தொகுதிக்கு ஒரு முக்கியமான இடமிருக்கிறது.

> "தற்காலத் தமிழின் குறிப்பிடத்தக்க சிறுகதை எழுத்தாளர்களுள் உமா வரதராஜனும் ஒருவர் என்பதை இத் தொகுப்பு உறுதிப்படுத்துகின்றது"

சம்பவங்களைக் கோர்வையாகப் பின்னுகின்ற அல்லது ஒரு சம்பவத்தினை அடியாகக் கொண்டு கதை வளர்க்கின்ற ஒருவராக உமா வரதராஜனை இனங்காண முடியாது. அவர் ஓர் அக உலகுக்குள்ளே நின்று கொண்டு கதைகளைக் கலாபூர்வமாகச் சித்திரித்திருக்கின்றவர். தனி மனிதனுக்கும் சமூகத்திற்குமிடையிலான பல்வேறுபட்ட முரண்பாடுகள் தான் அவருடைய கதைகளின் கருக்களாகி யுள்ளன. அநேகமான கதைகளில் அவரே பாத்திரமாகி இருக்கிறார். பொதுவாக முற்போக்குத்தனம் என்பதை ஒரு கோசமாகச் சுமந்து கொண்டு எழுதுவதாக அல்லாது ஒரு தனி மனிதனுடைய பல்வேறுபட்ட அனுபவங்களையும் கலா பூர்வமாகச் சித்திரிப்பதுதான் உமா வரதராஜனுக்குரிய தனித்துவம்.

படைப்பாளிகளுக்கு முன்னால் நாம் எல்லா ஆயுதங்களையும் கீழே போட வேண்டி வரும். அத்தகைய ஆத்மார்த்தமான — அற்புதமான படைப்பாளிகளுக்கு முன்னர் நாம் எல்லா ஆயுதங்களையும் கீழே போட வேண்டிவரும். அத்தகைய ஆத்மார்த்தமான அற்புதமான போராட்டத்தின் போராளிகளாக படைப்பாளிகளைப் பார்க்க வேண்டும்.

'கலை என்பது அதன் சாரத்தில் — ஒரு சமூகப் படைப்பு. இதன் வளர்ச்சி சமூக மாற்றத்தின் ஆற்றல் மிகுந்த போக்கை ஒட்டியிருக்கிறது' என்று கிறிஸ்டோபர் கோட் வெல் குறிப்பிடுவார்.

இலக்கியம் முழு மொத்தமான மனித அனுபவத்தின் வெளிப்பாடு. அந்த அனுபவங்களை நமது இலக்கியம் புலப்படுத்துமாயின் நாம் இலக்கியம் — படைப்பு தொடர்பான வெற்றியினைக் கண்டு கொள் வோம். அந்த வெற்றியினை நமது சிறுகதை ஆசிரியர் உமா வெளிப்படுத்துகின்றார்.

சிறுகதை என்றால் ஒரு சிறிய கதை கொஞ்சம் பக்கங்களில் முடித்துவிடுவது என்பதல்ல. சிறுகதை என்ற பிரிவு இலக்கியத்தில் அதில் எடுத்தாளப்படும் பொருள் பற்றியது. ஒரு சிறிய சம்பவம், ஒரு மனோநிலை பற்றி எழுதுவது.

**1950 — 60களில் உலகச் சிறுகதைகளில் ஏற்பட்டு வந்த மாற்றம் தமிழ்ச் சிறுகதைகளுக்கும் வந்து விட்டது. அது கதை சொல்லப்படும் முறையில் வந்த மாற்றம். இது தமிழ் நாட்டில் மாத்திரமல்ல, இலங்கைச் சிறுகதையாளர்களும் அந்த மாற்றத்தைச் சுட்டுவர். அதில் ஒருவர் உமா வரதராஜன் மற்றவர் ரஞ்சகுமார் என பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவார். ஆகவே, தமிழ் நாட்டுக்கு நிகரான சிறுகதை மரபு ஒன்று நம்மிடமும் இருக்கிறது என்பது மிக முக்கியமான விடயமாகும்.**

சிறுகதையில் ஒரு புள்ளிக் குத்தான் இடமுண்டு. அந்தப் புள்ளியைச் சுற்றி கதையையோ நிகழ்ச்சியையோ பின்னலாமே தவிர, அடுத்த புள்ளி விழுந்து விடக்கூடாது என்பர். சிறுகதை யில் நேரடியாகப் பேசப்படுகின்ற விடயம் சிறியதே எனினும் அதன் உணர்வு நிலை மிகு கதைக்கரு அதற்கு அவசியம். மாப்பசான், அன்டன் செகாவ், ஹென்றி போன்றவர்கள் எழுதிய பல கதைகளைப் பத்து வரிகளில் சுருக்கிச் சொல்லலாம்.

கரு போல பாத்திரங்கள் மிக முக்கியமானவை. ஒரு சிறுகதையில் பல பாத்திரங்கள் வரலாம். அந்தப் பாத்திரங்களின் இயக்கம் உணர்வை / மனநிலையை வெளித்தள்ளி நிற்க வேண்டும். அந்த உணர்வு நிலை சிறுகதைக்கு மிக முக்கியமான பண்பாகும்.

நவீன சிறுகதையின் கட்டுக்கெட்டான அமைப்பின் காரணமாகப் பாத்திரங்கள் மட்டுமன்றி கதையே ஒட்டு மொத்தமான வெளியீடுகளாகவும் கலைப்பண்பு மிக்கதாகவும் தோற்றம் பெறுகிறது.

சிறுகதை வாழ்க்கையிலிருந்து சிதறிய ஒரு துண்டாக மட்டும் நோக்காது சமூக முரண்பாடுகளின் அலகாகவும் செறிவாகவும் சூழ்ந்து ஊடுருவலாகவும் தரிசிக்கும் புலக்காட்சி மகிழ்ச்சியான கருத்தில் சுழல்கிறது.

1950 — 60களில் உலகச் சிறுகதைகளில் ஏற்பட்டு வந்த மாற்றம் தமிழ்ச் சிறுகதைகளுக்கும் வந்து விட்டது. அது கதை சொல்லப்படும் முறையில் வந்த மாற்றம். இது தமிழ் நாட்டில் மாத்திரமல்ல, இலங்கைச் சிறுகதையாளர்களும் அந்த மாற்றத்தைச் சுட்டுவர். அதில் ஒருவர் உமா வரதராஜன் மற்றவர் ரஞ்சகுமார் என பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவார். ஆகவே, தமிழ் நாட்டுக்கு நிகரான சிறுகதை மரபு ஒன்று நம்மிடமும் இருக்கிறது என்பது மிக முக்கியமான விடயமாகும்.

உமா வரதராஜன் கதைகளின் தனித்துவம் அவரது மொழி நடையிலும் தங்கியுள்ளது. புதுமைப்பித்தன் கதைகளின் வெற்றிக்கு கதைக் கருவும் மொழி நடையும் காரணமாவது போல உமா வரதராஜன் கதைகளின் வெற்றிக்கு மொழி நடை காரணமாகின்றது. சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல மொழி அங்கு நெளிந்து கொடுக்கின்றது.

**கதைக்கரு:**

உமா வரதராஜனின் கதைகளில் பெண்கள், அரசியல் அதிகாரம், சமூக நிறுவனங்களோடு உடன்பட முடியாத தன்மை என்பவை கருக்களாக அமைந்துள்ளன. இந்தவகையில் அவருடைய 'அசோக வனங்கள்' என்ற கதையில், மனதுக்குள் ஒருவனை வைத்துக் கொண்டு அவனுக்காக ஏங்குகின்ற — அந்த நினைவுகளுக்காகப் பாடசாலை, சமூக சவால்களை எதிர்கொள்கின்ற ஒரு பெண்ணின் மன உணர்வுகள்தான் கதை முழுக்கச் சித்தரிக்கப்படுகின்றது.

"Staff Rooக் கடக்க நேரிட்ட போது பேச்சு அறுபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் என்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கலாம். அவர்களைக் குழப்பக் கூடாது நடத்துங்கள் தெருவுக்குப் போனதும் பஸ் கிடைத்தால் 10 மணிக்குள் வீட்டுக்குப் போய்விடலாம்......... அது இன்னொரு அசோக வனமல்லவா?" (உள்மன யாத்திரை, 1988) சாதாரணமாக நமது சமூகத்தில் பெண்களுடைய உள்ளுணர்வுகள் வெளிப்படுவதில்லை. ஆனால் இக்கதையில் வரும் ரீச்சரின் மனோபாவம் முழுக்க முழுக்க கதையினை ஆக்கிரமித்திருப்பது கவனத்திற்குரியது.

ஈழத்துச் சிறுகதைகளில் புலனாய்வுத்துறையைக் கருவாகக் கொண்டவை மிகக் குறைவு. ஆனால் வரதராஜன் அத்துறைசார்ந்த விடயத்தினை 'பெரிய வெள்ளியும் புனித ஞாயிறும்' என்ற கதையின் கருவாக்கியுள்ளார்.

"இலக்கியத்தின் அடிப்படைப் பண்பு அது மானுட அம்சத்தைக் கொண்டிருப்பதுதான். அரசியல் சமூகப் பிரச்சினைகளை மனித நிலைப்படுத்தி சித்திரிப்பதுதான் அதனுடைய பலம்"

என கா. சிவத்தம்பி (ரவீந்திரன், ந., 1998:76) குறிப்பிடுவார். இவ்வகையில் உமா வரதராஜனின் 'மாலை சூட்டிகள்' என்ற கதை, அரசியலுக்கும் சமூகத்திற்குமுள்ள நெருக்கத்தினையும் அரசியல் போலித்தனத்திற்கு உடன்பட முடியாத ஒருவனின் பிரச்சினையையும் கருவாகக் கொண்டது.

"சிவராசா உள்ளூர் பள்ளி ஒன்றில் வாத்தியாராக இருக்கிறான். பள்ளிக்கூடத்தில் சக வாத்தி எவனுடனா வது சண்டைமூண்டால் 'எம்.பி.யிடம் சொல்லி உன்னை ரான்ஸர் பண்ணுவேன்.' என்ற அஸ்திரத்தை அவன் தயாராக வைத்திருந்தான். சமீபத்தில் அவன் வீட்டுக்குள்ளே சின்ன சச்சரவு ஒன்று மூண்டதாம். தாயும் மகனும் தடித்த வார்த்தைகளை ஆளுக்காள் வீசினார்கள். சிவராசா, தான் சண்டைபிடிப்பது தாயுடன் என்பதைச் சுத்தமாய் மறந்துபோய் கத்தினானாம். அடியே உன்னை எம்.பி.யிடம் சொல்லி ரான்ஸர் பண்ணாட்டி என்னை ஆறெண்டு கேள்."

## பாத்திரங்கள்:

உமா வரதராஜனின் கதைகள் எல்லாவற்றிலும் பாத்திரங்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. பாத்திரங்களைச் சுற்றித்தான் கதைகள் அமைந்துள்ளன. இக்கதைகளில் வரும் பெரும்பாலான பாத்திரங்கள், இக்கதைகளினுடைய ஆசிரியரையே சுற்றி நிற்கின்றன. பிரதான பாத்திரங்களுக்கும் சமூகத்திற்கும் உள்ள முரண்பாடு தான் இக்கதைகளினுடைய மையக் கருவாக அமைந்துள்ளது.

நாம் அன்றாடம் சந்திக்கின்ற பாத்திரங்களைத்தான் வரதராஜன் தன்னுடைய கதையில் கொண்டு வந்துள்ளார்.

"உள்ளத்தின் நேர்மையோடு, தன்னை இழந்து கதாபாத்திரமாக மாறி, எழுதும் ஆசிரியனின் பாத்திர சிருஷ்டிகள் சரித்திர பிரசித்தி பெற்ற பாத்திரங்களை விட, உண்மையாக உயிர் படைத்து உலவும் நபர்களாகத் தெரிவார்கள்" என்ற சிதம்பர ரகுநாதனின் கூற்று (பக். 92) உமா வரதராஜனின் பாத்திரங்களுக்கும் பொருந்தும்.

மொத்தத்தில் உமா வரதராஜனின் அவன், வரதன், ஜெனி, நகுலன் என்ற எல்லாப் பாத்திரங்களும் தனி மனிதனின் அக உளைச்சலையும் சமூகத்தோடு ஒத்தோட முடியாத நிலையையுமே சித்திரிக்கின்றன. இக்கதைகளின் படைப்பாளி அனுபவித்த வெவ்வேறு அனுபவங்களின் பிரதிபலிப்பாகத்தான் இப்பாத்திரங்கள் அமைந்துள்ளன. பாத்திரங்களை வார்ப்பதில் உமா வரதராஜன் மிகுந்த அக்கறை செலுத்தியிருக்கிறார். இப்பாத்திரங்கள் பற்றிய எம்.ஏ. நுஃமானின் பின்வரும் கூற்று (உள்மன யாத்திரை, 1988: முன்னுரை) கவனிக்கத்தக்கது.

"இந்த அளவு தன்னைத் தன் படைப்புக்களில் வெளிப்படை யாக இனங்காட்டிக் கொண்ட, தன்னையே தன் படைப்புக்களின் பாத்திரமாக்கிக் கொண்ட தமிழ் எழுத்தாளர்கள் நம் மத்தியில் மிகச் சிலரே".

## உத்திகள்:

கதை சொல்லுகின்ற உத்தி (Narrative Technic) படைப்பாளிகளுக்கு மிக முக்கியமானது. பின்னோக்கு உத்தி, கடித உத்தி, நாட்குறிப்பு, கனவு என்று பல்வேறு உத்திகளைப் பாரம்பரிய எழுத்தாளர்கள் கைக்கொள்வர். ஆனால் வரதராஜன் தனக்கென்று தனித்துவமான பல உத்திகளைக் கையாண்டுள் ளார். உமா வரதராஜன் தனது கதைகளில் பல்வேறுவகையான உத்திகளைப் பயன்படுத்தி உள்ளார். அந்தவகையில் அவரது 'சூரியனின் முன்புறம்' (உள்மன யாத்திரை, 1988) என்ற கதை ஐந்து வேறுபட்ட சம்பவங்களை ஒரு கதைத் தலைப்புக்குள் கொண்டமைந் துள்ளது. ஒரு மன உணர்வினுடைய — மன ஓட்டத்தினுடைய வெளிப் பாடாக வருகின்ற வெவ்வேறு சம்பவங்களின் பிரதிபலிப்பாக இக்கதையினைக் கொள்ள முடியும்.

ஒரு கம்பனியின் அலுவலாளனாக இருப்பது, ஒரு போலி எழுத்தாளனைச் சந்திப்பது, ஊரடங்குச் சட்டம் பற்றிக் கேள்விப்படுவது, கனவு காண்பது, கற்பனை பண்ணிப் பார்ப்பது வேறுபட்ட இந்தப் பிரச்சினைகளை வைத்து ஓர் உருவத்துக்குள் சொல்ல முற்பட்டதுதான் 'சூரியனின் முன்புறம்'. எல்லாச் சம்பவங்களினூடாகவும் கேலியும் கிண்டலும் மேற்கிளம்பி இருப்பது இக்கதையின் தனிச் சிறப்பாகும். நவீன சித்திரம் போல தொடர்பற்ற பல்வேறு சம்பவங்களைத் தொடர்புபடுத்தி இக்கதை பின்னப்பட்டிருப்பது உமா வரதராஜனின் ஒரு புதிய உத்தியே.

உமா வரதராஜனின் 'எலியம்' என்ற கதை குறியீட்டு ரீதியானது வீட்டுக்குள்ளே பிரச்சினைப்படுத்துகின்ற எலியைப் பல்வேறு வழிகளில் இல்லாதொழிக்க முயல்கின்ற ஒருவனுடைய முயற்சியை இக்கதை சித்திரிக்கின்றது. எம்.ஏ. நுஃமான் இக்கதையினைச் சமகால இனப்பிரச்சினை பற்றிய குறியீடாகக் கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். (Rattology is a satire that symbolically narrates one's unsuccessful efforts and the desperate failure eliminating rats from his house. It can be read in the perspective of ethnic conflict too – M.A. Nuhman, 2002:242)

"இவனுக்கும் இப்போது எலிப்பொறியை நம்புவதைத்தவிர வேறுவழி இருக்கவில்லை."

"எலிப்பாசாணத்தைக் கலந்துவைக்கும் முறையைத்தான் லோரன்ஸ் அவனுக்குச் சிபாரிசு செய்தார்."

"அவன் சுயமாக ஒரு முடிவுக்கு வந்தான். பின்னால் இருக்கும் பாழ்வளவைச் சுத்தப்படுத்தி விட்டால்"

இப்படிப் பல வழிகளில் முயன்று கடைசியாக

"இப்போது எலிகளை அழிக்கும் எண்ணம் அவனிடம் இல்லாமற் போயிற்று. எலிகளிடமிருந்து தன்னை எவ்விதம் காப்பது என்ற பயம் மேலோங்கத் தொடங்கியிருந்தது." (உள்மன யாத்திரை, 1988)

சிறிய சிறிய வசனங்களில் எலியினை அழிப்பதற்கு எடுத்த முயற்சியினை விபரிக்கின்ற இந்தக் கதை சுவாரஸ்யம் நிரம்பிய மொழிநடையில் சொல்லப்பட்டுள்ளது. இக்கதை முழுக்க கேலியும் கிண்டலுமாக உள்ளது. எலியினை அழிக்க முயற்சிக்கின்றவன் இறுதியில் எலியிடமிருந்து தன்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்க முயல்வது ஏதோவொரு நிர்ப்பந்தத்திற்கு உட்பட வேண்டிய நிலையினையே புலப்படுத்துகின்றது. மொத்தத்தில் கலைத்துவம் நிரம்பிய இக்கதை உமா வரதராஜனின் மிகச் சிறந்த படைப்புக்களில் ஒன்று.

### இலக்கிய நோக்கு:

ஒரு படைப்பாளியின் இலக்கிய நோக்கு என்பது அவரது அனுபவங்களினதும் ஆர்வங்களினதும் அடிப்படையி லும் பழக்கவழக்கங்கள், அவர் சார்ந்திருக்கும் சமூகம், அவர் நாளாந்தம் சந்திக்கும் மனிதர்கள், உறவுமுறைகள், நிகழ்ச்சிகள் போன்றவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டு அமைவதுண்டு. இதனை உமா வரதராஜனின் பெரும்பாலான கதைகளில் கண்டுகொள்ளலாம்.

உமா வரதராஜனின் இளமைக்கால அனுபவங்கள், ஏக்கங்கள், அவர் மற்றோர் மீது செலுத்திய தாக்கங்கள், குடும்ப உறவு முறைகளில் அவர் எதிர்கொண்ட சிக்கல்கள், விட்டுக்கொடுக்க முடியாத நினைவுகள், உணர்வு ரீதியான போராட்டங்கள், இலக்கியப் போலித்தனத்தின் மீது இருந்த வெறுப்பு, சமூக அதிகார நிறுவனங்களின் கொடுமைகளின் மீதான வெறுப்புணர்வு என்பவைதான் அவரது கதைகளில் வெளிப்படுவன.

உமா வரதராஜனின் 'அப்பா இல்லாத ஊரில்' என்ற கதை குடும்ப உறவு முறைகளில் அவர் எதிர்கொள்கின்ற சிக்கல்களைச் சித்திரிக்கின்றது. அப்பாவோடு அவனுக்கு இளமைக் காலத்தில் இருந்த முரண்பாடுகளும் அப்பா குடும்பத்தினரை விட்டுப்பிரிந்து அவரது சொந்த நாடான இந்தியாவிற்குச் செல்வதும் அப்பாவின் மரணத்திற்குப் பின்னர் அவனொரு வைபவத்திற்காக இந்தியாவிற்குச் செல்வதும் உறவினர்களைச் சந்திப்பதும் அந்தச் சந்திப்பின்போது சொத்து பற்றிய பிரச்சினை அலசப்படுவதும் இறுதியில் அவன் ஊர் திரும்புவதும் இந்தக் கதையில் விபரிக்கப்படுகின்றது. அவருக்கே உரிய கிண்டல் பாணி இந்தக் கதையின் வடிவத்தை மேலும் செழுமைப்படுத்திருக்கின்றது.

> "இவன் தன் அண்ணனை நிமிர்ந்து பார்த்தான். தலை முழுதும் வெள்ளை மயிர்க்காடு. கொத்துவதற்குக் காத்து நிற்கும் கழுகு மூக்கு. தான் கிழவனானால் இப்படித்தான் இருப்பான் என யூகித்த இவன் அதற்கு முன்னரே தற்கொலை செய்து கொண்டுவிட வேண்டுமென எண்ணினான்."...

இலக்கியப் போலித்தனத்தோடு உடன்பட முடியாத அவரது மன உணர்வை 'சின்னஞ்சிறிய சிறகுகள்' என்ற கதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

> "அவளுடைய தளர்வான நடைக்கும் சோகத்திற்கும் காரணம் என்னவாக இருக்கும் என்று ஆராய்வதே சிறப்பாக வரக்கூடிய ஒரு படைப்புக்குரிய விடயமாக பத்மநாதனுக்குத் தோன்றியது. 'அதை விட்டுப் போட்டு இந்த முண்டங்கள் என்ன பண்ணுறாங்கள் மேடையில் நின்று. மலட்டுப்....... மக்கள் புள்ளை பெறப்போறானுகள்..... கவிதையெண்டால் என்னடா? கட்டுரை ஏதாவது எழுதி வெச்சு வாசியுங்கடா பயித்தியகாறப் பயல்களே."

என்று அந்தக் கதை முடிகிறது. இதேபோல அவருடைய இலக்கிய நோக்கை வெளிப்படுத்துகின்ற இன்னுமொரு கதை 'வெருட்டி'.

உமா வரதராஜனின் 'எலியம்' என்ற கதை, தெலுங்கரான ஸ்ரீ பலிபாட காந்தாராவின் 'கீரியின் கதை'யின் தழுவலாகவே அமைந்துள்ளதென ஒரு சிறு சஞ்சிகை கேள்வி எழுப்பியது. தனக்குப் பெரும் மதிப்பைத் தேடிக்கொடுத்த 'எலியம்' கதை பற்றிய இவ் விமர்சனத்திற்குப் பதிலாக 'வெருட்டி' என்ற கதையினை உமா வரதராஜன் எழுதினார். இக்கதை இலக்கியத்தில் போலித்தனமான கருத்துக்களை எழுதி விளம்பரம் பெறுவோருக்குச் சாட்டையாக அமைந்தது. போலி எழுத்தார்களுக்கு உமா வரதராஜன் எப்போதும் சிம்ம சொப்பனமாகவே இருந்தார்.

இவ்வாறு சுய விளம்பரத்திற்காக எழுதுகின்ற, கருத்துத் தெரிவிக்கின்ற போலி எழுத்தாளர்களுக்கெதிராக 'வெருட்டி' யினைக் கலை அழகுடன் படைத்துள்ளார். எழுத்துக்களிலும் வாழ்விலும் யதார்த்தத்தை எதிர்நோக்குகின்ற கலை நோக்கு இவரிடம் இருப்பதை இக்கதை மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

உமாவரதராஜனின் 'உயர்' என்ற கதையும் சமூகத்தோடும் இலக்கியக் குழுக்களோடும் உடன்பட முடியாதது போல தான் சார்ந்த தொழில் நிறுவனத்தின் அர்த்தமில்லாத வேலைத் திட்டங்களோடும் உடன்பட முடியாததை எடுத்துக்காட்டுகின்றது. இக்கதையில் முழுக்க பயிற்சி வகுப்பில் ஒன்றுமில்லாமல் போன செய்திதான் விபரிக்கப்படுகிறது.

உமாவரதராஜனின் கதைகளில் அதிகார அமைப் புக்களுக்கு எதிரான உணர்வை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது அவரது 'அரசனின் வருகை' என்ற கதை. இக்கதை ஈழத்திலும் தமிழகத்திலும் பெரு வரவேற்பைப் பெற்றது. எதையும் நேரடியாக வெளிப்படுத்த முடியாத நமது அரசியல் சூழலை — அவலத்தினைக் குறியீட்டினால் வெளிப்படுத்திய ஒரு முக்கியமான கதை. அரசியல் ஆணவமும் அதிகார வெறியும் அழிவிலே ஆழ்ந்த களிப்புக் கொள்கின்ற ஓர் அரசன் இக்கதையில் சித்திரிக்கப்படுகின்றான். ஈழத்தின் ஒரு காலகட்ட அரசியலை இந்தக் கதையில் உமா வரதராஜன் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

இக்கதை பற்றி வேதசகாய குமார் (நவம்பர், 2001:09) பின்வருமாறு குறிப்பிடுகி றார்.

> "அவரது 'அரசனின் வருகை' இந்தியா டுடே இலக்கிய மலரில் வெளியாகி மிகப் பரவலாக வாசக அங்கீகா ரத்தைப் பெற்றது. நேர்த் தளத்தில் அது ஒரு உருவகக் கதை. அரசன் இங்கு அதிகாரத்தின் குறியீடு. அவனது பிரசன்னம் உருவாக்கும் பதற்றம். தன் சூழலில் ஒவ்வொரு அணுவிலும் தானே நிரம்பியிருக்க வேண்டும் என்ற அவனது வீங்கிப் போன தன் அகங்காரம். தெரிந்தும் தெரியாததுமான உட்போக்குகளிலானான சமூகச் செயற்பாட்டை ஊடுருவிச் சிதைக்கும் அவனது மூர்க்கம் எல்லாமே இக்கதையில் குறிப்புணர்த்தப்படுகின்றன."

'அரசனின் வருகை' நடந்த அதிகாரக் கெடுபிடிகளைப் பின்வருமாறு சித்திரிக்கின்றது.

> "ஊமையனின் கனவில் அரசனும் வந்திருக்கான். சாந்த சொரூபனாய் கடைவாய் கெழிந்த புன்னகையுடன் அந்தக் கனவில் அவன் வந்தான். கடைவாய் கெழிந்த அந்தப் புன்னகைக்குப் பின்னால் முதலைகள் நிறைந்த அகழியும் நச்சுப் பாம்புகள் பதுங்கிக் கொண்ட புற் றொன்றும் விஷ விருட் சங்களைக் கொண்ட வனாந்திரமும் ஒழிந்திருப் பதாகப் பலர் பேசிக்கொண்ட னர். இதைப்போல அரச னைப் பற்றிப் பல கதைகள். வெண்புறாக்களை வளர்ப்பதில் அவன் பிரியம் கொண்டவன் என்றும் மண்டை ஓடுகளை மாலை யாக்கி அணிவதில் மோகம் உள்ளவன் என்றும் ஒன்றுக் கொன்று முரணான கதைகள். பல நூற்றாண்டுகள் மண் ணுக்குள் யாத்திரை செய்து புதையுண்டு கிடந்த தன் முன்னோரின் கிரீடத்தைக் கண்டெடுத்துத் தலையில் சூடிக் கொண்டான் அவன் எனவும் செல்லும் இடமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்மாசனத்தையும் கொண்டு திரிந்தான் என்றும் காற்றில் வந்தன பல கதைகள்."

(இந்தியா டுடே, இலக்கிய ஆண்டு மலர், 1994 – 1995)

இக்கதை எழுதப்பட்ட பின்புலம் பற்றிக் கதை ஆசிரியரே 'ஈஸ்டன் டைம்ஸ்' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்,

"90களில் நடந்த கலவரக் காலம். அரசியலில் எனக்கு அதிகம் ஆர்வமில்லை. எந்தத் தீவிரவாத இயக்கங் களுடனும் எனக்குத் தொடர்பு இல்லை. நான் சாதாரண மான ஒரு குடிமகன். எனக்கு நேர்ந்த அனுபவம், அவலம் என்னை இந்தக் கதை எழுதத் தூண்டியது. நான் வீட்டில் இருந்தபோது அரச படை எனது சேட்டைக் கழற்றி எனது கையைப் பின்புறம் கட்டி வெறும் காலுடன் என்னை என் கிராமத்தின் வீதி வழியாக அழைத்துச் சென்றது. நான் போகும் நேரம் திரும்பி வருவேனா என்பதற்கு எந்த உத்தரவாதமும் எனக்கு இருக்கவில்லை. ஒரு கட்டத்தை நான் தாண்டி யதும் நினைத்தேன். நான் திரும்பி வரமாட்டேன் என்று. சுடு வெயிலில் முழங்காலில் நிற்க வைத்திருந்தார்கள். நான் அந்நேரமெல்லாம் மனதுக் குள் யோசித்தேன். எங்க ளைப் போன்ற அப்பாவிக ளுக்கு இது ஏன் நேர்கிறது. நாங்கள் என்ன அரச விரோத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட் டோம்..... இச் சூழலால் மனமுடைந்து மனம் வெறுத்து ஊரை விட்டுப் போக வேண்டி வந்தது. ஒரு வருடத்திற்குக் கிட்ட நான் ஊரில் இருக்க வில்லை. மனதுக்குள் இச் சம்பவங்களால் கொதித்துப் போயிருந்தேன்." (பௌசர், எம்., 1997)

அப்போது தான் இந்தக் கதை எழுதப்பட்டது. உண்மை யில் 90களின் அரசியல் சூழலை மிகத் தத்ரூபமாக வெளிக் காட்டியது இந்தக் கதை. இவரது 'கள்ளிச்சொட்டு' என்ற கதை அரச படைகளின் அதிகார வெறியினை — அட்டூழியத்தினைச் சித்திரிக்கின்றது.

இவ்வாறு இவருடைய எல்லாக் கதைகளும் தான் சமூகத்தில் அனுபவித்த பிரச்சினைகளைச் சித்திரிப்பதோடு கலைவடிவம் சிதையாமலும் அமைந்திருப்பது தான் மிகக் கவனத்திற்குரியது.

> **"அவரது 'அரசனின் வருகை' இந்தியா டுடே இலக்கிய மலரில் வெளியாகி மிகப் பரவ லாக வாசக அங்கீகா ரத்தைப் பெற்றது. நேர்த் தளத்தில் அது ஒரு உருவகக் கதை. அரசன் இங்கு அதிகாரத்தின் குறியீடு. அவனது பிரசன்னம் உருவாக்கும் பதற்றம். தன் சூழலில் ஒவ்வொரு அணுவிலும் தானே நிரம்பியிருக்க வேண்டும் என்ற அவனது வீங்கிப் போன தன் அகங்காரம். தெரிந்தும் தெரியாததுமான உட்போக்குளிலானான சமூகச் செயற்பாட்டை ஊடுருவிச் சிதைக்கும் அவனது மூர்க்கம் எல்லாமே இக்கதையில் குறிப்புணர்த்தப்படுகின்றன."**

## முடிவுரை:

இவருடைய கதைகளின் கலைப்பாதிப்புப் பற்றி முரண் பட்ட விவாதங்களும் முன் வைக்கப்படுகின்றன. எம்.ஏ. நுஃமான் (உள்மன யாத்திரை, 1998: முன்னுரை) இது பற்றிக் குறிப்பிடும்போது,

"இக்கதைகளைப் பொறுத்த வரை இத்தகைய எதிர்கொள் எல் மிகவும் இயல்பானதாகவும் கலைத்தாக்கம் ஏற்படுத்துபவை யாகவும் இருந்த போதிலும் நமது பாரம்பரிய முற்போக்கு விமர்சகர்கள் கலை இலக்கியத்தில் இத்தகைய மனோ பாவத்தைத் தீவிரமாக எதிர்ப்பர். இதைப் பிற்போக்குத் தனிமனி தக் கலை என்றும் சாடுவர். அவர்களைப் பொறுத்தவரை கதாபாத்திரங்கள் ஏதோ ஒரு வகையில் கலகக் குரல் எழுப்ப வேண்டும். முரண்பாடுகளை மோதி உடைக்க வேண்டும். கதையிலேயே ஒரு புரட்சியை நிகழ்த்திக் காட்ட வேண்டும். அப்போதுதான் அது முற்போக்கு இலக்கியமாகும். இக்கண்ணோட்டம், ஒரு படைப்பு வெளிப்படுத்தும் வாழ்க்கை உண்மைகளைவிடப் படைப்பாளியின் மனோபாவத்தை — அல்லது நோக்கு நிலையை மட்டும் முதன்மைப்படுத்துவதன் விளைவாகவே ஏற்படுகின்றது. ஆனால் ஒரு நுண்ணுணர்வு மிக்க வாசகனைப் பொறுத்தவரை படைப்பாளியின் மனோபாவத்தை விட படைப்பு வெளிப்படுத்தும் வாழ்க்கை உண்மைகள் அல்லது சமூக யதார்த்தம் அது ஏற்படுத்தும் கலைப்பாதிப்பு என்பனவே முக்கியமானதாகும்."

ஆனால், நுஃமானின் இந்தக் கருத்திலிருந்து மு.பொன்னம்பலம் வேறுபடுகிறார். "உயர்ந்த கலைஞனிடம் அவனது நோக்கு நிலையும் அவனது ஆக்கம் வெளிப்படுத்தும் சமூக உண்மை களும் ஒன்றை ஒன்று தழுவி, ஒன்றை ஒன்று இட்டு நிரப்புவையாகப் பின்னிக் கொண்டே செல்கின்றன..... இந்தப் பின்னணியிலே சமூக யதார்த்தவாதியாகக் கணிக்கப் படும் உமா வரதராஜனின் கதைகளை நாம் ஆய்வு செய்ய வேண்டும். அவரது கதைகளை எடுத்துக் கொண்டால் சில கதைக ளில் இவர் சமூக யதார்த்த வாதியாகவும் சில கதைகளில் இவர் ஆழமற்ற சமூக யதார்த்த போலியாகவும் மாறி மாறி நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது" (பொன்னம்பலம், மு., 1990:1221, 1223).

ஆனால், மு. பொ வின் இந்தக் கருத்தோடு உடன்பட முடியவில்லை. உமா வரதராஜன் தனி மனிதனுக்கும் சமூகத்திற்கு முள்ள முரண்பாடுகளை மிகத் தெளிவாகத் தனது படைப்புக்களின் மூலம் கொண்டு வந்திருக்கிறார். அவ்வாறு கொண்டு வருகின்றபோது அவற்றை வெறும் முரண்பட்ட கருத்து மோதல்களாக மட்டும் நின்று பார்க்காது, சிறுகதை என்ற வடிவத்தின் கலைத்துவம் சிதையாத வகையில் அவற்றை வெளிப்படுத்தி இருப்பதுதான் உமா வரதராஜனின் கதைகளின் வெற்றி. இந்த இடத்தில் இலக்கியத்தின் கலைத்துவம் பற்றி விமர்சகர் சிதம்பர ரகுநாதனின் (யேசுராசா, அ., 2001:70) கருத்துக் கவனிக்கத்தக்கது:

"நல்ல கருத்தைப் பிரதிபலிப்பதால் ஒன்று நல்ல இலக்கியமாகி விடமுடியவில்லை. நல்ல கலை அழகோடு பிரதிபலிப்பதுதான் நல்ல இலக்கியமாகும். மனிதனின் மகோன்னத உணர்ச்சிகளைச் சிறந்த சொல் ஓவியமாக்கும் இலக்கியங் களும் அழிவதில்லை. இலக்கியம் வெறும் விளம்பரம் இல்லை. இலக்கியத்தை விளம்பரக் கருவியாகப் பயன்படுத்த முனையும்போது அந்த இலக்கியம் கருவிலேயே செத்து விடுகிறது. விளம்பரம் மட்டுமே மிஞ்சுகிறது. விளம்பரம் செய்வது மட்டும் கலையாகி விட்டது. விளம்பரத்தையும் கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகோடு செய்யும்போது இலக்கியமாகிறது."

இந்தக் கருத்து கலையழகோடு சிறுகதை எழுதிய உமா வரதராஜனுக்கு மிகப் பொருந்தும். இதன் மூலம் சமூக நோக்கு நிலையும் சமூக உண்மைகளும் ஒன்றை ஒன்று தழுவிச் செல்லும் வாய்பாட்டிற்குள் மாத்திரம் நின்று விடாது அது தழுவியதாகவே உயர்ந்த கலைப்படைப்பினை அவர் சாதித்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். உமா வரதராஜனின் பெரும்பாலான சிறு கதைகள் ஈழத்தின், தமிழின் முக்கியமான சிறுகதை ஆசிரியர்களில் ஒருவராக அவரை இனம் காட்டியிருக்கின்றன. உமா வரதராஜனின் கதைத் தொகுதி பற்றி பிரபல எழுத்தாளர் சுஜாதா (2001:04) பின்வருமாறு குறிப்பிடுவார்:

> "இலங்கை எழுத்துக்கள் என்றவுடன் வரதட்சணை, ஏ.கே. 47 துப்பாக்கிகள், இனக் கலவரம், நகரத்தில் தீ, தமிழச்சி பாடும் விடுதலைக் கீதம்.... இவையே இந்தியத் தமிழ் வாசகர்களின் மனக்கண்முன் சமீபகாலமாகத் தோற்ற மளித்து வந்திருக்கும். ஆனால் எரிமலைக் குழம்பு மட்டும் அல்ல என் விரலின் நகச் சூடும் என் கதைகள் கூறுவதும் அதைத்தான் என்று எனக்குக் கடிதம் எழுதியிருந்த உடையப்பா மாணிக்கம் (உமா) வரதராஜனின் உள்மன யாத்திரை என்கிற சிறுகதைத் தொகுப்பை (அன்னம் வெளியீடு) உடனே எடுத்துப் படித்து ரசித்தேன்... உமா வரதராஜனை இன்றைய தமிழ்ச் சிகதை எழுத்தாளர்களில் முக்கியமானவராக ஏற்றுக்கொள்வதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை."

மொத்தத்தில் உமா வரதராஜன் சிறுகதையென்ற வடிவத்தினை மிகக் கச்சிதமாகக் கையாண்ட ஈழத்தவர்களுள் ஒருவர். சிறுகதையென்பது ஒரு வகையான கவிதைதான். அது கூறப்படாதவற்றால் கட்டப்பட்டது என்பர். (வேதசகாய குமார், எம்., 2001:09) உண்மையில் உமா வரதராஜன் இந்த அம்சங்களை யெல்லாம் உள்வாங்கி வடிவமும் கலைத்துவமு மிக்க கதைகளை எழுதிப் புகழ்பெற்றவர். பெரும்பாலும் அவருடைய கதைகளின் பிரதான அம்சமாக இருப்பது சிறப்பான வர்ணனையும் கிண்டல் தொனியும் கலைத்துவமான சித்திரிப்பும் தான். இவரது படைப்புலகின் எதிர்காலம் பற்றி வேதசகாய குமார் (2001:09) பின்வருமாறு குறிப்பிடுவார்:

> "தொடர்ந்து தீவிரத்துடன் இயங்குவாரெனில் மிக முக்கியமானவராகி ஈழத்துச் சிறுகதை மரபின் முதற்தரப் படைப்பாளிகளுள் ஒருவராக ஆகும் தகுதி படைத்த ஒருவராக அவரது முதல் தொகுப்பு இனம் காட்டியது."

இது தவிர ஈழத்துச் சிறுகதைகள் பற்றிய முக்கியமான விமர்சனங்களிலும் உமா வரதராஜன் மிகக் கூர்மையாக அவதானிக்கப்பட்டிருக்கிறார். 'மோகவாசல்' (1995) தொகுதிக்குப் பின்னுரை எழுதிய கா. சிவத்தம்பியும் 'உள்மன யாத்திரை' (1988)க்கு முன்னுரை எழுதிய எம்.ஏ. நுஃமானும் 'அயலக தமிழ்க் கலை இலக்கிய செல்நெறி' (2001) என்ற நூலில் ஈழத்துச் சிறுகதை பற்றி எழுதிய செங்கை ஆழியானும் ஈழத்துச் சிறுகதையின் முக்கிய திருப்பு முனையாகக் குறியாக உமாவரதராஜனைப் பார்த்திருக்கின்றனர். ஆனால் இன்று இவர், துரதிஷ்டவசமாகக் காலத்தின் அவஸ்தைகளாலும் மன ரீதியிலான நெருக்கு வாரங்களினாலும் தொடர்ந்து எழுதித் தன் இருப்பை உறுதிசெய்து கொள்ளவில்லை. எனினும் தனது சமூகத்தின் சூழலை நுனிப்புல் மேய்தல் இன்றி, தன்னையே பாத்திரமாகக் கொண்டு, வித்தியாசமான முறையில் அணுகிய உமா வரதராஜன் தமிழின் முக்கியமான ஒரு சிறுகதையாளர் என்பதில் தவறில்லை.

# நடுகல்



கல்லாலும் மண்ணாலும்
ஆழமாய் நிலம் செருகி
உருப்பெற்ற வீட்டிலிருந்து
சிதறிய என் பாட்டன் கால
ஒற்றைக்கல்
இடிந்து புதைந்த வெள்ளை
வீட்டின்
உண்மைக் கதையை பேசுகிறது

அழகாய் வார்த்த தம்முள்
அருகாய் வளர்ந்த அரசமரம்
பற்றியும்
அம்மர நிழலில் பிள்ளையாரை
பிரதிஷ்டை செய்ய நினைத்த
என் பாட்டன் பாட்டி பற்றியும்
அவர் தம் லட்சிய கனவின்
தாமதம் பற்றியும்

வேர் படர்ந்து கிளை பரப்பி
அம்மரம் விருட்சமான அன்று
வெள்ளை வீட்டுக்கு சிலர்
வேலி போட்டதாகவும்
சப்பாத்து வீரர்களும்
கைவிசிறிக்காரர்களும்
வந்ததாகவும்
அங்கே புதையுண்டு போன
பாட்டன் பாட்டி
எங்கள் ஆடைகள்
எங்கள் ரேகை பதிந்த பொருட்கள்
என நிலம் புதைந்த
எங்கள் வரலாற்றுக்கு மேல்
வேதமோதும் சிலரையும்
காட்டியது கல்

கல்லிடமிருந்து நான்
விடைபெற வேண்டும்
ஏனெனில்
எங்கள் புதிய வெள்ளை வீட்டு
அத்திவார துளையிலும்
அரசமரமொன்று வளர்வதாகவும்
அதன் கீழ் வீரபத்திரக் கடவுளை
பின்னொரு நாளில் பிரதிஷ்டை
செய்யலாம் என அப்பாவும் அம்மாவும்
பேசியதாக தெரிகிறது

ஆம் லட்சியக் கனவு தான்
நேற்றைய பாட்டன்
இன்றைய அப்பன் போல்
என்னாலும் இனி
தாமதிக்க முடியாது

ஆம் இது என் லட்சியம் தான்....

- தில்லைநாதன் பவித்திரன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகங்காரமூர்த்தியின் அலுவலகக் கோப்பு.

**"அவருக்கு அது ஆகாதென்று தெரிந்த பின்னும் அவர் அதைச் சுமக்க விரும்பினார்."**



அன்றைய நாள் அகங்காரமூர்த்தியைப் பொறுத்த வரையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளாக இருந்திருக்கும். நெடுங்குரலோனின் ஐந்து சீடர்களில் ஒருவன் தேவனாய் ஒருவன் அலுவலகப் பொறுப்பேற்கும் நாளிது என்று கத்தியபடி அலுவலகத்தின் வளவெங்கும் திரிந்தான். நான் நிறுவனத் தின் மாடியில் நின்றவாறு தெருவையும் அவர்களின் செயல்களையும் அவதானித்துக் கொண்டிருந்தேன்.

அன்றைக்கு காகம் வழமைக்கும் மாறாக மரத்திலிருந்து வேறொரு குரலில் கரைவது போலிருந்தது. காகங்கள் யாரேனும் வீட்டுக்கு வருவதற்கு முன் முன்னுணர்ந்து கரையத் தொடங்கிவிடும் என அம்மா எனக்குச் சொல்லியிருக் கிறாள். நானும் அதை பரீட்சித்துப் பார்த்திருக்கிறேன். சில நேரங்களில் வீட்டின் வேலிப் படலையில் காகங்கள் கரையும் நாட்களில் சிலர் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள்தான். ஆனால் சிலநேரங்களில் அப்படி நடப்பதுமில்லை. அம்மா சின்ன வயதில் எனக்கொரு பாட்டுச் சொல்லித் தந்திருந்தாள்.

"காக்கா கருங்கண்ணி வேப்பம் பழம் தின்னி
வேற்றிலைச் சாறு தின்னி
உங்கட வீட்டார் வந்தால் பறந்து காட்டு
எங்கட வீட்டார் வந்தால் நடந்து காட்டு"

வீட்டுக்கு ஆக்கள் வராதபோதெல்லாம் காகத்தின் உறவினர்கள் யாரோ வரப்போகிறார்கள் போல இருக்கு அதுதான் கத்துதாக்கும் என்று நினைத்துக் கொள்வேன். என்றாலும் அதின்ர உறவினர் வாரதென்றால் ஏன் எங்கட வீட்டுப் படலையில வந்து கத்த வேணும் என்று யோசிப்பன். பிறகு எங்கட வேப்ப மரத்திலதான் அதின்ர கூடு இருக்குதாக்கும் என்று மரத்தின்ர கிளைகளில தேடிப்பாப்பன். பெரும்பாலும் அங்கு கூடு இருந்துதானிருக்கு. ஆனாலும் சந்தேகம் குறையுறதில்லை.

காகத்தின் கரைதலும் சீடனின் குரலும் ஒன்று போலவும் ஒருமித்தும் ஒலித்தன, அதனால் காகம் அகங்கார மூர்த்தியின் வரவை முன்னுணர்ந்துதான் கரையுது என்று நினைத்துக் கொண்டேன். காலையே சீடர்கள் தீவிரமாக வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அலுவலக வேலைகளில் காட்டாத உற்சாகமும் தீவிரமும் அவர்களில் தெரிந்தன. தங்களுக்குத் தெரிந்த ஒருவனை அலுவலக அதிகாரியாகக் கொண்டு வருவதற்கு அவர்கள் காட்டிய அக்கறைகள் கொஞ்ச நஞ்சமல்ல என்பதும், பெரும்பாலும் அகங்காரமூர்த்தி தான் அதிகாரியாக வரக்கூடும் என்ற ஊகமும் பலரிடமிருந்தது தான். சீடர்கள் சில நாட்களுக்கு முன்னிருந்தே தங்களுக்குள் இரகசியமாகக் கூடுவதும், ஏற்கனவே அதிகாரியாக இருக்கும் பத்மராசனைத் துரத்துவதற்குமான வேலைகளில் ஈடுபடத் தொடங்கியிருந்தனர். கொஞ்ச நாட்கள்தான் திரைமறைவில் அவர்களின் வேலைகள் நடந்தன. பின்னரெல்லாம் வெளிப்படையாகவே பத்மராசன் பற்றிய அவதூறுகளைப் பரப்பத் தொடங்கினார்கள். பத்மராசன் ஒரு சாதுவான மனிதன் போலிருந்தாலும் அவர் நரிக்குணம் கொண்டவர் என சீடர்கள் அலுவலக வளவெங்கிலும் எதிர்ப்படும் எல்லோரிடமும் சொல்லித் திரிந்தனர். இதைப் பலர் நம்பின போதும் சிலர் பத்மராசனின் நெகிழ்வுத்தன்மைகளுக்காக அவர் துரத்தப்படுவதை விரும்பியிருக்கவில்லை.

குரலோனும் சீடர்களும் அகங்காரமூர்த்தி பதவியேற்கும் நாளை வெகு விமர்சையாகக் கொண்டாடத் தீர்மானித்திருந்தனர். அதற்காக அலுவலப் பணியாளர்களிடமிருந்து ஒரு தொகைப் பணத்தினை அவர்கள் வசூலிக்கத் தொடங்கியிருந்தனர். சீடர்கள் கூட்டம் அலுவலப் பணியாளர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து பணத்தை வசூலித்துக் கொண்டு வந்தது. என்னிடம் வந்தபோது "தனிப்பட்ட எவரையும் வரவேற்பதற்கு என்னால் பணம் தரமுடியாது" என்று மறுத்துவிட்டேன். அலுவலகத்தில் பணிபுரியும் இளையவர்களில் நானும் ஒருவன் என்பதால் என்னை அச்சுறுத்துவது போலப் பார்த்துவிட்டு அப்பால் சென்றனர். இப்படிப் பலரும் மறுத்திருந்தார்கள். சீடர்களில் ஒருவன்தான் பாலன். இவன் அலுவலகத்தில் கழிக்கும் நேரத்தை விட தன் வியாபாரத் தலத்தில் கழிக்கும் நேரந்தான் அதிகமாக இருந்தது. இவனின் இந்த தனத்தினால்த்தான் பத்மராசன் இவனையும் சிலரையும் அலுவலகப் பணிகளில் ஒதுக்கி வைத்திருந்தார் என நம்பப்பட்டது. இந்தச் சீடன்தான் பணம் தராதவர்களின் பெயர் விபரத்தை புதிய அதிகாரிக்குச் சமர்ப்பிக்கப் போவதாகவும், பணம் கொடுக்காதவர்கள் அவருக்கு எதிராக செயற்படுகிறவர்கள் என்றவாறாகப் பிரச்சாரத்திலும் ஈடுபட்டதோடு சிலரை எச்சரித்துமிருந்தான். இப்படியான அசிங்கக் கூத்துக்களின் பின்னர்தான் அன்று அகங்காரமூர்த்தி அலுவலகம் வருவதாக அறிவிக்கப்பட்டது. சீடர்கள் பக்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவசத்தில் உறைந்து போயிருந்தார்கள். காலை அலுவலகத்தின் வளைவில் வாழைமரங்கள் கட்டப்பட்டன. தோரணங்களால் அலுவலக வீதி அலங்கரிக்கப்பட்டிருந்தது. நாதஸ்வரக் காரர்கள் வந்திருந்தார்கள். அலுவலகமே விழாக்கோலம் கொண்டிருந்தது. சில பணியாளர்கள் வீதியின் இரு மருங்கிலும் பூக்களுடன் நின்றிருந்தனர். சீடர்களின் தலைவனான அந்த நெடுங்குரலோனும் அவனின் நெருங்கிய தோழனும் மாலைகளுடன் அலுவலக வீதியின் தொடக்கத்தில் நின்றிருந்தனர்.

இந்தக் கூத்துக்களுக்குச் சற்று முன்னர்தான் நான் அலுவலகத்துக்கு வந்திருந்தேன். நான் வழக்கமான நேரத்துக்குத்தான் வந்திருந்தேன். அகங்காரமூர்த்தியின் வரவு பற்றி அறிந்திருந்தாலும் எவரையும் மாலை மரியாதைகள் செய்து வரவேற்க வேண்டும் என்ன சமபிரதாயங்களில் நம்பிக்கையில்லாததால் நான் வீதிக்குச் செல்லவில்லை. அலுவலகத்தின் மேல் மாடியில் ஏறி ஒரு அறையின் யன்னல் வழியாக எல்லாவற்றையும் அவதானித்தபடியிருந்தேன். சீடர்கள் மிக்க பதட்டமாகக் காணப்பட்டனர். ஒருவரோடு ஒருவர் ஏதோ பேசிக்கொண்டும் அடிக்கடி வீதியின் திருப்பத்துக்குச் சென்று அதிகாரி வருகிறாரா எனப் பார்த்தவாறுமிருந்தனர்.

சரியாக ஏழு நாற்பத்தெட்டு மணியிருக்கும் நீல நிறக்கார் ஒன்று திருப்பத்தில் வந்து நின்றது. சீடர்களின் முகத்தில் ஒளி பிறந்தது. நெடுங்குரலோன் விரைந்து சென்று காரின் கதவைத் திறக்கவும் அதிகாரி இறங்கினார். கறுப்பு நிறக் காற்சட்டையும் நீல நிறச் சட்டையும் அணிந்திருந்தார். மிடுக்கான உயரம், கழுத்துப் பட்டியும் அணிந்திருந்தார். கறுப்பு நிறமான கண்ணாடி அவரின் முகத்தை மேலும் இருட்டாக்குவது போலத்தான் எனக்குப்பட்டது. மங்கள வாத்தியங்கள் முழங்கின. சீடர்கள் மாலைகளை அணிவித்தார்கள் கைகளைக் கொடுத்து வரவேற்றனர். பணியாளர்கள் மலர்களை எறிந்து வரவேற்றனர். அகங்காரமூர்த்தி புன்னகை செய்தார். அலுவலக வாயிலுக்கு வந்தபோது நெடுங்குரலோன் வலது காலை எடுத்து வைத்து வாருங்கள் என்று அன்பாக வேண்டிக் கொள்ளவும் அவரும் வலதுகாலை எடுத்து வைத்து உள்ளே வந்தார்.சீடர்களும் மேலும் சிலரும் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டும் கைகளைக் குலுக்கிக் கொண்டுமிருந்தார்கள். இந்தச் சடங்குகள் சற்று நேரம்வரை நீடித்துக்கொண்டிருந்தது. நான் மாடியிலிருந்து இறங்கி வந்து தாபனுடன் சேர்ந்துகொண்டேன். சிலரைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. அதிகாரிக்கு முன்னர் மிகுந்த பணி வையும் மரியாதையையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

சீடர்கள் அவரை அவரது அறைக்கு அழைத்துச் சென்று கதிரையில் அமர வைத்தார்கள். இருள்நிறக் கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்ட அந்த அறையில் ஏ.சியிலிருந்து பரவிய குளிர் அதிகாரியை மெய்மறக்க வைத்தது. சீடர்கள் அவரது தோள்களிலிருந்த மாலைகளை வாங்கி வெளியே கொண்டு போய் போட்டனர். அப்போதுதான் பத்மராசன் உள்நுழைந்தார். நேராக அதிகாரியிடம் சென்று கைகளைக் குலுக்கிக் கொண்டார். தானும் இங்கேயே இரண்டாம் நிலை அதிகாரியாக திரும்பவும் நியமிக்கப்பட்டிருப்பதால் தன்னாலான உதவிகளை அவருக்கு வழங்குவதாக உறுதியளித்தார். சீடர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து ஏளனப் புன்னகை செய்தனர். பத்மராசன் இவற்றையெல்லாம் அவதானித்தபடி அறையிலிருந்து வெளியேறினார்.

அலுவலக ஊழியன் வாசுக்குட்டி கையில் பல கோப்புக்களுடன் உள்நுழைந்தான். கோப்புக்களை அதிகாரியின் மேசையில் வைத்தான். அதிகாரி அதிலொன்றை எடுக்க முற்படுகையில் சீடர்களில் ஒருவன் இன்னும் ஐந்து நிமிடங்கள் பொறுங்கள் சுபநேரமாகட்டும் என்றான். அதிகாரி ஐந்து நிமிடங்கள் காத்திருந்து கோப்பொன்றை எடுத்துத் திறந்தார். சீடர்கள் மகிழ்ச்சிப் புன்னகையுடன் அறையிலிருந்து வெளியேறினர். அவர் கோப்பை ஒவ்வொரு பக்கமாக விரிக்கத் தொடங்கினார். பிறகு தலையைச் சொறிந்தவாறு தன் கதிரையில் லேசாகச் சாய்ந்தார். அந்த ஏ.சிக் குளிருக்குள்ளும் அவரது முகத்தில் வேர்வைத் துளிகள் அரும்பின.

அன்று பிற்பகலே அகங்காரமூர்த்தி அனைத்துப் பணியாளர்களையும் சந்திக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அலுவலக ஊழியன் வாசுக்குட்டிதான் அந்தத் தகவலைப் பணியாளர்களுக்கு பயபக்தியுடன் சொல்லிக் கொண்டு திரிந்தான். கூட்டம் ஒன்று முப்பது மணிக்குத் தொடங்க விருந்தது. பணியாளர்கள் எல்லோரும் மண்டபத்தில் கூடியிருந்தனர். சரியாக இரண்டு மணியிருக்கும் அகங்காரமூர்த்தி மண்டபத்துக்குள் நுழைந்தார். அவரின் பின்னே பத்மராசனும் வந்தார் எல்லோரும் எழுந்து நின்றனர். சீடர்களுக்கு குழப்பமாக இருந்தது. பத்மராசனும் அகங்காரமூர்த்தியுடன் வருவதால் அவருக்காகவும் எழுந்து நிற்பது போலாகிவிடும் என்று அவர்கள் சங்கடப்படுவது தெரிந்தது.

சம்பிரதாயமான வணக்கத்துடன் அகங்காரமூர்த்தி பேசத் தொடங்கினார். "நான் இந்த அலுவலகத்துக்கு பணிபுரிய உங்களில் ஒருவனாக வந்திருக்கிறேன்." என்று அவர் தொடங்கிய போது பெருங்குரலோன் கைதட்டினார். சீடர்கள் அவருடன் சேர்ந்து கைதட்டினார்கள். "நான் எல்லோருடனும் நட்பாக இருக்கவே விரும்புகின்றேன் எனக்கு ஒத்துழைத்தால் நான் யாரையும் பகைக்க மாட்டேன் ஒத்துழைக்காதவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பேன். எனக்குக் கீழே வேலை செய்ய விருப்பம் இல்லாதவர்கள் கடிதம் எழுதித்தரலாம் அவர்களின் இடமாற்றத்துக்கு நான் வழிசெய்கிறேன்." என்று பேச்சைத் தொடர்ந்தார். சீடர்கள் ஐந்துபேரும் எங்களைத்திரும்பிப் பார்த்துச் சிரித்தார்கள். எங்களில் பலர் பயந்துதான் விட்டனர். இடமாற்றம் என்ற சொல்லே அனைவரையும் கிலி கொள்ள வைத்தது. அப்போது தான் நான் அகரங்காரமூர்த்தியை ஆழமாகக் கவனித்தேன் அவர் மிடுக்காகக் காணப்பட்ட போதும் அவரது முள்ளந்தண்டு ஏதோ உள்வளைந்திருப்பது போலத்தானிருந்தது.

மண்டபம் முழுவதும் நிசப்தமாகிவிட்டது. வந்த முதல் நாளில் அதிகாரியின் உரையில் அதிகாரம் தொனித்தது பலருக்கும் ஏமாற்றமளித்திருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் இது ஏமாற்றமானதாகப் படவில்லை. அதிகாரிகள் முதலில் அதட்டித்தான் கதைப்பார்கள். பின்னரெல்லாம் தமக்கான ஒரு குழுவை அமைத்துக் கொண்டு அக்குழுவின் நலன் கருதியே செயற்படுவார்கள். பத்மராசனும் இப்படித்தான் பொறுப்பேற்ற போது பேசினார். பிறகு அப்போது துணையதிகாரியாக இருந்த ருத்திரகுமாரனின் சொற்படிதான் செயற்பட்டார். இந்த யதார்த்த விதி இன்னொரு தடைவை மெய்பிக்கப்படக் கூடுமோ? என்று யோசித்தேன்.

அதிகாரியின் உரையினைத் தொடர்ந்து துணையதிகாரி பத்மராசன் பேசினார். தான் நெருக்கடியான காலத்தில் நிறுவனத்தை அப்போது பொறுபபேற்றதாயும் தன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தவரை நிறுவனத்தின் மேன்மைக்காக விசுவாசமாக செயற்பட்டதாகவும் பேசினார்.

அவரின் உரையின் போது சீடர்கள் தங்களுக்குள் எதையோ பேசிக்கொணடிருந்தனர். சபையில் மெல்லிய சலசலப்பு ஏற்பட்டது. பத்மராசன் எதையும் பொருட்படுத்தாது பேசினார்.

புதிதாக பொறுப்பேற்றிருக்கும் அதிகாரியை மனமுவந்து வரவேற்பதாகக் கூறினார். தான் துணையதிகாரியாக மீண்டும் இங்கேயே பணிபுரிவதில் தனக்கு எந்த வருத்தமும் இல்லை என்றார். எனது காலத்தில் இருந்த நெருக்கடியும் மரண அச்சுறுத்தல்களும் குண்டு வெடிப்புக்களும் தற்போது இல்லாததால் தலைவரினால் நிறுவனத்தைச் சிறந்த முறையில் வழிநடத்த முடியும் . அதற்கு தன்னால் இயன்ற முழு உதவிகளையும் புரியத்தயார் எனவும் பேசி முடித்தார்.

சபையில் இருந்த சிலர் கைகளைத் தட்டினர். பத்மராசன் நிறுவனத்தை பொறுப்பேற்ற போது நாடு மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது. சுமாதனம் பேசப்பட்ட காலம் முடிந்து போருக்கான முன்னாயத்த வன்முறைச் சம்பவங்கள் நிகழத் தொடங்கியிருந்த காலமது. நிறுவனத்தின் முன்னாள் அதிகாரியும் வன்முறைச் சம்பவம் ஒன்றில்தான் கொல்லப் பட்டார். ஆதலால் நிறுவனத்தை எவருமே பொறுப்பேற்கத் தயங்கிய நிலையில் துணையதிகாரியாக இருந்த பத்மராசனே நிறுவனத்தை பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பத்மராசன் பொறுப்பேற்றவுடன் முதலில் செய்ததே ஏற்கனவே யிருந்த சட்டதிட்டங்களை மாற்றியமைத்ததுதான். அத்தோடு தனக்கான விசுவாசக்குழு ஒன்றையும் அமைத்தார். தன்னை எதிர்ப்பவர்களின் அதிகாரங்களைப் பறித்தெடுக்க தன் விசுவாசக் குழுவைப் பயன்படுத்தினார். இதனால் பத்மராசன் எதிர்பார்க்காத அளவுக்கு அவருக்கு எதிரான அதிருப்பதிக்குழு வளரக் காரணமானது. அது பத்மராசனை அதிகாரத்தில் இருந்து விலக்கும் அளவுக்கு வலிமையான குழுவாகிவிட்டது. அதிருப்திக்குழுவின் தலைவராக நெடுங்குரலோன் விசுபரூபம் எடுத்தார். தன்னால் முடிந்தளவு நிறுவனத்துக்குள்ளேயும் வெளியேயும் ஆட்களைத் திரட்டினார். அரசியல்வாதிகளையும் பயன்படுத்தினார். அதன் விளைவே அகங்காரமூாத்தியின் வருகை.

நெடுங்குரலோனின் குழுமீது பத்மராசனின் விசுவாசக்குழு சடுதியாகக் குற்றங்களைப் புனையத் தொடங்கினர். 'வேலைநேரங்களில் வேலை செய்யார் அதிகமான நேரத்தை சிற்றுண்டிச் சாலையில் கழிப்பது, நிர்வாகத்திற்கு விசுவாசமாக இருக்காது நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் தலைமை பற்றி அவதூறுகள் செய்வது' போன்றவை அவர்களால் புனையப்பட்ட முக்கிய குற்றங்கள் சிலவாகும். இதன் பிறகெல்லாம் நிறுவனத்தின் கூட்டங்கள் நிகழ்வுகள் எல்லாவற்றிலும் அதிருப்திக் குழு குழப்பங்களை விளைவித்தது.

பத்மராசன் போடுகின்ற முக்கிய கூட்டங்கள் எல்லாம் நெடுங்குரலோனின் கிண்டலுக்கும் கேலிக்கும் உள்ளாகின. சபையை கிரகிக்க விடாது குரலோன் எதையாவது சொல்லிக் கொண்டேயிருப்பார். அதனால் கூட்டங்கள் பலவும் தீர்மானங்கள் இன்றியும் முடிவுகள் இன்றியும் நிறைவுற்றன. அந்தச் சந்தர்ப்பங்க ளில் பத்மராசன் மிகப் பரிதாபத்திற் குரியவராகத் தெரிவார்.

பத்மராசனின் இன்றைய பேச்சு அமைதியாக சில சமயங்களில் சிறு சிறு சலசலப்புக்களுடன்தான் நடந்து முடிந்தது. அதிகாரி கூட்டத்தை நிறைவு செய்வதாகக் கூறியதும் அனைவரும் கலைந்து சென்றனர்.

நாட்கள் நகர்ந்தன. நெடுங்குரலோனின் குழு பொழுதுகளை சிற்றுண்டிச்சாலையில்த்தான் போக்கிக் கொண்டிருந்தது. அவர்களின் முகத்தில் மகிழ்ச்சி எதுவும் தென்படவில்லை. தங்களின் அதிகாரங்கள் மீண்டும் வழங்கப்படும், மீளவும் அலுவலகத்தில் அதிகாரம் செலுத்தலாம் என கருதியவர்களுக்கு பிள்ளையார் பிடிக்கப்போய் பிசாசான கதையென்றாகிவிட்டது. நெடுங்குரலோன் பல தடவைகள் அகங்காரமூர்த்தியுடன் பேசமுனைந்தார். ஆனால் மூர்த்தி ஒவ்வொரு தடவையும் சாதுரியமாகத் தவிர்த்தபடியிருந்தார். நேரே சந்திக்கும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் விலகி நடந்தார். குரலோனின் குழுவால் எதனையும் தீர்மானிக்க முடியாமற் போனது.

அகங்காரமூர்த்தி 'ஏன் அவர்களைத் தவிர்க்க வேண்டும் ' என்பது பலருக்கும் புரியவில்லை.ஆனால் அகங்காரமூர்த்திக்கு அதிருப்திக் குழுவின் அனுசரணையை விடவும் பத்மராசன் குழுவின் அனுசரணைதான் முக்கியமெனப் பட்டிருக்க வேண்டும். பின்னர் நடந்த கூட்டங்களில் அகங்காரமூர்த்தியை விடவும் பத்மராசனும் ருத்திரகுமாரனுந்தான் அதிகமும் பேசினார்கள். மூர்த்தி கூட்டத்தை முடித்து வைப்பவராகவும் அல்லது பணியாளர்களை எச்சரிப்பது போல் "விரும்பினால் வேலை செய்யுங்கோ இல்லாதுவிட்டால் விட்டிட்டுப் போங்கோ" என்ற தொனியில் பேசுவதுடன் நின்று விடுவார். கூட்டத்தில் சலசலப்பு ஏற்படும் போதெல்லாம் இந்த வசனத்தை திரும்பத்திரும்பச் சொல்லித்தான் சலசலப்பை அடக்குவார்.

அதிருப்திக்குழு சிற்றுண்டிச்சாலையில் கூடியது. ஆளுக்கொரு வடையை கடித்துக் கொண்டு தேநீருக்குச் சொல்லிவிட்டு அன்றைய குழுக் கூட்டத்தை தொடங்கினார் நெடுங்குரலோன். "பாருங்கோ, இவர் வந்து ஒரு மாதம் ஆகிவிட்டுது. ஆனால் எங்களுக்கு இன்னும் வேலைகள் தரப்படேல. கேட்கும் போதெல்லாம் கதையை மாத்துகிறார். சந்திக்க விரும்புகிறா ரில்லை. இப்படியே போனால் நாங்கள் இஞ்சை தலைகாட்டே லாது. இதுக்கு ஏதாவது செய்ய வேணும்."

"ஓம் மச்சான் இவரின்ர போக்கு எனக்கு பிடிக்கேல. இவர் பத்மராசன்ர ஆளாயிட்டார் போல இருக்கு" என்றான் சீடர்களில் ஒருவன்.

"நாங்கள் எல்லாரும் போய் ஆளோட கதைப்பம் என்ன சொல்லுறார் எண்டு பாப்பம். இல்லாட்டா வேற வழியை யோசிப்பம்" என்றான் மற்றொருவன்.

"இப்பவே போவம்" என்றார் குரலோன்.

சூடான தேநீர் வந்ததும் அதனைப் பருகிவிட்டு. அலுவலகத்துக் குச் சென்றார்கள். அங்கு மூர்த்தி கிளாக் நுதலியுடன் கணனியில் ஏதோ செய்துகொண்டிருந்தார்.

குரலோன் "மன்னிக்கணும் உள்ளே வரலாமா சேர்" என்று கேட்டுக்கொண்டே சீடர்கள் பின்தொடர உள்ளே சென்றார். அகங்காரமூர்த்திக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. "ஓம் ஓம் வாங்கோ" என்று தடுமாறினார். நுதலி அறையை விட்டு வெளியேறினாள்.

"என்ன விசயம் எல்லாரும் வந்திருக்கிறீயள் சொல்லுங்கோ" என்றார் மூர்த்தி.

"அது சேர் இன்னும் எங்களுக்குரிய பொறுப்புக்கள் தரப்படேல. நீங்கள் வந்தும் ஒரு மாதம் ஆகிடுத்து" என்றார் குரலோன்.

"குரலோன் சம்பளம் வருதுதானே பிறகேன் கவலைப்படுறீயள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை சேர் வேலை செய்யாமல் சும்மா இருக்க ஏலாது. எங்களுக்குரிய பொறுப்புக்களைத் தந்தால் நாங்கள் எங்கட பாட்டுக்கு வேலைகளைச் செய்வம்"

"விளங்குது குரலோன். இண்டைக்கு ஒரு கூட்டம் இருக்குது அதில இது பற்றிக் கதைத்து முடிவெடுப்பம். இப்ப நீங்கள் போங்கோ எனக்கு வேலைகளிருக்கு" என்று கூறியவாறு நுதலியை அழைத்தார் மூர்த்தி.

அதிருப்திக் குழுவினரின் முகம் சுருங்கிவிட்டது. அறையிலிருந்து வெளியேறினார்கள். ஏதாவது முடிவு இண்டைக்கு கிடைக்குந்தானே என்று ஒருவருக்கு ஒருவர் சமாதானம் செய்தனர்.

பியோன் வாசுக்குட்டி நடக்கப்போகும் திடீர்க் கூட்டம் பற்றி பணியாளர்களுக்குச் சொல்லக்கொண்டு திரிந்தான்.

பணியாளர்கள் கூட்டத்துக்காக கேட்போர் கூடத்தில் கூடியிருந்தனர். குரலோனும் குழுவினரும் கடைசி இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். பணியாளர்கள் பலரும் தங்களுக்குள் பலதும் பேசிக் கொண்டிருந்தனர்.

அகங்காரமூர்த்தியும் பத்மராசனும் கூடத்துக்குள் வந்தார்கள். அகங்காரமூர்த்தி தன்னோடு சில கோப்புக்களையும் வைத்திருந்தார். அலுவலகத்துக்கு வந்த நாளில் இன்றுதான் அவர் கோப்புக்களுடன் வந்திருந்தார். அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. நான் நினைத்தேன் இவரும் பத்மராசனைப்போல் சுற்றுநிருபங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கப்போகிறாரா? என்று. ஆனால் அவர் கோப்புக்கள் எதையுமே கையில் தொடாமலிருந்தார். அடிக்கடி கைத் தொலைபேசியில் யாரையோ அழைத்துப் பேசியபடியும் அழைப்புக்களுக்குப் பதில் அளித்தபடியுமிருந்தார். என் அருகிலிருந்த நண்பன் சொன்னான் "உந்தாளின்ர கையோட ஃபோண் ஒட்டிக்கிடக்குது போல, கர்ணன் கவச குண்டலத்தோட பிறந்த மாதிரி உந்தாள் ஃபோணோட பிறந்திருக்காக்கும்" எனக்கு சிரிப்பு வந்ததுதான் நான் சிரிக்கவில்லை.ஏனென்றால் பத்மராசன் எழும்பி "இந்தக் கூட்டம் சிரிக்கிறதுக்கில்லை சிந்திக்கிறதுக்கு" என்று சொல்லுவார் என்பதால் சிரிப்பை அடக்கிக் கொண்டு பேசாமலிருந்துவிட்டேன். அகங்காரமூர்த்தி பேசப்போகின்றார் என காத்திருந்த போது அவா எழுந்து "இப்போது துணை அதிகாரி பத்மராசன் பேசுவார்" என்றார். வழமையாக பத்மராசனின் கூட்டத்திலிருக்கும் சலசலப்பு காணப்படவில்லை. எல்லோரும் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருந்தார்கள். "மதிப்புக்குரிய எமது நிறுவனத்தின் தலைவர்" என பேச்சைத் தொடர்ந்தார். பேச்சின் இடையில் அகங்காரமூர்த்தி கொண்டு வந்த கோப்புக்களில் ஒன்றை கையில் எடுத்தார். நண்பன் என்னைக் கேட்டான்

"பியோன் வாசுக்குட்டி வந்தவன்தானே"

"ஓம்" என்றேன்

"பிறகு ஏன் மச்சான் பத்மராசன் உந்தாள பியோன் ஆக்கிட்டுது"

"யாரை"

"எங்கட தலைவரைத்தான்"

"ஏன்"

"அவர்தானே கோப்புக்களைக் காவிக்கொண்டு வந்தவர்"

"சும்மா பேச்சைக் கவனி"

பத்மராசன் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். கையில் வைத்திருந்த சிவப்புநிற கோப்பை விரித்தார். இது மதிப்புக்குரிய தலைவர் அவர்கள் தயாரித்த கோப்பு இதில நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களின் பெயஉகளுள்ளன. என்று பத்மராசன் பேச்சை நீட்டிக் கொண்டு போனார். நண்பன் என்னைப் பார்த்தான்

"என்ன மச்சான் எங்கட பேரெல்லாந்தான். நாங்கள் காசு கொடுக்கேலதானே. அதுதான் இந்தாள் முதல்நாளே ஆப்பு வைக்குது"

"பொறு யார்யாரென்று வாசிப்பார்தானே கேட்பம்"

பத்மராசன் பெயர்களை வாசித்தார். முதலாவது பெயர் நெடுங்குரலோனுடையது தொடர்ந்து ஏனைய சீடர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டன. எங்கள் எல்லோருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. சீடர்களின் முகங்கள் இருண்டு போயிருந்தன. நெடுங்குரலோன் எழுந்து சபையின் முன்னே சென்றார். "மிஸ்ரர் பத்மராசன் நீர் எங்கள இஞ்சையிருந்து கலைக்கிறதெண்ட முடிவோடதான் இருக்கிறீர். அந்தாள் வந்த ஒரு மாதத்ததுக்குள்ளேயே எங்களைப் பற்றி போட்டுக் கொடுத்திட்டீர்."

பத்மராசன் குறுக்கிட்டார் "குரலோன் மரியாதையாகக் கதையும் நான் ஒரு அதிகாரி மறக்காதையும்"

"அது முந்தி இப்ப தலைவர் வந்திட்டார். நீர் உம்மட வேலையைப் பாரும் அது போதும் இனியும் நடத்தலாம் என்று நினைக்காதையும். இவர் தலைவருக்குரிய தகுதியோடுதான் வந்தவர் உம்மள மாதிரி இடைக்காலத்தில அதிஸ்ரத்தில வந்தவரில்லை"

அகங்காரமூர்த்தி எல்லாவற்றையும் கவனமாக அவதானித்துக் கொண்டிருந்தார். எனக்கு பத்மராசனின் கையிலிருப்பது கோப்பல்ல அகங்காரமூர்த்திதான் விளையாட்டுப் பொம்மையாய் இருப்பதாகப்பட்டது.

சீடர்களில் மற்றவன் எழுந்தான் " இஞ்சை பாரும் பத்மராசன் உம்மை இஞ்சையிருந்து துரத்தத்தான் நாங்கள் தலைவரைக் கொண்டுவந்தனாங்கள். அவருக்கு விருப்பமேயில்லை. நான்தான் அவரின்ர வைப்போட கதைச்சு சம்மதிக்க வைச்சனான்"

அகங்காரமூர்த்தி அப்பவும் அமைதியாகத்தானிருந்தார். எதுவும் பேசவில்லை. ஃபோனில் யாரையோ அழைத்துக் கொண்டிருந்தார்.

இராஜசிங்கம் எழுந்தார். சிங்கம் எப்பவும் இப்படி நெருக்கடியான நிலை வரும் போது எழுந்துவிடுவார். நல்ல மனுஷன் என்ற பெயர் அவருக்கு இருக்கு ஆனாலும் சில நேரங்களில் மனுஷன் என்ன கதைக்கிறதென்றே தெரியாது வாய்க்கு வந்தமாதிரியெல்லாம் கதைப்பார். மற்றவர்களிடம் வாங்கியும் கட்டுவார் "பொறுங்கோ நீங்கள் பத்மராசனை குறை சொல்லுறத விட்டிட்டு தலைவரிட்ட கேளுங்கோ அவர்தான் இதுக்கெல்லாம் பதிலளிக்க வேணும்" என்று பொருத்தமாக எழுந்து கதைத்தார். எல்லோரும் அதை ஆமோதிப்பதைப் போலத் தலையாட்டினார்கள்.

தலைவருக்கு அப்பதான் விளங்கியிருக்க வேண்டும் இவங்கள் தன்னைப் பற்றித்தான் கதைக்கிறாங்கள் என்று. எழுந்தார். சீடர்கள் கைகள் தட்டினர் ஆரவாரித்தனர். "இது கைதட்டவும் கூவடிக்கவும் உரிய நேரமில்லை இஞ்சை சீரியசா கதைக்கிறம் நீங்கள் என்னென்டால் குழப்புறீயள்" பத்மராசன் பேசுவதைப் போலவே பேசினார்.

"இது நான் தயாரித்த பட்டியல்தான். வேலை செய்யாத ஆக்களை விடுவிக்க எனக்கு அதிகாரம் இருக்கு அதைத்தான் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுறன்."

பத்மராசன் ஏதோ சுற்றுநிருபத்தை எடுத்து வாசித்தார் "ஆஃ 256749ஃஏ45 இன் படி நிறுவனத் தலைவருக்கு விருப்பமில்லாத ஆக்களை வெளியேற்ற உரிமையிருக்கு அதைத்தான் தலைவர் செய்யுறார்" என்றார்.

நெடுங்குரலோன் சொன்னார் " பத்மராசன் அந்தாளையும் உம்மள மாதிரி ஆக்காதையும்"

தலைவருக்கு கோவமோ ஏதோ வந்திருக்கவேணும் போல "குரலோன் விருப்பமில்லாட்டால் விட்டிட்டுப் போம். சும்மா நிர்வாகத்தைக் குழப்பாதையும்"

"எப்படி சேர் நாங்கள் நிர்வாகத்தைக் குழப்புறம் என்று சொல்லுறீயள். நீங்கள் வந்து ஒரு மாதந்தானே ஆகுது. அதுக்குள்ள எப்படி எங்களை நிர்வாகத்தைக் குழப்புறம் என்றீயள்"

"அதெல்லாம் உமக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை"

"சொல்லத்தான் வேணும் நாங்கள்தானே உங்களைக் கொண்டு வந்தனாங்கள் சும்மாவ மாலை மரியாதை, மேள தாளங்களோட எங்களையே தூக்கப் பாக்கிறீங்கள் இது எப்படி ஞாயம் சேர்"

நெடுங்குரலோனின் குரல் தளதளத்தது. எப்பவும் யாருக்கும் முன்னால் கண்கலங்காத அவரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. கைகளால் கண்களை லேசாகத் துடைத்தபடி மேலும் என்ன பேசுவது என்று தெரியாமல் மௌனமாக நின்றார். அவரின் வாய் ஓய்ந்ததை நாங்கள் பார்த்ததேயில்லை. எப்போதும் உரத்தகுரலில் பேசிக்கொண்டுதானிருப்பார். ஒரு ஊருக்கே ஏதாவது அறிவித்தலைத் தெரியபடுத்த வேண்டும் என்றால் அவருக்கு சொன்னால் போதும் உரத்த குரலில் சொல்லிவிடுவார் ஆட்டோ லஸ்பீக்கர் காசெல்லாம் மிச்சம் என்று அடிக்கடி சிங்காரம் சொல்லிக் கொள்ளுவான் அப்படிப் பட்டவரின் வாய் ஊமையாகிப் போனது துக்கமாக இருந்தது. சபையே மௌனமாகி உறைந்துகிடந்தது. யாரும் எதுவும் பேசவில்லை. சற்று நேரத்தின் பின் தலைவர் சொன்னார்.

"நான் மாலை மரியாதைய கேட்கவில்லை நீங்கள்தானே செய்தீங்கள் அதுக்கு நான் என்ன செய்யுறது.வேள்விக் கடாவையும் மாலை போட்டுத்தான் கூட்டிவாறது"

மேலும் குரலோனால் மௌனம் காக்க முடியவில்லை

"அப்ப ஏன் தலையை மாலைக்கு நீட்டினீர். உமக்குச் சொல்லிப் போட்டுத்தானே செய்தனாங்கள் அப்பவே சொல்லியிருக்கலாமே வேண்டாமென்று. இப்ப பெரிய ஆள்மாதிரிக் கதைக்கிறீர்" குரலோனின் கோபம் வார்த்தைகளில் தெறித்தது.

அகங்காரமூர்த்தியால் அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க முடியவில்லை

"இளைமருமகன் வந்த பிறகுதான் மூத்தமருமகனின் அருமை விளங்குது" குரலோனின் கோபம் அடங்கவில்லை அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். அகங்காரமூர்த்தி இதையெல்லாம் கவனிக்காதது போல ஃபோனில் கதைப்பதாய்ப் பாவனை செய்தார்.

பத்மராசன் மெலிதாகச் சிரித்துக் கொண்டார்.

நண்பன் சொன்னான் "மச்சான் பத்மராசன்ர முகத்தைப் பாரடா. ஏதோ சாதிச்சமாதிரி சிரிக்கிறார். உவர்தான் எல்லாத்துக்கும் காரணம். எப்படி கடைசியில் பாத்திய அகங்காரமூர்த்தியையும் பொம்மையாக்கி தனக்குப் பக்கத்தில இருத்திப் போட்டுது. அவங்கள் உந்தாளைக் கலைப்பம் என்று இவரைக் கொண்டுவர உந்தாள் அவங்களையே கலைக்க வடிவா ஆளைப் பயன்படுத்திப் போட்டுது"

"ஓம் மச்சான் எல்லாம் தலைகீழாப் போச்சுது. இவங்கள் பாவமடா திரும்பவும் கன்ரீனிலதான் இருக்கப்போறாங்கள். இனி அகங்காரமூர்த்திக்கும் எப்படி ஆப்பு வைக்கிறதென்று தான் யோசிப்பாங்கள். நீ சொன்னது சரிபோலதான் இருக்கு தலைவர் அகங்காரமூர்த்தியென்றாலும் நடத்துறது பத்மராசன்தான். அது நல்லா விளங்கிடுத்து"

மண்டபம் எங்கும் சலசலப்புக்கள் மிகுந்தபடியிருந்தன. அகங்காரமூர்த்தியையும் பத்மராசனையும் வசைச்சொற்றக ளால் சீடர்கள் ஆலாபனம் செய்துகொண்டிருந்தனர். மேலும் சிலர் பத்மராசன் நரித்தனமாத்தான் செயற்படுறார். சீடர்கள் சொல்வது சரிதான் என்ற விதமாகவும் இன்னும் சிலர் அகங்காரமூர்த்தி சுயசிந்தனை இல்லாதவர். வந்து ஒரு மாதந்தானாகுது நிர்வாகத்தைச் சீரழிக்கிற மாதிரி நடக்கிறார். இனி அலுவலகம் மேலும் சீரழியப்போகுது என்ற விதமாகவும் கதைத்தனர்.

சபையை அவதானித்துக் கொண்டிருந்த பத்மராசன் அகங்காரமூர்த்தியின் காதுக்குள் ஏதோ சொன்னார். அகங்காரமூர்த்தி எழுந்து "இத்தோட இந்தக் கூட்டம் முடிஞ்சுது" எல்லாரும் போகலாம் என்றவாறு எழுந்து நடக்கத்தொடங்கினார் கூடவே பத்மராசனும்.

நெடுங்குரலோன் அவர்களின் பின்னே துரத்தித் துரத்திச் சென்று ஏசிக்கொண்டேயிருந்தார். "யாம் ஆர்க்கும் குடியல்லோம் நமனையும் அஞ்சோம்" என்ற நாவுக்கரசரின் தேவார அடி உரத்துக் கேட்டது. அவர்கள் இருவரும் சிரித்தபடி படிக்கட்டில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அலுவலகப் பணிமுடியும் நேரம் என்பதால் கையொப் பமிடுவதற்கு எல்லாப் பணியாளர்களும் முண்டியடித்துக் கொண்டு கூடத்தை விட்டு வெளியேறினர். யாரும் தங்கள் நேரத்தின் ஒரு துளியைக் கூட மேலதிகமாகச் செலவிடத் தயாராக இருக்கவில்லை. நானும் நண்பனும் கடைசியாகத் தான் வெளியேறினோம். சீடர்களிடம் ஆறுதலாக இரண்டொரு வார்த்தைகள் பேசுவோமா? என நண்பனைக் கேட்டேன். அவன் சொன்னான். "அவங்கள் இப்ப இருக்கிற நிலமையில நாங்கள் ஏதும் சொன்னால் தங்களை நக்கலடிக்கிறதா நினைப்பாங்கள் பேசாமல் போறதுதான் நல்லது." அது சரி போலவும் எனக்குப் பட்டதால் கூடத்திலிருந்து வெளியேறினோம். சீடர்கள் ஏதோ கூடிக்கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

கையொப்பம் இடுவதற்காக அலுவலகத்துக்குள் சென்றோம். அகங்காரமூர்த்தியும் பத்மராசனும் பியோன் வாசுக்குட்டி பரிமாறும் தின்பண்டங்களைக் கடித்தபடி தேநீர் பருகியவாறு சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் கையொப்பமிட்டுவிட்டு வெளியே வந்தோம்.

நிறுவனத்தின் வாயில் வெறிச்சோடிக் கிடந்தது. முன்னேயிருந்த மரத்திலிருந்து காகம் ஒன்று கரைந்துகொண்டிருந்தது. அகங்காரமூர்த்தியின் வருகை நாளன்று கேட்ட அதே குரல்போலவே இருந்தது. நான் நினைத்தேன் காகத்தின்ர ஆக்கள் இன்னும் வரேலைபோல அதுதான் காலையிலிருந்து கரைந்துகொண்டிருக்குது.

❋❋❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் எங்கே இருந்தீர்கள்....?

**முல்லை வீரக்குட்டி**

நேற்றுங்கள் ஆர்ப்பாட்டம்....,
நெகிழ்கிறது நெஞ்சங்கள்....!

எங்கேயோ லிபியாவில்.....,
ஏகாதிபத்தியமே...
கொள்கை எனக் கொண்டோர்
குண்டு பொழிகின்றார்....,
என்று பதறி...
ஆர்ப்பாட்டம் நடாத்தி நின்ற
உங்கள் மனு நேயம்....?
உள்ளுணர்வைக் கிள்ளிற்று....!

பெரியவர் தான் நீங்கள்....!
பேச்சவிழ்ந்தால்....,
தோல்வியில்லை....!

முந்தா நாள் பெரியவர்காள்
எங்கே இருந்தீர்கள்....?

எங்கள் திருநாடு...,
உலக நுதலின் மேல்....
இட்டு வைத்த செந்தூரம்....!

இன் நாட்டின் முகட்டில்...
சென்ற பல நாட்களின் முன்....,
குண்டு மழை கொட்டியதே....!

குஞ்சு... குரால்களெலாம்....,
செங்குருதிச் சேற்றில்....,
சரிந்து மடிந்தன காண்....!

அங்கம் சிதறி...,
அனேகம் பேர்.....
அழிந்தார்கள்....!

அப்போது நீங்களெலாம்
எங்கே இருந்தீர்கள்....?
உங்கள் மனு நேயம்....?
உறங்கு நிலை எய்தினவோ....?

அதிகாரர் கயிறுங்கள்
கைகளுக்குள் என்பீர்கள்....!
ஆனாலுமென்ன....?
அதிகாரர் ஆட்டத்தை
அசுப்பின்றிப் பார்த்திருந்தீர்...!

வாயே திறக்காமல்.....
மௌனம் அடை காத்தீர்....!

பெரும் மனித வதை.... அலறல்....
பிரபஞ்சம் அதிர்ந்ததுவே....!

அப்போது நீங்கள்....,
அடித்தொண்டையாலேனும்.....,
அனுங்கி இருந்தாலும்.....,

உங்கள் நிலைப்பாடு....
சரியென்று.... ஏற்றிருப்போம்....!

நீங்கள்.... உங்கள்....
உயிரைக் காக்கின்ற....
உத்தமர்கள்....!
அது.... வெல்லாம்.... உங்களுக்கே....!

ஆனாலும் தாய் நாட்டில்....,
வன் கொடுமை கண்டும்....
வாயே திறக்காத....?
கல் நெஞ்சுக்காரரென்றால்....
கோபம் வரும்.... சரிதானே....!

# எண்ணங்கள்


**திருமலை சீ. என். துரைராஜா**

"நேரிட்ட இருகோடுகள்
நிலையான தண்டவாளம்
பேரிட்ட இருகண்களும்
பூரித்து குலுங்கி சந்திக்க

நாளை வரும் நாளை எண்ணி
நன் செய்யும் நிலம்போல
பூரித்து கிடப்பதை
புவி மலராள் கண்டாள்,

அன்னம் நடைபோடும்
அழகு மயில் தோகையவள்
எண்ணங்கள் ஒன்று கூட
என்னை தேடிவந்தாள்
வந்த வாகனத்தில்
வழிநெடுக விழிவைத்து
என்னையே நினைத்திருந்தாள்
ஏமாற்றும் உலகை அவள்
எண்ணிக் கூட பார்க்கவில்லை
வந்த வாகனமோ ரயில்
கடவை தன்னில் ரயில்மோதி
சுக்கு நூறாய்ப் போனது
சுதந்திர எண்ணங்களும் பிரிந்தன."





# எண்களுடன் பயணித்தல்

- திசேரா -

கையில் இருக்கும் ஐயாயிரத்து ஐநூறு ரூபா என்ற ஒன்றை முழுக்கவும் செலவு செய்து விடாமல் பயணத்துக்கான இருபத்தைந்து ரூபாவாகிய ஏழை மட்டும் வைத்துக்கொண்டு பொருட்களை கொள்வனவு செய்தேன். எனக்குரிய நேரத்தைக் கடந்து விழித் திருக்கவும், தூக்கத்தைக் கலைத்து விரட்டக் கூடியதுமாகிய மருந்துகளும் அதனுள் இருந்தன. பாரம் நிறைந்திருந்த பையை தூக்கிக்கொண்டு பூச்சியமாகி இருந்த வண்டியினுள் வசதியான இருக்கையை தெரிந்து அமரும் போது வீட்டை விட்டு வெளியே வந்து மூன்றை விரயமாக்கி இருந்தேன் மணித்தியாலங்களை.

பூச்சியத்திற்கு அதிக சக்தி இருந்தது. அது எதனுடனும் சேரும். தனியே சக்தியற்றுக் கிடக்கையில் அர்த்தமற்றதாகி இருப்பினும் அதை எந்த இலக்கமும் செலுத்தலாம்.ஆனால் அந்த இடத்தில் அமரக்கூடிய அனுமதிப்பத்திரம் அந்த எண்ணுக்கு தேவைப்படும். எத்தனை இலக்கங்கள் அடங்கிய எண்ணையும் அது எடுத்துச் செல்லும்.பெறுமதியானதாக்கும் காலத்தைக் கடக்கும் சக்தியை அதானல்தான் வழங்க முடிந்தது. இலக்கங்கள் பின்னால் நின்று அதை தள்ளச்செய்தால் பயனற்றதாய்த்தான் இருக்கும்.காற்றை உள்ளிழுத்து நுரையீரல் நிரப்பி வெளிவிட்டு களைப்பில் இருந்து சமநிலைக்கு வர எடுத்த பத்து நிமிடங்கள் வரை நான்தான். ஒன்றாய் இருந்தேன் யாரும் ஏறவில்லை.

நான் எப்போதும் ஒன்றுதான் என்பதில் நிறைந்த மகிழ்ச்சி அம்மாவுக்குத்தான், வகுப்பில் நடக்கும் தேர்வில், ஓட்டப்போட்டியில், கவிதை எழுதுவதில்....... என நீளும் இன்ன பிற எல்லாவற்றிலும், அதற்கு என்னுள் நிரம்பி இருக்கும் ஒன்றுகள் நிரம்பிய ஒன்றுக்களின் தொகுதி தான் காரணம். நான் பிறந்தது பத்தாம் திகதி (1+0=1)
அது பிறப்பெண், பிறந்தவருடம், மாதம், திகதி, கூட்டிவரும் கூட்டெண் (1+9+7+0+0+1+1+0=19/1+9=10/1+0=1)
பெயரெண் என் வீட்டு இலக்கம் இருபத்தெட்டு (2+8=10/1+0=1)
இவையெல்லாம் ஒன்றுகளால் நிரம்பி இருந்ததால் குணமும் அதைப்போலவே பிடிவாதமாய் இருந்தது. எதிலும் நான் வர வேண்டும் என் இருப்பைக்காட்ட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினேன். ஒன்று என்பதால் சூரியன் போல சுயமான இயக்கமும் சுறுசுறுப்பும் வேகமும் துல்லியமான செயலுடனும் ஒளி முதலாய் இருப்பேன் என்னும் அப்பா - நரம்பு சக்தியை ஊக்குவித்து தூக்கம் சோம்பேறித்தனத்தை போக்கக் கூடியதும் தொடு உணர்வுகளை வலுப்படுத்தக் கூடியதுமான மாணிக்கம் போல கதிர்களை வீசி பிரகாசிப்பேன் என்றும் புகழ்வார். முதன்மையுள் முதலாவதாய் இருந்த நான் கால ஓட்டத்துள் அங்கிருந்து நீக்கப்பட்டாலும் -ஒற்றையாய் - முதலாவதாகத்தான் இருந்தேன்.

சில நிமிடங்களில் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஆண் ஒருவனும் அவனது மனைவியும் இரு சிறிய பைகளுடன் பூச்சியத்துள் ஏறினார்கள். குழந்தை பெண்ணின் சாயலில் இருந்தது. அவன் கலவி கொண்டு பிரிந்த போது அவளிடம் எஞ்சியதாக அக்குழந்தை இருந்திருக்க வேண்டும். ஆனபடியால் அவன் இரட்டை எண்ணாகவும், அவள் ஒற்றை எண்ணாகவும் இருந்திருக்க வேண்டும். அதிலும் அவனை விட அவள் மூப்புற்றிருந்தாள்.

யன்னலோரத்தில் அவளும் அடுத்து அவனும் அமர்ந்து கொண்டாலும் தன் இருக்கை வசதியற்றதைப்போல் அவன் நெழிந்துகொண்டிருந்தான். அவனது முகம் ஏற்கனவே பதியப்பட்ட உணர்வு எனக்குள் சுழன்றடித்தது. தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பாடல் ஒன்றுக்கு குரல் கொடுத்த ஞாபகத்தைக் கொண்டு வந்து பிரபலப்படுத்தப்பட்ட போது அவன் நான்காம் இலக்கக்காரன் என்பதை உணர்ந்து கொண்டேன். எனக்குறித்தான சில இயல்புகளையும் அவன் கொண்டிருந் ததையும் அவதானித்தேன்.

அவனருகில் அமர்ந்திருந்தவள் கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டு சலிப்புற்று இருந்ததுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவரிடம் புறப்படும் நேரத்தைக் கேட்ட வண்ணமும் இருந்தாள். அடிக்கடி தன்னை மறந்து தீவிர சிந்தனைக்குள் நுழைந்து மீண்டும் கணவன் இருக்கையுள் நெழியும் இரகசியம் உணரந்தும் மடியில் கிடத்தப்பட்டு உறங்கிக் கொண்டிருந்த குழந்தை வசதி போதாமல் முகத்தை சுருக்கி அசௌகரியப்பட்ட போதும் தன் உடலை மூலைக்குள் நகர்த்தி இடப்பரப்பை கணவனுக்கு ஏற்படுத்தி அவனின் மடிமீது குழந்தையின் காலை நீட்டச்செய்து தன் குளிர் அங்கியை சுருட்டி தலைக்கு அணைகொடுத்து படுக்கச் செய்தாள். இதையெல்லாம் பார்த்து தொகுத்து ஒப்பிட்டு அவள் ஐந்தைச் சேர்ந்திருப்பதை அறிந்தேன்.

இவன் என்னைப்போல எனக்கு அடுத்த நிறைவர்க் கக்காரன் இரட்டை எண்ணுக்குரித்தான சாந்த இயல்பு அவனது வட்ட முகப்பரப்பில் இழைவிட்டோடி இருந்தது. மற்றைய எல்லோரையும் சேர்த்து பார்க்கும் சேர்த்தி எண் தன்மையை கொண்டிருந்தாலும் அவள் அதுதான் ஐந்து முதன்மைத் தன்மையுடன் தனித்துவமாகவே இருந்தாள். ஆனாலும் தன்னுள் எழும் எண்ணங்களை பரிமாறிக்கொள்வதற் காகவேனும் வார்த்தையில் ஜாலங்காட்டி இழுத்துக்கொள்வாள். நான்குக்கும் ஐந்துக்கும் பின்னிருந்து இருக்கையின் யன்னல் பக்கம் அமர்ந்து கொண்ட ஏழானவனிடம் ஐந்து தன் நட்பும் இனிமையும் கலந்த உரையாடலை ஆரம்பித்திருந்தாள். இந்த உரையாலுக்குத்தான் ஏழானவனுடன் ஏறிய எந்த இலக்கத்தையும் பார்வை பின் தொடராமல் இங்கே லயத்திருந்தது அதுவே தான் அவன் ஏழுதான் என்பதை ஊர்ஜிதப்படுத்தியது.

உலகம் போலியானது என்பதையும் சுயசிந்தனை யற்று இயங்கிக்கொண்டிருப்பதையும் வார்த்தைகளாய் விட்டான். யாருக்கு கீழும் அடங்கியிராமல் உலகைத்தட்டி நிமிர்த்தும் அவனது கதை சுவாரசியமாக நகர்ந்ததுடன் ஏழின் மனக்கொதிப்பை வார்த்தைகளாக்கியது. அந்த நிறுத்தப்படாத உரையாடலுடன் ஏழின் மனப்போராட்டமும் ஐந்தையும் இடையிடையே நான்கையும் (மறைமுகமாக) ஒன்றாகிய எண்ணையும் உலுக்கிக் கொண்டே வந்தது.

பூச்சியத்துள் இருந்த அத்தனை இருக்கைகளும் இலக்கங்களால் நிறைந்துபோயின. அதைவிடவும் இருக்கையற்ற ஒன்றிரண்டு இலங்கங்கள் மேல் நீண்டிருந்த கைப்பிடிக் கம்பியில் தொங்கிக்கொண்டு வந்தன.

எனக்கு முன்னிருந்த இரண்டானவன் எழுந்து மூதாட்டி ஒருத்திக்கு இருக்கையை கையளித்து கம்பியில் தொங்கினான். இரண்டு எப்போதும் இப்படித்தான் பிறருக்கு தன் இடத்தைக் கொடுத்து தவித்து திரிந்தாலும் காலம் கூடி வருகையில் முதன்மையின் முதலிடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

பயணத்துக்கான வாடகை பெற்றுக்கொண்டு வந்து எட்டு என்னருகில் இருந்த இலக்கத்திடம் ஒரு ரூபாய் குறைந்த போதும் பின் இருக்கையின் யன்னலோரத்து இலக்கத்திடம் இரண்டு ரூபாய்கள் குறைந்த போதும் சிரிப்புடன் வாங்கி சென்றதுடன் பயிற்சி கொப்பிகளுடன் அல்லது புத்தகப்பை களுடன் நின்ற இலக்கங்கள் கொடுத்தவற்றை கணக்கிடாமல் பெற்றுக்கொண்டு புன்னகைத்திருக்க எட்டினால் மட்டும்தான் முடியும். எட்டு எப்போதுமே எல்லா இலக்கத்தையும் தன்னுள் உள்வாங்கிக் கொள்ளும் இயல்பானது கணிக்கருவியின் எட்டு எட்டுக்களின் தொகுதியே சகல இலக்கங்களையும் உருப்படுத்தி எண்களாக்கி நின்றன.

பின் இருக்கையான மரு மூலைக்காரன் ஆறு வெளியில் பின்னோக்கி ஓடிக்கொண்டிருந்ததும் உள் இருந்த தொங்கிய எல்லா இலக்கங்களையும் ரசித்து வியந்தான். அவனது மனம் கற்பனைக்குள்ளாலேயே அழகுணர்வுடன் புன்னகைத்து வந்தது.

இலக்கங்களெல்லாம் தனித்தனியே இயல்பை வெளிப்படுத்தி வந்தாலும் எனக்கருகில் இருந்த இன்னுமொரு எட்டும், ஒன்பதும் தங்கள் வளையத்துள் எனை மாட்டிக் கொண்டு குலுங்கிக்குலுங்கிச் சிரித்தன. அப்போதிருந்தே இலக்கங்களின் பிணைப்பு மகிமை நிறைந்த உணர்ச்சிகர மான கவிதை உலகைத் தோற்றவிக்குமென அறியத் தொடங்கினேன்.

ஒவ்வொரு இலக்கமும் தன்னியல்புக்கு ஒத்த இலக்கத்துடன் இணையும் போது சாதனைக்குரித்தான எண்களை உருவாக்கும். அப்போது பத்திலோ ஆயிரம் மில்லியன் ஏதோ ஒரு இடத்தில், இடங்களில் கூட்டுசேரும் பிணைப்பு இலக்கங்களும் பூச்சியமும் நிரம்பி அதை மதிப்பு மிக்கதாக்கும். இதன்படிதான் உலகு போராட்டம் நிறைந்தாக அமைதி நிரம்பியதாக இருபத்து மூன்றரை பாகையில் சுழன்றது.

சாதனையும் சோதனையும் நிறைந்ததான ஒன்பது யாரும் அமராத தனித்துவமான தன் இருக்கையில் அமர்ந்து கொண்டு பூச்சியத்தை செலுத்த தயாராகிக் கொண்டிருந்தது. சுத்தமாய் இருந்த இலக்கங்கலெல்லாம் இன்னொன்றுடன் தொடர்பு கொண்டு மற்றையதன் குணத்துடன் உறவு கொள்ளத்தொடங்கி இருந்தன ஆனாலும், மூன்றும் ஐந்தும் தனக்குள் மூழ்கிக்கிடந்தன. உஷ்ணமும் குளிர்சியும் கலப்புற்று வெதுவெதுப்பான வாடை பூச்சியத்துள் நிறைந்தது.

இருந்தும் தொடங்கியும் இலக்கங்களால் நிறைந்து போன பூச்சியம் மெதுமெதுவாய் உருளத்தொடங்கியபோது ஒன்பது இலக்க குணங்கள் எனக்குள் நுழைந்துகொண்டு உருத்தின.

உலகம் இலக்கங்களின் இயல்பிலேயே சுழன்றது.

## மகுடர் வாசகர் வட்டம்

அன்பு வாசகர்களே...!

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு நீங்கள் செய்ய வேண்டியது மகுடத்தின் சந்தாதாரராக இணைந்து மகுடம் வாசகர் வட்டத்தில் சேர்ந்து கொள்வதும், ஆகக் குறைந்தது உங்கள் நண்பர்கள் நால்வரை மகுடத்தின் சந்தாதாரராக இணைத்துத் தருவதுமே.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் பரதக்கலையின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்களில் ஒருவரான கீதாஞ்சலி கே.நல்லையாவின் கலைப்பணிகள்

செல்வி. மேகிலா சிவஞான சுந்தர ஐயர்

நாட்டியக் கலையை வெளியுலகிற்கு தெரியப்படுத்திய பெருமை தேவதாசிகளையே சாரும். இவர்களினால்தான் பரதநாட்டியம் வளர்ச்சியடைந்தது. ஆயினும் சில தேவதாசிகளின் கீழ்தரமான பண்புகளினால் பரதநாட்டியம் கேவலமான நிலைக்கு தள்ளப்பட்டன ஆயினும் தமிழகத்தில் ருக்மணி அருண்டேல், ஈ.கிருஸ்ணஐயர் போன்ற கலைஞர்களினால் பரத நாட்டியம் மறுமலர்ச்சி அடைந்தது. ஆதன் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டது. இலங்கையில் பரதக் கலையை வளர்ப்பதற்கு அரும்பாடு பட்டவர்கள் ஏரம்பு சுப்பையா, கீதாஞ்சலி நல்லையா, இராசநாயகம், கலைப்புலவர் நவரெத்தினம், எம்.எஸ்.பரம் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

கலைக்கு புத்துயிர் கொடுத்து உலகிற்கு தெரியப் படுத்துபவர்கள் கலைஞர்கள். ஒவ்வொரு கலைஞர்களும் தம்முடைய கலையுணர்விற்கேற்ப கலைப்படைப்புக்களைப் படைத்து கலைக்கு புத்துயிர் கொடுக்கின்றனர். அந்த வகையில் கீதாஞ்சலி நல்லையா அவர்கள் கலைக்கு ஆற்றிய தொண்டினைப்பற்றி நோக்குவதோடு அவருடைய கலைப்படைப்புக்கள் பரதநாட்டியத்தின் வளர்ச்சிப் பாதைக்கு எவ்வாறு வித்திடுகின்றது என்பதை அறிவதும் அவசியமாகின்றது.

கீதாஞ்சலி நல்லையா அவர்கள் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் விஸ்வ பிரம்ம பரம்பரையில் கந்தையா அன்னமுத்து தம்பதியினருக்கு 09.03.1912 இல் புத்திரனாக பிறந்தார். இவர் இளமையிலேயே பாடசாலைக் கல்வியில் ஓரளவு நாட்டமும் இசையில் மிகுந்த ஆர்வமும் உடையவராக இருந்தார். பாடசாலையில் பயிலும் காலத்திலேயே புத்துவாட்டி நா.சோமசுந்தரம் அவர்களிடம் வாய்ப்பாடும் வயலினும் வண்ணை காமாட்சி சுந்தரம், மீனாட்சி சுந்தரம் ஆகியோரிடம் மிருதங்கமும் கற்று வந்தார். ஓய்வு நேரங்களில் ஹாா்மோனியம் வாசிப்பதிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இதனால் மேடைகளில் நிகழ்ச்சியை வழங்கும் தகுதியை பெற்றுக் கொண்டார்.

அக்காலத்தில் தமிழ் நாட்டில் இருந்து வரும் கலைஞர்களின் இசை நிகழ்சிகளில் வயலின், ஹாா்மோனியம் ஆகிய இசைக்கருவிகளை பக்கவாத்தியமாக வாசித்து புகழ் பெற்றார். மேலும் நாடகங்களில் பாடுவதுடன் பாத்திரமேற்று நடித்தும் வந்தார். பிற்காலத்தில் பல கலைஞர்களிற்கு பக்கவாத்தியம் வாசித்து புகழ் பெற்றார், அவர்களுள் கே.பி.சுந்தராம்பாள், ராதபாய், ரி.பி.ராஜலக்ஸ்மி நடிகர் பி.எஸ்.கோவிந்தன், ஈழத்தில் சின்னையா, அச்சுவேலி ரத்தினம்பிள்ளை, ஏரம்பு சுப்பையா, கன்னிகா பரமேஸ்வரி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

திரு.நல்லையா தனது கலைச்சேவையின் பயனாக இந்தியாவின் தலை சிறந்த இசைக்கலைஞர்களின் நட்பைப் பெற்றவராய் அங்கே சென்று கேரளக்கலைஞர் கோபிநாத் அவர்களிடம் கதகளி நடனத்தையும் திருவனந்தபுரத்தை சேர்ந்த லக்ஷ்மணன் என்பவரிடம் பரதநாட்டியத்தையும் நட்டுவாங்கத்தை பரூர்சுந்தரஜயரிடமும், மதுரை பெரியசாமி பிள்ளையிடம் வாய்ப்பாட்டினையும் வயலின் இசையையும் சிறப்பாக கற்றுக்கொண்டார். மேலும் இந்தியாவின் வடநாட்டிற்குரிய மணிப்புரி, கதக், குச்சுப்புடி போன்ற பல்வகை நாட்டியங் களையும் ஓரளவு பயின்று கொண்டார். சின்னத்துரை என்ற மிருதங்க வித்துவானிடம் மிருதங்கத்தை கற்றுக் கொண்டார். இதைவிட ஹாா்மோனியம் வாசிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றவராய் இருந்த இவர் பல்வேறு நாடக குழுவினரின் நாடகங்களுக்கு ஹாா்மோனியம் வாசித்து புகழீட்டினார் அந்நாளைய நாடகங்களில் இசைக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்தமையால் நல்லையாவின் ஹாா்மோனிய இசைக்கு வரவேற்பு இருந்து வந்தது.

நல்லையா அவர்கள் தான் கற்ற கலையை ஈழத்தவர்களும் பயிலும் பொருட்டு யாழ்ப்பாணத்தில் "யாழ்கலாசேஸ்திரம்" என்னும் பெயரில் நாட்டிய பயிற்சி மையம் ஒன்றினை ஆரம்பித்து இசையிலும் நடனத்திலும் ஈடுபாடுள்ள பல மாணவர்களை உருவாக்கினார். மேலும் சமகாலத்தில் இருந்த சுப்பையா அவர்கள் போன்று இவரும் அரசினர் பாடசாலையில் நடன ஆசிரியர் நியமனம் பெற்று பரதநாட்டியம் கிராமிய நடனம், நாடகம் போன்ற கலைகளை மாணவர் களுக்கு கற்பித்தார்.

திரு.நல்லையா அவர்கள் நடன அரங்குகளில் நட்டுவாங்கம் செய்யும் பொழுது ஜதி கோர்வைகள் அழகு பொருந்தியதாகவும் தெளிவுடன் லயம் ஜதி தவறாது கவரும் வகையில் அவருடைய சொற்பிரயோகம் அமைந்திருக்கும். அவருடைய பரந்த தோற்றமும் கம்பீரமான குரலும் நாட்டிய அரங்கிற்கு சிறப்பை அளிப்பதாக இருந்தது. 1950 ம் ஆண்டளவில் இருந்து ராமநாதன் கல்லூரி, விக்டோரியா கல்லூரி, ஏழாலை அரசினர் கல்லூரி, றிபேக் கல்லூரி போன்ற அரசினர் கல்லூரிகளில் நடன ஆசிரியராக பணிபுரிந்தமையும் இங்கு குறிப்பிடதக்கது இதன் பெறுபேறாக பாடசாலை மட்டத்தில் கிராமிய நடனம் சாஸ்திரிய நடனம் போன்றவற்றை வெளிப்படுத்தியுள்ளார் இவருடைய தயாரிப்புக்களில் செம்பு நடனம், தாம்பாளநடனம், சுளகு நடனம், அரிவு வெட்டுநடனம் போன்றவற்றை குழுநடன நிகழ்ச்சியாக நடத்தியுள்ளார். இவருடைய நடனதயாரிப்பும் ஆசிரியத்துவமும் கலாரசிகர் களிடம் பாராட்டு பெற்றது. வட இலங்கை சங்கீதசபை அதன் பொன்விழாவில் 1992 ல் **"நடன ஆசிரியமணி"** என்னும் பட்டத்தை கௌரவ விருதாக வழங்கியது, கரவெட்டி வாணிகலா மன்றத்தில் 1956-1970 களில் இக் கலைச்சேவையை பாராட்டி அண்ணாமலைப் பழ்கலைக்கழக பேராசிரியர் பெ.மீனாட்சி சுந்தரம் அவர்களால் **கீதாஞ்சலி** எனும் கௌரவ விருதும் வழங்கப்பட்டது. இலங்கைக்கு எலிசபத் மகாராணியர் விஜயம் செய்தபோது சிறந்த நிகழ்ச்சியை இவர் தயாரித்துள்ளார்.

இவர் காலகாலமாக வழக்கில் இருந்த நாட்டிய மரபுகளை பேணிப்பாதுகாப்பதற்காக பல நடவடிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டார். முன்னரெல்லாம் கோவில்களில் இருந்து சுவாமி வீதிவலம் வரும் போது அதற்கு முன்னர் சிறுவர் சிறுமியர் நாட்டியமாடி வருவது வழக்கமாக இருந்தது. ஆனால் தற்போது இந்தமுறை மிகவும் அருகிவிட்டது. அந்தமுறையை கடைப்பிடித்து வந்தால் நாட்டியக்கலை மேலும் வளரும் என்ற கருத்துக் கொண்டவர். இந்த மரபை இவர் பேணிவந்தார் சிறுவர் சிறுமியரின் நாட்டிய ஆற்றலை வளர்ப்பதில் பெரும் பங்கெடுத்து வந்தார். சிரட்டைகளைத் தட்டி ஒலி எழுப்பி நடனமாடுதல், ஒரு பழைய முறையாகும் இவற்றை இவரிடம் படிக்கும் சிறுவர், சிறுமியர் கற்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

முன்னர் திருவெம்பாவைக் காலத்தில் ஊர்வலம் வரும் போது அதன் முன்னர் நடனமாடுதல் வழக்கம் அந்த முறையை திரு.நல்லையா திருவெம்பாவைக் காலத்தில் நடத்தி வைத்தார். பல அருமையான கலை வடிவங்கள் தமிழ் மரபில் உண்டு எனினும் காலநகர்ச்சியில் அவை கவனிக்கப்படாது இருக்கின்றது அத்தகைய கலைகளை யாரும் கவனிக்காது விட்டோமாயின் அவைகளை முழுமையாகவே இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என எண்ணி அதற்கு புத்துயிர் அளிக்க அரும்பாடுபட்டவராவர்.

சங்கீதம் தெரியாதவர்கள் நடன ஆசிரியர்களாகவோ நடன அமைப்பாளர்களாகவோ இருப்பதற்கு தகுதியற்றவர்கள் என்பது இவரது ஆணித்தரமான கருத்தாகும். இதையே பண்டைய நாட்டிய நூலான நாட்டியசாஸ்திரம் வலியுறுத்துகிறது. அரங்கேற்றம் முடிந்தவுடன் ஒருமாணவி நாட்டிய ஆசிரியையாக மாறிவிடும் இன்றைய போக்கினை வன்மையாக கண்டிக்கிறார் இவர். ஆறு மாதம் படித்துவிட்டு அரங்கேற்றம் செய்வதையும் கண்டித்தார்.

ஈழத்தில் பக்தியுடன் நடனம் வளர்த்த கீதாஞ்சலி நல்லையா அவர்கள் 22.08.1984 அன்று இறைவனின் பாதாரவிந்தங்களை சென்றடைந்தார் கலையுணர்வும், இறைபக்தியும் தங்கள் வாழ்க்கையோடு இணைத்து புகழ்பெற்றவர்களுள் இவரும் ஒருவர் என்றால் மிகையாகாது.

❋❋❋

---

## ஒரு சிரட்டைக் குருதி

**கோ. நாதன்**

இருள் வியாபித்து சூழ்ந்த தேசத்துள்
பேய்கள் கிளம்பும் நெடி மாலைப்பொழுது
சுடலை மயானப் பூமி அன்மித்த தெருவில்
ஊதுபத்திக்குச்சி வாசனை வாசம் எழும்
திசையிலிருந்து துவக்குகள்
முளைத்து கரம் பற்றிய தருணம்.
சுவாச பெருங்காற்று துடிப்பு அடங்கல் வேட்டைக்காய்....
ரத்த ஓலம் ஓசை எழுப்பி துயில
வெள்ளாப்பு மிக அதிகாலை தேடும் பனித்துளி
துப்பாக்கி காய்ந்த ரணத்தில் உயிர்ப்பு பெற்றன.

சுடுகலன் தணலாகி, நெருப்பாகி, தீப்பிழம்பாகி
கொதிநிலை, சுடுநிலை ஆறும் வரை சுட்டனர்.
ஆத்திரம், ஆவேசம் அடங்காமல்
சிதைந்த தலையும், பிளந்த மார்பகமும்
ரவைக்கோதுகள் குவியக் குவிய சுட்டுக்கொன்று
தீர்த்தனர்.
குண்டின்குரோதங்கள் துளைத்த உடல்
காயங்களிலிருந்து உதிரக் கொப்பளங்கள் பிறிட்ட
விரியம்.
அணிந்த ஆடைகள் ஈரம் நனைந்த தெப்பம்
வெடுக்கின் வெளிப்பாட்டுக்குள்
தலை கழன்ற பிண்டத்தின் எச்சம்.

கொழுத்த எலும்பு வெளிறாத நாய்கள்
சண்டைகளால் கூடி துண்டுதுண்டாய் இழுத்துகுதறும்.
காகங்கள் குடல்களை மரக்கொப்பில்
அலகால் கோதிக்கோதி தின்று அலம்பும்.
மீதி நிலமெல்லாம் மண்துகள் கலப்பில்
வடிந்து ஓடிய குருதி நீர் குப்பைச் சிரட்டைகள்
நிரம்பி நிறைந்து வழிந்தன புழுக்கள், ஈக்கள்
கல்லடைப்புக்குள் மேயும்.
மேனி முழுவதும் தொப்புள் குழிகள்
போல தோட்டாக்கள் தோண்டிருக்கும்.
சப்பாத்து சுவடுகள் ஊரின் வீதிகளில்
ரத்த அடையாளங்கள்.
வீழ்ந்து அழிந்த உடல் கட்டையின் மிச்சங்களான
மிகுதிகள் அரவங்களாய் மண்ணிறத்தின்
கருமை உருவ அருவம்
வெள்ளை சேலைக்கலையுடுப்பில்
கர்ப்பம் தரித்து துன்புற்ற மனைவி அபரக்குரல் அழுகை....
அந்த தேசத்து பகுதி எல்லை
பீதிக் கோர்ப்புகளாகி பயங்கோதிய ஊர்.

## தீருவதெப்போ...?

**புலோலியூர் வேல்நந்தன்**


முடிவு தெரியாக்
கதையொன்றிற்கு
பலர் எழுத முனையும்
முடிவுரையில்
முடிவிலியாய்த்
தொடர்கிறது.
எம் துயரம்
மனிதர்களின்
விசாரிப்புக்களில் மட்டும்
எம்துயரம்
வல்லரசுகளின்
சுயநலமாய் எம் துயரம்
வெள்ளரசுகளின்
வெருட்டல்களாய்
எம்துயரம்
துயரமே துயரப்படும்
எம்துயரம்
தீருவதெப்போ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வரலாற்றில் இடம் பிடித்த முக்கிய புரட்சிகள்

**பொன்னுத்துரை - நிலாந்தினி**





மனிதகுல வரலாற்றில் மக்களது உரிமைகள் மீறப்பட்டு அவர்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றபோது மக்கள் ஆட்சியாளனுக்கு எதிராகக் கிளர்த்தெழுந்து தமது எதிர்ப்புக்களைத் திடீரென வெளிக்காட்டுகின்றபோது அது புரட்சியாக உருவெடுக்கின்றது. சுருக்கமாகக் கூறினால் புரட்சி என்பது அரசியல் துறையை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார துறைகளில் ஏற்படுத்தப்படும் பாரிய மாற்றமாகும்.

நாம் வரலாற்றுப் பாதையினைத் திரும்பிப் பார்க்கின்றபோது இப்புரட்சிகள் காலத்திற்குக்காலம் நடைபெற்று வந்துள்ளமையை அறியமுடிகின்றது. அந்தவகையில் உலக வரலாற்றில் இடம்பிடித்த மூன்று முக்கிய புரட்சிகளாக கீழ் வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

- ஆங்கிலப்புரட்சி - 1688
- அமெரிக்கப்புரட்சி - 1776
- பிரான்சியப்புரட்சி - 1789

### *ஆங்கிலப்புரட்சி* 1688

இங்கிலாந்து வரலாற்றிலே 1688ஆம் ஆண்டில் இரண்டாம் ஜேம்ஸ் மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஆங்கிலப்புரட்சி முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. அமைதியான முறையில் தொடங்கி அமைதியாகவே முடிவுற்றதோடு போர் நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. இதனால் இப்புரட்சியை "மாண்புறுப்புரட்சி" என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

பிரித்தானிய பாராளுமன்றத்திற்கும் ஸ்டுவட் வம்ச அரசர்களுக்குமிடையில் இறைமை பற்றிய போராட்டத்தின் முடிவே இப்புரட்சியாகும். மன்னனுடைய அதிகாரங்களைக் குறைத்து பாராளுமன்றத்தின் அதிகாரங்களை உயர்த்துவதே புரட்சியின் நோக்காக அமைந்தது. இப்புரட்சியின் முதற் கட்டமாக 1215இல் ஏற்படுத்தப்பட்ட "மக்னா காட்டா" (மகா பட்டயம்) ஒப்பந்தத்தினைக் குறிப்பிடலாம். இவ்வொப்பந்தம் இங்கிலாந்து அரசனின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தும் முதலாவது வரலாற்று ஆவணமாகவும் பாராளுமன்ற அதிகாரம் வளர்ச்சி பெறுவதற்கான முக்கிய நிகழ்வாகவும் அமையப்பெற்றது.

அடுத்து எட்டாவது ஹென்றி மன்னனின் காலத்தில்(1519-1547) பாராளுமன்றத்தின் அதிகாரம் மேலும் ஒருபடி வளர்ச்சி அடைந்தது. இவனது காலகட்டத்தில் ஐரோப்பாவில் சமயசீர்திருத்த இயக்கம் ஏற்படுத்தப்பட்ட வேளையில் பாப்பாண்டவரின் ஆதிக்கத்திலிருந்து மீளத்தேவையான சட்டங்களை இயற்றிக் கொள்வதற்கு பாராளுமன்றத்தின் உதவியைப் பெற்றுக் கொண்டான்.

பின்னர் 1603ஆம் ஆண்டில் ஸ்டுவட் அரசவம்சம் இங்கிலாந்தின் ஆட்சிபீடத்தில் அமர்ந்ததுடன் நிலைமை முற்றாக மாறத்தொடங்கியது. முதலாம் ஜேம்ஸ் மன்னன் சிம்மாசனம் ஏறியகாலம் தொடக்கம் பாராளுமன்றத்திற்கும் ஸ்டுவட் அரச வம்சத்திற்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டவண்ணமாயிருந்து. இவ்வம்சத்தின் முக்கிய மன்னனாக இரண்டாம் ஜேம்ஸ் விளங்கினான். இவனின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளே புரட்சிக்கான உடனடிக் காரணமாக அமைந்தது.

தீவிர கத்தோலிக்கனான இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் பதவியேற்றதுடன் (1685-1688) மன்னனுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் மீண்டும் மோதல் ஏற்பட்டது. இம்மோதலுக்கு சமயக் கருத்து வேறுபாடே காரணமாக அமைந்தது. குறிப்பாக எட்டம் ஹென்றி மன்னனுடைய காலத்திலே பாப்பாண்டவரும் கத்தோலிக்க சபையும் இங்கிலாந்தில் இழந்த அதிகாரங்களை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு முயன்றான். ஆனால் பாராளு மன்றத்தில் பெரும்பான்மையோர் சீர்திருத்த சமயத்தவராயிருக்க மன்னனோ றோமன் கத்தோலிக்கனாயிருந்தான். மன்னன் அரசுரிமையை றோமன் கத்தோலிக்க சமயத்தவனுக்கு வழங்குவதே குறிக்கோளாகக் கொண்டிருந்தான். ஆயினும் பாராளுமன்றம் ஜேம்ஸின் மகளைத் திருமணம் செய்திருந்த சீர்திருத்த சமயத்தவரான நெதர்லாந்தைச் சேர்ந்த இளவரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லியத்திற்கு முடிசூட விரும்பியது. இளவரச தம்பதியைப் பதவியேற்க பாராளுமன்றம் அழைப்பு விடுத்தது. அவ்விருவரும் அழைப்பை ஏற்று இங்கிலாந்திற்கு வந்திறங்கியபோது ஜேம்ஸ் மன்னன் பிரான்சிற்குத் தப்பியோடினான். வெற்றி பெற்ற பாராளுமன்றம் மூன்றாம் வில்லியத்தையும் இரண்டாம் மேரியையும் பிரித்தானிய சிம்மாசனத்தில் அமர்த்தியது. இவர்கள் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட உரிமைகள் மனுவை ஏற்றுக் கொண்டே பதவியில் அமர்ந்தமையால் பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்ட மன்னராட்சி இங்கிலாந்தில் உருவானது.

இந்தவகையிலே பிரித்தானிய மக்கள் கத்தியின்றி இரத்தமின்றி அமைதியான முறையிலே கொடுங்கோண்மை ஆட்சி புரிந்த இரண்டாம் ஜேம்ஸ் மன்னனுக்கு எதிராக புரட்சிக் கொடியுயர்த்தி "அரசு ஆண்டவனின் படைப்பு" என்றும் "அரசின் அதிகாரங்கள் இறைவனால் வழங்கப்பட்டது" என்ற தெய்வீக உரிமைக் கோட்பாட்டினை உதறித்தள்ளி ஜனநாயக ஆட்சி வேண்டி 1688ஆம் ஆண்டு மேற்கொண்ட புரட்சியில் பிரித்தானிய மக்கள் வெற்றி பெற்றுக் கொண்டனர்.

மேலும் புரட்சியின் விளைவுகளாக 1689ஆம் ஆண்டு உரிமைமுறி நிறைவேற்றப்பட்டது. முடியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் உயர்த்தப் பட்டன. பூரணமுடியாட்சி ஒழிக்கப்பட்டு வரம்புடைய முடியாட்சி ஏற்கப்பட்டது. அத்தோடு சமய பொறைச்சட்டம் (1689), இராஜத் துரோக மசோதா(1689), படைக்கலச் சட்டம்(1689), மூன்றாண் டுகள் சட்டம்(1694), உத்தரவு சீட்டுவிதி புதுப்பித்தல்(1695), அரச உரிமைச்சட்டம்(1701) போன்ற சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

1688ஆம் ஆண்டு புரட்சியின் பெறுபேறாக பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மன்னனுடைய அதிகாரங் களை மிஞ்சியிருந்தவையாயினும் பாராளுமன்றப் பிரதிநிதி களைத் தெரிவு செய்யும் வாக்குரிமை சிலருக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. எனவே வாக்குரிமையை பரவலாக்கு வதற்குத் தொடர்ந்து பிரசாரங்கள் செய்யப்பட்டன. இதன் விளைவே வாக்குரிமை பரவலாக்கப்பட்டு 1927ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுவதற்கும் இப்புரட்சியே காரணமாக அமைந்தது. அத்தோடு பிரித்தானியாவின் கட்சிமுறை வளர்ச்சி மற்றும் சமுதாய மாற்றத்தினை



ஏற்படுத்துவதிலும் இப்புரட்சி காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திற்கான அடித்தளத்தி னையும் இப்புரட்சியே இட்டுக் கொடுத்திருந்தது. குறிப்பாக 1689ஆம் ஆண்டு உரிமைச் சட்டத்திலே "மக்கள் பிரதிநிதிகளின் அனுமதியின்றி வரி விதித்தலாகாது" என்று கூறிய வாசகம் அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் போது "பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை" என்பது புரட்சியின் கோஷமாகியது.

பிரித்தானியாவில் வெளிநாட்டுக் கொள்கையை சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஆங்கிலப் புரட்சி வழிகோலியது. அந்தவகையில் இங்கிலாந்தில் அயல் நாட்டு விவகாரங்களை நிருணயிக்கும் உரிமை முன்புபோல் பிரான்சிடம் இல்லாது, இப்புரட்சிக்குப்பின் இங்கிலாந்தே தன் அயல்நாட்டு விவகாரங்களை சுதந்திரமாகப் பின்பற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. பாராளுமன்றத்தின் இந்த வெற்றியானது இங்கிலாந்தை வாணிகத்திலும் கைத்தொழிலி லும் முதன்மை பெற்ற நாடாக ஆக்கியதுடன் பெரிய பேரரசாக உருவாவதற்கும் உதவி புரிந்தது.

எனவே இங்கிலாந்தில் நீண்ட காலமாக மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்கும் தொடர்ந்து வந்த ஆதிக்கப்போட்டி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இப்புரட்சி அரசியல், பொருளாதார சமூக ரீதியில் மாற்றத்தினை ஏற்படுத்தி ஜனநாயக ஆட்சிமுறைக் கான அடித்தளத்தினையும் பிரித்தானியாவின் வளர்ச்சியை ஏற்படுத்திய புரட்சி என்றவகையில் வரலாற்றில் இருப்புக் கொண்டுள்ளது.

## *அமெரிக்கப்புரட்சி* - 1776

பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட நாடுகாண் பயணங்களின் விளைவாக அமெரிக்காக்கண்டம் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின்னர் ஸ்பானியர், போர்த்துக்கேயர், பிரான்சியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் அங்கு குடியேற்றங்களை அமைத்தனர். இவர்களில் வட அமெரிக்காவில் நிலையான குடியேற்றங்களை உருவாக்குவதில் வெற்றி பெற்றவர்கள் ஆங்கிலேயராவர்.

1776இல் சுதந்திரப்போர் ஆரம்பமாகும் போது ஆங்கிலக் குடியேற்றங்கள் பதின்மூன்று வட அமெரிக்காவில் காணப்பட்டன. அவையாவன வேர்ஜினியா, ஜோர்ஜியா, பென்சில்வேனியா, நியுயோர்க், நியுஜேர்சி, டெலவெயார், மஸீசெட்ஸ், கெனடிகட், தென்கரோலினா, வடகரோலினா, நியுஹேம்ஷயர், ரோட்ஜலண்ட், மேரிலண்ட் போன்றனவாகும்.

இந்த அமெரிக்கக் குடியேற்றங்களின் பிரஜைகள் தாய்நாடான பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு மேற்கொண்ட புரட்சியே "அமெரிக்க சுதந்திரப்போர்" எனப்படுகின்றது.

வட அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள் பிரித்தானிய முடியினால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களாலேயே நிருவகிக்கப்பட்டு வந்தது. இருப்பினும் இவர்கள் தமது கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முடிவுப்பொருட்களை விற்பதற்குமான ஒரு சந்தையாகவே அமெரிக்காவைப் பயன்படுத்தினர். அத்தோடு புதிய வரிகளையும் அவர்கள் மீது விதித்தனர்(1765). இதனால் விரக்தியுற்ற மக்கள் இவ்வரிகளுக்கு எதிராக தமது பலத்த எதிர்ப்பினையும் தெரிவித்து மேல்வருமாறு கோஷங்களை எழுப்பினர். "எமது பிரதிநிதிகள் இடம்பெறாத பிரித்தானியப் பாராளுமன்றத்தில் எம்மீது எவ்வாறு வரிவிதிக்கமுடியும்" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கக் குடியேற்றவாசிகள் கேள்வி எழுப்பினர். இக்கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கப்படாமையால் "பிரதிநிதித்துவமின்றேல் வரியுமில்லை" என்ற கோஷத்துடன் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். 1773களில் இப்போராட்டம் தீவிரமடைந்தது. 1776களில் பிலடெல்பியா நகரில் ஒன்று கூடிய போராளிகள் தமது போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஜோர்ஜ் வொஷிங்டனைத் தலைவராக நியமித்தனர்.

1776ஆம் ஆண்டு யூலை மாதம் நான்காம் திகதி பிரித்தானிய ஆதிக்கத்திற்கு எதிராகச் சுதந்திரப் பிரகடனத்தை முன்வைத்தனர். அதனைக் கடுமையாக எதிர்த்த பிரித்தானியரோடு ஜோர்ஜ் வொஷிங்டன் தலைமையில் ஒன்றிணைந்த அமெரிக்கக் குடியேற்றவாசிகள் நீண்டகால யுத்தத்தின் மூலமாக 1783ஆம் ஆண்டில் பிரான்ஸின் வேர்சையில் மாளிகையில் பிரித்தானிய-அமெரிக்க நாடுகளுக்கிடையே ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் ஐக்கிய அமெரிக்கா சுதந்திரம் அடைந்தது. இப்புதிய நாடு 1787 ஆம் ஆண்டு தனக்கென அரசியல் யாப்பு ஒன்றை வரைந்து கொண்டது. இதுவே உலகில் எழுதப்பட்ட முதலாவது அரசியல் யாப்பாகும். அத்தோடு அடிப்படை மனித உரிமைகள் யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டமையால் அது உலகளாவிய மதிப்பைப் பெற்றுக் கொண்டது.

### *பிரான்சியப்புரட்சி* - 1789

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு பிரான்சில் இடம்பெற்ற மாபெரும் மாற்றமே பிரான்சியப் புரட்சியாகும். இது அடிப்படை மனித உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் முன்னேற்றப் பயணத்தில் இன்னுமொரு முக்கிய கட்டமாகும். ஐரோப்பிய வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தி எதேச்சாதிகாரமான முடியாட்சி, மடாலயங்களின் ஆதிக்கம், பிரபுக்களின் சமூக, பொருளாதார ஒடுக்குமுறை ஆகியவற்றிற்கெதிராக பிரஞ்சு நாட்டின் மூன்றாம் குடித்தினையோர் என்று சொல்லப்படும் சாதாரணகுடிகள் போர்க்கொடி உயர்த்தி,

"அனைவருக்கும் சுதந்திரம்
அவர்களிடையே சமத்துவம்
ஏற்படுவதோ சகோதரத்துவம்"

என்ற ஜனநாயக முழக்கங்களை விண்ணதிர ஒலிக்கச் செய்தனர். ஐரோப்பிய நாடுகளில் முடியாட்சி முறைக்கும் பிரபுத்துவமுறைக்கும் சாவுமணியடித்து ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்தினை உலகிற்கு உணர்த்திய புரட்சி இதுவாகும்.

சமகால பிரான்சிய சமூகத்தை பிரதானமாக மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்கமுடியும். அவர்களில் மன்னன் முதன்மையானவன், இரண்டாம் நிலையில் மதகுருமார் மற்றும் பிரபுக்கள் அடங்கியிருந்தனர். இவ்விரு பிரிவினரும் உயர்குடியினர் என்றும் உரிமையுள்ள வர்க்கத்தினர் என்றும் அழைக்கப்பட்டனர். ஏனையோர் விவசாயிகள், வர்த்தக வகுப்பினர், புத்திஜீவிகள் அடங்கிய சாதாரண மக்களாகக் காணப்பட்டனர். இவர்கள் மூன்றாம் குடித்திணையோர் என்றும் உரிமையற்ற வர்க்கத்தினர் என்றும் அழைக்கப்பட்டனர்.

பிறப்பின் அடிப்படையில் கணிக்கப்பட்ட வர்க்க வேறுபாட்டில் உரிமையற்ற வர்க்கத்தினரே மன்னனின் கடுமையான வரிச்சுமைக்கும் கொடுங்கோண்மை ஆட்சியின் கீழும் நசுக்கப்பட்டனர். இதனால் அதிருப்தியுற்ற மக்கள் புரட்சிக்கான சந்தர்ப்பத்தினை எதிர்பார்திருந்தனர். அத்தோடு மதகுருமார் மற்றும் பிரபுக்களிடையே ஏற்பட்டுக் கொண்ட முரண்பாடுகள் மற்றும் படித்த மத்தியதர வர்கத்தின் எழுச்சி என அனைத்துத் தரப்பினரும் அதிருப்திப்பட்டுக் கொண்டதன் விளைவே புரட்சியாக வெடித்தது.

பிரான்சிய அறிஞர்களின் கருத்துக்கள் புரட்சியை மூட்டும் தீப்பொறிகளாக விளங்கின. "நூறு எலிகளால் ஆளப்படுவதைவிட ஒரு சிங்கத்தால் ஆளப்படுவது மேல்" என்றுகூறி மக்களைப் புரட்சிக்கான வழிமுறைகளில் ஈடுபடுத்தினர். குறிப்பாக ரூஸோ, மொண்டஸ்கியூ, வோல்டயர் போன்ற அறிஞர்களது கருத்துக்கள் முக்கியமானவை.
எனவே 1789/7/14ஆம் திகதி ஒன்றிணைந்த புரட்சியாளர்கள் கொடுங்கோண்மையின் சின்னமாக விளங்கிய பஸ்தீல் சிறைச்சாலையை உடைத்தனர். தம்மை எதிர்த்தோரை கிளற்றின் என்ற கருவிக்கு இரையாக்கினர். முடிவில் அரசியல் யாப்பொன்றை வரைந்து மனித உரிமைகள் பிரகடனத்தையும் தயாரித்து வெளியிட்டனர்.

பிரான்சியப் புரட்சியின் விளைவுகளாக ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்புகள் கட்டியெழுப்பப்பட்டன. மனித உரிமைகள் சாசனம் உருவாக்கப்பட்டது. சமூக ஏற்றத்தாழ்வுகள் களையப்பட்டு தேசிய உணர்ச்சி தூண்டப்பட்டது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கோட்பாடுகள் நிலைநாட்டப்பட்டன. ஜேர்மனிய ஐக்கியம், இத்தாலிய ஐக்கியம், தென்னமெரிக்க நாடுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் போன்ற பல வரலாற்று நிகழ்வுகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

எனவே நாகரிக வளர்ச்சியின் பல்வேறு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதனின் வாழ்க்கை ஊட்டம் நடைபெற்று வருகின்றமையை வரலாற்றைக் கற்கின்றபோது புரிந்து கொள்ள முடிகின்றது. அந்த வகையில் உலக வரலாற்றில் இடம்பிடித்த மூன்று முக்கிய புரட்சிகளும் மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்பினை நல்கி உலக வரலாற்றில் தனித்துவம் பெறுகின்றன.

✲✲✲

ஈழத்தின் மிக முக்கியமான 'சிற்றிதழாக' தன்னை பதிவு செய்திருக்கும் மகுடத்தை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். சந்தாக்களை பெற்று உதவி எமது தொடர்ச்சியான வருகைக்கு உதவுங்கள்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 கனக ரமேஷ் கவிதைகள்....

## உடையும் முகக் கண்ணாடி

மனித முகத்திரைகள் கிழிக்கப்பட்ட
கனவு வெளிக்குள்
உறவின் இழைகள் அற
எவ்வித பிரக்ஞையுமற்று
வதை சூழ் ஆழியாய்
வாழ்க்கை வியாபித்தது

விகற்பங்களை முகமாய்
சமைக்கும் மனிதர் மத்தியில்
எல்லைக் கோடுகளுக்குள்
என் உயிர்ப்பின் இழை அற
புனிதர்களின்
வீணில் படிந்த எச்சில் வார்த்தைகள்
என்னைக் கழுவிச் செல்கின்றன.

உதிரும் என் எச்சங்களை
ஒவ்வொன்றாய் பொறுக்கியெடுத்து
எனக்குள் உயிரூட்டிக் கொள்கிறேன்
நாளைய சிறுபொழுதொன்றிலாவது
ஒரு கணமேனும்
நான் வானவில்லாய்
தோன்றி மறைவதற்கு

## அத்வைதம்

ஒரு பறவைக்குள் நான்
ஒளிந்து திரியும் போது
என் இறக்கைகளை
முறிக்க முயல்கிறாய் நீ.

சதா உனது விம்பம்
வேட்டைப்பற்களுடன்
என்னைத் துரத்தும் போது
வடுக்கள் கீறிய என் முகத்தை
புனைந்த பொய்களுடன்
மறைத்துக் கொள்கிறேன்.

ஆயினும், நீயோ
என்னுள் அந்தியாய் கவிந்தாய்
இருளைப் பிரவகிக்கும் நோக்குடன்
எனினும் உன்னுள்
ஒரு நிழலாய் ஒளிய
காத்திருக்குது
மனம்.

## கோழிக்கால் வேலிகள்

பொத்தி புதைத்த
ஈரமனவெளியில்
நண்டு காலாய் நகர்ந்து
நுரை வாய் பொந்திலிருந்து
எட்டிப் பார்த்தது காமம்
மெய் வியர்த்து விழிதுயிர்க்க
திரிசடைக்கூந்தலும்
கும்பகலசமுமாய்
மயக்கி முயக்கியவளின்
மனத்திரையினை விலக்கினேன்
உள்ளம் உலைக்களமாக
உணர்வுகள் கனலாய்(காய)எரிய
மயிர்க்காம்பு நீவி
மூலமூர்த்தம் தண்டாய் விறைத்து
அலைவாய் புற்றிலிருந்து
சீற்றம் தவிர்த்தது.
அப்போது படைப்பின்
தத்துவம் புரிய
மோன தவத்தின்
நிஷ்டை கலைந்து
ஒரு யோகியாய் எழுந்தேன்

## வெளிச்சுவர்க்கள்ளி

ஆழ் மனக் காரிருள் சூழ்
நெஞ்சுக் குழிக்குள்
நுரை கக்கும் அலைகளாய் காமம்,
விம்மின,விசும்பின,
விசுவரூபமாய் உருப்பெருத்தன.
உளச்சூளை கனன்று எரிய
மனத்தாள் உடைந்து வீழ
மூலலிங்கமாய் எழுந்த
எரிபந்த தணலினை
சஸ்டி விளக்கினில்
செருகி அணைத்தேன்
மனக்கடல் அடங்க
மெய்ச்சூடு தணிய — மேனி
சவமாய் வெழுத்த போது தான்
புரிந்தது
நடுரோட்டு நாய்களைப் போல்தான்
நம் வீட்டு மனிதர்களும் என்று.



## துயருக்குள் ஒளிரும் மௌனம்


நகமற்ற விரல்களால்
சுரண்டிக் கொண்டிருந்த
காலைப் பொழுதொன்றில்
பூனையின் நகங்களுக்குள்
எனது உலகம்
ஒளிர்வதாகக் கூறினார்கள்
வாயால் மலம் கழித்து
நாவால் பிணம் ருசிக்கும்
என் தேசத்தில்
வேட்டைப் பற்களுடன்- ஓர்மம்கொண்ட
ஓநாயைப் போல்
செப்பமிடப்படா வீதிகளில்
அலைந்து கொண்டிருந்தார் கடவுள்
காயப்பட்ட அவர் உதட்டிலிருந்து
உதிரும் புன்னகை
என்றோ ஒரு நாள்
எம் கனவுகளை நனவாக்கும்
குதறப்பட்ட வாழ்வின்
கணங்களை நினைப்பூட்டும்
சலனமற்ற இரவொன்றில்
பிய்த்தெறியப்பட்ட
மலர்களின் இதழ்களைப்
பொறுக்கத் தொடங்கினேன்.
சோபையிழந்த
என் கரங்களில்
குழந்தையின் சருமமாய்
இதழ்கள் ஒட்டிக் கொண்ட போது
கிழிக்கப்பட்ட
என் தாயின் யோனியிலிருந்து
வழிந்த குருதி
காவு கொள்ளப்பட்ட
வாழ்வின் கதையாய்
தெருவில் உலர்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# "எல்லாம் நிறைவேறிற்று..."



**வி.மைக்கல்கொலின்**

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்? அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கிருந்தே
எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதி ~ (பகவத் கீதை)

பாஸ்கா எனும் புளிப்பற்ற அப்ப விழா நிகழ இன்னமும் இரண்டு நாட்களே இருந்தன. தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் இயேசுவை எவ்வாறு சூழ்ச்சியாகப்பிடித்துக் கொலை செய்யலாம் என வழி தேடிக்கொண்டிருந்தார்கள். அதிக வலுவுள்ள நச்சுக்கலந்த மயக்கப்புகையைச் செலுத்தி அவரை மயக்கமுறச் செய்து பிடித்துவிடலாம் என்பது படைவீரர் சிலரின் கருத்தாக இருந்தது. ஆயினும் விழாவின் போது வேண்டாம் ஒருவேளை மக்களிடையே கலகம் ஏற்பட்டு 'ஏரோது' அரசனின் ஆட்சிக்கு களங்கம் ஏற்பட்டு விடக்கூடும் என்ற பயமும் அவர்களிடையே இருந்தது.

இம்முறை பாஸ்கா விழா மிகச்சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடகியிருந்தது. நீண்ட திட்டமிடலுடன் பலநாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மிகப் பெரும் அரச விழாவாக அதனை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வெகுவிமர்சையாக அதன் ஆரம்ப விழாக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இம்முறை நடைபெறும் பாஸ்கா திருவிருந்தில் பலிப்பொருள் உண்பதற்காக சர்வதேசங்களையும் சேர்ந்த மிகமுக்கிய நாடுகள் தமக்கான அழைப்புக் கடிதங்களுடனும், இயேசுவைப் பிடிப்பதற்கு உதவியாக ஏரோது அரசனின் இராணுவத்துக்கு உதவுவதற்கான படைக்கல உதவிகளுடனும் உள்ளே வருவதற்கு தயார்நிலையில் காத்து நின்றன. அண்டை நாடுகள் சில ஏற்கனவே விழாவின் பங்காளிகளாகி இயேசுவை பிடிப்பதற்கான புலனாய்வுத் தகவல்களை வழங்குவதில் தலைமைக்குருக்களுக்கும், மறைநூல் அறிஞர்களுக்கும் அவர் தம் படைவீரர்களுக்கும் உதவிகள் புரிந்து கொண்டிருந்தன.

இன்றைய பாஸ்கா விழாவின் போதாவது இயேசுக் கிறிஸ்துவைக் கையும்மெய்யுமாக பிடித்து விடவேண்டும் அல்லது அவரை கொலை செய்து அவரது கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அவர் பின்னால் திரியும் ஒரு கூட்டத்தினரையும் அதன் மூலம் நிர்மூலமாக்கிவிட வேண்டும் என்ற தீவிர வெறி ஆட்சியாளர்கள் மத்தியில் மிக இறுக்கமாக வேரூண்டியிருந்தது.

முப்பத்து மூன்று வருடகால இயேசுவின் வாழ்க்கையில் பன்னிரெண்டு வயதிற்குப் பின்னர் அவர் யூதேயாவை விட்டு உலக சஞ்சாரங்களில் ஈடுபட்டு தனது ஆளுமையையும், ஆற்றலையும் வளர்த்துக்கொண்டு தேசாதி தேசமெங்கும் சென்று கல்விப்புலமை கொண்டு தனது போர்க்குணாம்ச ஆளுமையையும் மிகத்தீவிரமாக வளர்த்துக்கொண்டு மீண்டும் முப்பது வயதில் தனது சொந்த மண்ணிற்கு வந்ததில் இருந்து கடந்த மூன்று வருட காலங்களில் செய்த அற்புதங்களும் புதுமைகளும் பற்பல. தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகிய இஸ்ரவேல் சமூகம் பட்ட துயரங்களும் வேதனைகளும் தொடர்ந்த வண்ணமிருக்க அவர்களுக்காகவும் அவர்களின் அறியாமைக்காகவும் அவர் போராட வேண்டியிருந்தது. அவரது போராட்ட ஆளுமையை உலகமே வியந்து பார்த்தது. அவரது பல புதுமைகள் உலகமெங்கும் பேசப்பட்டன. ஆனால் சில யூதர்களினாலேயே அவர் வெறுக்கப்பட்டார்.

இறந்தவன் உயிர்த்ததும், பார்வையற்றவன் பார்வை பெற்றதும், முடவன் எழுந்து நடந்ததும், தொழுநோய்க் காரன் நோய் நீங்கப் பெற்றதும், கல்லறை திறந்து இறந்து மூன்று நாட்களுக்குப் பின்னர் லாசரஸ் எழுந்து வந்ததும் என பலநாடுகள் அவரது செயலை வியப்புடன் பார்த்தன.

உள்ளூரில் அவருக்கான ஆதரவு வளர்ந்து கொண்டிருந்தது. தொடர்ந்து புதுமைகள் செய்து மக்களை மயக்கும் இயேசு உயிருடன் இருந்தால் மக்கள் தம்மை மறந்து விடுவார்கள் என்ற பயமும் "நானே உலகின் ஒளி " நானே உயிர் தரும் உணவு என்னை உண்பவன் இறப்பினும் வாழ்வான் எனவும் தம்மால் மட்டுமே மக்களுக்கு விடுதலையைப் பெற்று தரமுடியும் என்ற கூற்றும் ஆன்மீக விடுதலையே முழு மொத்த உரிமைக்குமான வழி எனக்கூறும் இயேசுவின் "விண்ணக வாழ்வு" என்ற புதியதொரு தேசத்திற்கான கருத்தாடல்களில் மோகம் கொண்டு மக்கள் தம்மை மறந்து விடுவார்கள் என்ற பயம் ஆட்சியாளர்களையும் அவர்களது அடிவருடிகளையும் விழிப்புறச் செய்தது.

அவர்களது கஜானாக்களில் செல்வம் குறையக் குறைய அவர்களது ஆத்திரம் முழுவதும் இயேசுவின் பக்கம் திரும்பியது. ஒரு விடுதலை வீரனாக, சமதர்மவாதியாக இயேசுவை மக்கள் கொண்டாடுவதைத் தொடர்ந்து அவரது போதனைகள் பலரை "கிலி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொள்ளச்செய்தது. எப்படியாவது அவரை மடக்கிப்பிடித்து கொலை செய்து விடவேண்டும் என்று அவர்கள் தீட்டிய பல திட்டங்கள் கடைசி நேரத்தில் கைநழுவி போனதும் உண்டு.

இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்காக அவரது போதனைகளைக் கேட்டு அதன்படி நடக்க முனைந்த பலரை பல நேரங்களில் விலை பேசி அவருக்கெதிராக கலகங்கள் செய்து அவரை ஒழித்துக் கட்ட முயன்ற போதெல்லாம் அவர் மாயமாகி போனது அவர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

நீண்டகால மந்திராலோசனையின் பின் ஒரு புதிய போர் வியூகத்தை தயாரித்து காத்திருந்த வேளை பாஸ்கா திருவிழா வந்தது மிகவும் வாய்ப்பாகியது. அதனை விட அவர்களுக்கு ஒரு இனிப்பான செய்தியாக அமைந்து இயேசுவின் சீடர்களில் ஒருவனே முன்வந்து அவரைக்காட்டிக் கொடுப்பதற்கு விலை பேசமுயன்றது. பழம் நழுவி பாலில் விழுந்த கதையாக மதத் தலைவர்களும், மறைநூல் வல்லுனர்களும் அந்த சந்தர்ப் பத்தை மிகக் கெட்டியாகப்பிடித்துக் கொண்டனர்.

பன்னிருவருள் ஒருவனாகிய யூதாஸ் காரியோத் இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் நோக்கத்தோடு தலைமைக் குருக்களிடம் சென்றான். அவர்கள் அவனை வரவேற்று இயேசுவைக் காட்டிக் கொடுத்தால் வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கை அனுபவிப்பதிற்கும், அவன் விரும்பும் பட்சத்தில் தமது ஆட்சியதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு அவனையும் ஒரு ஆட்சிமைப் பிரதி நிதியாக்குவதாகவும், அதற்கு அச்சாரமாக முப்பது வெள்ளிக்காசுகளை முற்பணமாகவும் வழங்க ஒத்துக்கொண்டனர்.

அவனும் அவரை எப்படி? எங்கே? எப்போது காட்டிக் கொடுக்கலாம் என வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்தான். புளிப்பற்ற அப்பவிழாவின் முதல் நாள் பாஸ்கா ஆட்டுக்குட்டியைப் பலியிட்டு பாஸ்கா விருந்து ஏற்பாடாகியிருந்தது.

மாலை மங்கிய கருக்கிருட்டு நேரம் மங்கிய மெழுகின் ஒளியில் இயேசு பன்னிரு சீடர்களோடு வந்து பந்தியில் அமர்ந்தார். தமக்கான இடங்களைத் தேடி பந்தியில் அமரமுற்பட்ட சீடர்களைப்பார்த்து இயேசு

"என்னோடு உண்ணும் உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகின்றேன்" என்றார். அவர் சொன்னதைக் கேட்ட சீடர்கள் மிகவும் மனம் வருந்தி ஒருவர் பின்னொருவராக "நானோ? நானோ?" என்று அவரிடம் கேட்கத்தொடங்கினர். அதற்கு இயேசு "உங்களில் ஒருவனே என்னைக் காட்டிக் கொடுக்கப்போகிறான் அவன் என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே நான் அவனை நம்பினேன் ஆனால் அவனோ? ஐயோ! என்னைக் காட்டிக்கொடுப்பவனுக்கு கேடு. அம் மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருந்திருக்கும். மானிடமகன் தம்மைப்பற்றி மறைநூலில் எழுதி உள்ளவாறே போகப்போகிறார்" என்ற பின்பு அவர் அப்பத்தை எடுத்து அதனைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து "இதனை வாங்கி உண்ணுங்கள் இது எனது உடல் கபால வெளியில் கபாலம் திறக்கப்பட்டு உலகமெங்கும் காட்சிபொருளாய் காட்டப்படப் போகும் எனது உடல்" எனக் கூறிய பின் திராட்சை இரச கிண்ணத்தை எடுத்து கடவுளுக்கு நன்றிகூறிய பின் அவர்களை நோக்கி "இது எனது உடன்படிக்கையின் இரத்தம். பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம். நான் விரும்பாத வேளையிலும் உங்களுக்காக பல உடன்படிக்கைக்கு உடன்பட்டேன். இறையாட்சி வரும் நான் கண்ட கனவுகள் பலிக்கும். புதிய ஆட்சியில் நீங்கள் எல்லோரும் மகிழ்வுடன் இருப்பீர்கள். அப்போதுதான் நான் திராட்சைப் பழரசத்தைக் குடிப்பேன். அதுவரை ஒரு போதும் குடிக்க மாட்டேன என உறுதியாகச் சொல்லுகிறேன்" என்றார்.

சீடர் அனைவரும் புகழ்பாடல் பாடிவிட்டு ஒலிவ மலைக்கு செல்ல தயாரானார்கள். அப்போது இயேசு அவர்களைப் பார்த்து "நீங்கள் அனைவரும் ஓடிப்போவீர்கள் ஏனெனில் ஆயரை வெட்டுவேன் அப்போது ஆடுகள் சிதறடிக்கப் படும் என்று மறைநூலில் எழுதியிருந்தது. ஆனால் நான் உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு உங்களுக்கு முன்னமே கலிலேயாவுக்கு போவேன் என்றார்"

அதனைக் கேட்ட பேதுரு இயேசுவிடம் "எல்லோரும் ஓடிப்போய் விட்டாலும் நான் அவ்வாறு செய்யமாட்டேன்" எனக் கூறியதைக் கேட்டு இயேசு சிரித்தபடியே "இன்றிரவு சேவல் இரு முறை கூவும் முன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய் என உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். அதற்கு பேதுரு "நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்" என மிக அழுத்தமாகச் சொன்னார். அதனைக்கேட்ட இயேசு ஒரு புன்னகையை உதிர்த்தவாறே "என்னைக் காட்டிக் கொடுப்பவன் ஒருவனே" ஆனால் மீதமுள்ள பதினொரு பேரும் என்னை மறுதலிப்பீர்கள். அவன் எனது உடலைக் காட்டிக் கொடுப்பான். ஆனால் நீங்களோ என்னையும் எனது கொள்கை களையும் சேர்த்தே மறுதலிப்பீர்கள். எனது மறைவுக்குப் பின்னே உங்களைக் காப்பாற்றிக் கொள்ள நீங்கள் செய்யப்போகும் இந்த மறுதலிப்பானது காட்டிக் கொடுப்பதை விட கேவலமானது. காட்டிக்கொடுப்பதற்கும் ஒரு துணிவு வேண்டும். சர்வ வல்லமையுடன் இருக்கும் போது காட்டிக் கொடுப்பது நேரடியாக மோதுவதைப் போன்றதே. ஆனால் நான் இறந்த பின் என்னை மறுதலிப்பதானது மிகவும் மோசமானது. இத்தனை வருடங்கள் நீங்கள் என்னோடு உண்டு குடித்து எனது புதுமைகளையும், அற்புதங்களையும் கண்டு வியந்து துதிப்பாடல் பாடி எனது போதனைகளைக் கேட்டிருந்தீர்கள். நாளை எனக்கெதிராகவும், எனது போதனைகளுக்கெதிராகவும் நீங்களே பேசுவீர்கள் - எழுதுவீர்கள்" எனக்கூறிய பின் இயேசு சீடர்களையும் அழைத்துக் கொண்டு " கெத்சமனி " என்னும் பெயர் கொண்ட ஓர் இடத்திற்கு வந்தார்.

அங்கு அவர் சீடர்களிடம் " நான் இறைவனுடன் பேச வேண்டும் நான் வரும் வரை நீங்கள் இங்கேயே அமர்ந்தி ருந்து ஜெபியுங்கள்." எனக் கூறியபடியே பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை தம்முடன் கூட்டிச்சென்றார். அப்போது அவர் திகிலும் மனக்கலக்கமும் அடையத்தொடங்கினார். சாதாரண மனிதனுக்கு வரும் மரண பயம் அவரை ஆட் கொண்டது. "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது. நீங்கள் இங்கேயே தங்கிவிழித்திருங்கள்" எனக் கூறியபடியே சற்று அப்பால் தனிமையில் சென்று தரையில் விழுந்து வணங்கிய இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தைப் பார்த்து, "அப்பா தந்தையே எல்லாம் உம்மால் இயலும். இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும் ஆனாலும் என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே எல்லாம் நிகழட்டும் என வியாகுலப் பட்டு அழுதபடியே" வேண்டிக் கொண்டார்.

தனது வேண்டுதலை முடித்து விட்டு எழுந்து வந்து கற்பாறைகளுக்கு மேலே அவர்கள் உறங்குவதைக் கண்டு "சீமோனே உறங்கிக் கொண்டா இருக்கிறாய்? என்னுடன் ஒரு மணிநேரம் விழித்திருக்க உனக்கு தெம்பில்லையா? என் கொள்கைகளை போதிப்பதற்காக, தேசமெங்கும் சென்றுவர உன்னையல்லவா நியமித்திருந்தேன். என் போதனைகளின் சர்வதேச பொறுப்பாளன் நீயல்லவா? நீயே தூங்கினால் போதனைகள் என்னாவது. எனவே விழித்திரு - செபித்திரு" எனக் கூறிவிட்டு மீண்டும் தனதிடம் சென்று செபிக்கத் தொடங்கினார். அவர் மீண்டும் வந்து பார்த்த வேளை அவர்கள் அனைவரும் உறங்கியிருப்பதைக் கண்டார்.

மூன்றாம் முறை வந்த போது அவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைக் கண்டு "இன்னுமா உறங்கிக் கொண்டிருக்கிறீர்கள்? நேரம் வந்து விட்டது மானிடமகன் பாவிகளின் கையில் ஒப்புவிக்கப்படப்போகிறார். எழுந்திருங்கள் போவோம். இதோ என்னைக் காட்டிக் கொடுப்பவன் நெருங்கி வந்து விட்டான் " என இயேசு பேசிக்கொண்டிருக்கும் போதே பன்னிரு சீடர்களில் ஒருவனான யூதாஸ் காரியோத் வந்தான். தலைமைக்குருக்களும், மறைநூல் அறிஞர்களும், மூப்பர்களும், படைவீரர்களும் வாள்களோடும், தடிகளோடும் வந்திருந்தனர். போர்க்களத்தின் சகல ஆயுதங்களும் அவர்கள் கரங்களில் இருந்தன.

யூதாஸ் அவர்களிடம் நான் ஒருவரை கட்டிப்பிடித்து முத்தமிடுவேன் அவர்தான் இயேசு. அவரை பிடித்துக் கொண்டு போங்கள் என்று முன்னறிவித்ததைப் போன்றே இயேசுவை அணுகி " ராபீ " என அழைத்தபடியே அவரை முத்தமிட்டான்.

" யூதாஸ் முத்தமிட்டோ மனுமகனைக் காட்டிக் கொடுக்கிறாய் " என யேசு கேட்கவும் அவர்கள் பாய்ந்து வந்து இயேசுவைக் கைது செய்தனர். அதனைக் கண்ட சீடர்கள் அவரை விட்டு தப்பி ஓடத்தொடங்கினர்.

■

படைவீரர்கள் இயேசுவைத் தலைமைக் குருவிடம் கூட்டிச்சென்றனர். தலைமைக்குருக்களும், மூப்பர்களும், மறைநூல் அறிஞர்களும் ஒன்று கூடினர். இயேசுவின் மிக நெருக்கமான சீடரான பேதுரு மறைவாக அவரைப் பின் தொடர்ந்தார். தலைமைக்குருவின் வீட்டு முற்றம் வரை வந்து நெருப்பு மூட்டி குளிர் காய்ந்து கொண்டிருக்கும் காவலரோடு இணைந்தபடி பேதுரு அமர்ந்திருந்தார். தலைமைக்குருக்களும், மறைநூல் அறிஞர்களும் இயேசுவுக்கு மரணதண்டனை கொடுக்க அவருக்கு எதிராக குற்றங்களைச் சுமத்த சான்றாதாரங்களைத் தேடிக்கொண்டிருந்தனர். அண்டைநாட்டு தலைமைக் குரு தமது நாட்டின் அரசகுமாரனின் கொலைக்கு இயேசுவின் போதனைகள் காரணமாக அமைந்தது என்றார். உள்நாட்டில் பல கொலைகளுக்கும், படைவீரர்களுக்கு எதிராகவும் இராஜதுரோகம் இழைத்து விட்ட செயலுக்காகவும் அவருக்கு மரண தண்டனை வழங்கலாம் என அவர்கள் கூடி முடிவெடுத்தனர்.

அந்நேரம் குருவின் பணிப்பெண் ஒருவர் வந்து பேதுரு குளிர் காய்வதைக் கண்டு அவரை நோக்கி "நீயும் அந்த நாசரேத்து இயேசுவோடு இருந்தவன் தானே " என்றார். அதற்கு பேதுரு "நீர் சொல்வது என்னவென்று எனக்குத் தெரியவில்லை, புரியவுமில்லை" என மறுதலித்து விட்டு மெல்ல வெளிமுற்றத் திற்குச் சென்றார். அந்நேரம் தலைமைக்குருவின் மாளிகை முன்றலில் இயேசுவைப் பரிகசித்து அவரை சித்திரவதைப்படுத்திக் கொண்டிருந்தனர். அந்நேரம் சேவல் கூவிற்று. வெளிமுற்றத்திற்கு வந்த பணிப்பெண் அங்கு பேதுரு நிற்பதைக் கண்டு அவரைக் காட்டி சூழஇருந்தவர்களிடம் "இவனும் அவர்களைச் சேர்ந்தவன்தான்" என்று மீண்டும் கூறத் தொடங்கினாள். அதற்கு பேதுரு மீண்டும் மறுப்புத் தெரிவித்தார். சற்று நேரத்திற்குப் பின் சூழவிருந்தவர் பேதுருவை உற்றுப்பார்த்து விட்டு "உண்மையிலே நீ அவர்களைச் சேர்ந்தவன்தான் ஏனெனில் நீ கலிலேயன் " என மீண்டும் பேதுறுவைப்பார்த்துக் கூறினர். அவரோ "நீங்கள் குறிப்பிடுகின்ற மனிதரை எனக்குத் தெரியவே தெரியாது எனக்கூறிய படி இயேசுவை தூற்றியும், ஏசியும், வசைபாடியும் தனக்குத் தெரியாதென சத்தியம் செய்யத்தொடங்கினார்".

அப்போது இரண்டாம் முறை சேவல் கூவிற்று. மூப்பர்களில் ஒருவன் தன் கன்னத்தில் அறைந்த வலியையும் பொருட்படுத்தாது இயேசு பேதுருவைத் திரும்பிப் பார்த்தார். அதனைக் கண்ட பேதுரு "சேவல் இருமுறை கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்" என்று இயேசு தமக்குக் கூறிய சொற்களை நினைவு கூர்ந்து மனம் உடைந்து பச்சாதாபப்பட்டு அழுதார்.

■

அன்றைய பொழுது மிகத் தாமதமாகவே விடிந்தது. அதன் முகமெங்கும் ஒருவித சோகமும் விரக்தியும் குடி கொண்டிருந்தது. அந்த வேதனையினை பிரதிபலிப்பதைப் போல் வானம் மப்பும் மந்தாரமுமாகக் காட்சியளித்தது. இரவிரவாக இயேசுவை அழைத்துத் துன்புறுத்திய மூப்பர்களும், மறைநூல் அறிஞர்களும், படை வீரர்களும் இயேசுவை தமது ஆளுநரான பிலாத்துவிடம் அழைத்துச் சென்று இயேசுவுக்கு மரண தண்டனை வழங்கும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு அவர் மேல் பாரமான மரச்சிலுவையை சுமத்தி அதனை சுமந்து வரச்செய்து அவரை மிக இழிவாக நடாத்தி "கொல்கொத்தா" எனும் பெயர் கொண்ட கபால மலை நோக்கி அழைத்துச் சென்றனர். வழி நெடுக படைவீரர் இயேசுவை சவுக்கால் அடித்துச் சென்றனர். வழியெங்கும் யூதப்பெண்களும் ஆண்களும் கூடிநின்று அவரது சிலுவைப்பயணத்தை வேடிக்கை பார்த்தனர். சிலர் அவருக்காக அழவும் சிலர் அவரை பரிகாசம் செய்து கேலி பேசவும் முயன்றனர். தன்னைப் பரிகாசம் செய்து கேலி பேசும் சிலரை இயேசு மன்னித்தார். அந்த வேதனையிலும் அவர் புன்னகை சிந்தினார். தான் இரண்டு மீன்களையும் ஐந்து அப்பங்களையும் பல்கிப் பெருகச் செய்து பன்னிரண்டாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்த வேளை தன்னுடன் உணவு உண்டவர்களும், கானாவூர் திருமணத்தின் போது தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றிய வேளை வயிறு முட்டக் குடித்து களி கொண்டு தன்னைப் பாராட்டிய பலரும் அதில் இருப்பது அவருக்குத் தெரிந்தது.

ஒரு மனிதன் பலத்தோடு நிற்கும் போது அவனோடு நின்று அவனைப் புகழ்வதும் அவன் பலம் குன்றும் போது அவனைக் கேலி செய்து அவனை விட்டு ஒதுங்கிக் கொள்வதும் மனித இயல்பு என்பது தெய்வமகள் அவருக்கு புரிந்தே இருந்ததால் அவர் அதனையிட்டு கவலைப்படவில்லை.

கபாலமலையின் உச்சியில் இயேசுவை ஆணி கொண்டு சிலுவையில் அறைந்து நிர்வாணக் கோலத்தில் அவரை தூக்கி நிறுத்தினர். சிலுவையில் தொங்கியபடியே இயேசு சிலவார்த்தைகளை உதித்தார். வானத்தை அண்ணார்ந்து பார்த்து "எலோயி, எலோயி, லெமா சபக்தானி? " என உரக்கக் கத்தினார். அதற்கு "என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர் " என்பதன் அர்த்தப்பாடாக இருந்தது. இறுதியாக அவரது விலா எலும்புகள் புடைத்து மார்புகள் மேலெழுந்தது. சர்வாங்கமும் அதிர "எல்லாம் நிறைவேறிற்று" என்று உரக்கக் கத்தியபடி தன் தலையைச் சாய்த்தார்.

ஆதாரம்: (மாற்கு நற்செய்தி - 14: 1- 15 : 47
யோவான் நற்செய்தி 18:1- 19:42)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெருசலேம் - பழையநகரம்

(இது வெறுமனே சென்றேன் - கண்டேன் - வியந்தேன் என்பது போன்ற பயணக் கட்டுரை அல்ல. இதுகாலம் வரை பலஸ்தீனம் என்ற தேசத்தின் விடுதலைக்காக மட்டுமே குரல் கொடுத்து வந்த நிலையில் புனித வேதாகமத்தை அடியாகக் கொண்டு 'இஸ்ரவேலின்' நியாயாதிக்கத்தின் ஒருபக்கத்தை தரிசிக்கும் அதே வேளை பலஸ்தீனம் - இஸ்ரேல் என்ற இரண்டு முரண்பட்ட சக்திகள் காலா காலத்திற்கும் அந்நிய சக்திகளின் திட்டமிட்டச் செயலால் பிரிந்துதான் நிற்க வேண்டுமா என வினாக்களை முன்வைக்கும் கட்டுரை இது - ஆசிரியர்)

இது எனது பயண அனுபவம். அது என்பாற் பட்டது. எனது மனதுக்குப்பட்டதை அவ்வாறே பதிவு செய்துள்ளேன். அதை ஏற்பதோ, தவிர்ப்பதோ உங்களது பாடு. வாசகராகிய உங்களது புரிதலைக் கேள்விக்குள்ளாக்கும் எண்ணமும் எனக்கில்லை. எழுதியபின் அந்த எழுத்து வாசகனுடையதே என்பதை மாறுபாடின்றி ஏற்றுக்கொள்கிறவன் நான்.

மானுசீகம் மகா சாமான்யமானது. அதே வேளை மகா அற்புதமானது. அதன் சங்கைக்கு தர்மம், சத்தியம் ஆகியவற்றின் பரிபாலனம் தேவை. கடவுள், ஆன்மா போன்ற சமாச்சாரங்களுடன் அத்தனை உடன்பாடில்லாத நான் எந்த உதவியுமின்றித் தன்னை அறிபவனே மெய்யான மனிதன். அந்த "அறிதலே" அவனது ஜீவன்முக்தி" என நம்புகிறேன்.

கலாநிதி பாபா சாஹேப் அம்பேத்கார் எழுதிய "Budha and his damma" என்கிற ஆங்கில நூலில் வரும் "...... the Gods over the sky....." என்கிற வரிகளை நேரடியாகத் தமிழாக்கம் செய்தால், "வானத்தின் மேல் கடவுளர்" என்பது போன்ற அபத்தமான புரிதல்கள்தான் கிட்டும். மாறாக இந்நூலைப் பொறுத்தளவில் "வையத்து வாழ்வில் வான்புகழ் எய்தியவர்கள்" என்றுதான் அமையவேண்டுமென்கிறது எனது ஆங்கில அறிவு. என்னிலும் ஆங்கிலப்புலமையுள்ளோர் இதனை இன்னும் ஆழாமாக்கவும் கூடும்.

(இலக்கியம், தத்துவம், வரலாறு, இசை, போன்ற நூல்களை அதனதன் தனித்துவத்திற்கேற்ப மொழியாக்கம் செய்யும் திறனோ அன்றி மொழிப்புலமையோ அநேகருக் கில்லை. யாவுமே நேரடி மொழியாக்கந்தான்)

இன்னுமொரு கடவுள் மறுப்பாளரும், துரதிஷ்ட வசமாக தெய்வப்புலவராக்கப்பட்டவருமான திருவள்ளுவரும் இதே கருத்தையே மொழிந்துள்ளார். (வேதாகமத்தின் [Bible] பழைய ஏற்பாட்டில் காணப்படும் 'சீராக்' ஆகமத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபதிப்புதான் திருக்குறளோ என்கிற ஐயப்பாடும் எனக்குண்டு)

ஒரு பயணக்கட்டுரைக்கு ஏனிந்த முன்னீடு என ஆஸ்திகர்கள் முகஞ்சுழிக்கக்கூடும். கவலையில்லை. அது அவர்கள் பாடு.

நான் மிகவும் நேசிக்கும் யேசுக்கிறிஸ்து என்கிற உன்னதமான மனிதர் வாழ்ந்து, அவர் காலடிகள் பட்ட, அவரது மூச்சுக்காற்று கலந்துலவும், தற்போது மதவெறியர்களால் இரத்த நிலமாக்கப்பட்ட யெருசலேமையும், அதனுடன் தொடர்புபட்ட இடங்களையும் ஒருமுறை தரிசிக்க வேண்டுமென்கிற நீண்டகால ஆசை அண்மையில் நிறைவேறியது.

யேசுவில் எனக்குப்பிடித்தது அவரது போர்க்குணம். வாழ்வியலுக்குப் பொருத்தமற்றுக்காணப்பட்ட யூத சட்டங்களுக் கெதிராக குரல் கொடுத்த அவரது ஆண்மை. (அவரைக் கொலை செய்யுமளவுக்கு கொண்டுசென்ற மிகப்பெரிய காரணமிதுதான்) தன்னையே இறைமகன் என்று சொன்ன துணிவு. நானே உலகின் ஒளி என்று சொன்ன அவரது ஞானம். பிரபஞ்சத்தின் ஊற்றே ஒளி என்கிற மெய்யறிவை உணர்த்திய விதம்.

இயற்கையெனும் நூலைத் திறக்கின்ற போதுதான், பலகோடி ஆண்டுகளூடாகப் பரிணாமக்கதை செந்நீராலும் கண்ணீராலும் எழுதப்பட்டிருப்பதையும், வளர்ச்சியின் உற்பத்தி விதிகளைப் படித்தறியும் போதுதான் கடவுள் அன்பானவர் என்கிற கோட்பாடு எவ்வளவு போலியானது என்பதும் புரியும்.

(பிரபஞ்சமென்கிற உட்பொருளின் அழிவிலா அடித்தளம் 'அணுக்களே' - Molecule- எனப்பேரறிவியலாளர் மெக்ஸ்வெல்' -Maxwel- அறுதியிட்டுக் கூறுவதும் மிகுந்த அவதானிப்புக்குரியது)

வேதாகமத்தின் படி [Bible] முதல் மனிதன் ஆதாமுக்கும் அவன் மனைவி ஏவாளுக்கும் பிறந்த முதலிரண்டு பிள்ளைகளில் மூத்தவனான காயீன் என்பவன் அவனது சகோதரன் ஆபேலைக் கொலை செய்வது சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆக கடவுளின் மூன்றாவது படைப்பு நான்காவது படைப்பைக் கொலை செய்து கொலை வெறியை ஆதியாகமத்திலே தொடக்கிவைத்த அபத்தத்தை என்ன சொல்வது? காரணம் மிக அற்பமானது. இருவரும் செலுத்திய பலியில் ஆபேலின் பலியை மட்டும் இறைவன் ஏற்றுக்கொள்ள, கோபமுற்ற காயீன் ஆபேலைக் கொலை செய்தான். முடிந்தது கதை. (நமது தமிழியக்கங்கள் செய்தது போல ஒரு சூடு. ஒரேயொரு சூடு. செத்தவன் துரோகி, செய்தவன் நியாயவாதி.)



நாசிகளால் யூதக் குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டமையினைக் குறிக்கும் நினைவுத்தூபி

அதன் தொடர் கடலிலும், காற்றிலும், வானத்திலும், ஏன் பூமியிலும் 'கொன்றுதின்' அல்லது 'கொன்று தின்னப்படு' என்பதே விதியாகியுள்ளது. கொலையென்பது மனித வளர்ச்சியின் உச்சமாகிப்போனது. மதத்தை இதற்கொரு 'சிண்'ணமாகச் சேர்த்துக் கொண்டு கடையாடும் ஒரு வித அறிவுமோசடி நிகழுமந்தப் புனித பூமியைக் காணவேண்டுமென்கிற ஆவல்தான் என்னையங்கு இட்டுச் சென்றது.

யேசுவில் எனக்குப்பிடித்தது அவரது போர்க்குணம். வாழ்வியலுக்குப் பொருத்தமற்றுக்காணப்பட்ட யூத சட்டங்களுக் கெதிராக குரல் கொடுத்த அவரது ஆண்மை. (அவரைக் கொலை செய்யுமளவுக்கு கொண்டுசென்ற மிகப்பெரிய காரணமிதுதான்) தன்னையே இறைமகன் என்று சொன்ன துணிவு. நானே உலகின் ஒளி என்று சொன்ன அவரது ஞானம். பிரபஞ்சத்தின் ஊற்றே ஒளி என்கிற மெய்யறிவை உணர்த்திய விதம்.



புனித மரியாளின் உறங்குநிலை திரு உருவச்சிலை - ஜெருசலேம்



புனித மரியாள் திரு உருவச்சிலை - ஜெருசலேம்

அதனுள் நுழையு முன், அதன் சுருக்கமான வரலாற்றுப் பிண்ணனியை யாவது அறிந்திருப்பது நலம்.

**2**


கடவுள் தன் விருப்பத்தையும் செயலையும் மகத்துவத்தையும் மனித இனத்திற்குத் தெரியப்படுத்தும் பொருட்டு, 'ஆபிரகாம்' என்கிற மனிதனை மனிதர் மத்தியிலிருந்து பிரித்தெடுத்து உறுதியான வார்த்தைகளால் அவனுடன் உடன்படிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொண்டு, அவனது சந்ததியைப் பன்னிரண்டு கோத்திரங்களாகப் பெருகச் செய்து, அதைப் பூமியிலே விசேசித்த சனமாகப் பிரித்துப் பாதுகாத்து, "இஸ்ரேல்" என்றதற்குப் பெயர் சூட்டி, அந்தச் சனத்தின் மூலம் அற்புதங்களையும், அடையாளங்களையும், பலத்த செயல்களையும் நடப்பித்தார் அவர்களில் மேன்மையாக விளங்கிய "யூதா" வம்சத்தார் விசேசித்த வர்களாயிருந்தபடியால் அப்பெயரால் அழைக்கப்பட்டவர்களே யூதர் களாவர். (ஆதியாகமம் 12ம் அதிகாரம்)

இந்த இஸ்ரேலியர்கள் கடவுள் சொன்ன பிரகாரம் கானானில் (இஸ்ரேல் அடங்கிய பலஸ்தீனம்) குடியிருந்தவர்கள். பின்னர் அங்கு ஏற்பட்ட பஞ்சத்தால் எகிப்தில் குடியேறி அங்கு அடிமைகளாக 430 வருடம் வாழ்ந்தனர். அவர்கள் கூக்குரல் கடவுள் சமூகத்திற்கு எட்டியதால் அந்தச் சனத்தை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கக் கடவுள் "மோசே" என்பவரைத் தேர்ந்தெடுத்துத் தலைவராக்கி, அவர் மூலம் அற்புதங்களாலும், பலத்த செய்கைகளாலும், அடையாளங்களாலும் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து



ஜெருசலமின் மிகப் பழமையான ஆலயத்தின்
எஞ்சிய பகுதிகள்

விடுதலையாக்க செங்கடலை (Red Sea) இரண்டாகப் பிளந்து ஆறுலட்சம் யூதர்களை கடந்து போகச்செய்தார்". பின்னர் நாற்பது வருடங்களாக வனாந்தரங்களில் யுத்தங்களைச் செய்த அவர்களை வாக்குப்பண்ணிய தேசத்திற்கு வழிநடத்தினார். இவ்வாறு இறைவாக்கின் படி பாலுந்தேனும் வழிந்தோடும் கானான் தேசத்தில் குடியேற்றம் செய்தார். ஆனாலும் இந்த வரலாற்றினுள் தொக்கி

> எந்தவொரு வரலாறும் ஏதாவது பக்கச்சார்பின்றி எழுதப் படுவதில்லையென்பது நம் வாசக அனுபவம். அதற்காக நாம் தூர அலைய வேண்டியதில்லை. நம் இலங்கைச் சரித்திரமே இதற்குச் சான்று. இதற்குப் பெரும்பாலும் அரசியல் காரணங்கள்தான் முன்னிலை வகித்திருக்கின்றன.



பேதுரு யேசுவை மறுதலித்த இடத்தில் அமைந்த ஆலயம்

நிற்கும் மிகச் சூக்குமமான கேள்வியும் அதற்கான பதிலும் கவனிக்கத்தக்கது.

பலஸ்தீனில் பெருன்பான்மை யார்? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் யூதர்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருவரும். தற்போது அரேபியர்கள் (யூதர்களின் தொடர்ச்சியான இடப்பெயர்வுதான் இதன் காரணமே தவிர வேறில்லையென்பது கவனத்திற்குரியது)

**3**

வடக்கே லெபனான், சிரியா எல்லைகளைத் தொட்டு நிற்கும் சினாய் பாலைவெளி, மேற்கே 'பெரிய கடலெ'ன்றும் அழைக்கப்படும். மத்திய தரைக்கடல், கிழக்கே ஜோர்தான் என நான் பயணித்த பல்லாயிரம் கிலோ மீற்றர் தூர இடைவெளியில் நான் சந்தித்த, கேட்டுணர்ந்த, வாசித்தறிந்த அனுபவங்களை எழுத்தில் வடிப்பதென்பது இயலாது என்பதை மனப் பூர்வமாக ஒத்துக் கொள்கிறேன். அதனையும் மீறி அந்த அனுபவத்தை மற்றவருக்கும் பகிர முற்படுவது சுயவிளம்பரமாகத்தான் அமையுமே தவிர வேறில்லை. இலக்கியவாதியென்பவன் தன் வல்லபத்தை அன்றேல் மேதைமையைப் பாலிக்கப் புறப்பட்ட புத்தி ஜீவி என்று காமஞ் செப்புவதில் எனக்கு ஒப்பில்லை.

அந்த ஜெருசலேமென்கிற மையப்புள்ளியைப் பிண்ணனியாகக் கொண்டு நிகழ்ந்தவை, நிகழ்பவை வேறொன்றுமல்ல. தனித்துவமான இரண்டு மதங்களின் வலுவான முரண்பாட்டுப் பிண்ணனியில், திறமை மிக்க அரசியல் வாதிகளால் எடுத்தாளப்படும் மக்களின் மத உணர்வு சார்ந்ததொரு பிரச்சினை.

மத்திய கிழக்கில் எண்ணெய் பெருக்கெடுக்குகிறதோ இல்லையோ, பாலஸ்தீனத்திலும், இஸ்ரேலிலும் பெருக் கெடுத்தோடுவது இரத்தமே. எனவே பிரச்சினைகளின் மையமான யெருசலேமை இனியும் புனித பூமி எனக் குறிப்பிடுவதைத் தவிர்க்கிறேன்.

மதம் என்பது வேறொன்றுமில்லை. மனிதனுக்கு அச்ச உணர்வை ஊட்டி, அதன் மூலம் அதிகார, பொருளாதார நலமடைய நன்கு திட்டமிட்ட ஒரு குழுவால்/ தனிநபரால் உருவாக்கப்பட்டதொன்றே தவிர வேறல்ல.

மதம் என்பதற்கு உன்மத்தம், வெறி, (விசர்), என்றெல்லாம் அர்த்தமுண்டு. "அல்லாஹ்" வின் பெயரால் காமாஸ் போன்ற இயக்கங்களின் அட்டூழியம், (முகம்மது நபி, கலீபாக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமர்கள் என்றுமே பிறமதத்தை மதித்தவர்கள்) புனித 'தோரா'வின் பெயரால் யூதர்கள் புரிந்த கொலைகளும், யேசுவின் பெயரால் சிலுவைப் போர்களும், இந்துமத வெறியர்களால், பாபர் மசூதி உடைப்பும், பௌத்தமத வெறியர்களால் தம்புள்ள மசூதி உடைப்பும் இதற்குச் சில உதாரணங்களாகும்.

இதற்கெல்லாம் வசதியாக கடவுள், தேவர், ஆன்மா, சொர்க்கம், நரகம் ஆகியவற்றின் இருப்பை ஒட்டுமொத்தமாக நிராகரித்த புத்தர் கூட கடவுளாகிப் போன கொடுமையும் நம்முள் நிகழ்ந்துள்ளது. யேசுவும் நபியும் தோன்றுவதற்கு முன்னரே தோன்றிய புத்தர் கூறாத போதனைகளையா இவர்கள் சொல்லியிருப்பார்கள்.

Rely - சார்ந்திரு என்னும் சொல்லைப் பகுதியாகக் கொண்ட - Religion- மதம் என்னும் பதம் பௌத்தத்திற்குப் பொருந்தாது. அமைதல், உருவாக்கல் அல்லது சமைதல் என்பதைப் பகுதியாகக் கொண்ட சமயம் என்பதே பௌத்தத்திற்குப் பொருந்தும்.

**4**

எந்தவொரு வரலாறும் ஏதாவது பக்கச்சார்பின்றி எழுதப் படுவதில்லையென்பது நம் வாசக அனுபவம். அதற்காக நாம் தூர அலைய வேண்டியதில்லை. நம் இலங்கைச் சரித்திரமே இதற்குச் சான்று.இதற்குப் பெரும்பாலும் அரசியல் காரணங்கள்தான் முன்னிலை வகித்திருக்கின்றன.



இரத்த நிலம்- யூதாஸ் காரியோத் இயேசுவை காட்டிக் கொடுத்து பெற்ற 30 வெள்ளிக்காசுக்கு வாங்கிய நிலம்

இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகியவற்றிற்கிடையே அடிக்கடி மாறி மாறிப் பயணஞ்செய்ய வேண்டியேற்பட்டதால், இவ்வாறான திரிபுக்கதைகளை நிறையவே கேட்கவேண்டி நேரிட்டது.

1917ல் திடீரென ஒருநாள் அப்பிரதேசத்தை ஆண்டுவந்த பிரிட்டிஷ்காரர்கள் பலஸ்தீனத்தைக் கூறு போட்டு ஒரு பகுதிக்கு இஸ்ரேல் எனப்பெயரிட்டனர். பிறகென்ன போர்தான். கொலைதான், அழிவுதான். 1948.05.14ல் இஸ்ரேல் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட அடுத்த நாள் அது பலஸ்தீனப் போராளிக்குழு, எகிப்து, சிரியா,ஜோர்தான், லெபனான், ஈராக், ஆகிவற்றுடன் போரிடவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டாலும், தனித்து நின்று போராடி ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. எப்படி...? ஜோர்தான் படைமுன்னேறிய மேற்குக்கரை ஜோர்தானுக்கும் எகிப்து முன்னேறிய காஸா பகுதி எகிப்துக்கும் என்றானது. ஆனால் அதன்பின் 1973 வரை நடைபெற்ற ஐந்து யுத்தங்களிலும் அபிப்பிராயங்கள் தோற்றுப்போனது மட்டுமன்றி மேற்குக்கரை, காஸா நிலப்பகுதி என்பவற்றோடு யோர்தான்



வாக்குத்தத்தத்தின் பேழை பிலிஸ்தியர்களினால் யூதேயாவிற்கு மீண்டும் அனுப்பப்பட்ட எல்லையில் அமைந்த பிரமாண்டமான ஆலய முகத்தோற்றம்

மேலதிகமாய் பிடித்து வைத்திருந்த கிழக்கு யெருசலேமையும் இழக்க நேரிட்டது. இடைப்பட்ட இந்த இருபத்தைந்து வருட காலத்தில் எகிப்தோ, ஜோர்தானோ தாங்கள் பிடித்து வைத்திருந்த பகுதிகளை பலஸ்தீனியர்களுக்கு கொடுக்கவில்லை. கொடுக்க விரும்பவுமில்லை. இது எத்தனை பெரிய அரசியல் மோசடியென்பதைப் பாவப்பட்ட பலஸ்தீனியர்கள் இன்னும் உணரவில்லையென்பது கண்கூடு.

இலங்கையில் தம் கண்ணெதிரே தமிழ் சகோதரர்கள் பட்ட வரலாற்றுச் சோகத்துக்குக் குரல் கொடுக்காத நம் இஸ்லாமிய சகோதரர்கள், கண்ணுக்குப் புலப்படாத பலஸ்தீனியர்ளுக்காகக் குரல் கொடுப்பதை அரசியல் கோமாளித்தனம் என்றுதானே சொல்லத்தோணுகிறது. இதன் பின்னணியில் உள்ள அந்நிய அரசியலின் ஆதிக்கத்தை நம்மவர்கள் புரிந்து கொள்ளவில்லை. கூட்டிக்கழித்துப்பார்த்தால் இங்கும் எஞ்சியிருப்பது மதவுணர்வு மட்டுந்தான். இவர்கள் வெறும் அம்புதான்.

இந்த முடிவற்ற வரலாறு ஒரு புறமிருக்க, பயணத்தி னுள் கொஞ்சம் நுழைவோம்.

**5**

இஸ்ரேலுக்கு நேரடியாக விசா எடுப்பதெல்லாம் பெரும் சிரமம். அத்தனை கெடுபிடி ஆயிரக்கணக்கான வருடங்களாகப் போராடிப்பெற்ற பூமியல்லவா! எனவே எனக்குக் கிட்டிய உல்லாசப் பயணி விசாவின் படி நான் ஜோர்தானூடாகத் தரை வழி செல்லவேண்டும். அதுவும் ஒருவசதிதான். ஏனெனில் ஒரே விசாவில் ஜோர்தானையும் கொஞ்சம் பார்க்க முடியுமல்லவா.

'அம்மானில்' தரையிறங்கி ஜோர்தான் ஊடாக இரண்டு மணிநேரப் பயணஞ் செய்துதான் இஸ்ரேலின் கிழக்கு வாயில்களிலொன்றான HUSIEN BRIDGE ஐ தாண்டவேண்டும். இவ்வாறு ஜோர்தான் வழியாக இஸ்ரேலுக்குள் நுழைய மேலுமிரண்டு வாயில்கள் உள்ளன. ஒன்று ALAN By[பிரித்தானியருடனான போரில் சாகசங்கள் செய்து மரணமெய்தியவர்] அடுத்தது தென்கிழக்கு வாசலான ARAVA BORDER. இப்பகுதியினூடாக அனுமதி கிடைப்பது அபூர்வம்.

இந்த ஜோர்தான் கி.மு 4ம் நூற்றாண்டில் கிரேக்கர்களால் 'பிலடெல்லியா' எனப் பெயரிடப்பட்டிருந்தது. 1946ம் ஆண்டில்தான்இது புதிய ஜோர்தான் எனப்பெயர் கொண்டது. ஒன்பது மலைகளின் மேல் கட்டப்பட்ட நகரம் என்ற சிறப்பும் இதற்குண்டு. இஸ்ரேலின் கிழக்குத் தெற்காகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்துகிடக்கும் ஒரு பெருநிலப்பரப்பு.

இவ்வாறு ஜோர்தான் பள்ளத்தாக்கை அண்மித்த போதுதான் நானதனைப்பார்த்தேன். சுமார் 400-500 மீற்றர் பள்ளத்தில் ஜோர்தான் நதி ஓடிக்கொண்டிருந்தது. சிறுவயதில் என் வேதாகம [Bible] வாசிப்பின் போது மனதில் பதிந்து கிடந்த அந்த நதிவேறு. நான் கண்ட நதி வேறு. எங்கள் கொட்டியாரக்குடாவில் (திருகோணமலைக்கடல்) சங்கமிக்கும் மகாவலி கங்கையின் பிரவாகம் போலிருக்குமென முதலில் எண்ணியிருந்த எனக்கு ஏமாற்றமே.

பிடித்துப் பிடித்து வைத்தது போல் ஒவ்வொரு மலைக்குன்றும், மலை நெடுக இயற்கையாயமைந்த குகைகளென்று ஒவ்வொரு கோணத்திலும் புதிய புதிய பரிமாணங்களைத் தொட்டு நின்ற அவை என் கண்களுக்குக் கிடைத்த பெரு விருந்து. தன்னிச்சையாக எனது நிழற்படக்கருவி இயங்கிய வண்ணமேயிருந்தது. எதைப்படம் பிடிப்பது....... எதை விடுவது...... என்ற இனம்புரியாத குழப்பம்.

இத்தனை கரடுமுரடான பூமியைத் தரிசிப்பேனென்று நான் முதலில் எண்ணியதேயில்லை. மலையும், மணற்திட்டுக களும், வெம்மையும், வெறுமையும் சர்வத்திலும் ஆட்சி செலுத்தியது. வேதாகமத்தில் வரும் செம்மறியாட்டையோ அன்றி மேய்ப்பர்களையோ காணப்பேராவலாயிருந்தது. வழிகாட்டியிடம் -Guide- கேட்டபோது, மலைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வாருங்கள் தென்படுமென்றான். அவ்வாறு கண்டேன். வெகுதூரத்தில் சிறு சிறு புள்ளிகளாய் செம்மறியாடுகளையும் இடையர்களையும் மரங்களென்று ஏதுமில்லையங்கு. ஆனால் ஆடுகளுக்கு மட்டும் புலப்படும் பூண்டுகள்தானெங்கும்.

இந்த அரேபியர்களும் யூதர்களும் ஏனித்தனை கரடுமுரடானவர்களாயும் ஈவிரக்கமற்றவர்களாயிமிருக்கின் றார்களென்ற ரகசியம் அந்த மண்ணைப் பார்த்த பின்னர்தான் புரியவந்தது. ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் மண்சார்ந்த உணர்வுகளுடன் வாழவேண்டிய நிர்ப்பந்தம் அவ்வாறாக்கியி ருக்கிருக்கிறதென்று எனக்கப்போதுதான் புரிந்தது. வாழ்வுக்குப் போராட வேண்டிய சூழ்நிலை அவனை அவ்வாறாக்கியி ருக்கிறது.

HUSEIN BAYயில் இறங்கிய எனக்கு நினைவுக்கு வந்தது நம் ஓமந்தைச் சோதனை சாவடிதான். அதனை விட இறுக்கமும் கெடுபிடியும். ஆனால் ஜோர்தான் பகுதியில் பார்த்த மலைக்குன்றுகள் போலல்லாது இந்த எல்லையோ ஏதோவொரு வித ஒழுங்கமைப்பில் மனிதர்கள் செதுக்கிவைத்தது போல் காணப்பட்டன. அப்பிரதேசத்தை நிழற்படமெடுக்க அனுமதி மறுத்துவிட்டார்கள்.


இஸ்ரேல் எல்லையில் நவீன சோதனைக் கருவிகள் மூலம், எவரையும் துன்புறுத்தாது சோதனைகள் செய்ததுதான் அதன் சிறப்பு. ஒரு கேள்வி கிடையாது. எல்லாமே ஒரு வினாடி "எக்ஸ்ரே பார்வையோடு முடிந்து விடும். கடவுச்சீட்டுகளில் எதனையும் எழுதமாட்டார்கள். மாறாக, சோதனை செய்ததற் கான ஒரு அத்தாட்சி மட்டுமே. சோதனைகள் முடிந்து வண்டியில் அமர்ந்திருந்த போது இன்னுமொன்றைக் கண்டேன். வேறென்ன, நமது ஊர்க்குருவிகள்தான். அருகில் சென்று பார்த்தேன். ஒரேயொரு வித்தியாசம். அவை அளவில் சிறியதாயி ருந்தன. பின்னர் கண்ணை மூக்கைப் பார்த்து அவற்றை நிழல்படம் எடுத்துக்கொண்டேன்.

இந்த எல்லைகளின் மட்டில் ஒரேயொரு சிரமம். இஸ்ரேல் பலஸ்தீனம், பலஸ்தீனம் இஸ்ரேல் என எல்லை களூடாக மாறி மாறிப் பயணஞ்செய்ய நேர்ந்ததால், அடிக்கடி வழிகாட்டிகள் மாறிக்கொண்டேயிருப்பார்கள். (ஒருவரது எல்லைக்குள் அடுத்தவர் நுழையமாட்டார்). இதனால் தொடரான சில உண்மைத் தகவல்களை பெறுவது கடினமாயிருந்தது. அவரவர் தங்கள் தகவல்கள் மீது சார்பு நிலை கொண்டிருந்ததால் முரண்பாடுகளைக் காணக் கூடியதாகவிருந்தது. தங்குமிடங்க ளுக்கு (பிரமாண்டமான ஹோட்டல்கள்) வந்து அவற்றைப் புடைத்தெடுக்கப் பெரும் பாடாகிவிடும். ஆகவே நான் வழிகாட்டிகளின் தகவல்களை அரைகுறையாகச் செவிமடுத்த வாறு அந்த மண்ணை, அதன் வித்தியாசமான வடிவமைப்பை ரசித்துக் கொண்டே என் நிழற்படக்கருவிக்குள் தேவையானதைத் திணித்துக் கொள்வேன்.

அப்போது நாங்கள் கலிலேயாவுக்குள் நுழைந்து கொண்டிருந்தோம். பாரிய வீதியமைப்பு, மலைகளைத்தகர்த்து விட்டு அகன்ற நெடுஞ்சாலைகள்தானெங்கும். மிகவும் தூரத்தில்தான் குன்றுகள் தென்பட்டன. ஏனைய நிலப்பரப்பில் நிறைந்து கிடந்தது விவசாயமே. சிறு சிறு பண்ணைகளாக நிலங்களை வகுத்துக்கொண்டு பாரியளவில் பயிர்ச்செய்கை. இவ்வாறு, உழைப்பினால் மனிதர்கள் வசமாகிப்போன அந்தக் கலிலேயப் பாலைநிலப் பகுதியின் முதற் தரிசனம் கிட்டுகின்றது.

22 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணமும், ஏழரை மில்லியன் சனத்தொகையும், 60% வனாந்தரமும் 40% பசுமையும் கலந்த அடுத்த கட்டத்துள் சுமார் முப்பது நிமிடப்பயணத்தின் பின் நுழைகிறோம். குருநாகல் பகுதிகளில் காணப்படும் தென்னந்தோட்டங்களைப் போன்று பாளைவிரிந்த பாரிய பேரீச்சைத் தோட்டங்கள், வான்கோழிப்பண்ணைகள், மரக்கறி வகைகள், தோடை, குட்டையான வாழையென யூதர்கள் தங்கள் கைவண்ணத்தை காட்டி வைத்திருக்கிறார் கள். பலஸ்தீனியர்களின் சிறிய பங்களிப்பும் இதில் இருந்தது காணக்கூடியதாயிருந்தது. ஹய்பா (HAIFA) வை நோக்கிச் செல்லும் வழியில் -YIZREEL VALLEY- யிஸ்ரீல் பள்ளத்தாக்கு விவசாயத்தின் உச்சமாக காணப்பட்டது.

பச்சை வீட்டு மரக்கறி வகை, CUCUMBER WATER MELON, தோடை என ஏற்றுமதிப் பயிர்கள் மறுபுறம், சொட்டு நீர்ப்பாசன முறைதானெங்கும். DRY ERRIGATION SYSTEM- அக்காலங்களில் இங்கெல்லாம் யூதர்களும் பலஸ்தீனியர்களும் எவ்வளவு கடுமையான வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக யூதர்கள் மனித உழைப்பை எங்கும் பச்சையாய் விதைத்து விட, ஆங்காங்கே



இயேசுவின் மிகப்பிரசித்தமான மலைப்பிரசங்கம் நிகழ்ந்த இடத்தில் அமைந்துள்ள எண்கோண ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீனியர்கள் மலைகளில் ஆடுமேய்த்துக் கொண்டு நின்றார்கள்.

அதையுங்கொஞ்சம் தாண்டினால் நமது நெல்வயல்களைப் போல் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கோதுமை வயல்கள்தான். இவையெல்லாம் எவ்வாறு இவர்களுக்கு மட்டும் சாத்தியமாகிறது? இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கோத்திரமே தாங்களென்கிற இறுமாப்புதான் இதையெல்லாம் செயவிக்கிறதோ என்னவோ. அரிசியையும் மாட்டிறைச்சியையும் தவிர அனைத்தும் அங்கு கிடைக்கும்.

நகரமென்று நான் முதலில் தரிசித்தது, பலஸ்தீன அதிகாரச் சபைக்குள் அடங்கும் (பெயருக்குத்தான் பலஸ்தீன அதிகாரச் சபையே தவிர அதிகாரமெல்லாம் இஸ்ரேலிடந்தான்). கலிலேயாவிற்கு உட்பட்ட திபேரியஸ் நகரம், யேசு அதிகம் வாழ்ந்து பணிசெய்த "கப்பர் நா உம்", அவர் வளர்ந்த "நசரெத்" உருமாற்றம்

நகரமென்று நான் முதலில் தரிசித்தது, பலஸ்தீன அதிகாரச்சபைக்குள் அடங்கும் (பெயருக்குத்தான் பலஸ்தீன அதிகாரச்சபையே தவிர அதிகாரமெல்லாம் இஸ்ரேலிடந்தான்). கலிலேயாவிற்கு உட்பட்ட திபேரியஸ் நகரம், யேசு அதிகம் வாழ்ந்து பணிசெய்த "கப்பர் நா உம்", அவர் வளர்ந்த "நசரெத்" உருமாற்றம் நிகழ்ந்த தபோர் மலை, அவரது மிகப்பிரசித்த மான மலைப் பிரசங்கம் (MOUNT SERON) நிகழ்ந்த பகுதிகள், ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பலுகச்செய்து ஐயாயிரம் பேருக்குப பகிர்ந்தளித்த கடலோரம், எல்லாமே அப்பிராந்தியத்தையொட்டி அமைந்தவையே.

நிகழ்ந்த "தபோர்" மலை, அவரது மிகப்பிரசித்த மான மலைப் பிரசங்கம் (MOUNT SERON) நிகழ்ந்த பகுதிகள், ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பலுகச்செய்து ஐயாயிரம் பேருக்குப பகிர்ந்தளித்த கடலோரம், எல்லாமே அப்பிராந்தியத்தையொட்டி அமைந்தவையே.

மலைப்பிரசங்கத்தின் எட்டுப்பேறுகளையும் நினைவுறுத்தும் வகையில் வடிமைக்கப்பட்ட எண்கோண ஆலயம் மிகப்பிரசித்தம்.

இதனருகில் TSUBKA என்ற இடத்தில் உரோமர்களுக்குப் பின் வந்த "பைசான்டியர்கள்" (BISENTINES) (கிறிஸ்தவர்கள்) 1600களில் நிர்மாணித்த பிரபலமான "மீனும் கூடையும்" என்கிற மொசைக் சித்திரம் காணப்படுகிறது.

யேசு புயலையடக்கிய , அநேக தடவைகளில் படகிலிருந்தவாறே போதனைகள் செய்த அந்தக் கலிலேயக் கடலில் பயணஞ் செய்த போது திபேரியஸ் நகரின் முழு அழகையும் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. தீப்பெட்டிகளை மலைகளின் மேல் அடுக்கிவைத்தாற் போல் மாடிவீடுகள் எங்கும்.பாலை நிலத்தில் மனிதராய் நிகழ்த்தப்பட்ட அதிசயம் போல்தான் என் மனதிற்குட்பட்டது.

கலிலேய கடல் உண்மையில் நமது கடல்களைப்போல் உப்புக்கடலல்ல. மலைகள் சூழ்ந்த மிகப்பரந்த நன்னீர் ஏரி. இஸ்ரேலின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வது இதுதான்.

இதன்பின்னர் நான் கண்டதுதான் பலஸ்தீனப் பிரச்சினையின் மையப்புள்ளியான யெருசலேம் நகரம். நகரினுள், விசேடமாய் இதனைச் சூழவுள்ள சங்கதிகளை அறிந்து கொண்டு பிரவேசிப்பது வசதியாயிருக்கும்.

## 6

யெருசலேமின் அமைவிடம் யூதர்களின் பிரதேசமான யூதேயா, இங்குதான் ஹெப்ரோன், பெர்ஷெவா, ஜெரிக்கா, ரம்லா (யசீர் அரபாத் வாழ்ந்த இடம்) போன்ற முக்கிய நகரங்கள் இருக்கின்றன. யேசு பிறப்பெய்திய "பெத்லேகம்" நகரும் இங்குதான். யேசு கலிலேயர் என அழைக்கப்பட்டாலும், அவரது பிறப்பு யூதேயாவில்தான்.

புவியியல் மட்டத்தில் யெருசலேமின் முக்கியத்துவம் அபரிமிதமானது. மிகவுயரத்தில் உலகத்தின் மையத்தில் அமைந்திருப்பதுதான் அது. உலகை எப்பகுதியிலிருந்து அளவிட்டாலும், அதன் மையத்திலிருப்பது யெருசலேம்தான். இந்த

புவியியல் மட்டத்தில் யெருசலேமின் முக்கியத்துவம் அபரிமிதமானது. மிகவுயரத்தில் உலகத்தின் மையத்தில் அமைந்திருப்பதுதான் அது. உலகை எப்பகுதியிலிருந்து அளவிட்டாலும், அதன் மையத்திலிருப்பது யெருசலேம்தான். இந்த உலகத்தின் மையத்தில்தான் யேசு பிறந்தார் என்பதும் கவனத்திற்குரியது. இந்த யெருசலேமில் யூதர்களும் வாழ்கிறார்கள். பலஸ்தீனியர்களும் வாழ்கிறார்கள். ஆனால் ஒருவருக்கொரு வர் பகையோடும் விரோதத்தோடும் வாழ்வதுதான் அதன் துரதிஸ்டம்.

உலகத்தின் மையத்தில்தான் யேசு பிறந்தார் என்பதும் கவனத்திற்குரியது.

இந்த யெருசலேமில் யூதர்களும் வாழ்கிறார்கள். பலஸ்தீனியர்களும் வாழ்கிறார்கள். ஆனால் ஒருவருக்கொரு வர் பகையோடும் விரோதத்தோடும் வாழ்வதுதான் அதன் துரதிஸ்டம்.

**யெருசலேம் என்றவுடன் அனைவரின் நினைவுக்கு வருவது, அது ஒரு புனித பூமி என்பது மட்டுமே. யூதர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அவ்வாறே. ஆனாலங்கு புனிதமுமில்லை, புண்ணியமில்லை யென்பதே உண்மை.**

யூதர்களின் புனித ஸ்தலமாக (கி.மு) சொலமன் ராஜா (King Solomon) முதல் ஆலயத்தைக் கட்டினார். வருடத்திற்கு ஒரு முறை மூன்று பண்டிகைகள் கொண்டாடி, பொருத்தனைகளின் காணிக்கைகளைச் செலுத்த யூதர்கள் அங்கு வருவார்கள். யெருசலேம் தமக்கெனக் கடவுளால் கொடுக்கப்பட்ட நித்தியஸ்தலம் என அவர்கள் நம்புகிறார்கள்.

இஸ்லாமியர்கள், மெக்கா, மதினா ஆகியவற்றுக்கடுத்து தமது மூன்றாவது முக்கிய ஸ்தலமாக யெருசலேமைக் கருதுகிறார்கள். இங்கிருந்துதான் முகம்மது நபியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்சத்துக்குச் சென்று வந்தார் என்பது அவர்களின் நம்பிக்கை.

யெருசலேமில் மொத்தமாக மூன்று யூத ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தன. சாலமோன் கட்டிய பிரமாண்டமான ஆலயம் கி.மு. 607ல் பபிலோனை (ஈராக்) ஆண்ட அரசன் 'நெபுகாத்நேச்சர்' என்பவனால் இடிக்கப்பட்டு, யூதர்களைச் சிறைபிடித்துச் சென்றான்.70 ஆண்டுகளின் பின்னர் மீண்டு வந்த யூதர் இடிக்கப்பட்ட முதல் ஆலயத்தை தேவமனிதனான 'நெகேமியா' என்பவனைக்கொண்டு கட்டுவித்தனர். பின்னர் அதுவும் இல்லாமற் போயிற்று.

மூன்றாவது ஆலயத்தை ஏரோது (HEROD) மன்னன் கட்டுவித்தான். மிக நீண்ட காலமெடுத்தது இதற்கு. இயேசுவின் காலத்திலிருந்த ஆலயமும் இதுதான். ஒரு சந்தர்ப்பத்தில் அவர்தன் சீடர்களிடம் 'கல்லின் மேல் கல் இராதபடி இந்த ஆலயம் இடிக்கப்படும்' (மத்தேயு 24:1,2) என்று தீர்க்கதரிசனம் உரைத்ததும் இதையொட்டித்தான். அதன்படி கி.பி. 70ம் ஆண்டு ரோமப் பேரரசன் 'தீத்து' (TITUS) வால் இவ்வாலயம் இடிக்கப்பட்டது. அதன்பின்னர் அதே ஆலயமிருந்த இடத்தில்



பாலஸ்தீனிய மாணவிகள்

முஸ்லிம்களின் (DOM OF THE ROCK) மசூதியும், அல்அக்ஸா மசூதியும் கட்டப்பட்டுள்ளது.

நபியோ, கலீபாக்களோ, உமர்களோ அல்ல, அவர்களுக்கு பின்வந்த சுல்தான்கள்தான் மதவெறியை அங்கு விதைத்தார்கள். மதத்தின் பெயரால் நிகழ்ந்த இன்னொரு கொடுமையைப்பாருங்கள். யெருசலேத்துக்கான சிலுவைப் போரைத் தொடங்கிய பாப்பாண்டவர்கள்

அ) சிலுவைப் போரில் பங்கேற்கும் அனைவரின் பாவங்களும் மன்னிக்கப்படும்.

ஆ) இப்போரில் உயிரிழக்கும் அனைவரும் மோட்சம் செல்வார்கள் என அறிக்கையிட்டார்.

பகுத்தறியக் கூடியவர்கள் இதன் சாராம்சத்தைப் புரிந்து கொள்க. கிட்டத்திட்ட தங்களைக் கடவுளர்களாகவே சிருஷ்டித்துப் புரிந்த அட்டூழியங்களின் வரிசையில் இதுவுமொன்று.

ஆராய்ச்சியென்கிற பெயரில் மசூதியைச் சுற்றி அகழ்வு வேலைகள் நடந்தேறி மசூதியின் ஸ்திரத்தன்மையைக் கேள்விக்குள்ளாகியுமுள்ளது இஸ்ரேல் அரசு.

எனது பயணத்தின் அடுத்த இலக்காகவிருந்தது ஜோர்தான் நதி. யேசு திருமுழுக்கு (ஞானஸ் நானம்) பெற்ற இடம். அந்த நதியில் இறங்கப் போகிறேன் என்கிற பரவசத்தில் நான் பிரயாணஞ் செய்த தூரமோ, வழியில் தோன்றிய காட்சிகளோ என்னைப் பாதிக்கவில்லை. கிட்டத்தட்ட மன்னாருக்கு நுழையுமுன் பயணிப்போமே ஒரு பிரதேசம், அதே மாதிரித்தான் அந்த அமைவிடமும் பாதையின் இரு மருங்கிலும் 'கண்ணிவெடி கவனம்' என்ற அறிவித்தல்கள்.

ஐம்பது மீற்றர் அகலமான ஒரு நதியை கொங்றீட் தூண்களால் இரண்டாகப் பிரித்துள்ள கொடுமையை அங்குதான் கண்டேன். நாங்கள் நின்ற பகுதியில் இஸ்ரேல் ராணுவம். எதிர்க் கரையில் ஜோர்தானிய ராணுவம். எப்போதும் தயாரென்று நிலையெடுத்த வண்ணம் இருவரும், துப்பாக்கியின் விசையை அழுத்த வேண்டியதுதான் பாக்கி. தண்ணீரிலும் பற்றி எரியக்கூடியளவுக்குப் பகை. எனக்கும் கொஞ்சம் யோசனைதான். இருந்தும் முப்பது வருட அனுபவம் என்னை வழி நடத்திற்று. நானும் யோர்தான் நதியில் மூழ்கியெழுந்தேன். எத்தனை விதமான சடங்கு முறைகள் பலர் இசைக் கருவிகளுடன் பாடி அந்தத் திருமுழுக்கை அனுபவித்த விதமே தனி.


அடுத்த என் பயணம் சாக்கடலை (DEAD SEA) நோக்கியது. ஜோர்தான் சமவெளி கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து தூர ஆசியா வரை (FAR ASIA) வரை நீண்டு செல்லும் ஓர் பரந்த நிலப்பரப்பு. இந்தப் பகுதியூடாக பலஸ்தீனத்துக்குட்பட்ட ஜெரிக்கோவை அண்மித்த போது தமிழர் பகுதிகளின் நினைவுகள்தான் எனக்கு வந்தன. துப்பாக்கி ரவைகள் துளைத்த கட்டடங்கள். சிதைந்த போராளிகளின் பங்கர்கள். தலையிழந்த பேரீச்சை மரங்களென்று. ஒரு நீண்ட தூரத்திற்கு மாறி மாறி இதே காட்சிகள்தான். இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலிருந்த பெரிய இடைவெளி அப்போதுதான் எனக்குப் புலப்பட்டது. அடுத்தது எனது பயணத்தில் இங்குதான் பெண்களைக் கண்டேன். செம்மறியாடுகளை மேய்த்துக் கொண்டு நின்ற அவர்களின் முகபாவங்களிலிருந்து எதையுமே அறியமுடியாதிருந்தது. ஆனால் அவர்கள் உடலில் வறுமையை மட்டும் என்னால் அவதானிக்கமுடிந்தது.

கடல் மட்டத்திலிருந்து 420' கீழ் நோக்கி அமைந்திருப் பதுதான் சாக்கடல். உலகின் மிக தாழ்ந்த நிலப்பகுதியும் இதுதான். கனியங்கள் நிறைந்த இந்தக் கடலின் அதீத உப்புக் காரணமாக உயிரினங்கள் வாழ்வதில்லை. நீரில் நீந்தத் தேவையேயில்லை.

கடல் மட்டத்திலிருந்து 420' கீழ் நோக்கி அமைந்திருப் பதுதான் சாக்கடல். உலகின் மிக தாழ்ந்த நிலப்பகுதியும் இதுதான். கனியங்கள் நிறைந்த இந்தக் கடலின் அதீத உப்புக் காரணமாக உயிரினங்கள் வாழ்வதில்லை. நீரில் நீந்தத் தேவையேயில்லை. இறங்கி நின்றால், நீரினுள் அமிழ்த்திவிட்ட பந்தைப் போல மேலே வருவோம். அத்தனை அடர்த்தி கொண்ட கடல் அது. மல்லாக்கப்படுத்துக் கொண்டு புத்தகம் வாசிக்கலாமென்றால் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழுகையின் சுவர் - ஜெருசலேம்

இறங்கி நின்றால், நீரினுள் அமிழ்த்திவிட்ட பந்தைப் போல மேலே வருவோம். அத்தனை அடர்த்தி கொண்ட கடல் அது. மல்லாக்கப்படுத்துக் கொண்டு புத்தகம் வாசிக்கலாமென்றால் பாருங்கள்.

அடுத்து 'மோரிய' மலைக்கான பயணம். இந்த மோரிய மலைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டாலும், அதிலிருந்து வடித்தெடுத்த ஒரு சிறு பகுதியை மாத்திரம் தரக் கூடியதாயுள்ளது.

கடவுள் ஒவ்வொன்றாகப் படைத்துக் கொண்டு வரும் போது கல்லையும் படைத்தாராம். அவர் படைத்த அந்த முதல்கல் இந்த மோரிய மலையில்தான் போடப்பட்டதாம்.(அவர் படைத்த அந்தக் கல்தான் மலையானதோ அன்றில் மலையின் மேல் இந்தக் கல்லை போட்டாரோ தெரியாது. விளக்கம் தெளிவில்லாதிருந்தது. கல்லினால் மலையான தென்றல் அதுதானே முதற்கல்.அது என்ன இன்னொரு கல்...?)

உண்மையில் பழைய நகரம் புதையுண்டு போக அதன் மேல் கட்டப்பட்ட புதிய நகராங்களிலொன்று இந்த மோரிய மலையிலுண்டு. ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கைப் பலி கொடுத்ததும் இந்த மலையில்தான்.

எங்கள் பயணத்தோடு சம்மந்தப்படாத ஒரு இடத்தைச் சந்திக்க நேர்ந்தது வழியில் அதுதான், HOLOCAUST MUSEUM - அனர்த்தங்களின் அருங்காட்சியகம். இரண்டாம் உலகப் போரின் போது (1933-1945) ஹிட்லரால் கொல்லப்பட்ட ஆறு மில்லியன் யூதர்களில், ஒன்றரை மில்லியன் குழந்தைகளின் நினைவாக ஏற்படுத்தப்பட்ட ஒரு நினைவிடம். (குறிப்பாக போலந்தின் Auschwitz, SOBITOR, TREBLINKA, MAIDANEL, ஜேர்மனியின் BELSEN, BUCHENWALD, DACHAV போன்ற கொலைக்களங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை )

இந்த நினைவாலயத்தை ஐரோப்பிய நாடொன்றில் வாழும் யூதத் தனவந்தரொருவர் தன் மகன் பெயரால் நிறுவியுள்ளார். அப்படியெனில் அவர் எவ்வாறு உயிர்தப்பினார் என்று கேட்கலாம். அந்த வேளைகளில் குடும்பமாய் இறப்பதை விட குடும்பத்தில் யாராவது உயிர் தப்பி வாழவேண்டு மென்பதற்காக குடும்ப அங்கத்தவரை வேறு வேறு இடங்களில் கைவிட்டு சிதறிப்போனார்கள். அதே வேளை ஜெர்மனியில் நல்லிதயம் படைத்த சிலர் யூதர்களை தங்கள் பண்ணைகளில் வேலைக்கமர்த்தி அவர்கள் உயிர்களைக் காப்பாற்றினார்கள்.

அவ்வாறு தப்பிப் பிழைத்த ஒருவரால் கட்டப்பட்டதே இந்த இடம். உள் நுழைந்தால் ஒரே இருட்டு மயமான அமைதி. சுமார் நானூறு மீற்றர் தூரத்திற்கு வளைந்து நெளிந்து செல்ல வேண்டும். ஒரேயொரு மெழுகு திரியின் ஒளி நாம் செல்லுமிடமெங்கும் ஆயிரம் நட்சத்திர விம்பங்களாகத் தெரியத்தக்கவாறு கண்ணாடியால் வடிமைக்கப்பட்டுள்ளது. சிறிது நடந்தால் கண்கள் பழகிவிடும். சன்னமாக இறந்த (கொலையுண்ட) குழந்தைகளின் பெயர்கள் வாசிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும். இவ்வாறு ஒரு குழந்தையின் பெயர் மீண்டும் வருவதற்கு பல வருடங்கள் செல்லுமாம்.

அது மட்டுமல்ல அந்த வளாகத்தையே ஒரே மரத்தோட்டமாக்கி, தங்களைக் காப்பாற்றிய ஜெர்மன் மக்களது பெயர்களை ஒவ்வொரு மரத்துக்குமிட்டு, அவர்கள் விலாசங்களைக் கூட பதிவு செய்து வைத்துள்ளார்கள். அந்த நிலையத்துள் சென்று வந்த பின்னர் எதிலுமே ஈடுபட நாட்டமில்லாது போனது. அந்தளவுக்கு நமது நெஞ்சை உலுக்கியதென்றால் யூதர்களைக் கேட்கவா வேண்டும். அவர்களது ஒவ்வொரு காரியமும் மிகவும் திட்டமிட்டுச் செயற்படுவது கவனத்திற்குரியது.

இவ்வாறு பார்த்த இடங்களின் பட்டியலில் ஆலயங்களே அடங்குவதால் அதனை விடுத்து எனது புலனுக்குப்பட்ட சில அபூர்வ விடயங்களைப் பற்றி எழுதலாமென எண்ணுகிறேன்.

## பழைமைவாத யூதர்கள் -ORTHODOX JEWS-

இடிக்கப்பட்ட இரண்டு யெருசலேம் ஆலயங்களுக்குப் பதிலாக மூன்றாவது ஆலயம் அமையும் வரை (பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது மூன்றாவது ஆலயம் அமையுமென்று) கறுத்த ஆடைகளைக் களையமாட்டோமென்று உன்மத்தங் கொண்டலையும் ஒருவகைக்கூட்டம். கறுப்பு உடைபோடு கறுப்புத் தொப்பி, கறுப்பு சப்பாத்து, நீண்ட கன்னத்து மீசை, தாடி மீசை என அவர்களை இலகுவில் அடையாளங்காணலாம். தங்கள் இனம் தவிர்ந்த எவருடனும் பற்றறுத்த நிலை. வானொலி, தொலைக்காட்சி, வலைப்பின்னல், கணனி, பத்திரிகையென எதுவுமேயில்லை. வேதத்தை படித்தல், பிள்ளைகளைப் பிதுக்குதல் இது இரண்டுந்தான் அவர்கள் செய்வது. இஸ்ரேல் அரசு இவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. கொடுத்துவைத்தவர்கள்.

## -GOLDEN GATE- பொற்கதவு

ஜெருசலேமுக்குள் நுழைய ஏழு வாயில்கள். ஒவ்வொன்றும் பிரமாண்டமானவை. ஜெருசலேமைச் சுற்றி கட்டப்பட்டுள்ள சுவர்களும் பிரமாண்டமானவை. உலக முடிவில் "மெசியா" (மீட்பர்) (HIGH PRIEST) இவ்வழியாகத்தான் ஜெருசலேமுக்குள் வருவார் என்பது யூதர்களின் நம்பிக்கை. (ஆக, ஜெருசலேம்தான் உலகமென்பதும் யூதர்களின் முடிவு) ஆனால் இஸ்லாமியர்கள் இதனைக் கைப்பற்றிய பின் இந்தப் பொற்கதவை இழுத்து மூடிவிட்டு அதன் எதிரே தங்கள் சவங்களை அடக்கஞ் செய்து அதனையொரு நிரந்தர அடக்க ஸ்தலமாகவே ஆக்கிவிட்டார்கள். காரணம் கேட்டதற்கு, மெசியா தீட்டுப்பட்ட இடங்களைத்தாண்டி செல்ல மாட்டார் ஆதலால், பொற்கதவுப் பகுதியை தீட்டுள்ள இடமாக ஆக்கிவிட்டதாகச் சொன்னார்கள். இன்னும் அது அவ்வாறுதானிருக்கிறது. கடவுளுக்கே கதவை மூடிவைத்துள்ள ஒரே இடம் யெருசலேம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### WAILING WALL - அழுகையின் சுவர்

யூதத்தில் இது மேற்குச் சுவர் -WESTERN WALL- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அழுகையென்றால் சாதாரண அழுகையில்லை. இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தும் ஆற்றவொண்ணா மனத்துயரின் அழுகை. சொலமன் அரசனால் கட்டப்பட்டு அழிக்கப்பட்ட முதல் யெருசலேம் ஆலயத்தில் எஞ்சியிருக்கும் ஒரேயொரு பாரிய சுவர். அல் அக்ஸா மசூதியின் ஒரு பக்கச் சுவராகவிருக்கும் இதில் யூதர்கள் முட்டி முட்டி அழுவதையும், மார்பில் அறைந்து கொண்டு பிரார்த்தனைகளில் ஈடுபடுவதையும் பார்ப்பதற்குச் சங்கடமாயிருக்கும். இதற்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள வேலியைத் தாண்டிப் பெண்கள் செல்ல முடியாது. பெண்கள் இப்பக்கத்திலும் ஆண்கள் அப்பக்கத்திலுமாக ஒரே அழுகைதான். சுவர் கற்களுக்கிடையே தங்கள் விண்ணப்பங்களை வைத்து விட்டுத்தான் வெளியேறுவார்கள்.

### இஸ்ரேல் பலஸ்தீன எல்லைச்சுவர்

இந்த எல்லைச் சுவரை வைத்தே பகைமையின் உக்கிரத்தை எடைபோட்டுவிடலாம். ஜேர்மன் சுவரைக் கூட மக்கள் அநாயசமாக தகர்த்து விட்டுப் போனார்கள். ஆனாலிந்தச் சுவர் மட்டில் அது மட்டும் நடக்காது. அத்தனை உயரமும் பருமனாக கொங்கிரீட்டால் அமைக்கப்பட்ட அதைப் பார்க்கவே ஒரு பயம் வரும். ஒரு சிறு கல்லைத்தானும் சுவர்தாண்டி எறிவதற்கு ஒருவனுக்கு அசுர பலம் வேண்டும். சீனச் சுவர் போல் நீண்டு கொண்டே செல்லும் அது இஸ்ரேல் பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வென்பது கிடையாது. என்பதை அழுத்தம் திருத்தமாக அறிவித்து நிற்கிறது.

### நாடோடி அரேபியர்கள் -NOMAD ARABS-

நகரங்களைத் தாண்டிய மிக மிகத்தொலைவுகளில் வீதியோரங்களிலும், மலையடிவாரங்களிலும் இவர்களை நிறையவே காணலாம். தகரத்தாலும் ஆட்டுத்தோலாலும் தற்காலிக இடங்களையமைத்துக் கொண்டு வாழுமிவர்களை "வீம்பர்கள்" என்று பகிடியாய் அழைப்பார்கள். அடிப்படை வசதிகளனைத்தை யும் துறந்து (நிராகரித்து) சிறு சிறு கூட்டமாய் வாழுமிவர்களைச் சுரண்டுவதற்கென்றே கூட்டமொன்று அலைவதையும் காணலாம். இவர்களது கால் நடை உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாமல் அந்நீத தரகர்களிடம் இவர்கள் ஏமாந்து போவது வேதனையாகவிருந்தது. இவர்களும் பாவப்பட்ட பலஸ்தீனியர்களில் ஒரு வகையினர்தான்.

### ஹூக்கா

இந்த ஹூக்கா வை ஏற்கனவே சில ஆங்கில ஏன் பழைய தமிழ் திரைப்படங்களிலும் கண்டிருக்கின்றோம்.

**இஸ்ரேலியர் முன்வைக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்கவையாகத் தோற்றங்காணும் சில நியாயங்கள்.**

அ. பலஸ்தீனம் என்னும்பெயர் "பெலஸ்தியரகள்" என்கிற பெயரிலிருந்து வந்ததாகும். இஸ்ரேலை ஆட்சி செய்த தாவீது மன்னன் காலத்தில் பெலஸ்தியர்களுக்கும் (Philistines) (கி.மு. 1000) இஸ்ரேலர்களுக்கும் இடைவிடா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.பலமுறை தாவீது மன்னன் பெலஸ்தியர்களை வெற்றி கண்டபோதும் யுத்தம் தொடர்ந்து கொண்டேயிருந்தது. பின்னர் உரோமர்கள் இஸ்ரேலை ஆட்சி செய்த காலத்தில் இஸ்ரேலர் ரோமர்களுக்கெதிராக அடிக்கடி கலகம் செய்த படியால், ரோமப் பேரரசன் தீத்து தாயன் இஸ்ரவேல் தேசமென்பதை 'பெலிஸ்தியர்களின் தேசம்' என்னும் பொருள்பட பலஸ்தீனம் என்று பெயர் சூட்டினான்.

ஆ. "......... இவர்கள் யாவரும் (இஸ்ரவேலரும், இஸ்மவேலரும்) இயேசுக்கிறிஸ்துவின் ஆயிரம் வருட ஆட்சிக்காலத்தில் இஸ்ரேலை நோக்கித் திரும்புவார்கள்." (எசேக்கியேல் 36:24)

இ. மீண்டும் இஸ்ரவேலர்கள், இடிக்கப்பட்ட தங்களுடைய ஆலயத்துக்குப் பதிலாக இதே பகுதிகளில் தங்கள் ஆலயத்தைக் கட்டுவார்கள். (எசாயா 2:2/ மீகா 4:1)

ஈ. யூதர்களுக்கு இறைவனால் வாக்களிக்கப்பட்ட பூமி

உ. காலத்தால் முற்பட்ட யெருசலேமின் முதலாவது ஆலயம் ஈராக்கிய அரசனால் இடிக்கப்பட்டு அதே இடத்தில் மசூதிகள் கட்டியுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாதது.

ஊ. இப்பிரச்சினையில் நிரவியுள்ள அரசியல் காரணங்களைப் புறந்தள்ளி விட்டு யூதர்களின் நியாயங்களைத் தரிசித்தல்.

எ. பலஸ்தீனத்துக்கு ஆதரவு வழங்குவதாக / அனுதாபம் காட்டுவதாகக் கூறும் நாடுகளுக்கு, பலஸ்தீன விடுதலையை விட இஸ்ரேலை ஒழித்துக் கட்டுவதே நோக்கம்.

ஏ. நிலவங்கிகள் மூலம் யூதர்கள் அரேபியர்களின் அநேக நிலங்களை விலை கொடுத்து வாங்கியுள்ளமை. தேசத்தின் மட்டில் யூதர்கள் கொடுத்த விலை மிக அதிகம்.

ஐ. காலங்காலமாக யூதர்கள் நிலத்தை விட்டு ஓட நிர்ப்பந்திக்கப்பட்டதைப் பலஸ்தீனர்கள் தங்களுக்குச் சாதகமாக்கியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குலேபகாவலி" திரைப்படத்தில் தங்கவேல் இது போன்ற ஒன்றை வைத்தான். பகடையுருட்டும் போது விளக்கையணைத்து மோசடி செய்து பகடை விளையாட வருபவர்களை அடிமைப் படுத்துவார். அதன் பிறகு இதனை எங்கள் மூதூரில் பார்த்திருக்கி றேன். முஸ்லிம்கள்தான் இதனைப் பாவிப்பார்கள். ஒரு சாராயப் போத்தலினுள் மண்ணெண்ணையை நிரப்பி இரண்டு மூங்கில் குழாய்களை உள்ளிணைத்து ஒன்றில் கார்த்திகை விளக்கீட் டுக்குப் பயன்படுத்தும் சிறிய மண்விளக்குப் போலொன்றில் நெருப்புத்தனலை வைத்து மறு மூங்கில் குழாயினால் உறிஞ்சும் போது புகைவரும். இதனை என் வீட்டுக்குப் பின் புறமிருந்த லத்திபா அக்கா ஊஞ்சலாடியவாறு இதனை வைத்து இழுக்கும் போது "குடு குடு" என்று ஒரு வகைச்சத்தம் போத்தலுக்குள் இருந்து

> காலம் காலமாய் மக்கள் தம்காலத்தில் நிலவி வருவனவும், பாரம்பரியமாய் அடையப்பெற்றனவுமான நம்பிக்கைகள், கருத்துக்களை மறுபரிசீலனை செய்யத் தாமாகவே நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

எழும். அந்தச் சத்தத்திற்காகவே நான் அவளருகில் போய் நிற்பேன். சிரித்துக் கொண்டே என்னைத் துரத்துவாள்.

பலஸ்தீன வீதிகளில் புதிய வடிவில் கண்ட அந்த ஹுக்கோ வைக்கண்டதும் லத்திபா அக்காவின் நினைவுதான் வந்தது.

நீளமான போத்தல்களில் இதனை நிறையவே அங்கு காணலாம். ஒரு இலகு தரையில் அமர்ந்து கொண்டு மணிக்கணக்காக இழுத்துக் கொண்டே இழுப்பார்கள் கண்களை மூடியவாறு புகையை உள்ளிழுக்கும் அந்த நீண்ட குழாயின் அந்தத்தில், வாயில் பொருத்தும் சிறிய கருவி வெள்ளியினால் செய்யப்பட்டது.

நான் நின்று சிறிது நேரம் ஒருவரைப் பார்த்துக் கொண்டு நின்றபோது என்னிடமும் அக்குழாயை நீட்டினான். வணக்கம் சொல்லிவிட்டு அவனையொரு நிழற்படம் எடுத்துக்கொண்டேன்.

இங்கே மதுக்கடைகள் மாதிரி அங்கே ஹுக்கா கடைகள். வேறென்ன இரண்டுமே இருவகைப் போதைதான்.

### உயிர்த்தெழுந்த கல்லறை

கல்வாரி மலையில் யேசு சிலுவையில் உயிர் துறந்தார் என்று வாசித்த போது அது ஏதோ பெரியதொரு மலையென்று எண்ணியிருந்தேன். ஆனாலப்படியில்லை. அது சிறிய குன்று. குன்றிருந்த பகுதிகளெல்லாம் மிகப் பிரமாண்டமான ஆலயங்களாக மாற்றம் பெற்று, அது மூன்று பிரிவுகளாக உள்ளன. யேசு மரித்த இடம், அவர் உடல் அவரது தாயின் மடியில் இறக்கி வைக்கப்பட்ட இடம். அவரடக்கம் செய்யப்பட்ட இடம்.

ஒவ்வொரு பகுதியையும் யூதர், கிறிஸ்தவர், பழமை வாத யூதக் கிறிஸ்தவர்களுக்கென்று ஆனபோது அந்த மூன்றாவது இடம் ஒரு தனிப்பட்ட இஸ்லாமியருக்குச் சொந்தமாயுள்ளது. இதுதான் யேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறை. அவர் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அப் பகுதியை இழுத்துப்பூட்டலாம் திறக்கலாம். அவரை யாரும் கேள்வி கேட்க முடியாது. ஆனால் அப்படி இதுவரை நிகழ்ந்த தில்லையெனச் சொல்லுகிறார்கள்.

எனது பயணத்தில் குறிப்பாக ஜெருசலேம் சென்றதன் பின்னர் நான் வெகுவாகக் குழம்பிப்போனேன்பதுதான் உண்மை. அந்த ஆலயங்களைச் சுற்றி நிகழ்ந்த, நிகழ்கின்ற வைகளை அறியாத ஒருவனாகவே நான் இருந்திருக்கலாம் போலிருக்கிறது. அதன் பிறகு நான் சுற்றிப் பார்த்த இடங்களி லெல்லாம், அந்த ஒரு பிரச்சினையே பூதாகரமாக எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்தது. அதிலிருந்து என்னால் விலக முடியவில்லை. ஒருவித நிழல் யுத்தம் செய்து கொண்டே என் பயணத்தை ஒருவாறு முடித்துக் கொண்டேன்.

தற்காலத்தில் சமயமென்பது விமர்சனத்திற்கும், விஞ்ஞான ஆய்வுக்கும், நடைமுறை வகையிலும், கோட்பாட்டு ரீதியிலும் உட்படுத்துவதற்கான நிர்ப்பந்தங்கள் கீழ்கண்ட சூழலின் விளைவாகியுள்ளன.



கட்டுரையாளர் தனது துணைவியாருடன் ஜெருசலேமின் பிரபல ஹோட்டலில்.

1. விஞ்ஞான அறிவு
2. உலக மதங்களை அதிக பகுத்தறிவோடும், விஞ்ஞானத் தோடும், குறைந்த மூட நம்பிக்கைகளோடும் கூடியனவாக புனரமைக்கத் தோன்றியுள்ள புதிய போக்கு.
3. கடந்த கால சமூக அரசியல், சர்வதேச நிகழ்வுகளில் மதங்கள் ஏற்படுத்திய தாக்கங்களாலுண்டான உணர்வலைகள்.

காலம் காலமாய் மக்கள் தம்காலத்தில் நிலவி வருவனவும், பாரம்பரியமாய் அடையப்பெற்றனவுமான நம்பிக்கைகள், கருத்துக்களை மறுபரிசீலனை செய்யத்தாமாகவே நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்.

தமது காலத்துக்கும் கடந்த காலத்துக்குமான அனுபவங்களுக்கிடையே ஓர் ஒருமையை ஏற்படுத்தவும், உணர்வு, சிந்தனை, ஆகியவற்றின் தேவைகளைத் தீர்க்கவும், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவுமானதாயுள் ளன இந்த நிர்ப்பந்தங்கள்.

"கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்று யேசு சொன்னது போல, இந்த ஜெருசலேம் பிரச்சினையைத் தீர்க்கவே கூடாதெனக் கங்கணங்கட்டிக் கொண்டு ஜெருசலேமுக்கு அப்பால் நிற்கும் புறச்சக்திகளைக் கேட்பதும், தட்டுவதும், தேடுவதுமே பாவப்பட்ட பலஸ்தீனர்களுக்கான ஒரே விமோசனம். அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அந்தச் சிதறிய பிரதேசங்களிலாவது அவர்கள் சுதந்திரமாக வாழ வழிகிட்டுமா?


✲✲✲


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

ஈழத்தில் கார்ட்டூன் என்ற கேலிச்சித்திரக் கலையின் வளர்ச்சிநிலை மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் சிரித்திரன் சிவஞான சுந்தரத்திற்குப் பின்னர் ஒரு ஆளுமையுள்ள கார்ட்டூன் கலைஞரை பெறுவதற்கு நீண்ட காலம் காத்துக் கிடக்க வேண்டிய நிலையே இன்று எம் மத்தியில் நிலவுகிறது. தேசிய பத்திரிகைகளில் கார்ட்டூன் என்ற பெயரில் பலரால் கேலிச் சித்திரங்கள் வரையப்பட்டாலும் கேலிச்சித்திரக் கலையின் முழுமையும் நிறைவும் இங்கு உணரப் படாததன் காரணத்தினாலும் பத்திரிகை ஆசிரியர்களின் கருத்துக்களுக்கு கார்ட்டூன் வடிவம் கொடுக்கும் சில ஓவியர்களாலும் கார்ட்டூன் கலையின் தாக்கம் ஈழத்தில் மிகக் குறைவாகவே உணரப்படுகின்றது. அதுவும் கிழக்கிலங்கையில் அது மிக மிகக் குறைவே. அந்தவகையில் மட்டக்களப்பின் முதல் கார்ட்டூன் ஓவியராக தன்னை அடையாளப்படுத்தும் சஜ்ஜித் பற்றிய ஒரு அறிமுக் குறிப்பே இது.

– ஆசிரியர் –



# மட்டக்களப்பின் கேலிச்சித்திர ஓவியராக அருள் சஞ்ஜித்


சு.சிவரெத்தினம்

கார்ட்டூன் (Cartoon) என அழைக்கப்படும் கேலிச்சித்திரம் நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒன்று. மத்திய காலத்தில்த்தான் இந்தச் சொல் கலைஞர்களிடத்தில் உரையாடலுக்கும் செயற்பாட்டுக்கும் உரிய ஒன்றாக வருகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் அரசியல் விவகாரங்களை எடுத்துப்பேசுவதற்கான ஒரு மொழியாக எடுத்துக்கொள்ளப்பட்டு காலத்தக்குக் காலம் பல்வேறுவிதமான தொழில்நுட்ப மாற்றங்களுக்குள்ளால் வளர்ந்து வந்த இது இன்று அச்சு ஊடகத்தின் ஒரு முக்கிய வடிவமாகவும் கேலிச்சித்திர அசைவூட்டம் (Cartoon Animation) ஆகவும் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு கார்ட்டூன் சின்னத்திரைப்படங்களாகவும் அடையாளம் காணப்படுகின்றது.

இன்று 'கேலிச்சித்திரம்' எனும் சொல் வளர்ந்தோர் மத்தியில் பெருமளவுக்கு அரசியல் சார்ந்த ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. இந்த அரசியல் இரு வகைப்படும்.

1. அரசாங்கம்/அதிகாரம் சார்ந்த கேலிச்சித்திரங்கள் இவை அரசாங்க எதிராளிகளை, எதிர்க்கருத்துக்களை கேலி செய்வதை நோக்காகக் கொண்டிருக்கும்.
2. அரசாங்கத்தினை/அதிகாரத்தினை எதிர்க்கின்ற அதன் போலித்தனங்களை வெளிப்படுத்துகின்ற கேலிச்சித்திரங்கள்.

இவற்றில் கலைஞர்கள் எதனைத் தெரிவு செய்கின்றார்கள் என்பது அவர்களது அரசியல் கருத்துநிலையினைச் சார்ந்ததாகும்.





ஓவியத்துக்கும் கேலிச்சித்திரத்திற்குமிடையிலான அடிப்படை வேறுபாடு என்னவென்றால் ஓவியன் தனது உணர்ச்சி வெளிப்பாட்டினை பொதுமையாக்கம் செய்கின்றான். இங்கு கருத்துச் சொல்வதை விட அந்தப் படைப்பின் மொத்தக் கலையழகு தொடர்பாகவே அதிக கவனம் எடுக்கப்படுகின்றது. பாத்திரங்களை அடையாளப்படுத்தப்படுத்த வேண்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பின் நவீன ஓவியர்கள் வரிசை ~ 2









வடிவ மாற்றங்களையும் கண்டிருந்தாலும் மட்டக்களப்பில் இப்போது தான் முதல் முறையாக ஒரு கேலிச் சித்திர ஓவியராக அருள் சஞ்ஜித்தை அடையாளம் காணமுடிகின்றது. இலங்கையின் கேலிச்சித்திர வரலாற்றுடன் ஒப்பிடும் போது கூட இது மிகப்பிந்திய ஒரு நிலையாகும்.

### அருள் சஞ்ஜித்

இவர் கல்விப் பொது தராதர உயர்தரத்தினை மட்டக்களப்பு மெதடிஸ் தமத்திய கல்லூரியில் கற்று யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைப் பீடத்தில் கலையும் வடிவ மைப்பிலும் நுண் கலைமாணி பட்டத்தைப் பெற்றவர். தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் ஓவியத்துக்கான வருகை விரிவுரையாளராக கடமை யாற்றி வருகின்றார்.

2007 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக இராம நாதன் நுண்கலைப்பீடத்தில் நடாத் தப்பட்ட 'வர்ணமொழி' என்ற கண் காட்சியில் 'த கிளிக்' என்ற புகைப்படக் காட்சியினையும் 2008ஆம் ஆண்டும் யாழ்ப்பாண பெரியபுலம் மாகாவித்தி யாலயத்தில் 'விழிகளின் வழியே' என்ற புகைப்படக் கண் காட்சியினை யும் நடாத்தி புகைப்படக் கலையில் தனக்கிருக்கும் ஆற்றலை வெளிப் படுத்தினார். பல்கலைக் கழகத்தில் கற்கும் காலத்தில் இவரின் நெறியாள் கையில் உருவான 'வதை' 'நெருப்பு' என்ற இரண்டு குறுந்திரைப்படங்கள் வெளிவந்து பலரது பாராட்டையும் பெற்றன.

2000ம் ஆண்டு மட்டக்களப் பிலிருந்து வெளிவந்த 'தினக்கதிர்' பத்திரிகையில் நிருபராகவும், கேலிச் சித்திர ஓவியராகவும் பத்திரிகைத் துறைக்கு அறிமுகமான இவர், அதன் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக் கும் காலத்தில் ஈழநாடு, உதயன் என பல உள்ளூர் ஊடகங்களுக்கும் சர்வதேச இணையத்தள ஊடகங்களுக்கும் கேலிச்சித்திர ஓவியராக பணிபுரிந்திருக்கின்றார்.

'இருக்கிறம்' சஞ்சிகையின் ஆசிரியராக பல சவால்களுக்கு மத்தியில் பணியாற்றி மக்களின் பிரச்சினைகளை வெளிப் படுத்தியமைக்காக 2010 ஆண்டு கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்திய முத்தமிழ் விழாவில் 'சிறந்த சஞ்சிகை ஆசிரியருக்கான விருது' இவருக்கு வழங்கப்பட்டது.


ஊடகத்துறையில் கடந்த ஒரு சகாப்தத்துக்கும் மேலாக

முக்கியமல்ல. ஆனால் கேலிச்சித்திர ஓவியன் தனது உணர்ச்சி வெளிப்பாட்டினை பொதுமையாக்கம் செய்யாது குறித்துக் காட்டுகின்றான், பாத்திர அடையாளப்படுத்தலும் கருத்துச் சொல்லலுமே இங்கு முக்கியமாகின்றது. பாத்திர உயிரோட்டமும் கருத்தைத் தெரிவிக்கின்ற உத்தியுமே அதனைக் கலை யாக்குகின்றது. பாத்திரங்களின் தனிச் சிறப்பான வெளித்தோற்ற இயல்புகள், விசேடகுணாம்சங்கள் என்பவற்றை கலைஞஉகள் மிகைப்படுத்திக்காட்டும்போது குறிப்பிட்ட பாத்திரங்கள் நகையுணர்வுடன் அடையாளப்படுத்தப்படுகின்றன.

கேலிச்சித்திரம் இந்த நீண்ட வரலாற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பல்வேறு ஊடகங்களிலும் கேலிச்சித்திர ஓவியராகவும், செய்தியாளராகவும், பிரதம ஆசிரியராகவும் பணியாற்றி வருபவர் இவ்வாறு ஓவியம், கேலிச்சித்திரம், புகைப்படக்கலை, குறுந்திரைப்படம், ஊடகத்துறை என பல திறமைகளைக் கொண்டிருந்த போதிலும் அவரின் கேலிச்சித்திரப் படைப்புக்கள் அவரை ஒரு கேலிச்சித்திர ஓவியராக முன்னிறுத்துகின்றது.

## சஞ்ஜித்தும் அவரது கேலிச்சித்திரங்களும்

ஜனநாயகம் மறுக்கப்பட்டு வாழ்தல் நிச்சயமற்ற நிலையில் இருந்து கொண்டு அதிகார எதிர்ப்பு அரசியல் கேலிச்சித்திரங்களை வரைவதற்கு அசாத்திய துணிவும் சவால்களை எதிர்கொள்கின்ற மனத்திடமும் ஒடுக்கப்படுகின்ற மக்களின்பால் பற்றுறுதியும் கலைஞானமும் தேவையாகின்றது சமூக அக்கறையும் அரசியல் போலித்தனங்களை சகித்துக் கொள்ள முடியாதமனோபாவமும் கொண்ட சஞ்ஜித்தின் உணர்வு வெளிப்பாட்டு மொழியாக அமைவதே அவரின் கேலிச்சித்திரங்களாகும். "நீண்ட கட்டுரைகள் மூலம் கருத்துக்களைக் கூறி மக்களைத் தெளிவுபடுத்துவதிலும் பார்க்க ஒரு கேலிச்சித்திரத்தின் மூலம் அதேயளவு தாக்கத்தினையும் தெளிவினையும் ஏற்படுத்த முடியும்" எனக் கூறும் சஞ்ஜித்தின் கேலிச்சித்திரங்களில் பாத்திரவாக்கம் முக்கியம் பெறுகின்றது.

பாத்திரங்கள் அவற்றின் இயல்புகளுடன் அதேவேளை நகைச்சுவையுணர்வுடன் வெளிப்படுத்தப்படுகின்றன. உதாரண மாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான்கிமூன், பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ச, போன்றோரின் தோற்றப்பாடுகள் ரசிக்கத்தக்கனவாக உள்ளன.

சஞ்ஜித்தின் கேலிச்சித்திரங்களின் அடுத்த ஒரு முக்கியமான விடயம் கருத்தைக்கூறும் உத்தியாகும். அவசரகால சட்ட நீக்கம், கிழக்கு மாகாணத்தில் கிறிஸ்மனிதன், தீர்வு போன்ற கேலிச்சித்திரங்களில் அவர் கூறவந்த கருத்துக்காக கையாண்ட உத்தி வாசகர்களை சிந்திக்கத் தூண்டுபவையாக அமைகின்றன.

பொதுவாக கேலிச்சித்திரங்களுக்குரிய விகாரப்படுத்தல், சிதைத்தல், மிகைப்படுத்தல், அசைவுத்தன்மை, சமநிலை போன்றவிடயங்களிலும் அவருடைய சித்திரங்கள் திருப்தி கரமானதாகவே அமைகின்றன.

எனவே அவருடைய எதிர்காலத்திட்டம் போல் இற்றைவரை அவரால் வரையப்பட்ட கேலிச்சித்திரங்களை ஒரு தொகுப்பாக வெளியிடுவதும் தொடர்ச்சியாக இந்நட வடிக்கைக ளில் ஈடுபடுவதும் மட்டக்களப்பிலும் ஒரு கேலிச்சித்திர பாரம் பரியத்தை உருவாக்கும் என நம்பலாம்.

### மகுடம் சந்தாவிபரம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனிப்பிரதி | ரூ.100.00 | 05 (US $) |
| ஆண்டுச்சந்தா (தபால்செலவு உட்பட) | ரூ.500.00 | 25 (US $) |
| இரண்டாண்டு சந்தா (தபால் செலவு உட்பட) | ரூ.900.00 | 50 (US $) |
| ஆயுட்சந்தா | ரூ.20,000.00 | 500 (US $) |

சந்தாவை காசோலை மூலமாகவோ, மணி ஓடர் மூலமாகவோ அனுப்பலாம். மணி ஓடர் மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் மாற்றக்கூடியதாக **வி.மைக்கல்கொலின்** என்ற பெயரிற்கு அனுப்புதல் வேண்டும். எதுவித செலவுமின்றி சந்தா அனுப்பும் வழி, தங்கள் பகுதியில் உள்ள மக்கள் வங்கிக்கிளையில் **W.Michaelcollin Peoples Bank. Town Branch, Batticaloa.** சேமிப்பு கணக்கு இலக்கம் 113-2-001-0-7728743 என்ற கணக்கில் வைப்பு செய்து, வைப்பு செய்த வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.

- ஆயுட் சந்தா செலுத்துபவர்களுக்கு "மகுடம்" பப்ளிகேஷன் பிரைவட் லிமிட்டட்டின் சகல வெளியீடுகளும் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- மகுடம் விளம்பர விபரங்களைத் தெரிந்து கொள்ள ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர் காணல்

# மௌனமே வாழ்க்கையாக........

ச.இராகவன் - பா.துவாரகன்



ச.இராகவன்: ஈழத்தின் வடபுல யாழ்ப்பாணத்தின் கரவெட்டியில் 11.08.1976 இல் பிறந்தவர். கரவெட்டியிலேயே வாழ்ந்து வருகிறார். ஈழத்தின் இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர். 30 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவரது 'கலாவல்லி முதலான கதைகள்', 'விட்டில் ஒரு சமகால அரசியல் பகுப்பாய்வு' ஆகிய சிறுகதைத் தொகுப்புக்கள் அண்மையில் வெளிவந்துள்ளன. இலங்கையின் இனச்சிக்கலுக்குக் காரணமான சிங்கள அரச வன்முறையின் பரிமாணங்களை அதன் தத்துவார்த்த அரசியற் பின்னணியை தனது கதைகளில் பல்வேறு வடிவங்களில் பதிவு செய்துள்ளார். 'மூக்குப்பேணி என்ற குறும்பட இயக்குநர் , சித்திரக் கலைஞர், கவிஞர், திரைப்பட விமர்சகர் முதலான பரிமாணங்களையுடைய இராகவன் தன் படைப்புக்கள் மீதான விமர்சனங்களுக்கு மௌனத்தையே பதிலாகத் தருபவர். முழுமையான ஒரு நேர்காணலுக்காக இராகவனை அணுகியபோது மறுக்காது சம்மதித்தார். 2010 - 2011 ஏறத்தாழ ஒரு வருட காலப்பகுதியில் எழுதிப் பெறப்பட்ட இந் நேர்காணல் ஒரு காலப்பதிவாக அமைந்துள்ளது. ஒவ்வொரு தடவை படிக்கிறபோதும் ஒரு புதினத்தை வாசிப்பது போன்று இருக்கிறது. இராகவன் தனது பாடசாலை நாட்களை, ஆசிரியர்களை, சந்தித்த மனிதர்களை, காதல் முதலானவற்றை நினைவு கூர்வதும் 1980 களின் பிற்கூறில் யாழ்ப்பாணம் - வடமராட்சி, இராகவன் என்ற மனிதனது வாழ்வு, நாம் அறியாத மனிதர்கள் - சம்பவங்கள், பல்கலைக்கழகக் காலம், நவீன தமிழ் இலக்கியம், இலக்கிய இதழ்கள் என்று நினைவிலிருந்து எழுதிச் செல்லும் ஒவ்வொரு பகுதியுமே வரலாற்று நாவலுக்குரிய தன்மையைக் கொண்டுள்ளது.

தேர்ந்த வாசகனான இராகவன், புத்தகங்களே தன் வாழ்வை மாற்றியதாவும் வாழ்வின் இறுதிவரை வாசிப்பதும் எழுதுவதுமே வாழ்விற்கு அர்த்தம் தருவதாவும் குறிப்பிடுகிறார். இராகவன்: மனிதர்கள் மற்றும் சமூகத்தின் மீதான நுண்மையான கூர்ந்த அவதானிப்புடன் கூடிய விமர்சனத்தை கலாபூர்வமாகத் தேர்ந்தெடுத்த சொற்களால் சொல்லோவியமாக வரையும் நம் காலத்தின் கலைஞன். யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பட்டதாரியான இவர் சமுர்த்திவங்கி முகாமையாளராகப் பணிபுரிகிறார்.

பா.துவாரகன்

● ***உங்களது ஊர், வீட்டுச்சூழல், குடும்பப் பின்னணி?***

★ ஊரில் எப்போதும் அமைதி கவிந்து கொண்டிருக்கும். மிக நெருக்கடியான காலங்களிற் கூட அந்த அமைதி குலையவில்லை. போராட்டக் குழுக்கள் தோன்றிய காலத்தில் இந்த ஊர் அக் குழுக்களின் மறைவிடமாக இருந்திருக்கிறது. குறிப்பாக ஐயப்பா என்பவரின் வீடு அநேகமாக எல்லா இயக்கங்களும் வந்து மாதக் கணக்கில் தங்கிச் செல்லுமிடமாக இருந்திருக்கிறது. எனது சிறுபராயத்தில் இந்த வீட்டில் குமரப்பா, புலேந்திரன் ஆகியோர் தங்கியிருந்ததைப் பார்த்திருக்கிறேன். எப்போதாவது கவச வாகனத்தில் இராணுவம் ஊருக்குள் நுழையும். நேரடி மோதல் நிகழப் போகின்றதெனச் சனம் பதகளிக்கும். ஆனால் இதுவரை எந்தவொரு அசம்பாவிதங்களும் நேர்ந்ததில்லை. என் வீட்டுக்கருகில் அடுத்தடுத்துக் குறுகிய இடைவெளியில் மூன்று கோவில்கள் அமைந்துள்ளன. 'இந்த மூன்று தெய்வங்களும் இருக்கும் வரை ஊருக்கு ஒரு கேடும் வராது' என அம்மா சொல்வாள். ஊர் மக்களின் நம்பிக்கையும் அதுதான். ஊரவர்களோடு பழகுவதில் நிதானமாக இருக்க வேண்டும். நெருங்கிப் பழகினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொள்வார்கள். புறணிபேசியே அநேகரது குடும்ப வாழ்வைச் சிதைத்து விடக் கூடிய திறமை கரவெட்டியானுக்கு உண்டு. கரவெட்டியானைப் போல் கதையளக்கக் கூடியவனை எங்கும் காணமுடியாது. பொய்யை உண்மையாக்கி உண்மையைப் பொய்யாக்கி விடக் கூடிய மந்திர வித்தையில் தேர்ந்தவனும் அவனே. 'கள்ள வெயிலை நம்பினாலும் கரவெட்டி யானை நம்பாதே' என்றொரு பழமொழியும் உண்டு. எனினும் ஊரின் இயல்பான அமைதி என்னை வழிப்படுத்தியது. ஊரவரோடு ஒட்டாமல் நின்று அதனைக் கூர்ந்து நோக்கியதில் சொல்லச்சொல்லத் தீராத கதைகள் பல வந்து கொண்டிருக்கின்றன.

**உடலமொன்றை நால்வர் காவிச் செல்வதாக மொறாயஸ் வரைந்திருந்த அச்சிறுகதைக்கான கோட்டுச் சித்திரத்தில் ஆழந்து போனேன். எப்போதும் வீட்டின் முற்றத்தில் படர்ந்து செல்லும் இளந்தாரி வெயில் எனது வாசிப்பிற்கு ஒத்திசைவாக இருந்தது. அம்மா சமையல் கட்டிற்குள்ளிருந்து அரிசி புடைத்துக் கொண்டிருப்பார். அம்மம்மா பாக்கிடித்துக் கொண்டிருப்பார். நான் வாசித்துக் கொண்டிருப்பேன். எவரும் எவரையும் கண்காணிப்பதில்லை. அந்தக் காலம் இனி ஒருபோதும் திரும்பி வராது.**

வீட்டுச் சூழலும் அமைதியானதுதான். எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் உகந்தது தான். ஆனால் அந்த அமைதியைச் சீர்குலைப்பதில் 1990களுக்கு முன் எனது அண்ணன்மாருக்கும் 1990களுக்கப் பின் எனது அப்பாவுக்கும் முக்கியமான பங்கிருக்கின்றது. அப்பா ஒரு பெருங்குடிமகன். இலங்கைப் பொலீஸ் பிரிவில் ஒரு சார்ஜனாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். சிங்களமும் ஆங்கிலமும் சரளமாகப் பேசக் கூடியவர். கிரிக்கெட் ரசிகர். இச்சிறப்பியல்புகள் எல்லாமே வீட்டுச் சூழலை மோசமாக்குவதில் செல்வாக்குச் செலுத்தின. 1983 காலப் பகுதியில் அப்பா காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் வானொலி இயக்குநராகக் கடமையாற்றினார். திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியில் நடந்த தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட இரவில் கடமையிலிருந்த அப்பாவுக்கு கிரிக்கெட் வருணணையைக் கேட்டுக் கொண்டிருந்ததால் நடந்த சம்பவமேதுமே தெரிந்திருக்கவில்லை. ஆனால் கொழும்பிற்கு இத்தகவல் தெரிந்து அங்கிருந்து பொலீஸ் தலைமைப்பீடம் அப்பாவுடன் தொடர்பு கொண்டு நடந்த சம்பவம் உண்மையா எனக் கேட்ட போது அவரால் 'தெரியாது' என்றே பதிலளிக்க முடிந்தது. உண்மையில் இவரிடமிருந்துதான் பொலீஸ் தலைமைப்பீடத் திற்கு நடந்த சம்பவம் குறித்துத் தகவல் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். எனவே கடமை நேரத்தில் பொறுப்பின்றி நடந்து கொண்டதற்காக அப்பாவுக்கு இரத்தினபுரியிலுள்ள குருவிற்ற பொலீஸ் நிலையத்திற்குத் தண்டனை இடமாற்ற உத்தரவு வந்தது. அதனால் அங்கே போய்ச் சேர்ந்தார். 1986 வரை அப்பாவினது தொடர்புகளேதுமின்றிக் காலங் கழிந்தது. ஊருக்குள் அவர் இன்னொரு திருமணம் முடித்து விட்டதாகக் கதை பரவியது. எனக்கு முன் முறையே 12, 10 வருட இடைவெளிகளில் பிறந்த அணணன் மார் இருவரும் வீட்டுச் சூழலை மோசமாக்குவதில் செல்வாக்குச் செலுத்தினர். இருவரும் அற்ப விடயங்களையும் பெரிதுபடுத்திச் சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். ஒருவர் கத்தியை எடுப்பார். மற்றவர் கோடலியை எடுப்பார். எனக்கோ கலக்கமாக இருக்கும். அயலவர்களுக்கோ இது திரைப்படக் காட்சி போலிருக்கும். அம்மா காதணிகளைக் கூட விற்றுச் செலவு செய்து வந்தாள். இதற்கிடையில் மூத்தண்ணாவுக்குப் பல்கலைக் கழக அனுமதி கிடைத்து விட்டது. தவிரவும் அவர் தனியார் கல்வி நிலையங்களில் 'வர்த்தகமும் நிதியும்' கற்பிற்கும் புகழ் பெற்ற ஆசிரியரானார். இளையண்ணா விளையாட்டுப் பிள்ளையாகச் சுற்றித்திரிந்தான். அப்பா இனி ஊருக்கு வரமாட்டார் என்ற சமூகத்தின் எடு கோளைப் பொய்ப்பிக்க ஒரு கட்டத்தில் மூத்தண்ணாவும் அம்மாவும் இரத்தினபுரிக்குப் போய் அப்பாவைக் கூட்டி வந்தார்கள். அப்பாவின் வருகை ஊரவர்களுக்கு அதிசயமாக இருந்தது. ஊரில் சில நாள் தங்கியிருந்த அப்பா மறுபடி பயணமானார். அதன் பின் வேதாளம் முருங்கை மரமேறிய கதையாய் அவரிடமிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இந்தத் தடவை அம்மாவும் இளையண்ணாவும் போனார்கள். மீண்டும் போனார். வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறியது. இப்போது அவர் குருவிற்ற பொலிஸ் நிலையத்திலிருந்து நாரேஹன்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்தத்தடவை நானும் அம்மாவும் நாரஹேன்பிட்டிய போய் அப்பாவைக் கூட்டி வந்தோம். 1989 காலப் பகுதியில் அவர் ஓய்வு பெற்றார். இதன் பின்னர் ஊரிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார்.

1990 சித்திரை வருடப் பிறப்பன்று மூத்தண்ணா புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டான். ஒரு முகாமைத்துவப் பட்டதாரியான தனக்கு புலிகள் இயக்கத்தின் அரசியல் துறையில் பெரும் பதவி கிடைக்குமென்ற எதிர்பார்ப்பு அவருக்கிருந்தது. அவரது எதிர்பார்ப்பு எவ்விதத்திலும் நிறைவேறாது எனத்தெரிந்த பின்பு 1990 ஆவணி மாதம் இயக்கத்திலிருந்து மூத்தண்ணா விலகித் தலை மறைவானார். பஜீரோவில் அவரைத் தேடி வந்த புலிகள் ஒரு கொலைக் குற்றவாளியைத் தேடுவது போல் துவக்குகளை நீட்டி வீடெங்கும் சல்லடை போட்டுத் தேடிய பின் இனி அவரைக் கண்ட இடத்தில் சுடுவோம் என எச்சரித்து விட்டுப் போயினர். இயக்கத்திலிருந்து விலகிய அன்று இரவு மூத்தண்ணா வீட்டுக்கு வந்துவிட்டு உடனே போய் விட்டார். அதன் பின்னர் அவர் எங்கிருக்கிறார் என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. நிலைமை இப்படியிருக்க ஒரு நாளிரவு இராணுவ முகாமைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நிகழ்த்த வியூகம் வகுப்பது போல் எங்கள் வீட்டைச் சுற்றி வளைத்து கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை எங்கள் வீட்டினுள் நுழைந்தார்.

அன்றிரவு நானும் இளையண்ணாவும் வீட்டில் தங்காமல் பக்கத்து வீட்டில் தங்கியிருந்தோம். சூசை அப்பாவுடன் தர்க்கிப்பதைக் கேட்கக் கூடியதாகவிருந்தது. வீடெல்லாம் சல்லடை போட்டு மூத்தண்ணாவைத் தேடினார்கள். அன்றிரவு நானும் இளையண்ணாவும் வீட்டில் தங்கியிருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தண்ணாவிற்குப் பதிலாகச் சூசை எங்களிலொருவரைப் பிடித்துச் சென்றிருப்பார். நல்லவேளை தப்பித்தோம். அல்லது மூத்தண்ணா புலிகளிடம் சிக்கியிருப்பார். இல்லையென்றால் நாங்கள் முகவரியில்லாமல் போயிருப்போம். ஓரிரு மாதங்களின் பின்னர் மூத்தண்ணா பிரான்ஸில் நிற்பதாகத் தகவல் கிடைத்தது. ஏற்கனவே வெளிநாட்டு மோகத்தில் தீவிரமாகச் சிக்கியிருந்த இளையண்ணா புலிகளால் தனக்கும் ஆபத்து வரலாமெனக் காரணம் காட்டி அப்பாவுடன் கொழும்பிற்குப் பயணமானார். 1991 காலப் பகுதியில் இது நிகழ்ந்தது. இக்காலப்பகுதியில் மீளவும் வீட்டில் அமைதி நிலவத் தொடங்கியது. ஓரளவிற்கு நான் வாசிப்பிலீடுபட்டதும் இதன் போதுதான். பழைய வீரகேசரி வார வெளியீடுகள் குப்பையெனத் தேங்கிக் கிடந்தன. அவற்றைப் பொழுதுபோக்கிற்காக ஒவ்வொன்றாக வாசிக்கத் தொடங்கினேன். அப்போதுதான் திருக்கோவில் கவியுகன் எழுதிய 'திரைகளுக்கு அப்பால்' என்ற சிறுகதை கண்ணில் பட்டது. உடலமொன்றை நால்வர் காவிச் செல்வதாக மொறாயஸ் வரைந்திருந்த அச்சிறுகதைக்கான கோட்டுச் சித்திரத்தில் ஆழ்ந்து போனேன். எப்போதும் வீட்டின் முற்றத்தில் படர்ந்து செல்லும் இளந்தாரி வெயில் எனது வாசிப்பிற்கு ஒத்திசைவாக இருந்தது. அம்மா சமையல் கட்டிற்குள்ளிருந்து அரிசி புடைத்துக் கொண்டிருப்பார். அம்மம்மா பாக்கிடித்துக் கொண்டிருப்பார். நான் வாசித்துக் கொண்டிருப்பேன். எவரும் எவரையும் கண்காணிப்பதில்லை. அந்தக் காலம் இனி ஒருபோதும் திரும்பி வராது.

1994 காலப் பகுதியில் இளையண்ணாவை வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டு அப்பா வீடு திரும்பினார். அன்றிலிருந்து இன்றுவரை வீட்டில் அமைதியைக் களங்கப்படுத்துபவராகவே யிருந்து வருகிறார். இவரைப் போல் பெருங்குடிமகனை வேறெங்கும் காணமுடியாது. குடித்து விட்டு அந்தச் சுவடுபடாமலிருப்பவர்களால் எவருக்கும் பாதகமில்லை. ஆனால் இவரோ கும்மாளமடிப்பவராயிற்றே அயலிலுள்ள வர்களுடன் சண்டித்தனம் செய்ய வெளிக்கிட்டார். இது வன்முறை மிகுந்துள்ள காலம். அயலவர்களும் பதிலுக்குச் சண்டித்தனம் செய்ய வெளிக்கிட்டார்கள். பொலிஸில் முறைப்பாடு பதிவாகி நீதிமன்றத்தில் வழக்குகள் வைத்து எல்லா வழக்குகளுமே அயலவர்களுக்குச் சாதகமாகத் தான் தீர்ப்பானது. 2010 நடுப்பகுதியில் இப்போது இலண்டனி லிருக்கும் அண்ணன்மார் இருவரினதும் ஏற்பாட்டில் அம்மாவும் அப்பாவும் இலண்டலுக்குப் போனார்கள். ஓராறுமாதம் பெரும் அதிசயமென வீட்டில் அமைதி நிலவியது. என் வாழ்வில் சுமார் 16 வருடங்களுக்குப் பிறகு ஏகாந்தத்தின் இனிமையை அனுபவித்து வந்தேன். அதுவும் நிலைக்கவில்லை. 2010 டிசம்பர் இறுதியில் அம்மாவுடன் அப்பாவும் தந்திரமாகத் திரும்பி வந்து விட்டார். இப்போது அவர் என்னையொரு பகைவன் போல் கருதும் போக்கு மேலோங்கி வருகிறது. எல்லாவற்றிற்குமே நான் ஆழ்ந்த மௌனத்தைச் சாதித்து வருகிறேன். ஒருநாள் நிறைபோதையில் என்னைக் குத்திக் கொல்வதற்குக் கத்தியுடன் வந்தார். நான் மௌனமாக இருந்த இடத்தை விட்டு அசையாமல் தியானிப்பவன் போலிருந்தேன். தன்னிச்சையாகவே பின் வாங்கி விட்டார். நான் வாசித்த புத்தகங்கள் எனக்கு வன்முறையைப் போதிக்கவில்லை. எனக்கோ எக்காரணங் கொண்டும் எனது வாசிப்பும் எழுத்தும் தடைப்பட்டு விடக் கூடாது என்பது தான் குறிக்கோளாக இருக்கிறது. அதற்காகத் தான் இந்த மௌன யாத்திரை. அப்பா மட்டுமென்றில்லை, இன்னும் சிலர் எனது மௌனத்தைக் கலைக்க முயன்றிருக்கிறார்கள். எனது மனைவி நடத்தை கெட்டவள் என்று கூட மிக மதிநுட்பமாகக் கதை புனைந்து உலவ விட்டார்கள். எனது மனைவியை எனக்கு 14 வயது நடந்து கொண்டிருக்கும் போது சந்தித்தேன். அன்றிலிருந்து அவள் எப்படிப்பட்டவள் என்பதை நானறிவேன். இத்தருணத்தில் நான் ஒன்றை மட்டும் சொல்லுவேன். (திருவிவிலியத்தில் ஜீசஸ் சொன்னதைப் போல்) என் மனைவி நடத்தை கெட்டவ ளென்றால் அதையொரு ஏகபத்தினி விரதன் சொல்லட்டும். நான் அவனது கருத்துக்கு மதிப்பளிப்பேன். மற்றும்படி என் மௌன யாத்திரை தொடர்ந்து செல்லும். இதற்கேற்ப வீட்டுச் சூழலை இசைவாக்கிக் கொண்டு வருகிறேன். அண்மையில் வீட்டைவிட்டு வெளியேறி விடலாமென்று கூட நினைத்தேன். ஆனால் வீட்டுச்சூழல் என்னை அரவணைத்துத் தடுத்து விட்டது. அது வெளியேற்ற வேண்டுமெனத் தீர்மானிப்பவர்களை ஏதோவொரு வகையில் வெளியேற்றி என்னைத் தொடர்ந்தும் அரவணைக்கும் என முழுமையாக நம்புகிறேன்.

**● உங்களது பாடசாலை நாட்களை நினைவு கூருவீர்களா? ஆரம்பக்கல்வி, உயர்தரம் கற்ற பாடசாலை, உங்களது நண்பர்கள், ஆகர்சித்த ஆசிரியர்கள்?**

★ ஆரம்பக்கல்வி கரவெட்டியின் கல்விப் புலப்பண்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும் ஆண்கள் பாடசாலையான மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தான் தொடங்குகிறது. அடிப்படையில் நானொரு விவேகமற்ற பையன். மூன்றாம் வகுப்பு வரை பிழையின்றித் தமிழில் ஒரு வசனம் கூட எழுத முடியாதவனாக இருந்தேன். ஒரு நாள் வகுப்பாசிரியர் ஒவ்வொரு மாணவரையும் தத்தமது பெயரையும் குடும்ப அங்கத்தவர் பெயரையும் எழுதிக் காட்டும்படி சொல்லி விட்டார். அன்று தப்பிக்க முடியாது இக்கட்டான நிலைக்குள்ளானேன். அப்போது பாடசாலையிலிருந்து என்னைக் கூட்டிச் செல்ல அம்மா வருவார். அல்லது அண்ணன்மார் சைக்கிளில் வருவர். அக்காலத்தில் அப்பா காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தார். அன்றைய தினம் அப்பா நண்பகலில் கடமைக்குச் செல்ல வேண்டியிருந்திருக்கலாம். அண்ணன்மாரும் பாடசாலையால் வரவில்லைப் போலும் அவர்களிருவரும் ஹாட்லிக் கல்லூரியில் படித்தார்கள். என்னைப் பாடசாலையிலிருந்து கூட்டிச் செல்ல வீட்டில் எவருமில்லாததால் அம்மா அப்பாவை அனுப்பியிருக்க வேண்டும். அவர் வந்து என்னை அன்றைக்கு பாடாசலை முடிவதற்கு முன்பே கூட்டி வந்து விட்டார். அதனால் எனது பெயரையும் குடும்ப அங்கத்தவர் பெயரையும் வகுப்பாசிரி யருக்கு எழுதிக்காட்டும் இக்கட்டு நிலையிலிருந்து தப்பித்து விட்டேன். பாடசாலை நாட்களில் சிலவேளை எவருக்கும் தெரியாமல் இடைவேளைக்கு முன்பே வெளியேறிவிடுவேன். ஆனால் வீட்டிற்கும் செல்ல முடியாது. ஏனெனில் நான் வீட்டிற்குச் சென்றால் நடந்த சங்கதியை அம்மா கண்டுபிடித்துத் திரும்பவும் பாடசாலையில் கொண்டு போய் விட்டு விடுவார். பாடசாலைக்குச் சற்று அருகிலுள்ள பெரியதோட்டம் என்ற இடத்தில் அம்மாவின் மூத்த சகோதரியின் (பெரியம்மா) வீடு இருந்தது. ஆனால் அங்கேயும் செல்ல முடியாது. ஏனெனில் பெயரியம்மா வீட்டிற்கு அம்மாவுடன் ஒவ்வொரு நாள் பின்நேரமும் நான் செல்வது வழக்கம். அப்போது நிச்சயமாகப் பெரியம்மா அம்மாவிடம் நடந்ததைச் சொல்லிவிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் பெரியம்மா வீட்டின் அருகிலுள்ள அம்மாவின் தங்கை (சின்னம்மா) வீட்டிற்குத்தான் இவ்வாறான பொழுதுகளில் செல்வதுண்டு. சின்னம்மாவிற்கு என்னில் தனிப்பாசம்.

நான் போனால் அவர் 'என்னடா பள்ளியால வெள்ளண வந்திட்டாய்?' எனக் கேட்பார். நான் சிறிதும் சளைக்காமல் அதிபரின் தகப்பன் இறந்து விட்டதாகச் சொல்வேன். அதன் பின் அவர் ஒரு கேள்வியும் கேட்க மாட்டார். மாம்பழம், பிடிக்கொழுக்கட்டை, பாணிப்பனாட்டு எனத் தின்பண்டங்களை அள்ளியள்ளித் தருவார். தின்று தீர்த்துவிட்டுப் பள்ளிக்கூடம் முடிவடையும் நேரம் பார்த்து வீட்டிற்குக்கிளம்பி விடுவேன். இதைப்பற்றி ஒரு நாள் கூட சின்னம்மா அம்மாவிடம் மூச்சுவிட்டதே கிடையாது. சின்னம்மா வீட்டில் நிறையப் புத்தகங்கள் இருந்தன. வீட்டுக் கூடத்தின் நடுவில் சின்னம்மா அமர்ந்திருந்து ஒரு புத்தகத்தை உரத்து வாசிக்க அயல் வீட்டுப் பெண்கள் சுற்றியிருந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். அதைப் பார்க்க எனக்கு அதிசயமாக இருக்கும். பின்நாளில் சென்னை வானொலியில் புதினப் பக்கங்கள் ஒலிபரப்பாகும் போது எனக்குச் சின்னம்மாவின் ஞாபகம் தான் உடனடியாக வரும். அவர் இப்போது மகளுடன் இலண்டனில் இருக்கிறார்.

நான் ஆண்கள் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த போது தான் இயக்கங்கள் முளைவிட்டன. அப்போது அடிக்கடி ஹர்த்தால் நடக்கும். பாடசாலை நடந்து கொண்டிருக்கும் போது சிலர் வந்து அதிபருடன் கதைத்து விட்டுப் போவார்கள். உடனடியாகத் தொடர்ந்து மணியொலிக்கும். அந்த மணியொலியின் அர்த்தம் எல்லோரும் வீட்டுக்கு ஓடுங்கள் என்பதுதான். நாங்கள் ஆரவாரப்பட்டு புத்தகப் பைகளை எடுத்துக் கொண்டு குய்யோ குறையோ எனக் கத்தியபடி வெளியே ஓடுவோம். உடனே நேரடியாக வீட்டுக்கு வருவதில்லை. காணிகளுக்குள்ளால் ஓடித் தச்சந்தோப்புப் பிள்ளையார் கோவிலை வந்தடைவேன். என்னுடன் கிரிசாந்தன் (இவன் பின்நாளில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து சமரொன்றில் விழுப்புண்பட்டு சிகிச்சை பெற்று வந்த வேளையில் நிகழ்ந்த விமானத் தாக்குதலில் இறந்து விட்டான்) குகன் (இவன் தற்போது பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத் தனாகக் கடமை யாற்றுகிறான்) பிரதீபன் (புலிகளின் அரசியல் துறையில் பணியாற்றியவன். இப்போது தொடர்பேதுமில்லை) ஆகியோர் வருவார்கள். தச்சன்தோப்புக் கோவில் வீதியில் கொன்றை மரங்கள் நிறைந்திருக்கும். அவற்றில் தொங்கும் காய்களை கிரிசாந்தன் மளமளவென்று பிடுங்குவான். அவனுடன் மற்றவர்களும் இணைந்து கொள்வோம். பின்னர் பிடுங்கிய காய்களை இரண்டாக முறித்துக் கொண்டு புழுதி நிறைந்த தெருவுக்குள் இறங்கி தெருவுக்குக் குறுக்காக புழுதியைக் குவித்து முறித்த கொன்றைக் காய்களை வரிசையாக நடுவோம். கிரிசாந்தன் இன்று பூரண ஹர்த்தால் எனக் கத்தி விட்டு மறுபக்கமுள்ள பனங்காணிக்குள் ஓடுவான். அவனுக்குப் பின்னால் நாங்களும் ஓடுவோம். அந்த வளவுக்குள் கொய்யா மரங்களும் நிறைந்திருக்கும். அதிலேறி புளிமுத்தல் பருவத்திலுள்ள கொய்யாக்காய்களைப் பிடுங்கிச் சப்புவோம். வசதிப்படி ஏதாவது விளையாட்டு நடக்கும். சலிப்பு ஏற்பட்டதும் வீடுகளை நோக்கி நடப்போம். ஒரு நாள் நாங்கள் கொன்றைக் காய்களை முறித்துத் தெருவின் குறுக்கே நட்டுக் கொண்டிருக்கும் போது எங்கள் பாடசாலையின் அதிபர் அந்தவழியால் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் நாங்கள் பக்கத்திலிருந்த காணிக்குள் ஓடிப்போய் பனைகளுக்குப் பின்னால் மறைந்து நின்று பார்த்தோம். அவர் கொன்றைக்காய்கள் நட்டு வைத்த இடத்தை அண்மித்ததும் சைக்கிளை விட்டிறங்கி அதைத் தூக்கிய படியே நடந்து பின்னர் ஓடிக் கொண்டு போனார். நல்லவேளை நாங்கள் அவர் கண்ணில் படவில்லை. அப்போதெல்லாம் ஒவ்வொரு பாடசாலை நாளிலும் காலையில் சிங்கக்கொடி யேற்றித் தேசியகீதம் பாடுவது வழமையாயிருந்தது. ஒருநாள் சாறமும் சேட்டும் அணிந்த இருவர் பாடசாலைக்கு வந்து அதிபரைக் கூப்பிட்டு ஏதோ சொன்னார்கள். அன்றிலிருந்து பாடசாலையில் சிங்கக் கொடியேற்றப்படவில்லை. தேசியகீதம் பாடப்படவுமில்லை. இச்சம்பவத்தை அப்போது அங்கே படித்துக் கொண்டிருந்த மாணவனான அருணோதயன் (நட்சத்திரன் செவ்விந்தியன்) பின்நாளில் திசை வார இதழில் யானைப்பாகன் என்ற புனைபெயரில் எழுதிய **'இவன்'** என்ற சிறுகதையில் அழகாக விவரித்திருப்பதைக் காணலாம்.

நான் மூன்றாம் வகுப்புப் படித்த போது ஆங்கிலம் ஒரு பாடமாக அறிமுகமானது. அப்போது ஆறுகண கந்தசாமி என்பவர் தான் ஆங்கிலம் கற்பித்தார். எங்கள் பாடசாலையில் டவுசரும் சேட்டும் அணிந்து வருபவர் அவர் மட்டும் தான். நல்ல உயரமும் செந்நிறத் தோற்றமும் கடா மீசையும் காதில் உரோமமுமாக அவரது தோற்றம் பயமுறுத்துவதாக இருந்தது. நான்கு கோடுகள் உள்ள அப்பியாசக் கொப்பியில் ABCD பெரிய எழுத்து சின்னவெழுத்து இரண்டும் எழுதிக் காட்டிவிட்டு எங்களை எழுதச் சொல்வார். நாங்கள் எழுதுவதில் சின்னதாக ஒரு பிசகு வந்தாலும் கையிலுள்ள பொல்லையொத்த தடியினால் விளாசித் தள்ளுவார். வகுப்பில் அவரிடம் அடி வாங்கியதில் நான் சாதனையாளன். அப்பியாசக் கொப்பியைத் திருத்திவிட்டு கிடையாகத் திருப்பி எல்லைக் கோட்டிற்கு (Margine line) வெளியே சிவப்புப் பேனாவால் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆறுகண கந்தசாமி என முழுப்பெயரையும் எழுதுவது அவரது வழக்கம். ஒவ்வொரு தினமும் ஆங்கிலப் பாடவேளையில் நான் நரகத்தை அனுபவித்தேன். அவரது கற்பித்தல் அணுகுமுறை மிக மோசமானது. பெண் பிள்ளைகளோடு எப்போதும் பல்லிளித்துக் கொண்டிருப்பதும் அவரது சுபாவம். பின்நாளில் ஆங்கிலம் கற்பதில் எனக்கு ஈடுபாடில்லாமல் போனதற்கு ஆறுகண கந்தசாமியே முக்கிய காரணம் என்று சொல்வேன். ஓர் ஆசிரியர் எப்படியிருக்கக் கூடாதோ அப்படி அவர் இருந்தார். நான்காம் வகுப்புப் படிக்கும் போது கணபதிப்பிள்ளை வகுப்பாசிரியராக வந்தார். அவர் எப்போதுமே வேட்டியும் சேட்டும் அணிந்திருப்பார். ஓர் ஆசிரியர் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருப்பார். இடது கைப் பழக்கமுடையவர். எண்ணையும் எழுத்தையும் இலகு முறையில் கற்பித்தவர். மறந்தும் கூட தடி எடுத்து அடிக்காதவர். அப்பியாசக் கொப்பிகளைக் கூட நின்ற நிலையில்தான் திருத்துவார். ஒரு நாள் கூட ஆசனத்தில் அமர்ந்ததை நான் கண்டதில்லை. இவர் நண்பன் உமாகாந்தனின் தாய்மாமன். இப்போதும் இவருடன் நெருக்கமான நட்பினைப் பேணி வருகிறேன். அன்றைக்கு வகுப்பறையில் இருந்த தோற்றத்திலே இன்றுமிருக்கிறார் என்பது அதிசயமாக இருக்கிறது. இவரைக் கண்டுகதைக்கும் போதெல்லாம் நான் சிறுபையனாகி விட்டதாக உணர்வேன். 1986 காலப்பகுதியில் ஹாட்லிக் கல்லூரியில் சேர்ந்து கொள்வதற்கான தெரிவுப் பரீட்சையொன்று நடந்தது நான் ஏனோ அப்பரீட்சைக்குத் தோற்றவில்லை. பிற மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றினர். அவர்களில் கெட்டிக்கார மாணவர்கள் அப்பரீட்சையில் சித்தியடைந்து ஹாட்லிக்கல்லூரி சென்று விட அவ்வாறு சென்றவர்களில் நான் முன்னரே குறிப்பிட்ட கிரிசாந்தன், குகதாசன், பிரதீபன் ஆகியோரும் உள்ளடங்குவர். சித்தியடையாத மாணவர்களுடன் நானும் எஞ்சினேன். இதனால் ஏற்கனவே இரு வகுப்புகளாக பிரித்து நடத்தப்பட்ட நான்காம் வகுப்பு அடுத்த வருடம் ஐந்தாம் வகுப்பான போது ஒன்றாக்கப்பட்டது. ஐந்தாம் வகுப்பில் சிவகாமி ரீச்சர் வகுப்பாசிரியராக இருந்தார். அவர் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதில் பெயர் பெற்றவர். எனக்குள் அப்போது தமிழ் பாடத்தில் கட்டுரையெழுதும் திறமை ஓரளவுக்கிருந்தது. அதை இனங்கண்டு ஊக்கப்படுத்தியவர் சிவகாமி ரீச்சர்தான். சகலகலாவல்லிமாலை பாடுவார். நான் இப்போது சகலகலாவல்லிமாலையைப் பாடும் போது சிவகாமி ரீச்சரின் குரல் கேட்பது போன்ற பிரமையெழுகிறது. அப்போது எங்களுக்கு Englilsh for me என்ற தலைப்பில் பாடநூல் இருந்தது. அதில் work book ஒன்றுமிருக்கும். படங்கள் வரைந்து எழுதும் வேலையை work book இல் செய்ய வேண்டும். வகுப்பில் படம் வரையக் கூடியவன் நான் தான். வகுப்பில் அம்பாலிக்கா (நட்சத்திரன் செவ்விந்தியனின் தங்கை) பாமினி (வல்வெட்டித்துறையில் இருந்து வந்து படித்தவள்) இருவரும் ஆங்கிலத்தில் மகாகெட்டிக்காரிகள். இவ்விருவருக் கும் எனக்குமிடையில் ஓர் உடன்பாடு நிலவியது. அவர்கள் work book இல் நான் படம் வரைந்து கொடுத்தால் அவர்கள் எனக்கு ஆங்கிலத்தில் சரியான விடையை எழுதித் தருவார்கள். ஒருநாள் அவர்களிருவரும் தங்களது work books ஐ என்னிடம் தந்து வீட்டில் படம் வரைந்து கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார்கள். நானும் மறுக்காமல் வாங்கி வந்தேன். இரவிரவாக அவர்களது புத்தகங்களில் படம் வரைந்து முடித்தேன். அடுத்த நாள் காலை வழமைக்கு மாறாக உலங்குவானூர்திகள் தாழப் பறந்து துண்டுப் பிரசுரங்களை வீசின. அவ்விதம் வீசப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் கொக்குப் பட்டம் போல் சிதறிப் பறந்து விழுந்து கொண்டிருப்பதை அதிசயத்துடன் வீட்டுக்கு வெளியே நின்று பார்த்தது நேற்று நடந்தது போலிக்கிறது. அன்றுதான் வடமராட்சியைக் கைப்பற்ற ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட 'லிபரேசன் ஒபரேசன்' நடவடிக்கை ஆரம்பித்த தினம். தொடர்ந்து வந்த நாட்கள் அச்சமூட்டின.

பலாலியிலிருந்து யாழ்குடாநாட்டு மக்களுக்கான விசேட வானொலி ஒலிபரப்பு மேற்கொள்ளப்பட்டது. 'கால வரையறையற்ற ஊரடங்குச்சட்டம் யாழ் குடாநாட்டில் அமுல் செய்யப்பட்டிருப்பதால் பொதுமக்களை கோவில்கள், தேவாலயங்கள் போன்ற பாதுகாப்பான இடங்களில் தங்கியிருக்குமாறு பாதுகாப்புப்படையினர் கேட்டுக் கொள்கின்றனர்' எனக் கொச்சைத்தமிழில் ஒருவர் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருப்பார். அவரது குரலில் பயமுறுத்தும் தன்மையிருப்பதாகத் தோன்றும். இவ்வறிவித்தலைத் தொடர்ந்து எஸ்.ஜானகியின் 'ஊருசனம் தூங்கிடிச்சு ஊதக் காத்துமடிச்சிடிச்சு' என்ற பாடல் ஒலிபரப்பாகும். கிலி கொண்ட நெஞ்சுக்குச் சாந்தி தருவதாய் அப்பாடல் அமைந்திருந்தது. என் வாழ்வில் மறக்க முடியாத பாடலது. இந்தப்பாடலளவிற்கு அந்தக் காலத்தில் வேறுபாடல் என்னைப் பாதிக்கவில்லை. காலப் போக்கில் நிலைமை சுமுகமாகி மீண்டும் பாடசாலை ஆரம்பித்த போது அம்பாலிக்காவும் பாமினியும் வேறு பாடசாலைகளுக்கு மாறிப் போய் விட்டனர். நான் வரைந்த படங்களுடன் இப்போதும் அவர்களது English for me – work books என்னிடம் பத்திரமாக இருக்கிறது.

1988 இல் ஐந்தாம் வகுப்புக்கான புலமைப் பரிசில் பரீட்சை நடந்தது. விக்னேஸ்வராக் கல்லூரிக்குப் போய் எழுதினேன். சித்தியடையவில்லை. அதை வீட்டார் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறியதால் தொடர்ந்தும் ஆறாம், ஏழாம் வகுப்புக்களை ஆண்கள் பாடசாலையிலேயே கற்க வேண்டியிருந்தது. ஆறாம் வகுப்பில் மகாலிங்கசிவம் என்பவர் வகுப்பாசிரியராக இருந்தார். இவர் எனக்கு அயல் வீட்டவர். அதனால் என் மீது மிகுந்த கரிசனை கொண்டிருந்தார். தமிழ் இலக்கணம் கற்பிப்பதில் விண்ணர். எழுத்துப் பிழையைக் கண்டால் பொறுத்துக் கொள்ளமாட்டார். தடியெடுத்து விளாசிவிடுவார். இவரிடம் அதிகம் விளாசல்பட்டவன் நான் தான். மாணவர்களை மக்காள், மகன், மகள் என்றுதான் விழிப்பார். மிகுந்த அர்ப்பணிப்போடு கற்பிப்பார். இவருக்கு பகீரதன், பரந்தாமன், சுமணா, சுவர்ணா எனும் நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். பரந்தாமன் எனது சக வகுப்புத் தோழன் - பிற்காலத்தில் மகாலிங்கசிவம் என்ற ஆசானின் வாழ்க்கை சோகத்தில் முடிந்தது. முதலில் மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்தார். பரந்தாமன் வெளிநாடு செல்வதற்காக வவுனியாவில் போய்த் தங்கியிருந்த போது அவனுக்கு மூளைக்காய்ச்சல் வந்தது. அந்நேரம் சந்தேகத்தின் பேரில் அவனை இராணுவம் கைது செய்து கொண்டு சென்று தாக்கியதில் அவனுக்குப் புத்திபேதலித்தது. மகாலிங்கசிவம் விமானப் பயணம் மேற்கொண்டு பரந்தாமனை வீட்டுக்குக் கூட்டி வந்தார். அவனை நான் பார்க்கச் சென்ற போது எனது நெருங்கிய நண்பனான அவன் என்னை அடையாளங்காண முடியாத அளவிற்கு நோய் தீவிரமாகி இருந்தது. அவர் விடாமுயற்சியால் மகனை பழைய நிலைக்குக் கொண்டு வந்தார். அவன் சிறிது காலம் கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் காரியாலயத்தில் எழுதுநராகக் கடமையாற்றிப் பினனர் வெளிநாடு சென்று விட்டான். அவரது இளைய மகள் எதிர்பாராத விதமாக ஒரு நாள் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டாள். இச்சம்பவத்தால் அவர் முழுமையாக மனவலிமையிழந்து போனார். ஒரு நாள் நான் வீதியில் சென்று கொண்டிருந்த போது எனக்கெதிரே அவர் உந்துருளியில் வந்து கொண்டிருந்தார். அவரை நான் கடந்து செல்ல முற்பட்ட போது தம்பி ஒரு கதை என்றார். நான் திரும்பிப் போய் அவரை நெருங்கினேன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மகளின் நாற்பத்தைந்தாவது நாள் நினைவு தினம் அடுத்தவாரம் வருகுது. நான் கல்வெட்டு ஒண்டும் அடிக்கேல்லை. பேப்பரில மட்டும் படம் போடப்போறன். அதுக்கு ஒரு கவிதை எழுதித் தாரும். பாரதியின் சின்னஞ் சிறுகிளியே சாயலிலை மன துக்கு உருக்கமாய் இருக்க வேணும். நீங்கள் என்ர மாணவன் என்ற உரிமை யிலை கேக்கிறன் என அவர் மிக அடக்கமான குரலில் என்னிடம் வேண்டிக் கொண்டார். நான் ஒரு போதும் நினைவஞ்ச லிக் கவிதை எழுதி அறியாதவன். எனது ஆசானின் விருப்பத்தை நிறைவேற்ற அவர் மகளுக்கான நினைவஞ்சலிக் கவிதையை எழுதி அடுத்தநாளே அவரிடம் சேர்ப்பித்தேன். நினைவு நாளன்று வீட்டிற்கு வரச் சொல்லி அழைப்பிதழ் தந்திருந்தார். மாலை வேளைதான் செல்ல முடிந்தது. தனிமை கவிய வீட்டுக் கூடத்தினுள் அமர்ந்திருந்தார். வாங்கோ தம்பி! நீங்கள் செய்தது பெரிய உதவி! உயிருள்ள வரைக்கும் மறக்கமாட்டேன் என்றார். எனக்கு எதுவுமே சொல்லத் தோன்றவில்லை. வாழ்க்கையில் நான் சுகப்பட்ட நாள்களை விட துக்கமனுபவித்த நாள்களே அதிகம். எல்லாமே முடிஞ்சு போச்சு என விரக்தியாகப் பேசினார். உங்களைப் போல் அர்ப்பணிப்போடும் நேர்மையோடும் கற்பித்தவர் எவருமில்லை. அது பெரும்புண்ணியம் ஐயா என்றேன். அவர் விரக்தியாகச் சிரித்தார். நானும் விடை பெற்று வந்து விட்டேன். அதுதான் நான் அவரை உயிருடன் சந்திக்கும் கடைசிநாள் என்பது அப்போது எனக்குத் தெரியாது. அதன் பின்னர் ஓரிரு கிழமைகளில் அவர் சுகயீனமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறிந்து அவரை மருத்துவ மனைக்குச் சென்று பார்க்க நான் புறப்பட்ட போது அவர் காலமாகி விட்டார் என்ற தகவலே கிடைத்தது. மரண வீட்டிற்குப் போய் வந்தேன். என்னால் இயன்றது அவ்வளவுதான்.

1989 காலப்பகுதியில் பாடசாலையில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தது. பாடசாலை நிர்வாகம் ஆட்களையமர்த்தி உணவு சமைத்து மாணவர்களுக்கு வழங்கத் தீர்மானித்தது. அப்போது ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். பாடசாலையில் பயின்ற மாண்வர்களிலேயே எமது வகுப்புத்தான் சிரேஷ்ட வகுப்பாக இருந்ததால் நாங்களே எல்லா அலுவல்களையும் முன்நின்று செய்ய வேண்டியிருந்தது. அப்போது சமைப்பதற்காகக் கொட்டில் போட்டோம். மாட்டுவண்டியில் போய் கடைகளில் அரிசி, மரக்கறி முதலான பொருட்களை வாங்கி வருவதும் எங்களது வேலையாக இருந்தது. மாட்டுவண்டியில் நானும் சாந்தகுமார், சிவமைந்தன் ஆகிய வகுப்புத் தோழர்களும் போய் வருவோம். சாந்தகுமார் செல்லும் போது பாடிக்கொண்டு வருவான். அது இனிமையான அனுபவம். சாந்தகுமார் ஏழாம் வகுப்போடு படிப்பைக் கைவிட்டுக் கூலிக்காரனாகி விட்டான். அவன் இப்போது மரண வீடுகளில் இரவிரவாகப் பாடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளான். ஆண்கள் பாடசாலையில் என்னைக் கவர்ந்த மற்றொருவர் ஈஸ்வரி ஆசிரியை. இவர் காலஞ்சென்ற மகேஸ்வரி வேலாயுதத்தின் தாயார். வெள்ளைச் சேலையணிந்து நெற்றியில் திருநீறு துலங்க உருத்திராக்க மாலையணிந்து வருவார். இரண்டாம் வகுப்பில் எனக்கு ஆசிரியையாக இருந்தார். எங்களுக்கெல்லாம் உரத்து வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டியவர் இவர் தான். மேலும் சின்னம்மா, ஆச்சி பொன்னம்மா போன்ற ஆசிரியைகளின் தோற்றப் பொலிவும் கண் முன்னே நிழலாடுகிறது. என் வாழ்வில் மறக்க முடியாத இன்னொரு மோசமான ஆசிரியர் வல்லிபுரம் என்பவர். மாணவர் தும்மினால் கூடப் பிரம்பெடுப்பதும் அவர் வழக்கம். அப்போது ஸ்ரீசங்கர் என்ற மாணவன் துன்னாலையிலிருந்து சைக்கிளில் வந்து படித்தான். அப்போது பாடசலைக்குச் சைக்கிளில் வரும் ஒரேயொரு மாணவனும் அவன்தான். அவனது சைக்கிள் சீற் பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். அதன் விளிம்பில் தாலிக்கொடி போன்று பொன்னிறத்தில் அமைந்த ஒரிழை வைத்துத் தைக்கப்பட்டிருந்தது. சிலவேளைகளில் அவ்வேலைப்பாட்டில் இலயித்துச் ஸ்ரீசங்கர் முன்நிலையில் சீற்றின் விளிம்பை நான் வருடிப்பார்ப்பதுண்டு. ஒரு நாள் மதியநேரம் யாரோ பிளேட்டால் அந்தப் பொன்னிற இழையை வெட்டி எடுத்து விட்டார்கள். ஸ்ரீசங்கர் நான் தான் வெட்டியெடுத்து விட்டதாக அழத் தொடங்கினான். எனக்கோ அதிர்ச்சியாகவும் கோபமாகவுமிருந்தது. நான் வெட்டியெடுக்க வில்லை என்று மட்டும் சொன்னேன். அவன் நம்பவில்லை. உடனடியாக ஓடிப்போய் வல்லிபுர வாத்தியாரிடம் முறைப்பாடு செய்து விட்டான். அவர் திக்விஜயம் மேற்கொள்ளும் அரசனைப் போல பிரம்புடன் வந்தார். என்னிடம் எதுவும் கேட்கவில்லை. என்னை இழுத்துக் கண்மண் தெரியாமல் விளாசத் தொடங்கினார். உண்மையில் நானதை எதிர்பார்க்கவில்லை. அவர் அடித்தது வலிக்கவில்லை. செய்யாத குற்றத்திற்கு தண்டனை யனுபவிப்பது தான் வேதனையாக இருந்தது. அவர் என்னை அடித்துக் கொண்டிருக்கும் போதே சிவநேசன் என்ற மாணவன் அந்த வெட்டியெடுக்கப்பட்ட பொன்னிழையோடு ஓடிவந்து 'ஸேர்! இதைச் சிவாச்செல்லையா வெட்டியெடுக்கும் போது நான் பார்த்தேன் என்று கூற வல்லிபுர வாத்தியார் சிவாச் செல்லையாவைத் தேடிப்பிடித்துக் கொண்டு வந்து விளாசினார். அவர் எனக்கு அடித்ததில் வலது காலில் வீங்கிக் கொப்புளமாகி விட்டது. வீட்டிற்கு வந்ததும் அம்மாவிற்குக் காட்டினேன். அம்மா துடித்துப்போனார். அடுத்தநாள் பாடசாலைக்கு என்னுடன் வந்து அதிபரிடம் முறைப்பாடு செய்தார். (அப்போது பாலச்சந்திரன் என்பவர் அதிபராக இருந்தார். இவர் எனது பெரியப்பாவின் சகோதரியின் கணவர்) அதிபர் ஏதோ கூறி வல்லிபுரவாத்தியார் செய்ததுதான் சரியென நியாயப்படுத்தி விட்டார்.

வல்லிபுரவாத்தியார் இப்போது அமரராகி விட்டார். ஆனால் அவரை எப்போதும் ஞாபகப்படுத்தும் விதத்தில் எனது வலது காலில் ஒரு நாணயக் குற்றி வடிவில் தழும் பொன்று இருக்கிறது. வல்லிபுரவாத்தியாரை அடுத்துக் குறிப்பிட வேண்டிய இன்னொருவர் அதிபர் பாலச்சந்திரன். இவர் ஒருநாள் தகுந்த காரணமின்றி என்னை மேடையி லேற்றிக் கன்னங் கன்னமாகப் பதம் பார்த்தார். கை சோர்ந்து போனாலும் பிரம்பாலும் விளாசினார். இதையும் என்னால் மறக்கவே முடியாது. இதெல்லாம் நடந்து முடிந்த பினன்ரே எனக்கு நடந்த அசம்பாவித்திற்கான காரணத்தை ஆராய்ந்த போது அதிபருக்கு நெருக்கமான எனது சக வகுப்பு மாணவர்களான சிவாச்செல்லையா, மிகிந்தன் ஆகிய இருவரும் எனக்கெதிராக அதிபரிடம் பொய்யான முறைப்பாட்டை செய்திருந்தனர் என்பது தெரிய வந்தது. உண்மையில் நான் குற்றமெதுவும் செய்யவில்லையென்பதால் இன்றுவரை எனக்கு இது வலி தரும் சம்பவமாகவே நிலைத்து விட்டது. இப்போதும் இளைப்பாறி விட்ட அதிபர் பாலச்சந்திரனைக் கண்டால் அவருக்குரிய மரயாதையை நான் கொடுக்கவே செய்கிறேன்.

1990 காலப்பகுதியின் ஆரம்பத்தில் விக்னேஸ்வராக் கல்லூரிக்குப் போய் எட்டாம் வகுப்பில் சேர்கிறேன். அப்போது எட்டாம் வகுப்பில் இருந்துதான் தொழில் நுட்பப் பாடங்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம், மனையியல், வர்த்தகம் ஆகிய பாடங்கள் அறிமுகமாகின்றன. வழமையில் விவசாயம் ஆண் பிள்ளைகள் மட்டும் கற்கும் பாடமாகவும் மனையியல் பெண் பிள்ளைகள் மட்டும் கற்கும் பாடமாகவும் இருந்தது. இப்பாடங்களைத் தெரிவு செய்வது கௌரவக் குறைவு என்ற மனநிலை அப்போது மாணவர் மத்தியில் நிலவியதால் அநேகமானவர் வர்த்தகத்தைத் தேர்ந்தெடுக்க முற்பட்ட போது அதைக் கட்டுப் படுத்தும் நோக்கில் பாடசாலை மட்டத்தில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களிரண்டிலும் 35 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவரே வரத்தகத் தைத் தெரிவு செய்யலாம் என்ற விதி நடைமுறைப்படுத்தப்பட்டது. நான் தமிழில் 35 புள்ளிக்கு மேல் பெற்றிருந்தாலும் கணிதத் தில் 17 புள்ளி மட்டுமே பெற்றி ருந்தேன். நான் வேறு பாடசாலை யிலிருந்து சென்றிருந்தமை எனது உண்மையான கணித பாடப்புள்ளி நான் சொன்னா லன்றி எவருக்கும் தெரிய வாய்ப்பில்லை. எனவே எனக்கு கணிதத்திலும் 35 புள்ளிக்கு மேல் எனப் பொய் சொல்லி வர்த்தக பாடத்தினுள் நுழைந்து விட்டேன். முன்னைய பாடசாலையின் தேர்ச்சி சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆனால் கடைசி வரை அதைச் சமர்ப்பிக்காமல் தப்பித்துக் கொண்டேன். எல்லாப் பாடங்களிலும் சராசரியாக புள்ளிகளைப் பெறக் கூடியவனாக இருந்தும் கணிதம் மட்டும் எனக்கு மாயமானாகவே இருந்தது. விக்னேஸ்வராக்கல்லூரி யில் தான் எனது நிலைப்பாட்டை மாற்றியமைக்க கூடிய ஒரு வித்தியாசமான கணித ஆசிரியர் வந்து வாய்த்தார். அவரது பெயர் செல்வரத்தினம். ஆரம்பத்தில் அவரது மகத்துவத்தை நான் விளங்கிக் கொள்ளவில்லை.

விக்னேஸ்வராக் கல்லூரியில் புதுமுக மாணவனாகச் சேர்ந்து நான் கற்கவாரம்பித்த சில மாதங்களிலேயே நாட்டின் அரசியல் சூழல் மோசமடையத் தொடங்கியது. யாழ் கோட்டை மீதான முற்றுகை அப்போதுதான் தொடங்கியது. காலவரை யறையின்றி பாடசாலை மூடப்பட்டது. அப்போது நானடைந்த சந்தோசம் அளப்பரியது. மீளவும் டிசம்பர் மாதமளவில் பாடசாலை தொடங்கிற்று. ஒருவித ஈடுபாடுமில்லாமல் போனேன். பாடங்கள் நடந்தன. பின்னர் ஆண்டிறுதிப் பரீட்சை தொடங்கியது.

ஆங்கிலப் பாடப் பரீட்சை நிகழ்ந்த தினத்தன்று தான் என் வாழ்க்கையே திசைமாற்றக் கூடிய ஒருசம்பவம் தற்செயலாக நடந்தது. நான் அப்போது எட்டாம் வகுப்புக்கான தேர்வை எழுதிக் கொண்டிருந்தேன். அன்றைய தினம் எனக்கு 10.30மணிக்கு ஆங்கிலப் பரீட்சை நடைபெறவிருந்தது. நான் பரீட்சை மண்டபத்திற்குப் போன போது ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு அங்கே பரீட்சை நடந்து கொண்டிருந்தது. அதனால் சக மாணவர்களுடன் வெளியில் காத்திருந்தேன். சற்று நேரத்தில் ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு பரீட்சை முடிந்து அவர்கள் வெளியேறிய போது நாங்கள் உள்நுழைந் தோம். அப்போது ஏழாம் வகுப்பு மாணவியொருத்தி என்னைக் கடந்து போய்க்கொண்டிருந் தாள். அப்படியொரு வனப்பும் அழகும் பொருந்திய பெண்ணை அதற்கு முன் நான் பார்த்த தேயில்லை. அந்தக்கணமே அவள் மீது மனம் சாய்ந்து விட்டது. இயல்பாகவே அந்த வயதில் எவருக்கும் நிகழ்ந்து விடக் கூடிய சங்கதிதான் அது. அன்றைய தினம் மட்டுமல்ல அதற்குப் பின்பான நாட்களெல்லாம் எனக்கு இனிமை நிரம்பியதாகத் தோற்றங் காட்டின. உற்சாகமாகப் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கினேன். படிக்க வேண்டு மென்ற ஆர்வம் கிளர்ந்தது. அப்போது ஒன்பதாம் வகுப்பு ஆரம்பித்தது. அப்போதுதான் உண்மையில் நான் படிக்கத் தொடங்கினேன். கணித பாடத்தின் மாயமான் விளையாட்டுத் தொடர்ந்தது. எவ்வளவு முயன்றும் என்னால் 30 புள்ளிகளுக்குமேல் பெற முடியவில்லை. ஏனைய பாடங்களில் முன்நிலை வகிக்கக் கூடியவனாக வந்து விட்டேன். எப்படியாவது கணித பாடத்தில் சித்தியடைந்தாக வேண்டும் என்ற எண்ணம் வலுத்தது. அப்போது வகுப்பில் செல்வரத்தினம் ஆசிரியர் கணித பாடத்தை மிக எளிமையாக கற்பிக்கக் கூடியவராக இருந்தார். அவர் கற்பிப்பதை கூர்ந்து அவதானிப்பேன். அவரிடம் கணக்குகளைச் செய்து காட்டினேன். திருத்தி ஊக்கமளித்தார். பாடசாலை விடுமுறை நாள்களிலும் வகுப்புக்களை ஒழுங்கு செய்து அவரிடம் கற்றேன். நாளடைவில் கணிதப் பாடத்தில் தீவிர ஆர்வமெடுத்து அதன் விளைவாக தவணைப் பரீட்சைகளில் 40 புள்ளிகளைச் சராசரியாகப் பெற முடிந்தது. பின்னர் பத்தாம் வகுப்புக்கு வந்தபோது முதலாந்தவணைப் பரீட்சையில் கணித பாடத்தில் 30 புள்ளிகள் என்ற நிலைக்குக் கீழிறங்கி விட்டேன். அந்தப் பரீட்சைப் புள்ளிகளை அடிப்படையாக வைத்தே ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மாணவ முதல்வர்களை (Prefects) தெரிவு செய்யப் போவதாக தகவல் கிடைத்தது. என்மீது மிகுந்த அக்கறையுள்ள நண்பனான சுசிகுமார் கணிதத்தில் எனக்கு 30 புள்ளிகள் என்பதால் நான் மாணவ முதல்வனாகத் தெரிவாகும் வாய்ப்பை இழக்கப் போகிறேன் என மனம் வருந்தி இருவரும் கணித பாட ஆசிரியரான செல்வரத்தினத்திடம் சென்று 5 புள்ளிகளைக் கூட்டி 35 புள்ளிகளாக்கி விடும்படி கேட்போம் எனக் கூறி அவரிடம் என்னை அழைத்துச் சென்று 5 புள்ளிகள் கூட்டும் படி கேட்டான். அப்போது அவர் புள்ளிகளைக் கூட்டுவது பிரச்சினையல்ல சுலபமாகக் கூட்டிவிடலாம். ஆனால் பொதுப்பரீட்சையில் புள்ளி குறைந்தால் என்ன செய்வீர்கள்? எனவே இன்னும் முழுமுனைப்போடு பாடத்தில் கவனம் செலுத்தி சித்தியடை வதற்கான புள்ளிகளைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

ஏழாம் வகுப்பு மாணவியொருத்தி என்னைக் கடந்து போய்க்கொண்டிருந்தாள். அப்படியொரு வனப்பும் அழகும் பொருந்திய பெண்ணை அதற்கு முன் நான் பார்த்ததேயில்லை. அந்தக்கணமே அவள் மீது மனம் சாய்ந்துவிட்டது. இயல்பாகவே அந்தவயதில எவருக்கும் நிகழ்ந்து விடக் கூடிய சங்கதிதான் அது. அன்றைய தினம் மட்டுமல்ல அதற்குப் பின்பான நாட்களெல்லாம் எனக்கு இனிமை நிரம்பியதாகத் தோற்றங் காட்டின. உற்சாகமாகப் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கினேன். படிக்க வேண்டுமென்ற ஆர்வம் கிளர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நான் புள்ளிகளைக் கூட்டினால் அது ஒரு மாணவனின் எதிர்காலத்தைப் பாழாக்கியதாகிவிடும். மாணவ முதல்வனாகத் தெரிவாவது முக்கியமல்ல. கணிதத்தில் சித்தியடைவது தான் முக்கியம் என்று சொல்லியனுப்பினார். நான் சிந்தை தெளிந்து இன்னும் முனைப்புடன் கணித பாடத்தில் சித்தியடையும் நோக்கில் செயற்பட்டேன். மாணவ முதல்வனாகத் தெரிவாகவில்லை யெனினும் பொதுப் பரீட்சையில் கணித பாடத்தில் விசேட சித்திபெற்றேன். சிலவேளை நாங்கள் புள்ளிகளைக் கூட்டும் படி கேட்க செல்வரத்தினம் ஆசிரியர் கூட்டியிருந்தால் நான் மாணவ முதல்வனாகத் தெரிவாகியிருப்பேன். ஆனால் கணிதத்தில் சாதாரண சித்தியோ அல்லது சித்தியின்மையோ தான் கிடைத்திருக்கும். அந்தவகையில் செல்வரத்தினம் ஆசிரியர் இன்றும் என் மதிப்பிற்குரியவராக இருக்கிறார். பின்னாளில் ஏற்பட்ட விபத்தொன்றில் மோசமாகப் பாதிக்கப்பட்டு மெதுவாகச் செயற்படுபவராக நலங்குன்றி விட்டாலும் இன்றும் அதே பாடசாலையில் கற்பித்து வருவதோடு என்னைக் காணும் போதெல்லாம் பரிவு காட்டி வருகிறார். சாதாரண தரத்தில் சித்தியடைந்ததும் உயர் தரத்தில் கலைப்பிரிவைத் தெரிவு செய்யத் தீர்மானித்தேன். அப்போது வர்த்தகப் பிரிவைத் தெரிவு செய்வது கத்தி மேல் நடப்பதற்குச் சமமானது. வர்த்தகப்பிரிவில் பல்கலைக்கழக நுழைவிற்கான வெட்டுப்புள்ளிகளை காலத்திற்குக் காலம் உயர்த்திக் கொண்டிருந்தார்கள். எனக்கு பிறேமன் என்றொரு நண்பனிருந்தான். என்னிலும் 4 வயது மூத்தவன். 1991 காலப்பகுதியில் ஹாட்லிக்கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் கற்று பாடாசலை மட்டத்தில் கூடுதல் பெறுபேற்றினைப் பெற்றிருந்தான். (ABCC) அவனுக்குப் பல்கலைக்கழக நுழைவுக்கு அனுமதி கிடைக்குமென்று பாடசாலைச் சமூகம் நம்பியது. அவன்தான் என்னை வர்த்தகப் பிரிவைத் தேர்ந்தெடுக்கத் தூண்டினான். தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களை நாயகர்களாக்கியதும் அவன்தான். ஓய்வான நேரங்களில் அவனிடம் சென்று கணக்கியல் படித்தேன். அவன் கற்பித்த விதம் கணக்கியல் பாடத்தின் மீது தீராத ஆர்வத்தை ஏற்படுத்தி விட்டது. அத்தோடு தனியார் கல்வி நிலையங்களில் வர்த்தகமும் நிதியும் என்ற பாடத்தைக் கற்பித்த இரகுநாதன் மற்றும் பொருளியல் என்ற பாடத்தைக் கற்பித்த ஸ்ரீரங்கநாதன் ஆகியோருக்கு என்னை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தவனும் பிறேமன்தான். எனது உயர்கல்விக் காலத்தில் மறக்க முடியாத நண்பன் பிறேமன். பல்கலைக்கழக நுழைவுக்கான வெட்டுப்புள்ளிகள் வெளிவந்தபோது அவனுக்கு நுழைவு அனுமதி கிடைக்கவில்லையென்பது அவனுக்கு மட்டுமல்ல எனக்கும் இன்று வரை மனவருத்தம் தான். நான் உயர்தரவகுப்பிற்கு வர்த்தகப் பிரிவைத் தேர்ந்தெடுத்ததும் பலர் எச்சரித்தார்கள். நான் மனம் மாறவில்லை. நான் முன்னர் குறிப்பிட்ட பேரழகி அப்போது சாதாரண தரத்தில் படித்துக் கொண்டிருந்தாள். அவளைப் பலர் ஒரு தலையாய்க் காதல் செய்து கசிந்துருகினர். ஆனால் நான் அப்படிக் கசிந்துருக வில்லை. இருந்தாலும் அவளைப் பின்தொடர்ந்து அவளது வீடுவரை செல்வது எனது வழக்கமாயிருந்தது. அவள் யாரையும் நிமிர்ந்தும் பார்க்கமாட்டாள். நாளுக்கு நாள் அவளை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை மிகுந்து ஒரு கட்டத்தில் வெறியாக உருவெடுத்து. அப்போது தவணைப் பரீட்சைக்கான விடைத்தாள்களைத் திருத்திய பின்னர் ஓர் அறைக்குள் கொண்டு போய்க் குவித்துப் பின்னர் நிறைபோட்டு வெளிக்கடைகளுக்கு விற்கும் வழக்கம் பாடசாலையிலிருந்தது. நான் அந்த அறைக்குள் ஒரு நாள் தந்திரமாக நுழைந்து அந்தப் பேரழகியின் விடைத்தாள்கள் அனைத்தையும் பத்திரமாக எடுத்து வந்து விட்டேன். (இப்போதும் அவற்றைக் கோவைப்படுத்தி வைத்திருக்கிறேன்) அவள் எழுத்து என்னை மயக்கியது. ஒவ்வொரு நாள் காலையிலும் அந்த எழுத்தில் கண் விழிப்பதை வழக்கமாக்கிக் கொண்டேன். அவளை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்வதற்கு உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழகத்திற்கு நுழைவு அனுமதி பெறுவது சிறந்த வழியெனத் தோன்றியதால் இரவு பகல் பாராமல் வெறியுடன் படித்தேன். எனது இக்கால வாழ்வில் மறக்க முடியாத ஆசான் விக்கி என்று சுருக்கமாக அழைக்கப்படும் விக்கினேஸ்வரன். அவர் அளவையியலும் விஞ்ஞான முறையும் என்ற பாடத்தைத் தனியார் கல்வி நிறுவனத்தில் கற்பித்து வந்தார். என் பார்வையில் அவரொரு நல்ல உளவியலாளராகவும் இருந்தார். அவர் கற்பிக்கும் போது கவனக் குறைவுடன் இருக்கும் மாணவரை அடையாளப்படுத்தி அம்மாணவர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அச்சொட்டாகச் சொல்லி வியப்பிலாழ்த்துவார். அவர் யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி என சகல இடங்களிலு முள்ள தனியார் கல்வி நிலையங்களில் அளவையியல் கற்பித்து வந்தார். அக்காலப்பகுதியில் தன்னால் கற்பிக்கப்பட்டு வரும் சகல தனியார் நிலையங்களுக்குமான பொதுப்பரீட்சை யொன்றை அளவையியல் பாடத்தில் ஒழுங்கு செய்து நடாத்தினார். தன்னிடம் ஏற்கனவே கற்று பல்கலைக்கழக நுழைவுக்கு அனுமதி பெற்றிருந்த மாணவர் களைக் கொண்டு அப்பரீட்சைக்கான விடைத்தாள்களைத் திருத்துவித்தார். பின்னர் புள்ளிகளைத் தொகுத்துப்பார்த்த போது எதிர்பாராத விதமாக ஒருவருக்கு 95 புள்ளிகள் கிடைத்திருந்தன. அதுவும் நான் கல்வி கற்ற தனியார் கல்வி நிலையத்தில் கற்கும் ஒருவரே அவ்வதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருப்பதாகவும் தெரியவந்தது. விடைத்தாளில் சுட்டிலக்கம் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்ததால் ஆணா பெண்ணா என்பதை உய்த்தறிய முடியவில்லை. குறித்தவொரு தினத்தில் அவர் விடைத்தாள்களுடன் வகுப்பிற்கு வந்தார். அதிகூடிய புள்ளிக்குரிய அந்த விடைத்தாளின் சுட்டிலக்கத்திற்குரியவன் நான்தான் என்றறிந்ததும் அவர் பிரமிப்புடன் என்னைப் பாராட்டி அளவையியல் புத்தமொன் றைப் பரிசாகத்தந்து அந்த மாதத்திற்குரிய தனது பாடத்திற்கான கட்டணத்தையும் என்னைச் செலுத்த வேண்டாம் என்று சொன்னார். அன்று முதல் அவரது அபிமானத்திற்குரிய மாணவனானேன். எனக்குக் கற்பித்த ஆசிரியர்களிலேயே இலக்கியப் பரிச்சயமுடைய ஒருவர் அவர் மட்டும் தான். செங்கையாழியா னின் சிறுகதையொன்றைப் பற்றி வகுப்பிலே கதைத்திருந்தார். எந்தவொரு விடயத்தையும் நுணுக்கமாக விளங்கப்படுத்துவார். தற்புதுமையாகக் கற்பிப்பார். அவரிடம் அளவையியல் கற்க கொடுப்பினை வேண்டும். அது எனக்கு கிடைத்தது.

1996 காலப் பகுதியோடு அவர் வவுனியாவிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். எனக்குப் பல்கலைக்கழக நுழைவு அனுமதி கிடைத்து மூன்றாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்த போது பல்கலைக்கழகம் செல்வதற்காக நெல்லியடி பேருந்து நிலையத்தில் நின்றிருந்தேன். அப்போது எனக்கருகில் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்து நின்று இப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்கிறீர்? என்று கேட்க நிமிர்ந்து பார்த்தேன். விக்கி மாஸ்ரர் சிரித்துக்கொண்டு நின்றார். மெய்சிலிர்த்தேன். பதில் சொன்னேன். நான் பல்கலைக்கழகம் செல்வதற்காக பேரூந்தை எதிர்பார்த்து நிற்பதையறிந்ததும் தானும் யாழ்ப்பாணம் போய்க்கொண்டிருப்பதாகக் கூறி என்னை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றார். வழிப்பேச்சில் நான் கதைகள் புனைவதாகச் சொன்ன போது பெரு மகிழ்வுற்றார். தன்னுடன் பல்கலைக்கழகத்தில் பயின்ற நவமணிதாசன் என்ற மாணவரும் கதைபுனைபவர் என்பதை நினைவு கூர்ந்தார். யாழ்ப்பாண மாணவர்கள் போல் ஆசிரியருக்கு மரியாதை கொடுப்போரை வேறெங்கும் காண முடியாதென்றார். நான் கல்வியங்காட்டுச் சந்தியில் இறங்கி அவரது பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டேன். அவர் அதை எதிர்பார்க்கவில்லை. நெகிழ்ந்து போய் விட்டார். எனக்கோ மனநிறைவாக இருந்தது. இப்போதும் ஆசானுடன் எனக்குத் தொடர்பிருக்கிறது. என்னைப் பாதித்த இன்னும் சில ஆசிரியர்களை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமாக அமையுமென எண்ணுகிறேன்.

நான் கணக்கியலை பாடசாலையில் மகேந்திரா



ரீச்சரிடம் கற்றேன். கணக்கியலில் இவரைப் போன்ற ஆளுமையுள்ள வரைக் காண்பது அரிது. கேட்டல் எல்லை குறைந்தவர். ஒவ்வொரு அலகையும் நுணுக்கமாகக் கற்பிப்பார். கணக்கியல் குறித்த அடிப்படையறிவில்லாமல் இவரிடம் கற்க முடியாது. இவரது கற்பித்தலென்பது எனக்கு பரவசந்தரக் கூடியதாக இருந்தது. என்னை இலகுவாக அடையாளங் கண்டு கொண்ட இவர் பலவழிகளிலும் என்னை ஊக்குவித்துக் கொண்டே யிருந்தார். இவர் எந்தவொரு மாணவனுக்கும் கணக்கியலில் 40 புள்ளிகளுக்கு மேல் வழங்கியது கிடையாது. அவ்வளவு இறுக்கமாக இவரது மதிப்பீடு இருக்கும். எதிர்பாராத விதமாக எனக்கு இவர் 90 புள்ளிகள் வழங்கியிருக்கிறார். இறுதித் தேர்வில் உனக்குக் கணக்கியலில் அதிவிசேட சித்தி கிடைக்கும் என்று அடிக்கடி என்னிடம் சொல்வார். அவர் சொன்னது உண்மையாகிவிட்டது. பாடசாலையில் 5 வருடங்களுக்குப் பிறகு எனக்கு மட்டும்தான் கணக்கியலில் அதிவிடே சித்தி கிடைத்தது. தனியார் கல்வி நிலையத்தில் எஸ்.கே.பிரபாகரன் கணக்கியல் கற்பிப்பதற்கென்றே பிறந்து வந்தவர் போலிருப்பார். அச்செழுத்தும் பிசிறில்லாமல் கோடுகளை வரையும் திறனும் அவருக்கேயுரித்தான தனித்துவம். ஒரு குழந்தைப் பிள்ளைக்கு பாடம் கற்பிப்பது போலக் கற்பிப்பார். அவரது வீட்டிற்குத் (பருத்தித்துறை — வியாபாரி மூலையில் அவரது வீடிருந்தது) தனியொருவனாய்ச் சென்று கற்று வந்தேன். என்னையொரு "நம்பிக்கை நட்சத்திரமாகக் கருதினார். அவரது கற்பித்தல் தான் இப்போது எனது தொழில் வாழ்க்கைக்கு பேருதவி புரிகின்றது. அண்மையில் அவரை நான் கடமையாற்றும் தொழில் நிறுவனத்திற்கு அண்மையில் சந்தித்துக் கதைத்தேன். திரும்பவும் அவரிடம் பாடங்கேட்ட உணர்வு ஏற்பட்டது. உரையாடிக் கொண்டே புன்னகைக்கும் அவரியல்பு இன்றும் மாறவேயில்லை. இவரிலிருந்து சரவணபவன் முற்றிலும் மாறுபட்ட ஓர் ஆளுமை. மிகக் கண்டிப்பானவர். அவரை நெருங்கிக் கதைக்கவே பயமாக இருக்கும். அவர் சிரிப்பதைக் காண்பதே அபூர்வம். கணக்கியல் சரவணபவனிடம் கைகட்டிச் சேவகம் செய்வதாக நான் இப்போதும் நினைக்கிறேன். தலைசுற்ற வைக்கும் கணக்குகளையெல்லாம் உடைத்துப் பிரித்துத் தீர்வு காண இயல்பாகவே என்னைத் தூண்டிவிட்டவர். க.பொ.த உயர்தர இறுதிப் பொதுத்தேர்வு எழுதி முடித்து விட்டுச் சுற்றித்திரிந்த காலம். ஒருநாள் நானும் பிறேமனும் நெல்லியடியில் நின்று கதைத்துக் கொண்டிருந்தோம். அப்போது சரவணபவன் எங்களைக் கடந்து சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் ஓரமாக நின்று என்னைக் கைகாட்டிக் கூப்பிட்டார். போனேன் எப்பிடி கணக்கியல் வடிவாகச் செய்தாயா? எனக் கேட்டார். செய்த தில் திருப்தியில்லை யென்றேன். வினாத் தாளில் வந்த ஒரு கேள்வியைக் குறிப் பிட்டு எனது செய்கை முறையைக் கேட்டார். சொன்னேன். பிற கென்ன உனக்கு கணக்கியல் 'A' தான் என்று கூறிவிட்டுச் சென்றார். அப்போது பிறேமன் சொன்னான். பவன் உன்னைக் கூப்பிட்டு விசாரித்ததே உனக்குக் கணக்கியலில் 'A' கிடைத்தது மாதிரித் தான் என்று. இவை யெல்லாம் என் வாழ்வில் மகிழ்ச்சியான தருணங்கள். கணக்கியல் பாடத்தில் \ ஒற்றைப்பதிவு\ அல்லது நிறைவில் பதிவு' என்றொரு பகுதி இருக்கிறது. இது பின் நவீனத்துவச் சிந்தனைக்கு ஒப்பானது. எனக்கு இப்போதும் கணக்கியலில் மிக விருப்பமான பகுதியென்றால் ஒற்றைப் பதிவுதான். பின்நாளில் புனைகதைகளை வெவ்வேறு வடிவங் களில் எத்தனிப்பதற்கு உதவியதும் இந்த ஒற்றைப் பதிவு மீதான ஈடுபாடுதானெத் தோன்றுகிறது. அவர் தேடலுடன் கூடிய கற்பித்தல் முறையை எனக்கு அறிமுகப்படுத்தினார். பருமனான ஆங்கிலப் புத்தகங்களைக் கொண்டு வந்து காட்டி அவற்றின் முக்கியமான பக்கங்களைக் குறிப்பிட்டு அவற்றிலுள்ள விடயங்களைக் கற்பிப்பார். இவர் ஒரு பொதுப் பரீட்சையை வர்த்தகமும் நிதியும் என்ற பாடத்தில் நடாத்தினார். அப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெறும் மாணவரொரு வருக்கு மாதமொன்றுக்கான கற்பித்தல் கட்டணத்தை இலவசமாக வழங்குவதுடன் பெறுமதி மிக்க பரிசொன்றையும் அளிக்கப் போவதாக அறிவித்திருந்தார். அப்பரீட்சையில் நான் 93 புள்ளிகளைப் பெற்று பரிசுக்குரியவனானேன். அக்காலத்தில் (1994) ஹாட்லிக் கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் கற்ற ஜெகச்செல்வம் என்ற மாணவர் 4A எடுத்து மாவட்ட நிலையில் முதன்மை பெற்றிருந்தார். அவருக்கு பருத்தித்துறை ஞானசம் பந்தர் கலை மன்றம் பாராட்டு விழாவொன்றை நடாத்தியது. அவ்விழாவிற்கு இரகுநாதன் என்னை அழைத்துச்சென்று கலந்து கொள்ள வைத்தார். அவ்விழாவில் நான் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதால் கற்றலில் மேலும் தூண்டப்பட்டேன். இந்தவகை யில் பார்த்தால் இரகுநாதன் எனது நன்றிக்குரியவர். பொருளியல் பாடத்தை ஸ்ரீரங்க நாதனிடம் கற்றேன். மாணவருடன்தோழமை யோடு பழகும் வேறு எவரையும் இவர் போல நான் கண்ட தில்லை. ஒரு முறை இவர் எவ்வித முன்னறி விப்புமின்றி வைத்த பரீட்சையில் நான் 91 புள்ளிகளைப் பெற்றேன். இதனால் அவர் என்னைப் பொருளியலில் ஓர் இளமேதை என எல்லா விடங்களிலும் பரப்புரை செய்யத் தொடங்கிய தால் அவ்வாண்டில் 4A பெறக் கூடிய நம்பிக்கை நட்சத்திரமாகி விட்டேன். எனி னும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் நான் உயர் தரபரீட்சையில் 2ABC என்ற பெறுபேற்றையே பெற முடிந்தது. இது எனக்கு இன்றளவும் வேதனைதான்.

என்னுடன் உயர்தர வகுப்பில் படித்தவர்களெனப் பார்த்தால் பானுகோபன், தயாபரன், பரமசிகாமணி, மு.ராகவன், யோகதாசன், சுதர்சன், லதா, கௌரி, ஸ்ரெலா ஜீவநாயகி, பாரதி, ஜெயந்தி, கோமதி போன்றவர்களைக் குறிப்பிடலாம். 1995 வர்த்தகப் பிரிவு மாணவர்களின் மொத்த எண்ணிக்கையும் இவர்கள் தான். ஸ்ரெலாஜீவநாயகியின் தாய் நாங்கள் உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் கிளாலியூடாகப் பயணம் செய்த வேளையில் படையினரால் நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டார். அழுகிய நிலையிலேயே சடலம் கொண்டு வரப்பட்டது. எங்கள் வகுப்பை மோசமாகப் பாதித்த ஓர் அசம்பாவிதமாக அது இருந்தது. அன்றிலிருந்து ஸ்ரெலா ஜீவநாயகியின் உடன்பிறவாச் சகோதரர்களாக நாங்கள் மாறினோம். லதா எங்கள் வகுப்பில் உயரமானவள். என்னைப் போன்றே படிப்பிலும் கெட்டிக்காரிதான். லதாவுக்கு நான் காதல் கடிதம் எழுதியதாகவும், இவளை உயிருக்குயிராகக் காதலித்து வருவதாகவும் அப்போது ஒரு கதை உலாவியது. இந்தக்கதை எப்படி உருவானதென்பது இன்று வரை எனக்குப் புதிராவேயுள்ளது. பாடசாலை இடைவேளையின் போது நானும் லதாவும் வகுப்பைவிட்டு வெளியேறாமல் இருப்பது வழக்கம். சிலவேளைகளில் பாட அலகுகள் தொடர்பாகக் கதைத்துக் கொள்வதுமுண்டு. எங்களிருவரையும் புலனாய்வு செய்து வந்தவர்களிலிருந்து இந்தக் காதல் கதை தோன்றியிருக்கலாம். இந்தக் கதை உருவாகிச் செழித்து வளரத் தொடங்கியதும் நான் லதாவுடன் கதைப்பதைத் தவிர்த்துக் கொள்வதுடன் இடைவேளை நேரம் வகுப்பறையை விட்டு வெளியேறிச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டேன். இதன் பின்னர் காதல் கதை தேய்ந்து மறைந்தது.

> பேரழகி மீது இந்தளவிற்கு நான் தீவிர ஈடுபாடு கொண்டிருப்பேன் என கனவிலும் நினைக்கவில்லை யெனப் பானுகோபன் சொன்னான். பேரழகியின் மரணச்செய்தியைக் கேள்விப்பட்ட ஏழாவது நாள் சுருக்கிட்டு தற்கொலை செய்வது என முடிவெடுத்த நிலையில் மத்தொனி நூலகத்தில் இரவல் பெற்ற புத்தகங்களையும் திருப்பிக் கொடுத்து விட்டு இறுதியாக ஒரு முறை பெரியம்மா வீட்டிற்கும் போய் வந்து விட்டு இரவில் வீட்டிலுள்ளோர் உறங்கிய பின் தற்கொலை செய்து கொள்வதுதான் என் திட்டம். இதன்படியே மத்தொனி நூலகம் போய் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்து விட்டு எனது அங்கத்துவத்தையும் இரத்து செய்து விட்டு பெரியம்மா வீட்டிற்குப் போனேன். பெரியம்மா தேநீர் தயாரித்துத் தந்தார். மறுக்காமல் வாங்கிக் குடித்தேன்.

அப்போது என்னைக் கவர்ந்த பேரழகி சாதாரண தரப் பரீட்சை எழுதி இருந்தாள். அவள் தொடர்ந்தும் பாடசாலை யில் உயர்தரக் கல்வியைத் தொடர்வாள் என்றே நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவள் பரீட்சையெழுதி முடித்த கையோடு தனது பெற்றோர் வசித்த இடமான மட்டக்களப்பிற் குப் பயணமானாள். அந்தப் பயணம் என்னை மிகவும் பாதித்தது. தொடர்ந்து வந்த நாட்களில் அவளது தந்தையார் மாரடைப் பினால் இறந்து விட்டதாகவும் அவள் இனிமேல் திரும்பி வரமாட்டாள் என்றும் தகவல் கிடைத்தது. இந்தத் தகவலை யெல்லாம் எனக்கு அறிந்து வந்த சொல்பவள் என் வகுப்புத் தோழி பாரதிதான். அவள் என்னைக் கவர்ந்த பேரழகி வசித்து வந்த உறவினர் வீட்டுக்கு அடுத்த வீட்டில் வசித்து வந்தாள். அவளிடம் நான் பேரழகியின் நிழற்பட மொன் றைக் கொண்டு வந்து தரும்படி கேட்டேன். முதலில் மறுத்தவள் சில நாட்களின் பின்னர் கொண்டு வந்து தந்தாள். அதையொரு பொக்கிசம் போல பாதுகாத்து வந்தேன்.

என் முகத்தைக் கண்ணாடியில் பார்த்ததை விடப் பேரழகியின் நிழற்படத்தைப் பார்த்த தடவைகள் மிக அதிகம். அப்போது எனக்கு உற்ற தோழனாக இருந்தவன் பானுகோபன். அவன் உற்ற தோழனாகக் கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். எப்போதும் என் நிழல் போன்று இருப்பான். நகைச்சுவையுணர்வு நிரம்பியவன். என்னை முழுமையாகப் புரிந்து கொண்டவன். உயர்தரப் பரீட்சையெழுதி நாங்கள் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னரும் அவன் என்னுடன் ஆழ்ந்த நட்பினைப் பேணி வந்தான். 1996 ஜனவரியில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாயின. பெறுபேறு பல்கலைக்கழக உள்நுழைவுக்குப் போதுமானதாயிருந்தது. அப்போது வடமராட்சி புலிகளின் கட்டுப்பாட்டினுள்ளிருந்தது. வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து பெருமளவிலானோர் வடமராட்சியில் தங்கிருந்தனர். அவர்களில் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் சிலரும் உள்ளடங்குவர். விசேடமாக ஆங்கில ஆசிரியர்களைக் குறிப்பிடலாம். அவர்களில் சிலர் வடமராட்சியிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் ஆங்கில வகுப்புக்களை நடத்தினர். இவ்வடிப்படையில் 'ரலன்ற்' கல்வி நிறுவனத்தில் (இக்கல்வி நிலையத்தின் இயக்குநரான ராமச்சந்திரன் தினக்குரல் பத்திரிகை நிருபராக இயங்கி வந்தார். 2006 காலப்பகுதிக்கு பின்னர் ஏற்பட்ட அசாதாரணச் சூழ்நிலையின் போது இவர் காணாமல் போய் விட்டார்) பிறிற்ரோ என்பவர் ஆங்கில வகுப்பு நடாத்தி வந்தார். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்களுக்கு நானும் ஜெயமோகன் என்ற நண்பனும் போய்க்கொண்டிருந்தோம். வடமராட்சியை இராணுவம் கைப்பற்றும் வரை பிறிற்ரோவின் ஆங்கில வகுப்புக்கள் நடந்து கொண்டுதானிருந்தன.

1996 பெப்ரவரி மாத நடுப்பகுதியல் என்னைக் கவர்ந்த பேரழகி புலிகளுக்கும் படையினருக்குமிடையில் நடைபெற்ற தாக்குதலில் சிக்குண்டு இறந்து விட்டதாகத் தகவல் வந்தது. முதலில் தகவலை நான் நம்பவில்லை. தகவலை உறுதிப்படுத்திக் கொள்ள பானுகோபனைத் தேடி அவனது வீட்டிற்குப் போனேன். அப்போது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. போட்டியின் நேர்முக வர்ணனையைத் தொலைக்காட்சியில் பார்ப்பதற்காக அவன் எங்கோ சென்று விட்டான். அவன் வரும்வரை காத்திருந்து மாலையில் பானுகோபன் வீடு திரும்பியதும் நான் இத்தகவல் குறித்து அவனிடம் கேட்டபோது அது பொய் என்று சொன்னான். அவன் மழுப்பலாகப் பதில் சொல்வது போலத் தோன்றியது. வீடு திரும்பினேன். அப்போது மத்தொனி நூலகத்தில் புத்தகங்களை இரவல் பெற்று வாசிக்கும் பழக்கமிருந்தது. பெரியம்மா வீட்டிற்கும் (அம்மாவின் இரண்டாவது தமக்கையின் வீடு) அடிக்கடி செல்வேன். பெரியம்மாவின் வீட்டிற்கருகில்தான் அந்தப் பேரழகியின் உறவினர் வீடுமிருந்தது. பெரியம்மா வீட்டிற்குச் சென்றால் பேரழகி குறித்து நான் கேள்விப்பட்ட தகவலின் உண்மைத் தன்மை தெரியவருமென்ற எண்ணத்தில் அடுத்த நாள் மத்தொனி நூலகத்தின் புத்தகங்களை எடுத்துக்கொண்டு பெரியம்மா வீட்டிற்குப் போனேன். அப்போது பேரழகியின் உறவினர் வீட்டில் பெண்கள் சிலர் ஒப்பாரி வைத்து அழும் ஒலி கேட்டது. பெரியம்மாவும் பேரழகி சுடப்பட்டிருந்ததாகச் சொன்னார். மின்னல் தாக்கியது போன்ற அதிர்ச்சி என்பதன் அர்த்தம் எனக்கு அப்போதுதான் புரிந்தது. எப்படியோ வீடு வந்து சேர்ந்து விட்டேன்.

இனி வாழ்வு அர்த்தமில்லையெனத் தோன்றியது. தற்கொலை செய்து கொள்வதெனத் தீர்மானித்தேன். இதற்கிடையில் பேரழகியின் மரணம் குறித்த செய்தியை நான் உறுதிப்படத் தெரிந்து கொண்டேன் என்பதையறிந்த பானுகோபன் என் வீட்டிற்கு வந்து விட்டான். பேரழகியின் மரணம் குறித்த தகவல் இரு தினங்களுக்கு முன்பே தனக்குத் தெரியுமென்றும் எனது நலன் கருதியே அதை மறைத்ததாகவும் என்னிடம் கூறி ஒரு ஞானியைப் போல் எனக்குப் போதனை செய்தான். அவன் சொன்னதெதையுமே செவிமடுக்கும் நிலையில் நானில்லை. மாறாகத் தற்கொலை செய்வதற்கான திட்டத்தை மானசீகமாக வகுத்துக் கொண்டிருந்தேன். எனது செயற்பாடுகள் மூலம் அதனை விளங்கிக் கொண்ட பானுகோபன் சில நாட்கள் இரவும் பகலும் என்னை நிழல் போலத் தொடர்ந்தான். நானொரு மனநோயாளி போல் மாறிவிட்டேன். புழுதியில் விழுந்து புரள்வதையும் வழக்கமாக்கிக் கொண்டேன். நாளுக்கு நாள் மன அழுத்தம் அதிகரித்து வந்தது. பேரழகி மீது இந்தளவிற்கு நான் தீவிர ஈடுபாடு கொண்டிருப்பேன் என கனவிலும் நினைக்கவில்லை யெனப் பானுகோபன் சொன்னான். பேரழகியின் மரணச் செய்தியைக் கேள்விப்பட்ட ஏழாவது நாள் சுருக்கிட்டு தற்கொலை செய்வது என முடிவெடுத்தநிலையில் மத்தொனி நூலகத்தில் இரவல் பெற்ற புத்தகங்களையும் திருப்பிக் கொடுத்து விட்டு இறுதியாக ஒரு முறை பெரியம்மா வீட்டிற்கும் போய் வந்து விட்டு இரவில் வீட்டிலுள்ளோர் உறங்கிய பின் தற்கொலை செய்து கொள்வதுதான் என் திட்டம். இதன்படியே மத்தொனி நூலகம் போய் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்து விட்டு எனது அங்கத்துவத்தையும் இரத்து செய்து விட்டு பெரியம்மா வீட்டிற்குப் போனேன். பெரியம்மா தேநீர் தயாரித்துத் தந்தார். மறுக்காமல் வாங்கிக் குடித்தேன்.

அப்போதுதான் சொன்னார் பேரழகி சுடப்பட்டிருந்த தாகக் கிடைத்த தகவல் பொய்யானது என்று. அப்போது எனது மனத்தில் எழுந்த உணர்ச்சியை விபரிக்க இயலாது. அப்போதெல்லாம் இன்றுள்ளதைப்போல் தொலைபேசி வசதியில்லை. யாழ் மாவட்டத்திற்கு வெளியிலுள்ளவர்களுடன் கதைப்பதென்றாலும் யாழ்ப்பாணத்திற்குச் சென்று ஏதாவது பொது அமைப்புகளின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் தொலைபேசியில் தான் தொடர்புகொண்டு கதைக்க வேண்டும். பேரழகியின் தாய்மாமன் யாழ் போதனா வைத்தியசாலையின் நீர் வழங்கல் பிரிவில் பணியாற்றி வந்தார். அவர் வைத்தியசாலைத் தொலைபேசியில் கொழும்பிலிருந்த பேரழகியின் பெரியப்பாவின் இலக்கத்துடன் தொடர்புகொண்ட போது மறுமுனையில் பதிலளித்தவள் பேரழகிதான். அவளது பெயருடைய இன்னொரு பெண் மட்டக்களப்பில் நடைபெற்ற ஆயுத மோதலில் சிக்குண்டு உயிரிழந்த சம்பவத்தைப் பேரழகியின் தூரத்து உறவினரொருவர் வவுனியாவிலிருந்த போது கேள்விப்பட்டு உண்மையை உறுதிப்படுத்தாமலேயே இங்கிருந்த பேரழகியின் உறவினர்களுக்கு அறிவித்து விட அவர்கள் செத்தவீடு கொண்டாடி எட்டுச் செலவும் செய்துவிட்டார்கள். அந்தியேட்டிக் கிரியை நடத்துவதற்காகவே பேரழகியின் தாய்மாமன் தொலைபேசியில் தொடர்புகொள்ள அவள் உயிருடனிருப்பது தெரியவந்தது. அன்றைய தினம் நான் பெரியம்மா வீட்டிற்குப் போகாமலிருந்திருந்தால் இப்போது நான் இதை உங்களுக்குச் சொல்ல முடியாது போயிருக்கும். அந்த நாள் என் வாழ்வில் மாறக்க முடியாத நாள் அன்று நான் இலங்கைக் கிரிக்கெட் அணி முதன்முறையாக உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. அதை நினைவு கூரும் வகையில் ஐந்து ரூபாக் குற்றியொன்றை அரசாங்கம் வெளியிட்டது. அந்நாணயக்குற்றியும் எனது வாழ்வில் ஒரு நினைவுச் சின்னமாகிவிட்டது. அந்தச்சம்பவம் நடந்த பின்னர் பானுகோபன் பேரழகி மீது நான் கொண்ட ஈடுபாட்டினை நன்குணர்ந்து கொண்டான். 1997 காலப்பகுதியில் பானுகோபன் பிரான்ஸிற்குச் செல்லும் நோக்குடன் கப்பலில் கொழும்புக்குப் பயணமானான். அக்காலப்பகுதியில் எனது இளையண்ணாவும் கொழும்பில் வெளிநாடு செல்வதற்காகத் தங்கியிருந்தார். நான் அவருக்குப் பேரழகியின் விடயம் குறித்து ஆதியோடந்தமாக ஒரு கடிதம் எழுதி பானுகோபனிடம் கொடுத்து விடிகாலையில் அவனைப் பருத்தித்துறைத் துறைமுகத்தில் கப்பலேற்றியனுப்பி னேன். இளையண்ணாவிடம் தானும் நேரடியாகப் பேரழகியின் விடயங் குறித்துக் கதைப்பதாக உறுதியளித்து பானுகோபன் கிளம்பிப் போனான். அவன் சென்று ஓரிரு மாதங்களில் இளையண்ணாவிடம் கடிதத்தைக் கொடுத்து விடயத்தைக் கூறிவிட்டதாகவும் பானுகோபன் கடிதம் அனுப்பியிருந்தான். அக்காலப்பகுதியில் பேரழகியும் கொழும்பிலுள்ள தனது பெரியப்பா வீட்டில் தங்கிப் படித்து வந்தார். எனது கடிதம் கிடைத்த போது இளையண்ணா அவளைப் போய் நேரடியாகச் சந்தித்துக் கதைத்த போது அவள் எனக்கு யாரையும் திருமணம் செய்யும் எண்ணமில்லையெனக் கூறியதாகவும் தேவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாத விடயங்களில் கவனம் செலுத்துவதைத் தவிர்த்து பல்கலைக்கழகம் செல்வதற்கான ஏற்பாட்டினைக் கவனிக்கு மாறும் இளையண்ணா எனக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். எனினும் நான் மனந்தளர்ந்து விடவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் எனக்குப் பேரழகியின் கொழும்பு முகவரி கிடைத்தது. வெறிபிடித்தவன் போல் விரலைக் கிழித்து இரத்தத்தில் கடிதம் எழுதி அவளுக்கு அனுப்பினேன். சில நாள்களில் எனக்குப்பதில் வந்தது. சம்மதமோ மறுப்போ தெரிவிக்காமல் பதில் எழுதியிருந்தாள். அப்போது எனக்குப் பல்கலைக்கழகமும் தொடங்கிவிட்டது. இதெல்லாம் 1997 காலப்பகுதியில் நடந்த சங்கதிகள். 1998 நடுப்பகுதியில் நான் சற்றும் எதிர்பார்த்திராத வகையில் பேரழகி என் வீடு தேடி வந்து சந்தித்தாள். 1999 டிசம்பர் மாதம் பதிவுத் திருமணம் செய்து கொண்டோம். 2000 காலப் பகுதியின் நடுப்பகுதி வரை நான் எனது வீட்டிலும் அவர் தனது சிற்றன்னை வீட்டிலுமாக வசித்து வந்தோம். பின்னர் அவள் எனது வீட்டிற்கே வந்து விட்டாள். 2011 ஜனவரி மாதம் ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின் சம்பிரதாயபூர்வமாகத் தாலி கட்டித் திருமணம் செய்து கொண்டோம். எல்லாமே கனவு போல நடந்து முடிந்து விட்டது. இப்போதும் பானுகோபன் நண்பனாகக் கிடைத்து எனது பெரும்பாக்கியமெனவே கருதுகிறேன்.

**● அதிகாலை 2.30 வரை வாசிக்கின்ற ஒழுங்கு, தினமும் எழுதுவதற்கென்று குறிப்பிட்ட நேரம் ஒதுக்குதல், ஓய்வு நாளில் பகற்பொழுதில் வாசித்தல் என்ற திட்டமிட்ட முறையில் இயங்குகின்றீர்கள். ஒரு சஞ்சிகை கிடைத்தால் அன்றிரவே படித்து நிறைவு செய்து விடுகிறீர்கள். நேரகுசிகைப் படி இயங்குதல் பாடசாலை நாட்களில் ஏற்பட்டதா? அல்லது நீங்களாகவே இந்த ஒழுங்கினுள் இயங்கி வருகின்றீர்களா? அல்லது எவராவது தூண்டுதலாக இருந்துள்ளனரா?**

★ இந்த விடயத்தில் எனது பெரியண்ணாதான் தூண்டுத லாக இருந்தார். எண்பதுகளின் பிற் பகுதிகளில் தனியார் கல்வி நிறுவனத்தில் வர்த்தகமும் நிதியும் என்ற பாடத்தைக் கற்பிப்பதில் அவர் புகழ் பெற்றவராக இருந்தார். அடுத்தநாள் கற்பிக்க வேண்டிய பாட அலகை இரவிரவாகக் கண் விழித்துத் தயார்ப்படுத்திக் கொண்டிருப்பார். உறக்கம் வந்தால் குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவி மீண்டும் தயார்ப்படுத்தலைத் தொடருவார். அவர் இரவில் படுக்கை விரித்துப் படுத்ததை ஒரு போதும் நான் கண்டதில்லை. காலப்போக்கில் அவருடன் சேர்ந்து நானும் படிக்கத் தொடங்கினேன். மெல்ல மெல்ல உறங்குவதற்குச் செலவிடும் நேரத்தைக் குறைத்துக் கொண்டேன். பெரியண்ணா 1990களின் பிற்பகுதியில் நாட்டை விட்டு வெளியேறினார். நான் தனித்துப் போனேன் எனினும் விழிப்பு நிலை குலையவில்லை. இது பாடசாலைக் காலங்களி லும் பல்கலைக்கழகக் காலங்களிலும் கற்பதற்கு பேருதவியாக இருந்தது. தொடர்ந்து இலக்கிய ரீதியாக வாசிக்கத் தொடங்கியதும் அதே நடைமுறையைப் பின்பற்றுவதில் சிரமமேதுமிருக்கவில்லை. இதை இப்போதும் தொடர்ந்தும் பின்பற்றி வருகிறேன். பகற்பொழுதிலும் உறங்குவதற்கு அவகாசங் கிடைத்தால் கூட எதையாவது வாசித்துக் கொண்டிருப்பேன். எனது வாழ்வின் இறுதி எல்லை வரை இது தவிர்க்க முடியாதது.

**● பொதுவாக வாசிப்பதும் எழுதுவதும் எந்த நேரத்தில்? உங்களது வீட்டுச் சூழல் எழுதுவதற்கு எத்தகைய சாதகமான தன்மையைக் கொண்டுள்ளது?**

★ எழுதுவதற்கு இரவு 11 மணியிலிருந்த 12.30 மணி வரை வசதியாக அமைகிறது. நேரங் கிடைக்கும் போதெல்லாம் வாசிக்கிறேன். விடுமுறை நாளின் பகற்பொழுது முழுவதும் வாசிப்பதிலேயே கழியும். தவிரவும் ஒவ்வொரு நாளிலும் அதிகாலை 2.30 மணி வரை வாசிப்பு நீள்வதையும் தவிர்க்க முடியவில்லை. மேலும் வீட்டுச் சூழலைப் பற்றிக் கேட்கிறீர்கள் எனக்குத் தீவிரமான 'Home sick' இருக்கிறது. 1997 காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் வரை இது எனக்குத் தெரியாது. காரணம் அதற்கு முன் வீட்டிலிருந்து வெளியேறிப் பிறிதோரிடத்தில் வசிக்கும் நிலைமை எனக்கேற்படவில்லை. 1987 காலப்பகுதியில் வடமராட்சியில் 'லிபரேசன் ஒபரேசன்' இராணுவ நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது. அப்போது நாரஹேன் பிட்டியில் அப்பா வேலை செய்து கொண்டிருந்தார். நிலைமை மோசமானதும் அண்ணாக்கள் இருவரும் நாரஹேன் பிட்டிக்குப் போய் விட்டார்கள். அம்மாவும் நானும் தான் வீட்டிலிருந்தோம். அயலவர்கள் முழுப்பேருமே தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து விட்டார்கள். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் மீதான மில்லரின் கரும்புலித் தாக்குதலின் போதும் நாங்கள் இடம்பெயராமல் வீட்டில் தான் இருந்தோம். 1996 யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய போது அநேகர் வன்னிக்கு இடம் பெயர்ந்தனர். குறிப்பாக இளவயதினர் பெருமளவில் வன்னிக்குச் சென்றனர். அப்போது நான் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற நிலையில் இருந்தேன். எனது சித்தி யோகபுரம் - மல்லாவியில் இருந்தார். அம்மா என்னை மல்லாவிக்குப் போகும்படி சொன்னார். நான் போகவில்லை. என்ன நிகழ்ந்தாலும் வீட்டுச் சூழலை விட்டு இடம் பெயரும் மனநிலையில் நானிருந்ததில்லை. அந்தளவுக்கு என் வீட்டுச் சூழல் என்னை ஈர்த்து வைத்துள்ளது. நீங்களும் இராமரூபனும் என் வீட்டுக்கு வந்தபோது நேரிடையாக இதை உணர்ந்திருப்பீர்கள். இந்த வீட்டில் மனிதர் வாழ முடியாது என்று சொன்னவர்களும் இருக்கிறார்கள். 1954 காலப் பகுதியில் கட்டப்பட்ட வீடு இன்னும் எந்தவொரு மாற்றத்திற்கு முள்ளாகாமலிருக்கிறது. ஏதோவொரு சந்தர்ப்பத்தில் வசித்தவர்களெல்லோரையும் இந்த வீடு வெளியேற்றி வந்திருக்கிறது. ஆனால் என்னை மட்டும் வெளியேற்றிய தில்லை. இப்போதும் வீட்டில் யாருமில்லை என்னைத் தவிர. இந்தத் தனிமையில் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் இந்த வீட்டுச் சூழலைப் போல் வேறிடம் கிடையாது. 1997 தொடங்கி 2001 வரை யாழ் பல்கலைக்கழகத்தில் பயின்றேன். தவிர்க்க முடியாமல் 2 வருடங்கள் மட்டுமே அறை எடுத்துத் தங்கியிருந்தேன். இந்தளவுக்கு வீட்டுச் சூழல் என்னை ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

**● தேர்ந்த வாசகன் என்ற வகையில் எஸ்.பொவின் வரலாற்றில் வாழ்த்தலையும் அ. முத்துலிங்கத்தின் உண்மை கலந்த நாட்குறிப்பு இரண்டையும் எப்படிப் பார்க்கிறீர்கள்? எஸ்.பொவின் வரலாற்றில் வாழ்தல் நோபல் பரிசுக்குத் தகுதியான படைப்பு என்று கோவை ஞானியால் விதந்து ரைக்கப்பட்டது. அதேவேளை உண்மை கலந்த நாட்குறிப்பு நாவல் அல்ல என்றும் கட்டுரைகளின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொகுப்பு என்றும் நகைச்சுவை உணர்வைத் தரும் படைப்பை சிறந்த நாவலாகக் கருத முடியுமா என்ற கருத்தும் முன் வைக்கப்படுகிறது?**

★ 'வரலாற்றில் வாழ்தல்' மூலம் எஸ்.பொ. 'நான் ஒரு சர்வ வல்லமை பொருந்திய படைப்பாளி என்ற மாயப் படிமத்தை உருவாக்குவதில் முழுமுனைப்புடன் எத்தனிக்கிறார். அவரைப் பற்றிய முன்னறிமுகமில்லாதவர்கள் பிரமிக்கவே செய்வர். அது தவிர்க்க முடியாததுங் கூட. கோவை ஞானியும் இந்த முன்னறி முகமில்லாதவர்களில் ஒருவர் தான். எனவே வரலாற்றில் வாழ்தல் நோபல் பரிசுக்குத் தகுதியான படைப்பு எனக் கோவைஞானி நயந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் 'வரலாற்றில் வாழ்தல்' போன்ற புனைவு சாராப் பிரதிகளில் உள்ளதை உள்ளவாறு நேர்மையாகப் பதிவு செய்வது முக்கியமானதும் அவசியமானதுமாகும். எஸ்.பொ. வின் விசுவாசிகள் சிலர் அவரது திருமணம் எவ்வாறு நிகழ்ந்ததென ஆதியோடந்தமாய்க் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் வரலாற்றில் வாழ்தலில் அவர் திருமணம் நிகழ்ந்த கதையைக் குறிப்பிடும் விதம் அவரது விசுவாசிகள் கூறியதற்கு முற்றிலும் எதிராக அமைந்திருக்கிறது. எஸ்.பொவின் எதிரிகள் பொய் கூறலாம். விசுவாசிகள் பொய் கூறுவார்களா? புனைவை உண்மையாக்குவதும் உண்மையைப் புனைவாக்குவதும் எஸ்.பொ.வின் தனித்துவம் போலும் 'நிலவிலே நடந்தது' எனும் அவரது சிறுகதையும் 'தீ' என்ற நாவலும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் எனக் கருதுகிறேன். வரலாற்றில் வாழ்தலை விட 'நனவிடை தோய்தல்' ஓரளவுக்கு நேர்மையான பதிவெனக் கொள்ளலாம். அ. முத்துலிங்கத்தின் உண்மை கலந்த நாட்குறிப்பு தலைப்பளவிலும் நேர்மையானது. ஒவ்வொன்றையும் நுட்பமான மொழியில் பதிவு செய்கிறார். இது நாவலா இல்லையா என்பதைக் காலந்தான் தீர்மானிக்க வேண்டும். நகைச்சுவையுணர்வு மிகுந்த கலையில் பார்த்தால் முத்துலிங்கம் தனித்துவமானவர். உண்மை கலந்த நாட்குறிப்பில் வரும் தொண்டரம்மானைப் பற்றிய குறிப்பு என் வாழ்வில் மறக்க முடியாதது. கவிதை, சிறுகதை, நாவல் என எல்லா விதக் கலைப்படைப்புக்களுக்குமான எல்லை தகர்ந்து வரும் நிலையில் 'உண்மை கலந்த நாட்குறிப்பு' நாவல் அல்லவெனக் கூறிவிட்டு ஒதுங்கி விடவும் முடியாது. பொய்யும் புறணியும் நிறைந்த படைப்புக்களைத் தேர்ந்தெடுத்து நோபல்பரிசு வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தால் எஸ்.பொ. வரலாற்றில் வாழ்தலுக்காகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவார் என்பது நிச்சயமானது என்பதையும் இத்தருணம் குறிப்பிட அவாவுகிறேன்.

● **கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் வெளிவந்த நாவல்கள், சிறுகதைத் தொகுப்புக்கள், கட்டுரைத்தொகுப்புக்கள் முதலானவற்றில் உங்களைக் கவர்ந்த படைப்புக்கள் பற்றி?**

★நாவல் வரிசையில் கோணங்கியின் பிதிரா. எஸ். ராமகிருஷ்ணனின் நெடுங்குருதி, உறுபசி. சாருநிவேதிதாவின் ராஸலீலா. ஜெயமோகனின் கொற்றவை. ஜோடி குரூஸின் ஆழிசூழ் உலகு. பி.ஏ கிருஷ்ணனின் புலிநகக் கொன்றை. இமயத்தின் ஆறுமுகம், கோவேறு கழுதைகள், செடல். யுவன் சந்திரசேகரின் குள்ளச் சித்தன் சரித்திரம், பகடையாட்டம். எம்.ஜி.சுரேசின் யுரேகா என்றொரு நகரம், '37', சிலந்தி, அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சில. உமாமகேஸ்வரியின் யாரும் யாருடனும் இல்லை. சல்மாவின் இரண்டாம் ஜாமங்களின் கதை. சூத்ரதாரியின் அம்மன் நெசவு. ராஜ்கௌதமனின் சிலுவை ராஜ்சரித்திரம், காலசுமை. ச. பாலமுருகனின் சோளகர் தொட்டி. பா.வெங்கடேசனின் தாண்டவராயன் கதை. பிரேம் - ரமேசின் சொல் என்றொரு சொல் முதலானவை.

சிறுகதை வரிசையில் எஸ்.ராமகிருஷ்ணனின் வெயிலைக் கொண்டு வாருங்கள். கோணங்கியின் சலூன் நாற்காலியில் சுழன்றபடி. யுவன் சந்திரசேகரின் ஏற்கெனவே. சாருநிவேதிதாவின் மதுமிதா சொன்ன பாம்புக்கதைகள். பா. வெங்கடேசனின் ராஜன்மகள். பிரேம் ரமேசின் முன்னொரு காலத்தில் நூற்றியெட்டுக்கிளிகள் இருந்தன. சுரேஸ்குமார் இந்திரஜித்தின் மாபெரும் சூதாட்டம். ஜெயமோகனின் கூந்தல் முதலானவையும் கட்டுரை தொகுப்புக்களை நான் மிகக் குறைந்தளவில் வாசித்திருந்தாலும் ஆ.இரா. வேங்கடாசலபதி யின் முச்சந்தி இலக்கியம். ச. தியடோர்பாஸ்கரன் தொகுத்த சித்திரம் பேசுதடி. அ. ராமசாமியின் தமிழ் சினிமா கட்டுரைத்தொகுப்பான ஒளிநிழல் உலகம். சின்னக் குத்தூசியின் பூமாலை. செவித்திறன் குறையுடைய ஒருவரைப் பேச வைத்த ஓர் உண்மை வாழ்க்கை அனுபவமான 'மௌனச் சுவர்களுக்கு அப்பால்...', டி.கே. ரகுநாதன் மொழிபெயர்த்த 'கிம்நாட்டின்' இந்துமதம் - மிகச் சுருக்கமான அறிமுகம். வாய்மையின் வெற்றி (ராஜிவ்காந்தி படுகொலை பற்றிய டி.ஆர். கார்த்திகேயனின் புலனாய்வு அனுபவம்). பா. ராகவனின் பாக் ஒரு புதிரின் சரிதம். சேரனின் உயிர்கொல்லும் வார்த்தை. எஸ் ராமகிருஷ்ணனின் துணையெழுத்து. எஸ். பாலச்சந்திரன் மொழி பெயர்த்த சூரியனைத் தொடரும் காற்று (அமெரிக்கக் கைதி சூ 89637 – 132 லியோனார்ட் பெல்டியர் சிறை வாழ்க்கை அனுபவம்) ஆர். ஆர். சீனிவாசன் தொகுத்த ஜான்ஆபிரஹாம் கலகக்காரனின் திரைக்கதை, நளினி ஜமீலா (ஒரு பாலியல் தொழிலாளியின் சுயசரிதை) ராஜ்கௌதமனின் 'பொய் அபத்தம் ஸ்ரீ உண்மை' , எஸ்.வி ராஜதுரையின் பூர்திபுவும் மார்க்சியமும் , ஜெயகாந்தனின் ஓர் இக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள், கண்ணன் தொகுத்த போரும் - வாழ்வும் (ஈழம் - காலச்சுவடு பதிவுகள் 2008 – 2009) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

● **ஈழத்தில் வெளிவந்த படைப்புக்களில் உங்களைக் கவர்ந்தவை?**

★ ஈழத்தில் வெளிவந்த படைப்புக்களில் என்னைக் கவர்ந்தவை வெகு சொற்பம். மு. தளையசிங்கத்தின் 'மெய்யுள்', மு. பொவின் 'நோயில் இருத்தல்' , 'சூத்திரர் வருகை' 'விசாரம், 'ஊஞ்சல் ஆடுவோம்', முடிந்து போன தசையாடல் பற்றிய கதை', ரஞ்சகுமாரின் 'மோகவாசல்', எஸ்.கே விக்கினேஸ்வரனின் 'உங்களுக்கும் குழந்தைகளுக்குமிடையில்' உமாவரதராஜனின் 'உள்மனயாத்திரை', 'மூன்றாம் சிலுவை' குப்பிழான் ஐ. சண்முகனின் 'கோடுகளும் கோலங்களும்', ஞானரதனின் 'புதியபூமி', அ.பாலமனோகரனின் 'நிலக்கிளி', சோலைக்கிளியின் 'பனியில் மொழி எழுதி', திசேராவின் 'கபாலபதி' , 'வெள்ளைத்தோல் வீரர்கள்' , 'ஏவிவிடப்பட்ட கொலையாளி ' , அம்ரிதா ஏயெம்பின் 'விலங்குகள் நடத்தை தொகுதி ஐ.கோவிந்தனின் 'புதியதோர் உலகம்', ராஜினிதிரணகம


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலானோர் பதிவு செய்து தொகுத்த 'முறிந்த பனை' சேரன் முதலானோர் தொகுத்த மரணத்துள் வாழ்வோம்', கௌரிபாலனின் 'ஒப்பனை நிழல்' , ஹசீனின் 'சிறியதும் பெரியதுமான எட்டுக் கதைகள்', அலறியின் 'பறவையைப் போல சிறகடிக்கும் கடல்' அபாரின் 'இடிவிழுந்த வம்மி', ஓட்டமாவடி அறபாத்தின் ' நினைந்தழுதுல்' , 'ஆண்மரம்' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### ● உங்களை ஆகர்ஷித்த எழுத்தாளர்கள் இருந்தார்களா?

★ 1990 காலப் பகுதியில் நான் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போதே வாசிப்புப் பழக்கம் மெது மெதுவாக ஏற்படத் தொடங்கி விட்டது. கரவெட்டி மத்தொனி கலைவாணி சனசமூக நிலையத்தில் 5 ரூபா செலுத்தி நான்கு புத்தகங்களை இரவல் எடுத்து ஒரு கிழமைக்கு வாசிக்க முடியும். நானும் 5ரூபா செலுத்தி அத்திட்டத்தில் சேர்ந்து புத்தகங்கள் எடுத்து வாசித்து வந்தேன். அப்போது தான் மோகவாசல் என்னிடம் வந்து சேர்ந்தது. ரஞ்சகுமாரின் போட்டோவை மோகவாசலில் பார்த்ததுமே ஈர்ப்புக்குள்ளா னேன். அத்தொகுதியில் உள்ளடங்கிய கோசலை, கோளறு பதிகம், காலம் உனக்கொரு பாட்டெழுதும் என ஒவ்வொருகதையுமே நெருக்கமாகி விட்டது. அக்காலச் சூழலை நுணுக்கமாகப் பிரதிபலித்த அக்கதைகள் என்னை வியப்பிலாழ்த்தின. அக்கதைகளுக்குள்ளேயே நான் வாழ்ந்து கொண்டிருப்பதாக கருதத் தொடங்கினேன். இன்று கூட நான் மோகவாசலின் பாதிப்பிலிருந்து விடுபட்டதாகச் சொல்ல முடியாது. அந்தளவிற்கு ரஞ்சகுமார் என்னை ஈர்த்துக் கொண்டார். பின் நாட்களில் அவருடன் நெருக்கமானதும் அவருடன் ஒன்றாக உறங்கியதும் ஒரு கனவு சம்பவித்ததைப் போல் இருக்கிறது. அவர் சிகரெட் பற்ற வைத்துக் கொள்வதைப் படமெடுக்க வேண்டும் என விரும்பினேன். கை கூடவில்லை. ரஞ்சகுமாரின் சித்தி மகன் ஆதி எனக்கு நண்பனான போது 'உன்னைப் பார்க்க ரஞ்சண்ணாவை இளமையில் பார்த்த சாயலடிக்கிறது' என்றான். செம்பியன் செலவன் என்னை முதன் முதலாகப் பார்த்த போது 'ரஞ்சகுமாருக்கு நெருங்கிய உறவினரா நீங்கள்?' எனக் கேட்டார். ரஞ்சகுமாரின் வீட்டுக்கு முதன் முதலாக நான் போன போது என்னைப் பார்த்த அவரது மகள் 'சித்தப்பாவைப் போலிருக்கிறார்' (ரஞ்சகுமாரின் சொந்தத் தம்பியைப் போல்) என்று சொன்னதாக ரஞ்சகுமாரே என்னிடம் சொல்லியிருக்கிறார். இதெல்லாம் உண்மையில் என்னை வியப்பிலாழ்த்தின. கோணங்கியின் 'பாழி' யை நான் வாசிப்பதற்காகத் தேடிக் கொண்டிருப்பதாக ரஞ்சகுமாரிடம் சொன்ன போது தனது நூலகத்தின் புத்தக அடுக்கிலிருந்து 'பாழி'யை உருவியெடுத்து அன்பின் நண்பன் இராகவனுக்கு — ரஞ்சகுமார் என எழுதி எனக்கே அன்பளிப்பாகத் தந்துவிட்டார் என் வாழ்வில் என்றும் ஒரு கதாநாயகன் போல் நிலைத்திருக்கக் கூடியவர் என்றால் அது ரஞ்சகுமார் தான். இந்த ஈர்ப்புக்கு நாமிருவரும் கரவெட்டியில் பிறந்து வளர்ந்ததும் ஒரு காரணமாகலாம்.

அடுத்து ஞானரதனை முக்கியமாகக் குறிப்பிட்டாக வேண்டும். ஞானரதனோடு நான் நெருக்கமாவதற்குக் குப்பிழான் ஐ.சண்முகனே காரணம். நான் 'மூக்குப் பேணி' குறும்படமெடுக்கும் வேலையைத் தொடங்கிய போது 'நீ கட்டாயம் ஞானரதனைச் சந்திக்க வேண்டும்' எனக் கூறிச் சண்முகனே என்னை ஞானரதன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அப்போது ஞானரதன் உடுப்பிட்டிச் சந்திக்கருகிலுள்ள தனது வீட்டில் வசித்து வந்தார். நான் அவரைச் சந்தித்த போது ஈழத்துத் தமிழ் சினிமாவில் முக்கியமான 'காற்றுவெளி', 'முகங்கள்' ஆகிய இரு திரைப்படங்களை இயக்கி முடித்திருந்தார். எனினும் அற்கான எந்தவொரு சுவடும் அவருடனான எனது முதற் சந்திப்பில் வெளிப்படவில்லை. ஈழத்து நாவல் வரலாற்றில் 'புதியபூமி' என்ற முக்கியமான நாவலையும் ஞானரதன் எழுதியிருந்தார். இயக்குநர் பாலுமகேந்திரா மட்டக்களப்பிலிருந்து 'தேனருவி' என்ற சஞ்சிகையை வெளியிட்ட போது அதில் கோட்டுருக்களையும் ஓவியங்களையும் ஞானரதன் வரைந்திருக்கிறார். மு.தளையசிங்கத்தன் 'போர்ப்பறை'க்கு அட்டைப்படம் வரைந்தவரும் இவர்தான். வாய் ஓயாமல் வெற்றிலைமென்று கொண்டிருக்கும் என்னை ஞானரதனுடன் நெருக்கமாக்கியது அவரும் வெற்றிலை மென்று கொண்டிருப்பவர் என்ற இயல்புதான். வெற்றிலை போடுவியா? அப்ப நீ என்ர கட்சி தான் என்ற சொல்லிப் பூரிப்பார். நான் முதற் சந்திப்பிற்குப் பிறகு அடிக்கடி அவரிடம் செல்வேன். நான் சென்றதும் அவர் மயூ! வெத்திலைத் தட்டத்தைக் கொண்டுவா என்று ஏவுவார். இருவரும் வீட்டுக்குப்பின்புறம் உள்ள **ஓத்தாப்பிற்கு** போய்விடுவோம் அவர் தனது படங்களின் ஒவ்வொரு காட்சியையும் எவ்வாறு படமாக்கினாரென்பதை நுணுக்கமாக விளக்குவார். அந்தப் பொழுது எவருக்கும் வாய்த்திராதது. எனது குறும்படவாக்கத்திற்கு அவர் தனது படப்பிடிப்புக் கதையொன்றை மனமுவந்தளித்தார். சினிமா தொடர்பில் எந்தவொரு நுட்பமும் தெரிந்திராத என்னால் அவரது படிப்பிடிப்புக் கதையின் உதவியில்லாமல் ஓரளவிற்காவது நேர்த்தியான 'மூக்குப்பேணி' என்ற குறும்படத்தை உருவாக்குவது சாத்தியமாகியிருக்காது. இத்தனைக்கும் அவர் சினிமா குறித்து நான் முன் வைத்த கருத்துக்களைப் பெரிதும் மதித்தார். அக்காலப் பகுதியில் பொ. ஐங்கரநேசன் தினக்குரல் பத்திரிகையில் ஞானரதனை ஒரு நீண்ட நேர்காணல் செய்த போது சினிமாவைக் குறித்து முக்கிய விமர்சகர்களாகத் தன்னால் கருதப்படுவோரென அவர் குறிப்பிட்டிருந்த பெயர்களில் எனது பெயரும் உள்ளடங்கியிருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தேன். பின்நாளில் ஞானரதன் 'மேடை' என்றொரு முழு நீளத் திரைப்படத்துக்கான திரைக்கதையை எழுதி என்னிடம் சேர்ப்பித்து அதற்கொரு விமர்சனக் குறிப்பை எழுதித் தருமாறு குப்பிழான் ஐ. சண்முகன் மூலமாகக் கொடுத்தனுப்பியிருந்தார்.

அத்திரைக்கதை ஒரு காலத்தில் மேட்டுக்குடியினர் பாடசாலைக்குத் தங்கள் பிள்ளைகளை காரில் அனுப்பும் நடைமுறையினைப் பிரதிபலிப்பதாகத் தொடங்கி அவ்வாறான தொரு பெண் பிள்ளைக்கும் கார்ச் சாரதிக்குமிடையிலான காதல் மலர்ந்து அப்பிள்ளை வீட்டாரை எதிர்த்து கார்ச் சாரதியுடன் ஓடிப் போய் திருமணம் செய்து பிள்ளைகள் பிறந்து அதிலொரு பிள்ளை இயக்கத்துக்குப் போய் மாவீரராவதைப் பற்றியது. நான் அத்திரைக்கதை தொடர்பில் எனது மனப்பதிவினை எழுதி அப்போது நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருந்த சண்முகனிடம் சேர்ப்பிக்கச் சென்றேன். அந்நேரம் பாடசாலை இடைவேளை சண்முகன் சிற்றுண்டிச்சாலையில் நிற்பதாக அறிந்து அங்கே சென்றால் எதிர்பாராத அதிசயமாக ஞானரதனும் சண்முகனுடனிருந்தார். எனது குறிப்பை அவரிடமே நேரடியாகக் கொடுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக வாசித்தவர். இந்தத்திரைக்கதை படமாக வெளிவராவிட்டாலும் உனது குறிப்புடன் ஒரு புத்தகமாகக் கொண்டு வருவதற்கு முயற்சிப்பேன் என்றார். அது தான் ஞானரதனுடனான எனது கடைசிச் சந்திப்பு. பின்பொருநாள் நான் அலுவலகத்திற்குக் கச்சேரி வீதியூடாக பஸ்ஸில் சென்று கொண்டிருக்கும் போது ஞானரதன் தோளில் ஒரு பையுடன் யாழ் போதனா வைத்தியசாலையை விட்டு வெளியே போவதைக் கண்டேன். கமெரா இருந்திருந்தால் அவர் போய்க் கொண்டிருப்பதைப் படம் பிடித்திருக்கலாம். அந்தளவிற்குக் கலைத்துவமாக இருந்தது அவரது நகர்வு. ஒரு மேதை சாதாரணமாக ஒரு வழிப்போக்கனைப் போல் நடந்து போய்க் கொண்டிருந்தார். இதன் பின்னர் ஓரிரு மாதங்களில் அவர் காலமாகி விட்டார். அவருக்காக ஓர் அஞ்சலிக்குறிப்பை நிழல் சஞ்சிகையில் எழுதியிருக்கிறேன். அ. யேசுராசாவின் 'தெரிதல்' இதழுக்காக ஞானரதனின் திரைப்படங்களைப் பற்றியதொரு விரிவான கட்டுரையை எழுதினேன். தவிர்க்க முடியாத சில காரணங்களால் தெரிதலில் அக்கட்டுரை வெளிவரவில்லை. நான் கட்டுரை எழுதிய காலப்பகுதியில் ஞானரதன் காலமாகவில்லை. அக்கட்டுரையை ஞானரதனுக்குக் காட்ட வேண்டுமென எண்ணியிருந்தேன். கடைசி வரையும் அந்த எண்ணம் நிறைவேறாமல் போனது இன்றளவும் எனக்குக் கவலைதான். மறந்தும் கூட எவரையும் தாழ்த்திப் பேசும் இயல்பற்றவர் ஞானரதன். இவரைப் போல் ஒருவரை இனி எப்பிறப்பில் காண்பேன்?

ஞானரதனைப் போன்ற இன்னொருவர் தான் குப்பிழான் ஐ.சண்முகன். இவரது 'நிகழ்வு', 'ஒட்டாத உறவாய்', 'எல்லைகள்', 'இலுப்பை மரமும் இளஞ்சந்ததியும்' அலாதியான வாசிப்பனுபவத்தை எனக்குத் தந்தவை. உமாவரதராஜனின் 'உள் மன யாத்திரை' கதைத் தொகுப்பை இவருடனான முதற் சந்திப்பின் போது எனக்குத் தந்தவேளை 'உமாவரதராஜன் ஒரு பெண் தானே' என நான் கேட்கப் படித்துப்பார் புரியும் என்று மட்டும் சொன்னார். எவராக இருந்தாலும் அவரது நல்லியல் புகளை மட்டுமே சண்முகன் அடையாயப்படுத்திக் கதைப்பார். எவரையும் தரக்குறைவாக விமர்சித்ததில்லை. ஒருவரது குறைபாட்டை பலவீனத்தை அவரது மனங்கோணா தபடி நயமாக எடுத்துரைக்கவும் சண்முகனால் மட்டுமே இயலுமெனத் தோன்றுகிறது. மேலும் நான் நேரில் சந்தித்து உரையாடிய அனுபவத்தில் மு. பொன்னம்பலம் கொண்டாட் டத்திற்குரிய மேதை. சேரனின் சாதாரண பேச்சும் கூட கூர்மையாக அமைந்துவிடும். விக்னேஸ்வரன் எல்லாம் தெரிந்தும் போதையில் கூட அலட்டிக் கொள்ளமாட்டார். சொல் விளம்பி என்பது இவருக்கு மட்டும் பொருந்தாது. இராமரூபனின் மௌனம் தவம் செய்வதற்கு ஒப்பானது. கலை இலக்கிய செயற்பாடுகளின் மீதான உங்களது தீவிரமும், அர்ப்பணிப்பும் என்னைத் தொடர்ந்தும் வியப்பிலாழ்த்துகிறது. இங்கே நான் குறிப்பிடடுள்ளவர்களுடனான நேரடித் தொடர்பு என்னை மமதையடைச் செய்கிறது.

**● கடந்த 10 ஆண்டுகளில் ஈழத்தில் வெளிவந்த நாவல்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்தால் ஆச்சரியமாய் இருக்குமா? ஈழத்தில் நாவல்கள் படைக்கப்படுவதில் இருந்து வரும் தேக்கநிலைக்கு யாது காரணம்? இந்த தேக்கநிலையை எப்படிப் போக்கலாம்?**

✸ நிச்சயமாக ஆச்சரியமளிப்பது மட்டுமல்ல ஏமாற்ற மளிப்பதுங்கூட. இதற்கு முதற்காரணம் நமது விமர்சகர்கள் பராயமடையவில்லை என்பதுதான். இதற்கு மிக அண்மைய எடுத்துக்காட்டு 'மூன்றாம் சிலுவை' என்ற புதினம். இப்புதினங் குறித்து இதுவரை வெளிவந்த எல்லா விமர்சனங்களுமே சிறுபிள்ளைத் தனமானவை. (அப்புதினத்தின் பின்னட்டைக் குறிப்பு உள்ளடங்கலாக) பாலியல், ஆபாசம் என்பதைத் தவிர இப்புதினத்தில் ஏதுமே நமது விமர்சகர்களுக்குத் தெரிய வில்லை. உயிர்ச்சத்துக்குறைந்து பார்வைக் கோளாறு ஏற்பட்டவர்களைப் போலவே நமது விமர்சகர்களின் செயற்பாடுகள் அமைந்து விடுகின்றன. உமாவரதராஜன் வெட்டியாடக் கூடியவரென்பதால் சளைக்காமல் ஒரு போர் வீரனாகச் சண்டையிடுகிறார். இது எல்லோருக்கும் சாத்தியமா வதில்லை. இதைத்தவிரவும் கவனயீர்ப்புக்கான புதினங்களை எழுதக் கூடியவர்கள் தொடர்ந்து ஓய்விலிருக்கிறார்கள். எடுத்துக்காட்டக எஸ்.கே. விக்கினேஸ்வரனைப் பாருங்கள். சரிநிகரில் சியாம் செல்வத்துரையின் Funny Boy என்ற படைப்பை 'விசித்திரமான பையன்' (பன்றிகளுக்குப் பறக்க முடியாது) என மொழி பெயர்த்தார். அதை வாசித்த போது உங்களுக்கே விக்கியின் படைப்பாற்றல் புரிந்திருக்கும். நிச்சமாகச் சொல்கிறேன். விக்கியால் கவனயீர்ப்புக்குள்ளாக்கத் தக்க ஒரு புதினத்தை எழுத முடியும். அவரிடம் நேரடியாக நான் இதைச் சொன்ன போது அவரும் மறுக்கவில்லை. இருந்தும் அவர் தொடர்ந்து ஓய்விலிருக்கிறார். இந்நிலைப்பாடு மாற வேண்டுமென்றால் நீங்களோ நானோ விக்கியின் ஓய்வைக் குலைக்க ஒரு பதிப்பகத்தைத் தொடங்க வேண்டும். அல்லது நமது விமர்சகர்களின் பார்வைக் கோளாறைப் போக்க உயிர்ச்சத்து அளிக்க வேண்டும்.

**● புலம்பெயர் தமிழர்களின் படைப்புக்களில் உங்களைக் கவர்ந்தவை. செழியனின் 'ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து' ஈழப்போராட்டச் சூழலில் முக்கியமான ஒரு ஆவணமாகக் கருதப்படுகிறதே?**

✸ உண்மைதான். 'ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து' வாசித்தபோது அதிர்ச்சிக்குள்ளானேன். இது போன்று காலத்தை நேர்த்தியுடன் பிரதிபலிக்கும் ஆவணத்தைக் காண்பது வெகு அரிதானது. ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றை நேர்மையுடன் ஆவணப்படுத்தும் போது பல திசைகளிலிருந்து அச்சுறுத்தலை எதிர்நோக்க வேண்டியேற்படுவது தவிர்க்க முடியாதது. செழியனின் இப்பிரதி உரிய காலத்தில் வராமற் போன பின்னணியும் இதுதான். மேலும் இந்தளவுக்கு நேர்த்தியுடன் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றைப் பதிவு செய்யச் செழியன் போன்ற ஒரு சிலரால் மட்டும் தான் முடியுமென்பது எனது வாசிப்பனுபவம். இவர் காலம் சஞ்சிகையில் எழுதி வரும் பத்தியும் கூட நமக்கு மிக முக்கியமானது. 'ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து' வாசிக்கும் போது தான் இயக்கம் பறித்த தனது மோட்டார் சைக்கிளை மீட்பதற்காகத் தம்பியின் மறைவிடத்தைக் காட்டிக் கொடுக்கத் துணிந்த அண்ணனுமிருக்கிறான் என்பது தெரியவந்தது. இது ஒருபுறம் நகைப்பிற்குரியதாகவும் மறுபுறம் வேதனைக் குரியதாகவுமிருந்தது. செழியனின் வானத்தைப் பிளந்த கதையில் 'விசுவானந்த தேவரைப் பற்றியெழுதப்பட்டிருந்த குறிப்பு அற்புதமாகவும் அதேவேளை திகைக்க வைப்பதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. இதுதவிர அ.முத்துலிங்கத்தின் படைப்பென்றால் அதை வாசிப்பது உங்களை வெவ்வேறு தளங்களுக்கு புன்னகைப்போடு இட்டுச் செல்லும். வழமைக்கு மாறாக அ. முத்துலிங்கம் 'ஐந்தாவது கதிரை' எனும் சிறுகதையொன்றையும் எழுதியிருக்கிறார். இதில் புன்னகைக்கச் சாத்தியமேதுமில்லை. வேதனையைப் படரச் செய்யும் இக்கதை முத்துலிங்கத்தின் படைப்புகளில் என்னை மிகக் கவர்ந்தவொன்று. கலாமோகனின் 'நிக்ஷ்டை' , சோபாசக்தியின் 'தேசத்துரோகி', 'கொரில்லா', 'ம்', சக்கரவர்த்தியின் 'யுத்தத்தின் இரண்டாம் பாகம்' இவையெல்லாம் ஒரு விபத்தினைப் போல் என்னைப் பாதித்தவை. புனைகதைக்கான எண்ணற்ற சாத்தியக் கூறுகள் பற்றிய சிந்தனையை என்னுள் கிளர்த்தியதும் இப்பிரதிகள் தான். எனக்கு மிகப் பரிச்சயமான நெருக்கமான மொழிப் பிரயோகத்துடன் இப்பிரதிகள் அமைந்திருந்ததும் என்னை இவை கவர்ந்து விட ஏதுவாயமைந்தன.

**● தமிழக சஞ்சிகைகளில் எவையெவற்றைப் படிக்கிறீர்கள்? ஒரு சிற்றிதழைப் படித்து முடிப்பதற்கு எவ்வளவு காலம் தேவை?**

★ எனக்குக் கிடைக்கின்ற சிற்றிதழ்கள் எல்லாவற்றையும் வாசிப்பேன். எதையும் நான் அவசியமின்றி ஒதுக்குவதில்லை. பொதுவாக ஒரு சிற்றிதழ் கொண்டுள்ள பக்களின் அளவிலேயே வாசித்து முடிக்கும் காலம் தங்கியுள்ளது. எடுத்துக் காட்டாக காலச்சுவடு, உயிர்மை, உயிர்எழுத்து போன்றவற்றிற்கு 2 நாட்கள் வாசித்து முடிக்கத் தேவைப்படும். அதேவேளை சௌந்தரசுகனுக்கும் ஒரு நாள் போதுமானது. புதுப்புனலுக்கும் இது பொருந்தும். சிற்றிதழின் பக்கங்களுக்கும் வாசித்து முடிக்கும் காலப் பகுதிக்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பு நிலவுவதே எனக்கு வாய்த்த அனுபவம்.

**● தமிழக சிற்றிதழ்களில் சௌந்தர சுகன் எந்த வகையில் முக்கியத்துவமுடையது. வாசகர் கடிதத்தை முக்கியமான பதிவாக கூர் என்ற பகுதியில் பிரசுரித்த வருகிறார்கள். இவ்வாசகர் கடிதங்களின் பேசுபொருள் குறித்து தங்கள் கருத்து யாது?**

★ எனது வாசிப்பனுவத்தில் வாசகர் கடிதத்துக்கெனக் கணிசமான பக்கங்களை சுகன் மட்டுமே ஒதுக்கி வருகின்றது. இப்பகுதி ஒரு விதத்தில் பன்முகப்பார்வைக்கு வசதியளிப்பதாய் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு இதழிலும் வெளியாகும் படைப்புகள், பிறவிடயங்கள் குறித்து இந்தளவுக்குத் தீவிரமாக விமர்சிப்பவர்கள் பலர் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு வியப்பளிக்கும் செய்தி 'கூர்' பகுதியில் அவதானிக்கக் கூடிய இன்னொரு விடயம் படைப்பாளியை முக்கியத்துவப்படுத்தாமல் படைப்பை மட்டுமே முக்கியத்துவப் படுத்திக் கருத்துக்களை முன் வைக்கிறார்கள். இன்றைய கால கட்டத்தில் இது ஓர் ஆரோக்கியமான விடயமெனக் கருதலாம்.

**● ஈழத்தில் இன்று வெளிவந்து கொண்டிருக்கும் சிற்றிதழ்கள் பற்றி உங்கள் கருத்து யாது? புலம் பெயர் இதழ்கள் பற்றி?**

★ 'தவிர', 'மறுபாதி' இரண்டும் நம்பிக்கை தரக் கூடிய சிற்றிதழ்கள். 'பெருவெளி' எப்போதாவது வெளிவந்து கொண்டிருந்தாலும் சிற்றிதழியலில் ஒரு பாய்ச்சல்தான். கலைமுகம் நடுத்தரமானது. ஒரு வரையறைக்குள் நின்றியங்குவது. இவைதவிர ஈழத்தில் வெளிவந்து கொண்டிருப்பதெல்லாம் சிற்றிதழ் என்ற பிரமையைக் கூட ஏற்படுத்துவதில்லை. ஈழத்து இலக்கியத்தை ஐம்பது வருடங்களுக்காவது பின் நோக்கித் தள்ளி விட வேண்டுமென்பதில் முழு முனைப்புடன் இயங்கி வருகின்றன. புலம்பெயர் இதழ்களில் எக்ஸில், உயிர்நிழல், தூண்டி, அம்மா, காலம், நான்காவது பரிமாணம் போன்றவற்றையே இது வரை வாசித்திருக்கிறேன். இவற்றின் வழியே நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு கணிசமான பங்களிப்பு நிகழ்ந்திருப்பதை மறுப்பதற்கில்லை. மேலும் எமக்குச் சாத்தியமாகாத மாற்றுக் கருத்துக்கான ஒரு தளமும் இவ்விதழ்களின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்குக் கண்டனமாக எக்ஸில் சிறப்பிதழ் வெளிவந்த போது நமக்குப் புலிகள் குறித்து உருவான மாயை கட்டவிழ்ந்தது. அம்மா, தூண்டி இரண்டுமே புனைகதை யென்பதற்கான பல்வேறு சாத்தியங்களையும் நிகழ்த்திக் காட்டின. இப்போதும் வெளிவந்து கொண்டிருக்கும் உயிர்நிழல் எந்தவகையான பிரதிக்கும் இடமளிக்கும் சமரசமற்ற பொதுத்தளமாக விளங்குவது அதிசயத்திலாழ்த்தும் நம்பிக்கையைத் தருகின்றது. இவற்றுடன் ஒப்பிடும் போது 'காலம்' இதழ் மிக மோசமாக வெளி வருகின்றது. ஒரு சிற்றிதழ் பின்பற்ற வேண்டிய ஆகக் குறைந்த தார்மீகக் கடப்பாட்டையாவது 'காலம்' பின்பற்றுவதில்லை. என்னால் ஆறேழு வருடங்களுக்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட குலசிங்கத்துடனான நேர்காணலை நீங்கள் சிறப்பாக வடிவமைத்துக் காலத்திற்கு அனுப்பினீர்கள். என்ன நடந்தது? 'சந்திப்பு', 'துவாரகன்' எனப் பிரசுரித்தார்கள். மன வேதனையோடு நீங்கள் நடந்த பிழையைச் சுட்டிக் காட்டிச் செல்வத்துக்கு மின்னஞ்சல் செய்திருந்தீர்கள். தவறு ஏற்படுவது இயல்புதான். அதை மனவருத்தத்துடன் தெரிவிப்பதாகவல்லவா அடுத்த இதழ் வெளி வந்திருக்க வேண்டும். ஆனால் நீங்கள் அனுப்பிய மின்னஞ்சலுக்குச் செல்வம் என்ன நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். உங்களது மின்னஞ்சலைப் பிரசுரித்திருக்க வேண்டுமல்லவா? செல்வம் இதைப்பற்றி மூச்சும் விடவில்லை. எனக்கு இதில் மன வருத்தமேதுமில்லை. குலசிங்கத்தின் நேர்காணல் அச்சாக வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் அந்த நேர்காணலைச் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தியது தான் எனக்கு வேதனையாக இருந்தது. அதைவிட வேதனை அந்நேர்காணல் குறித்து அ.யேசுராசா எழுதிய கடிதத்தைக் குற்றவுணர்வேதுமின்றிப் பிரசுரித்திருந்தார் திருவாளர் செல்வம். அவரது இலக்கிய நேர்மை அவ்வளவுதான். இது தவிர குறித்த இதிழில் 'ஆசிரியர்' என வரவேண்டிய இடங்களிளெல்லாம் 'இரியர்' என வந்திருந்ததும் கனிமொழி என்பவர் எழுதிய 'சிலுவை' என்ற சிறுகதைக்குள் தில்லைநாதன் என்பவர் எழுதிய சிறுகதையை உள்ளடக்கியிருந்ததும் முகம் பற்றிய மூன்று கவிதைகளின் தலைப்பு கடலோடியென அச்சாகியிருந்ததும் 'காலத்தின்' கோலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. புலம்பெயர் இதழ்களில் மட்டுமல்ல எங்குமே 'காலம்' போன்றதொரு மோசமான இதழை நான் கண்டதேயில்லை.

**● கடந்த சில மாதங்களாக வாதப் பிரதிவாதங்களைச் சந்தித்து வரும் உமாவரதராஜ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**னது மூன்றாம் சிலுவை குறித்து பலவேறுபட்ட விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன இது பற்றி?**

★ இதுவரை மூன்றாம் சிலுவை குறித்து எழுதப்பட்ட விமர்சனங்களனைத்தும் வாசிப்பில் பராயமடையாதோரால் எழுதப்பட்டவையே. உண்மையில் இலங்கையின் அரசியலை விமர்சிக்கும் ஒரு குறியீட்டுப் பாங்கான புதினமாகவே மூன்றாம் சிலுவையை நான் பார்க்கிறேன். எடுத்துக்காட்டு முன்வைக்க நான் விரும்பவில்லை. அரசனின் வருகை போன்ற இன்னொரு பிரதிதான் மூன்றாம் சிலுவை. சண்முகசுந்தரத்தின் 'நாகம்மாள்' போன்றதொரு படைப்புத்தான் மூன்றாம் சிலுவை. உமாவரதராஜனின் 'நெருங்கிய நண்பர்கள்' கூட 'நாவல் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது எனச் சுருக்கமாகக் கூறி விட்டு உறங்கப் போய்விட்டார்கள். அவர்களுக்கு இப்புதினம் குறித்து எழுதுவதற்குத் துணிவில்லை. இது ஒரு பாலியல் புதினம் என்பது தட்டையான பார்வை. பிரதியை ஆழ்ந்து அனுப வித்தால் மட்டமே இதிலிருந்து விடுபட முடியும். இன்னொன்று மூன்றாம் சிலுவையை உமாவரதராஜனின் தனிப்பட்ட வாழ்க்கையுடன் பொருத்திப்பார்ப்பது அவசியமற்ற முற்சார்புகளுக்கு சாத்தியமளிக்கும் இப்போக்கு பிரதியின் பத்தை முற்றாகத் தடைசெய்யும் அபா யத்தை கொண்டி ருக்கிறது. பின் நவீனத் துவ வாசிப்பில் எழுதிய வன் இறந்து விட்டான் என்று குறிப்பிடுவது அவ்வபாயத்தைக் தவிர்த்துக் கொள்ள வேயென்பது நன் குணரப்பட வேண் டியது. இப்போது எமக்குத் தோன்றும் கேள்வி நமது விமர்சகர் இதை எப்போது உணரப் போகிறார் கள் என்பது தான்.

● **எட்டாம் வகுப்புப் படிக்கும் போது வாசிப்பில் ஈடுபாடு கொள்ள ஆரம்பித்ததாகக் குறிப்பிட்டீர்கள். உங்களது வாழ்வு – வாசிப்பில் பின்னாளில் எழுதுவதிலும் மையங் கொள்ளத் தொடங்கியது. வாழ் வின் அர்த்தம் - அர்த்தமின் மையை வாசிப்பில் கண்டு கொள்கிறீர்களா? அல்லது 'வாசிப்பு' விந்தையான பரவசம் கிளர்த்தும் உலகிற்கு அழைத்துச் செல்கிறதா? உலகை மாற்றிய புத்தகங்கள் என்று தேசங்களின் செல்வம், கனவுகளின் விளக்கம், பகுத்தறிவு, டாம் மாமனின் குடில், பூர்வீக மனிதனின் மனம், தெய்வீக இன்பவியல் முதலானற்றைக் குறிப்பிடுவார்கள். உங்களில் பாதிப்பை ஏற்படுத்திய புத்தகம் என்று எவற்றையாவது குறிப்பிடுவீர்களா? அல்லது உங்களைப் பரவசப்படுத்திய புனைவு ஏதாவது இருக்ககிறதா? வாசிப்பின் மீது தீராக் காதலை கவியச் செய்த நூல் எதுவோ? நபர் எவரோ? இலக்கியம் சமூக மாற்றத்துக்கான கருவி அன்று பரவசம், இரசனை மட்டும் தான். 'யாருமே தங்களது வாழ்க்கையை ஒரு போதும் மாற்றிக் கொள்வதில்லை' என்ற கருத்து நிலையுடன் உடன்படுகிறீர்களா?**

> இந்த மௌனம் எனது வாழ்க்கையில் இக்கட்டான நிலை ஏற்பட்ட போதெல்லாம் என்னைத் தற்கொலைக்குத் தூண்டாமல் காப்பாற்றி வந்துள்ளது. தவிரவும் இக்கட்டான நிலையைத் தோற்றுவித்தவர்களை இன்றுவரை கலவரப்படுத்தியும் அச்சுறுத்தியும் வருவது கூட இந்த மௌனம் தான். வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் சமநிலையிலிருப்பதற்கும் இந்த மௌனம் எனது கடைசிக் கணம் வரை அவசியமானது. ஒரு முழுமையான மௌனத்திற்காகத் தொடர்ந்து எத்தனித்து வருகிறேன். எது எப்படியோ எனது வாழ்க்கை முறையை இலக்கியம் மாற்றியிருக்கின்றதென்பது மட்டும் நிதர்சனமானது.

★ ஞானரதனின் 'புதிய பூமி' என்னைப் பாதித்த முதலாவது புத்தகம். இது வீரகேசரி பிரசுமாக வெளிவந்தது. எனினும் வழமையான வீரசேகரிப் பிரசுரங்களில் காணப்படும் காதல், காமம், நாயகத்தன்மை எதுவுமேயற்ற தனித்துவமான படைப்பாக புதிய பூமி இருந்தது. இதில் பெண் பாத்திரங்களே யில்லை. காடொன்றினுள் நில அளவைப் பணியிலீடுபடும் ஒரு குழுவின் நாளாந்த வாழ்க்கை, அக்குழு எதிர்கொள்ளும் நெருக்கடிகளினை மையமாகவைத்து சிறப்பாக எழுதப்பட்ட ஒரு படைப்பு. நில அளவையாளர்களின் தொழில், வாழ்வியல் குறித்துக் கலைத்து வத்தோடு எழுதபட்ட ஒரேயொரு படைப்பும் இதுவாகத்தானிருக்கும். புதிய பூமியை வாசித்த காலத்தில் ஞானரதன் யாரென எனக்குத் தெரியாது. பின்நாளில் அவரது நெருங்கிய சகாவாகும்பேறு பெற்றேன். யார்பெறுவார் அச்சோவே? அவரிடம் புதியபூமி பற்றி நான் விதந்தபோது வீரகேசரிப் பிரசுரத் திற்குப் பொறுப்பாக இருந்தவர் தன்னுடன் நெருக்கமாகப் பழகியவரென்றும் வீரகேசரிப் பிரசுர வெளியீடுகளைத் தான் விமர்சித்த போது காதல், காமம் இல்லாமல் உன்னால் ஒரு கதை எழுத முடியுமா? முடிந் தால் எழுதித்தா! வீரகே சரிப் பிரசுமாக வெளியி டத்தயாராக இருக் கிறேன் என அவர் சவால் விட்டதாகவும் அச்சவாலை ஏற்றுக் கொண்டு புதியபூமியை எழுதியதாகவும் ஞானரதன் என்னிடம் கூறியிருக்கிறார்.

அடுத்து நான் குறிப்பிடக் கூடியது. கோவிந்தனின் புதியதோர் உலகம்' தமிழீழ விடுதலை இயக்கங்களைக் குறித்து சமூகம் கட்டமைத்து வைத்திருந்த மாயவிம்பத்தை உடைத்துச் சுக்கு நூறாக்கிய முதலாவது படைப்பு. எவரும் எழுதத் துணியாத காலத்தில கோவிந்தன் எழுதத் துணிந் தார். அதனால் காணாமல் போனார். மற்றையது செழியனின் ஒரு மனிதனின் நாட்குப்பிலிருந்து. செழியனைப் போல் நுட்பமாகவும் எளிமையாகவும் எழுதக் கூடிய இன்னொரு வரை உடனடியாக அடையாளங் காண முடியாது. ரஞ்சகுமாரின் கோசலை, கோளறுபதிகம் உள்ளடங்கலாக வெளிவந்த 'மோகவாசல்', மு.பொவின் 'நோயில் இருத்தல்' என்ற குறியீட்டு நாவல், குப்பிழான் ஐ. சண்முகனின் 'கோடுகளும் கோலங்களும்' திருக்கோவில் கவியுகனின் 'வாழ்தல் என்பது' உமாவரதராஜனின் 'உள்மன யாத்திரை' திசேராவின் 'கபாலபதி' அம்ரிதா ஏயெம்பின் 'விலங்குகள் நடத்தை தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் ஈழத்து நவீன இலக்கியங்கள் என்பதற் குமப்பால் என்னைப் பாதித்த புத்தகங்கள். இவைதவிர சி.மணி மொழி பெயர்த்த லாவோட்சுவின் 'தாவோ தேஜிங்' என்னைப் பாதித்தது. இது திருவருட்பயனுடன் ஒத்திருப்பது கண்டு வியந்தேன். மதநூல் என்பதைக் கடந்து வாழ்க்கையைப் பற்றிய தத்துவத்தைச் சுருக்கமாக எடுத்துக்காட்டும் 'திருவருட்பயன்' இதுவரை உரியவகையில் கவனிப்பைப் பெறவில்லை. 'தாவோதேஜிங்' வாசித்த போது தான் திருவருட் பயனின் முக்கியத்துவத்தை நன்குணர்ந் தேன். அத்துடன் எம்.ஜி. சுரேசின் 'விரலிடுக்கில் தப்பிய புகை' காம்யுவின் அந்நியனுக்கு நிகரான படைப்பு. ரமேஸ் பிரேமின் எல்லாப் புனைகதைக ளுமே என்னைப் பாதித்தவை தான். எஸ்.ராமகிருஷ்ணனின் உறு பசியைப் போல் தமிழில் வாழ்க்கையின் அர்த்தம் குறித்து எளிமையாக வெளிவந்த பிரதி வேறேதுமிருக்க முடியாது. ஜெயமோகனின் கொற்றவையை வாசித்த போது அப்போது நிலவிய அரசியல் சூழ்நிலை யால் அது என்னைப் பெரிதும் பாதித்தது. மிக அண்மையில் பா.வெங்கடேசனின் 'தாண்ட வராயன் கதை' வாசித்தேன். கதைகளின் திசை மாற்ற முற்றுக் கொண்டேயிருக்க அத் திசைமாற்றங்களில் வெளிப் படும் மர்மமும் புனை கதை களுக்குள் தோய்ந்துற்ற அனுப வமும் சொல்லிமாளாத பரவசத் திற்குள்ளாக்கியது. வாசிப்பின் மீது தீராக்காதலைக் கவியச் செய்த நூல் எனத் தனியே ஒன்றை மட்டும் எடுத்து காட்ட முடியவில்லை. ஏற்கனவே நான் குறிப்பிட்டவற்றோடு சுந்தரராமசாமியின் குழந்தைகள் பெண்கள் ஆண்கள், ஜே.ஜே சில குறிப்புகள், கோணங்கியின் மதினி மார்களின் கதை, கொல்லனின் ஆறு பெண்மக்கள், பட்டுப்பூச்சிகள் உறங்கும் மூன்றாம் ஜாமம், பிதிரா, பாழி மற்றும் சில்வியாவின் உதிரியாக வாசித்த சில புனைகதைகளையும் குறிப்பிடலாம். இதைவிட நபர் என்ற அடிப்படையில் வைத்துப் பார்த்தால் நகுலன் முக்கியமானவராகத் தோன்றுகிறார். சுசீலா என்றுமே காலம் அள்ளிச் செல்ல முடியாத கன்னி.

இலக்கியம் சமூக மாற்றத்துக்கான கருவி அல்ல. பரவசம் இரசனை மட்டும்தான். யாருமே தங்களது வாழ்க்கையை ஒதுபோதும் மாற்றிக் கொள்வதில்லை என்ற கருத்து நிலையுடன் எனக்கு என்றைக்குமே உடன்பாடில்லை. எனது வாழ்க்கை யையே உங்களுக்கு எடுத்தக்காட்டாக முன் வைக்கிறேன். இலக்கியம் எனது போக்கை முழுமையாக மாற்றியிருக்கிறது. எனது அகமுதிர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியிருக்கிறது.

> **சி.மணி மொழி பெயர்த்த லாவோட்சுவின் தாவோ தேஜிங் என்னைப் பாதித்தது. இது திருவருட்பயனுடன் ஒத்திருப்பது கண்டு வியந்தேன். மதநூல் என்பதைக் கடந்து வாழ்க்கையைப் பற்றிய தத்துவத்தைச் சுருக்கமாக எடுத்துக்காட்டும் திருவருட்பயன் இதுவரை உரியவகையில் கவனிப்பைப் பெறவில்லை. தாவோதேஜிங் வாசித்த போதுதான் திருவருட்பயனின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்தேன். அத்துடன் எம்.ஜி. சுரேசின் விரலிடுக்கில் தப்பிய புகை காம்யுவின் அந்நியனுக்கு நிகரான படைப்பு. ரமேஸ் பிரேமின் எல்லாப் புனைகதைகளுமே என்னைப் பாதித்தவைதான். எஸ்.ராமகிருஷ்ணனின் உறு பசியைப் போல் தமிழில் வாழ்க்கையின் அர்த்தம் குறித்து எளிமையாக வெளிவந்த பிரதி வேறேதுமிருக்க முடியாது.**

நான் வாசிப்பில் ஈடுபடுவதற்கு முன்னர் பொதுவில் எவரோடும் முரண்படும் இயல்பைக் கொண்டிருந்தவன். மற்றவர் செய்யும் சிறு தவறு கூட எனக்குப் பெருஞ்சினத்தை வரவழைக்கும். வீணான வாய்த்தர்க்கம் சிலவேளைகளில் கைபரிமாறும் நிலைக்குக்கூடச் சென்றிருக்கிறது. எனது தந்தை கூட இதில் விதிவிலக்கில்லை. ஒரு நாள் போதை தலைக்கேறிய நிலையிலிருந்த அவர் அந்த நேரத்தில் பிரயோகித்த வார்த்தைகளால் சினந்தலைக் கேறி அவரை மோசமாக நையப் புடைத்துவிட்டேன். பொலீஸில் அவர் போய் முறைப் பாடு செய்தார். பொலீஸ் ஜீப் என்னைத் தேடி வந்தது. அன்றுதான் என்வாழ்நாளில் முதன்முதலாகப் பொலீஸ் நிலையம் போனேன் (2004). விசாரித்தார்கள். அங்கே எனக்கு பொலீஸ் மூலம் அடிப்பிப்பது தான் தந்தையாரின் நோக்கம். ஆனால் எனது அணுகுமுறையைப் பார்த்து எனக்குப்புத்தி சொல்லி அனுப்பி னார்கள்.

அந்தக் கணத்தில் தான் 'நான் பயிலும் இலக்கியத்தால் பயன் என்ன?' என்ற கேள்வி என்னுள்ளே எழுந்தது. அப்போதே தீர்மானித்தேன். எனது கடைசிக் கணம் வரை எழுதுவதும் வாசிப் பதும் தான் எனது முக்கியமான பணி என்று அதன் பின்னர் யார் என்ன செய்தாலும் என்னுள் நானே அதிசயிக்கும் படியாக மௌனம் கவியத் தொடங்கியது. இந்த மௌனம் எனது வாழ்க்கை யின் இக்கட்டான நிலை ஏற்பட்ட போதெல்லாம் என்னைத் தற்கொலைக்குத் தூண்டாமல் காப்பாற்றி வந்தள்ளது. தவிரவும் இக்கட்டான நிலையைத் தோற்றுவித்தவர்களை இன்றுவரை கலவரப்படுத்தியும் அச்சுறுத்தியும் வருவது கூட இந்த மௌனம் தான். வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் சமநிலையிலிருப்பதற்கும் இந்த மௌனம் எனது கடைசிக் கணம் வரை அவசியமானது. ஒரு முழுமையான மௌனத்திற்காகத் தொடர்ந்து எத்தனித்து வருகிறேன். எது எப்படியோ எனது வாழ்க்கை முறையை இலக்கியம் மாற்றியிருக்கின்றதென்பது மட்டும் நிதர்சனமானது.

**● *1960 - 1980* காலப் பகுதியில் தமிழகத்தில் வெளியாகிய கல்கி, ஆனந்தவிகடன், கலைமகள் முதலான சிற்றிதழ்கள் (வார இதழ்கள்) தமிழ கத்தில் வெளியான அன்றே இங்கும் வெளி வந்துவிடும். இவ்விதழ்களில் வெளிவரும் தொடர்களுக்காகக் காத்திருக்கும் ஒரு தலை முறையினர் யாழ்ப்பாணத்தில் இருந்தனர். கல்கியின் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், தியாகபூமி, அமரதார என்று நினைவுபடுத்திப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேசுவோரை இன்றும் யாழ்ப்பாணத்தில் காணலாம். அதுபோல நா.பார்த்தசாரதியின் மணிபல்லவம், பொன்விலங்கு என இந்நாவல்களின் பாத்திரங்களை உரையாடல்களை நினைவுபடுத்துவர். இன்றுங்கூட கல்கியின் புத்தகங்களே அதிகம் விற்கப்படுவதாக பூபாலசிங்கம் புத்தகக் கடை உரிமையாளர் ஸ்ரீதர்சிங் குறிப்பிடுவார். கல்கியைப் பார்த்தசராதியை படித்தவர்களுடைய வாழ்க்கையையும் இன்று நவீன இலக்கியம் பேசுவோருடைய வாழ்க்கையையும் எடுத்துப் பாருங்கள். வாழ்க்கை முறையிலேயே தெரியும். ஜெயகாந்தனை ஏற்றுக் கொள்வோர் கல்கியை நிராகரிப்பர். ஜெயகாந்தான் எழுதுவதற்கு வந்ததே கல்கியின் எழுத்துக்களைப் படித்துத்தான் என்று கூறுகிறார். கல்கியின் எழுத்துக்களை நிராகரித்த பலர் குறிப்பாக முற்போக்கு வாதிகள் கூட இன்று ஏற்றுக்கொள்கின்றனர். நீங்கள் கல்கியையோ, பார்த்தசாரதியையோ, அகிலனையோ, ஜெயகாந்த னையோ படிக்கவில்லையா?**

★ கல்கியின் திருவழுத்தூர் சிவக்கொழுந்து என்னும் நாவலையும். தமிழிசை குறித்த விழிப்புணர்வுக் கட்டுரைத் தொகுப்பினையும் மட்டுமே இதுவரை நான் முழுமையா வாசித்திருக்கிறேன். எனது பதின்மவயதுகளில் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், அலையோசை முதலான புதினங்களை வாசிக்க அந்தரப்பட்டுத் திரிந்து போது அவை கிடைக்கவில்லை. சுதந்திரதாகம் (சி.சு.செல்லப்பா), கொற்கை (ஜோடி குருஸ்), காவல்கோட்டம் (அ.வெங்கடேசன்), துயில் (எஸ்.ராமகிருஷ்ணன்), தேகம் (சாருநிவேதிதா) என வாசிக்க வேண்டிய புத்தகங்களின் வரிசை முடிவின்றி நீளத் தொடங்கியுள்ள நிலையில் கல்கியின் எந்தவொரு புதினத்தையும் இலகுவில் பெறக்கூடிய நிலையிலிருந்தும் இப்போது அவற்றை வாசிக்க நேரமொதுக்குவதற்கு மனம் இடந்தரவில்லை. சுதந்திர தாகத்தின் ஒவ்வொரு பாகத்தையும் வாசித்து முடிக்கவே ஏறத்தாழ ஒருவருடமாகலாம். தவிரவும் சுதந்திரதாகம் தரக்கூடிய வாசிப்பனுவத்தை இப்போது எனக்கு பொன்னியின் செல்வனோ, சிவகாமியின் சபதமோ தரப் போவதில்லை. அண்மையில் திரைகடலாடி வரும் தமிழ் நாதம் வானொலியில் கல்கியின் சிவகாமியின் சபதத்தை நாடகமாகக் கேட்டபோது இது மேலும் உறுதியாயிற்று. நீங்கள் சொல்லலாம் கல்கியின் படைப்புக்கள் தமிழ் வாசிப்புப்பரப்பை விரிவாக்கியிருக்கிறது தானே என்று அதை நானும் மறுக்கவில்லை. ஆனால் தமிழ் வாசிப்புப்பரப்பைக் கல்கியின் படைப்புக்கள் தேக்கமடைய வைத்துள்ளதையும் நாங்கள் மறுக்க முடியாது. கல்கியின் படைப்புக்கள் இன்றும் அதிகளவில் விற்பனையாவது இதைத் தான் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

பார்த்தசாரதியின் பொன்விலங்கு கல்கியில் தொடராக வந்து கொண்டிருந்த போது அதையெல்லாம் பிரித்தெடுத்து யாரோ ஒருவர் புத்தகமாக்கிய நிலையில் அது நண்பனொருவன் மூலமாக 1996 காலப்பகுதியில் எனக்குக் கிடைத்தது. அக்காலப்பகுதியில் நான் கிடைத்ததை வாசிக்கும் பழக்க முடையவனாக இருந்தேன். அப்போது யாழ்ப்பாணம் முழுமையாகப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. எனது வீட்டு வாசலிலே படையினர் காவலரண் அமைத்திருந் தனர். இதனால் என்னைத் தேடி நண்பர்கள் எவரும் வருவதில்லை. முழுமையாகவே தனித்துப் போயிருந்த சூழலில் உண்பதும் உறங்குவதுமே அன்றாட கருமங்க ளாகியிருந்த நிலையில் "பொன்விலங்கு" எனக்கு நல்ல பொழுதுபோக்காக இருந்தது. அது பல்கலைக்கழகச் சூழலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருந்ததால் பல்கலைக் கழக நுழைவு அனுமதியைப் பெற்றிருந்த எனக்கு அப்புதினம் ஈர்ப்புக்குரியதாகவிருந்தது. காலப்போக்கில் நா.பார்த்தசாரதியின் குறிஞ்சிமலர் பற்றியும் அதனது முக்கிய கதா பாத்திரங்களான அரவிந்தன், பூரணி குறித்தும் கேள்விப்பட்டேன். ஆனால் குறிஞ்சிமலரைத் தேடி நான் அலையவில்லை. இப்போது குறிஞ்சிமலர் என்கைவசமிருந்தும் இதுவரை அதை நான் வாசிக்க வில்லை. ஒரு காலத்தில் ராஜேக்ஷ்குமார், ராஜேந்திரகுமார், தேவிபாலா, பட்டுக்கோட்டைப் பிரபாகர், புஷ்பா தங்கத்துரை, சுஜாதா, லக்ஷ்மி, சிவசங்கரி யெனத் தேடித்தேடி வாசித்த போது ராணிமுத்து மாத இதழ் மூலமாகவே அகிலன் எனக்கு அறிமுகமானார். ராணிமுத்து இதழொன்றில் அகிலனின் இன்பநினைவுகள் எனும் புதினத்தை முதன் முதலாக வாசித்தேன். அவரது சிறுகதைத் தொகுப்பு நூலொன்றும் வாசிக்கக் கிடைத்தது. அதிலிருந்து "காசுமரம்" என்ற சிறுகதை இப்போதும் நினைவிலுள்ளது. அண்மைக் காலத்தில் நண்பனொருவன் மூலமாக அகிலன் மொழி பெயர்த்த மாப்பாசன் சிறுகதைகளின் தொகுப்பையும் வாசித்தேன். இவை தவிர அகிலனின் படைப்புக்களில் வேறெதையும் நான் வாசிக்கவில்லை. 2009 ஏப்ரல் மாதக் கடைசியில் எனக்கு பொக்குளிப்பான் வந்தது. 14 நாட்கள் வீட்டினுள்ளேயே முடங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் ஜெயகாந்தனின் சிறுகதைகள் (முழுத்தொகுப்பு) ஜெயகாந்த னின் குறுநாவல்கள் (முழுத்தொகுப்பு) இரண்டையும் முழுமையாக வாசிக்கக் கூடியதாக இருந்தது. எழுதப்பட்டு வெளிவந்த காலத்தில் இப்படைப்புக்கள் அதிர்வினை ஏற்படுத்தியிருந்தாலும் இன்றைய நிலையில் காலவாதியாகி விட்ட படைப்புக்களாகவே இவை தோற்றங்கொள்வதைத் தவிர்க்க முடியாது. ஜெயகாந்தனோடு சமகாலத்தில் எழுதிய சுந்தரராமசாமியின் படைப்புக்கள் இன்றளவும் நிலைத்து நிற்பதற்குக் காரணமென்ன? என்பதையும் நாங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வாசிப்பென்பது காலத்திற்கேற்ப மாற்றமடை யும். 1997 காலப்பகுதியில் ஆனந்த விகடனில் திரைப்பட இயக்குனர் கே.எஸ் அதியமான் எழுதிய சொர்ணமுகி தொடருக்காக ஆனந்தவிகடன் பிரதிகளைக் கொழும்பிலிருந்து கூட (எனது சொந்த முயற்சியால்) பெற்று வாசித்துப் பத்திரப் படுத்தினேன். குமுதம் இதழ்களை வாரந்தோறும் ஓடியோடி வாங்கினேன். ராஜேக்ஷ்குமார் எழுதிய நாவல்கள் அனைத்தையும் சேகரித்து வைக்கும் முயற்சியிலீடுபட்டேன். ஆனால் இப்போது பார்த்தால் இதெல்லாம் எவ்வாறு முட்டாள்தனமானது எனத் தோன்றுகிறது. எனினும் வாசிப்பின் தன்மையை நிலைகுலையவிடாமல் தொடர்ச்சியாக முன்னெ டுப்பதை இந்த முட்டாள்தனமான செய்கைதான் சாத்தியமாக்கிய தென்பதை நான் மறக்கப் போவதில்லை. தவிரவும் புனைகதை என்பது ஒற்றைப் பரிமாணமுடையதென்ற கருத்தை மேலோங்க வைத்ததில் கல்கிக்கும் நா. பார்த்தசாரதிக்கும், அகிலனுக்கும் ஜெயகாந்தனுக்கும் முக்கிய பங்குண்டு. என்னைப் பொறுத்தவரை மு.வரதராசன் புனைகதையின் ஒற்றைப் பரிமாணத்தை மறுத்து இங்கியவராகத் தோன்றுகிறார். அவரது வெளிப்பாட்டு உத்தி வாசிப்பில் கவர்ச்சி தரக்கூடியதொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### ● பாடசாலைக் காலத்தில் இலக்கியப் பரிச்சயம் ஏற்பட்ட பின்னணி?

★ தரம் ஒன்றிலிருந்து ஏழு வரை ஊரவர்களால் ஆண் பாடசாலையென்றழைக்கப்படும் மாணிக்கவாசர் வித்தியாலயத்தில் படித்தேன். பின்னர் இங்கிலீஸ் பள்ளிக்கூடமெனப் பெயர் பெற்ற விக்னேஸ்வரக் கல்லூரியில் தரம் எட்டிலிருந்து பன்னிரண்டு வரை படித்து வெளியேறினேன். விக்னேஸ்வராக் கல்லூரியில் கிடைத்த அனுபவம் தனித்துவமானது. நான் அங்கே போய்ச் சேரந்த போது திரு. சிவபாதசுந்தரம் அதிபராக இருந்தார். அவர்தான் தனது நிர்வாகத் திறமையால் கரவெட்டியில் விக்னேஸ்வராக் கல்லூரி எனுமொரு பள்ளிக் கூடமிருக்கின்றது என்பதை வெளியுலகிற்கு அடையாளங் காட்டிய பெருமைக்குரியவர். அவர் ஒரு விலங்கியல் ஆசிரியர். அந்தப் பாடத்தை மாணவர்களுக்கு மிகுந்த ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் கற்பித்தவர். அவர் இளைப்பாறிய பின்னர் சேவைக் கட்டணத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் விலங்கியல் கற்பித்து வந்தார். அத்தருணம் ஒரு நாள் பாடங் கற்பித்துக்கொண்டிருக்கும் போதே மாரடைப்பால் காலமானர். அவர் விக்னேஸ்வராக் கல்லூரியில் அதிபராக இருந்த போது இப்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறைத் தலைவராகவிருக்கும் பேராசிரியர். செ.யோகராசா (கருணையோகன்) ஓர் ஆசிரியராகக் கற்பித்துக் கொண்டிருந்தார். அப்போது உயர்தர மாணவர் மன்றத்தினால் ஒரு சஞ்சிகை வெளியிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை திரு.செ.யோகராசா அதிபரிடம் முன்வைத்தார். அதிபர் அதை உவப்புடன் ஏற்றுக் கொண்டார். இதன் நிமித்தம் 1989 காலப் பகுதியிலிருந்து உயர்தர மாணவர் மன்றத்தினால் 'ஏணி' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. நான் சாதாரண தரத்தில் பயின்று கொண்டிருந்த போது அவ்வளவாக இலக்கியப் பரிச்சயம் ஏற்பட்டதெனக் கூறமுடியாது. இருந்தும் அதற்கான அடித்தளம் இடப்பட்டிருந்தது.

மாணவர் கலாசாலை என்ற தனியார் கல்வி நிலையத்திற்கு எண்பதுகளிலிருந்து கரவெட்டியின் கல்விப் பாரம்பரியத்தில் முக்கிய இடமுண்டு. அக்கல்வி நிலையத்தில் நான் படித்துக் கொண்டிருந்த போது 'மனோன்மணி' என்ற மூதாட்டி எங்களுக்குக் கற்பித்து வந்தார். வெண்ணிறச் சேலையுடுத்த அவரது தோற்றப் பொலிவு எங்களுக்கு பயபக்தியை எற்படுத்துவதாய் இருந்தது. அவரது பாடவேளை உள்ள நாட்களில் அவரைச் சைக்கிளில் போய் ஏற்றிவந்து திரும்பவும் அவரது வீட்டில் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கும் பணியை மிக விருப்புடன் செய்து வந்தேன். அவர் என்னுடன் சைக்கிளில் பயணிக்கும் போதெல்லாம் சொல்லுவார் 'நீ மற்றவர்கள் கல்வி கற்கவும் ஒரு வகையில் காரணமாயிருப்பதால் எதிர்காலம் உனக்கு நன்றாயிருக்கும்' என்று. அவர் பாடங்களைக் கற்பிக்கும் விதமே தற்புதுமையானது. ஒவ்வொரு பாட அலகினையும் எளிமையாக விளங்கிக் கொள்ளும் விதத்தில் வினா-விடை வடிவில் குறிப்பெழுதி வைத்திருப்பார். அக்குறிப்பை ஒருவரிடம் கொடுத்து அவர் முழுமையாக எழுதி முடித்த பின்னர் ஒரு பாடவேளையை ஒதுக்கி ஒவ்வொரு பாட அலகினையும் குறிப்பை எழுதி முடித்தவர் வாசிக்க ஏனையோர் எழுதி முடித்து விட வேண்டும். குறிப்புக்கள் முழுமையாக எங்களால் எழுதி முடிக்கப்பட்டு விட்டதென்பதை உறுதிப்படுத்திய பின்னரே கற்பிக்கத் தொடங்குவார். அவரது கற்பித்தல் ஆற்றொழுக்கானது வகுப்பிலுள்ள ஒருவரை முதலில் பாட அலகின் ஒரு பகுதியை புத்தகத்திலிருந்து வாசிக்கச் சொல்வார். பின்னர் ஓர் உபகதையுடன் விளங்கப்படுத்துவார். அக்கற்பித்தல் முறையென்பது எவரிடத்தும் காணாத அதிசயம். தமிழையும், சைவ சமயத்தை நான் மனோன்மணி அம்மாவிடம் திளைத்துத் திளைத்துக் கற்றேன். அந்தத் திளைப்புத்தான் ஒரு வகையில் இலக்கியத்தின் மீது நான் ஈடுபாடு கொள்ள உந்து சக்தியாக அமைந்தது.

பாடசாலையில் சாதாரண தரம் பயிலும் போது செ.யோகராசா(கருணையோகன்) எனக்கு தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பித்தார். அவர் வகுப்பிலுள்ள மாணவர்களை அடிக்கடி கேள்வி கேட்பார். விடை தெரியாமல் எழுந்து நிற்கும் மாணவர்களைப் பார்த்து 'தோழா' அக வணக்கம் செலுத்துவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு மேல் அனுமதியில்லை என்று சொல்வார். இதுதவிர தமிழில் சொற்களை வழுவின்றி எழுதுவிக்கும் நோக்கில் 10 சொற்களைக்கொண்ட சொல்வதெழுதல் பயிற்சியினையும் வழங்குவார். அவர் தரும் எல்லாச் சொற்களுமே வில்லங்கமானவை. அவற்றைச் சரியாக எழுதிப் பத்துக்குப்பத்து எடுக்கும் மாணவர் மிகச் சிலரே ஆனால் பூச்சியம் எடுப்போர் அநேகர். அவ்வாறானோரை சைவர் மாணவர்கள் என வகைப்படுத்திச் சாத்துப்படியும் வழங்குவார். அவருக்கு மிகவும் விருப்புக்குரியவனாக நானிருந்தேன். இல்ல மெய்வல்லுநர் போட்டியில் எனது இல்லமான கிருஷ்ண பிள்ளை இல்லப் பொறுப்பாசிரியராகவும் அவர் இருந்தார். விளையாட்டில் ஆர்வமின்றி ஒளித்துத்திரிந்த என்னையழைத்து அன்பாகக் கண்டித்து விளையாட அனுப்புபவரும் அவர்தான். 1991 காலப் பகுதியில் அவர் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்ற போது ஒருவகை வெறுமையை அனுபவித்தேன். அவரது இடத்திற்கு திருமதி. நாளினி கணபதிப்பிள்ளை என்ற ஆசிரியை வந்து சேர்ந்தார். இவர் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் உடன் பிறந்த சகோதரியின் மகள் என்பது நான் பாடசாலையை விட்டு வெளியேறும் வரை எனக்குத் தெரியாது. இவரது அர்ப்பணிப்பு மிகுந்த கற்பித்தல் செயற்பாடு விதந்துரைக்கத்தக்கது. என் மீது இன்று வரை மிகுந்த அக்கறை கொண்டிருக்கும் ஒருவரென்றால் இவருக்கும் தவிர்க்க முடியாத இடமுண்டு. இலக்கியத்தின் மீதான ஈடுபாடு இவர் மூலமாகவே ஆரம்பித்தது. தமிழ்த்தினப் போட்டி வரும் போது கட்டுரை எழுதுவதற்காக என்னைத் தெரிவு செய்து அனுப்பி விடுவார். அப்போதெல்லாம் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையில்தான் தமிழ்த்தினப்போட்டி நடக்கும். நண்பன் தயாரூபனும் நானும் சேர்ந்து சைக்கிளில் போய் போட்டியில் கலந்து கொள்வோம். அவன் அப்போது சிறுகதை எழுதுவதில் விண்ணன். எப்போதும் முதலாமிடத்தைத் தட்டிச் செல்வான். (இப்போது முல்லைத்தீவில் உதவிப் பிரதேச செயலாளராக இருக்கிறான்) நான் கட்டுரையில் இரண்டாமிடத்தை இரு தடவைகள் பெற்றுள்ளேன். சாதாரண தரத்தில் சித்தியடைந்து உயர்தரத்திற்குச் சென்றதும் உயர்தர மாணவர் மன்றத்தின் தலைவராகத் தெரிவானேன். இது 1993 காலப் பகுதியில் நடந்தது. அப்போது வடபகுதியில் பொருளாதாரத் தடை உச்சத்தில் இருந்தது. அந்தவருடம் எப்பாடுபட்டாவது ஏணியை வெளியிடுவதென முடிவு செய்தோம். திருமதி நாளினி எனக்கு இது தொடர்பில் ஆலோசனை வழங்குபவராக இருந்தார். நாங்கள் வெளியிடவுள்ள ஏணியில் பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா.சிவத்தம்பியின் நேர்காணல் இடம் பெற்றால் சிறப்பாக இருக்குமென அவர் சொன்னார். பேராசிரியர் எமது பாடசாலையிலேயே தனது உயர்தரக் கல்வியை மேற்கொண்டிருந்ததும் இதற்கொரு காரணம். அப்போது பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தார். இப்போதிருப்பதைப் போன்று போக்குவரத்து வசதிகள் குறிப்பிடும் படியாக இல்லை. எல்லோரும் சைக்கிளில் தான் யாழ்ப்பாணம் போவார்கள். பேராசிரியரை நேர்காணல் செய்ய எமது கல்லூரி ஆசிரியர் சிவநேசனுடன் நானும் நண்பர்களான சுசிகுமார், தயாரூபன், தரணிதரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரும் ஆளுக்கொரு சைக்கிளில் யாழ் பல்கலைக்கழகம் போய் பேராசிரியரைச் சந்தித்து நேர்காண லைப் பதிவு செய்தோம். வீடு திரும்ப இரவாகி விட்டது. அந்தக் காலத்தை மறக்க முடியாது. அடுத்து வந்த நாட்களில் பேராசிரியரின் நேர்காணலை ஒலிப்பதிவிலிருந்து எழுத்துப் பதிவாக்கிப் பொருத்தமான மேற்கோள்களுடன் ஏணியில் சேர்த்தோம். அப்போது எனக்கு சிறு கதை எழுதத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் அதற்கு முன்பொரு தருணம் சிறுகதை எழுத வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானதையும் இங்கே குறிப்பிடத்தான் வேண்டும்.

1992 டிசம்பர் மாதம் சாதாரண தரப் பொதுத் தேர்வில் பரீட்சை எழுதி னேன். பரீட்சையின் முதல் நாள் முதற்பாடம் தமிழ்மொழியும் இலக்கியமும் - இலக்கியப் பகுதியை எழுதுவதில் சிரமமேதும் இருக்கவில்லை. ஆனால் மொழிப்பகுதியை எழுதிய போது வினாத்தாளில் கேட்கப் பட்டிருந்த கட்டுரைத் தலைப்பு எதுவும் எனக்கு உடனடியாக எழுதச் சாத்தியமாகுமெனத் தோன்றவில்லை. நல்லவேளையாக கட்டுரை அல்லது ஏதேனும் சிறுகதை எழுதுக என்று கேட்கப்பட்டிருந்தது. அப்போதுதான் தவிர்க்க முடியாமல் ஒரு சிறுகதை எழுதினேன். அதன்பின் சிறுகதை எழுதும் சிந்தனையே எழவில்லை. கல்லூரியில் தயாரூபனும், சுசிகுமாரும் சிறுகதை எழுதுவதில் பிரபலமானவர்களாக அறியப்பட்டிருந்தனர். நான் கவிதை எழுதுவது எளிதான வேலையென நினைத்து எழுதத் தொடங்கினேன். உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது நடைபெற்ற எல்லாக் கவியரங்குகளிலுமே நான் கவிதை வாசித்திருக்கிறேன். இந்த வழியில் என்னைச் செல்லத்தூண்டியவர் எனக்கு முன்னர் உயர்தர மாணவர் மன்றத் தலைவராக இருந்த ஜெகதீஸ்வரன் அண்ணா தான். அவர் துடிப்பான இளைஞர். அப்போதே இலக்கியப் பரிச்சயம் நிறைந்தவராகக் காணப்பட்டார். வல்வை ந. அனந்தராஜ் என்ற சிறுகதை எழுத்தாளரைக் கல்லூரிக்கு அழைத்து சிறுகதைப் பயிற்சிப் பட்டறை ஒன்றையும் ஜெகதீசன் அண்ணா அக்காலத்தில் நடத்தினார். 'சாளரம்' என்ற சஞ்சிகை அப்போது யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொண்டிருந்தது. அதற்குத் திருமலை யோகேந்திரம் என்பவர் ஆசிரியராக இருந்தார். ஒருமுறை திருமலை யோகேந்திரத்தைக் கல்லூரிக்கு அழைத்து சாளரம் சஞ்சிகைக்கான அறிமுக விழாவொன்றை ஒழுங்கு செய்து உயர்தர மாணவர் மன்றத்தின் சார்பில் என்னுடன் பாலமுரளி, சுசிகுமார், நந்தகுமார், அருந்தவசீலன், சுகுணன் ஆகியோரைக் கொண்ட கவியரங்கொன்றை ஜெகதீசன் அண்ணா நிகழ்த்தினார். அப்போது 'சாளரம்' சஞ்சிகைக்கு ஆக்கங்கள் தருமாறு மாணவர்களை அவர் கேட்டார். ஒரு வேகத்துடன் நானொரு சிறுகதை 'கையில்லாத கதிரை' என்ற தலைப்பில் எழுதினேன். தவிர்க்க முடியாத காரணங்களால் ஜெகதீசன் அண்ணாவிடம் அதைக் கொடுக்க முடியவில்லை. இப்போதும் கைப்பிரதியாக என்னிடமுள்ளது. காகிதத்தட்டுப்பாடு நிலவிய அக்காலகட்டத்தில் திட்டமிட்டபடி நாங்கள் ஏணியைத் தட்டச்சுப் பிரதியாகக் கொண்டு வந்தோம். அதில் எனது இரு கவிதைகளும் கங்கையில் விடுத்த ஓலையின் பாதிப்பில் எழுதியது இடம் பெற்றதாக நினைவிருக்கிறது. தயாரூபன் மற்றும் அருள்ராஜன் ஆகியோரது ஓவியங்கள் மற்றும் எழுத்துருக்களோடு வெளிவந்த ஏணி இதழ் இப்போது என் கைவசமில்லை. இதற்காக நான் இன்றுவரை மனம் வருந்துகிறேன். அதன் பிரதியொன்றைப் பெற எவ்வளவோ முயன்றும் இயலாமல் போய் விட்டது. கல்லூரியின் இறுதி வருடத்தில் எங்களுக்கு திருமதி சுவாமிநாதன் மகேஸ்வரி பொருளியல் கற்பித்தார். அவருக்கு கல்லூரி முகவரிக்கு வாரந்தோறும் ஒரு பத்திரிகை வந்து கொண்டிருக்கும். ஒரு நாள் அவர் அதை வகுப்பறைக்குக் கொண்டு வந்தார். அவரது அனுமதியுடன் அதை வாங்கிப் பார்த்தேன். பத்திரிகையின் பெயர் 'சரிநிகர்' என்றிருந்தது. வழமையாக நான் வாசிக்கும் பத்திரிகைளைப் போன்று அது இல்லாதது அதிசயமாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது. உயர்தரப்பரீட்சை எழுதிப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததும் அந்தக் காலத்தில் பல்கலைக்கழக அனுமதி கிடைத்த பலரும் வழமையாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலொன்றான பிரத்தியேக ஆங்கில வகுப்பொன்றிற்கு கல்லூரிக்கு அருகிலிருக்கும் ஒருவரை ஒழுங்கு செய்து கற்று வந்தேன். அவர் எனக்கு மாமா முறையானவர். கிருஷ்ணபிள்ளை என்பது அவரது பெயர். அவரிடம் ஆங்கிலம் கற்று வரும் காலத்தில் (1997) அவரது மகனான ரவிக்குமாருக்கு வாரந்தோறும் சரிநிகர் தபாலில் வந்து சேரும். அப்போதுதான் சரிநிகரை வாசிக்கத் தொடங்கினேன். குப்பிழான் ஐ. சண்முகனின் 'நிகழ்வு' என்ற சிறுகதையைச் சரிநிகரில் தான் வாசித்தேன். அக்கதையில் வரும் டிட்டோ என்ற நாயின் வாலைப் பெரிதாக்கி வரைந்திருந்த ஓவியம் இப்போதும் நினைவிலிருக்கிறது. அக்காலப்பகுதியில் உதயனின் வார வெளியீடான 'சஞ்சீவி' வெளி வருகிறது. ஏற்கனவே கல்லூரி நாள்களில் கவிதையெழுதிய அனுபவத்தில் 1998 காலப் பகுதியின் தொடக்கத்தில் சஞ்சீவியின் கவிதை முற்றம் பகுதிக்கு வெண்பா வடிவில் யாழ் திருநகரச் சிறப்பு எனும் தலைப்பில் கவிதை எழுதுகிறேன். எழுதி அனுப்பிய மறுவாரமே அது பிரசுரமாகிறது. தொடர்ந்து நான் சஞ்சீவி கவிதை முற்றம் பகுதிக்கு எழுதியனுப்பிய எல்லாக் கவிதைகளும் தவறாமல் பிரசுரமாகிறது. நானுமொரு கவிஞன் தான் என்ற எண்ணம் மேலோங்குகிறது. பின்னர் சஞ்சீவியில் கவிதை முற்றத்திற்கு மேலதிகமாக ஓவியமொன்றைப் பிரசுரித்துக் கவிதை எழுதத் தூண்டும் மௌனமொழி என்ற பகுதியை அறிமுகம் செய்கின்றனர். அப்பகுதிக்கு நான் எழுதிய அநேகமான கவிதைகள் பிரசுரமாகின்றன. பின்னர் கவிதை எழுதுவதில் சலிப்பு ஏற்பட கதை எழுதத் தொடங்குகிறேன். 1998 காலத்தின் பிற்பகுதியில் எனது முதலாவது கதை அவனும் இவனும் என்ற தலைப்புடன் பிரசுரமாகிறது. இக்கதைக்காக நான் இ. ஸ்ரீநிதி என்ற பெயரைத் தேர்ந்தெடுத்திருந்தேன். இப்புனை பெயரில் சஞ்சீவியில் மூன்று கதைகள் வெளிவந்தன. பின்னர் சொந்தப் பெயரில் சில கதைகள் எழுதினேன். அக்காலப்பகுதியில் குரும்பசிட்டி மாதர்சங்கம் என்ற அமைப்பு சிறுகதைப் போட்டி ஒன்றை நடாத்துவதாக உதயனில் வந்திருந்த விளம்பரத்தை வாசித்து கானல் நீர் நம்பிக்கைகள் என்ற கதையை எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பினேன். நான் சற்றும் எதிர்பாராத விதமாக அக்கதைக்கு முதற்பரிசு(1000ரூபா) கிடைத்தது. பரிசுத் தொகையினை வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் குறித்ததொரு நாளில் வந்து பெற்றுக் கொள்ளு மாறு கடிதம் அனுப்பி இருந் தார்கள். அப்போது வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் உரும்பிராயில் இயங்கி வந்தது. குறித்த நாளில் 764 இலக்கப் பேரூந்தில் உரும்பிராய்க்குப் போனேன். வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் பிரதான வீதியொன்றில் இயங்கி வந்ததால் எவ்வித சிக்கலும் இருக்கி வில்லை. நான் அங்கே போய்ச் சேர்ந்தபோது இரண்டாம் பரிசு வாங்க ஒருவர் வந்திருந்தார். அவருடன் கதைத்த போது அவர் தொல்புரம் சி.கதிர்காமநாதன் எனத் தெரிய வந்தது. அன்றைய தினம் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் அந்நிகழ்விற் குப் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். சு. தணிகாசலம் பிள்ளை எமக்கான பரிசில்களை வழங்கினார். பரிசில் வழங்கும் போது ஒளிப்படமெடுத்தார்கள். அவ்வொளிப்படத்தை உரியவர்க ளிடம் தொடர்பு கொண்டு எனக்கு அனுப்பி வைப்பதாகக் கதிர்காமநாதன் சொன்னார். எனது முகவரியைக் கொடுத்து விட்டு வந்தேன். கதிர்காமநாதனும் சொன்னபடியே ஒளிப்படத்தை அனுப்பி வைத்தார். இதிலிருந்து அவருடன் கடிதத் தொடர்பு நீடித்தது. அப்போது 'உடுவில் அரவிந்தன்' பரபரப்பாகச் சஞ்சீவியில் கதை எழுதிக் கொண்டிருந்தார். உடுவில் அரவிந்தனைத் தனக்கு நேரடியாகத் தெரியும் எனக் கதிர்காமநாதன் சொல்லியிருந்தார். அதனடிப்படையில் அரவிந்தனின் முகவரியைக் கேட்டுக் கதிர்காமநாதனுக்கு எழுதினேன். அவரும் உடனடியாகப் பதில் அனுப்பினார். உடுவில் அரவிந்தனுக்குக் கடிதம் எழுதினேன். உடனடியாகப் பதில் வந்தது. இவ்வாறு அரவிந்தனுடன் தொடர்பு ஏற்பட்டது. அக்காலத்தில் உடுவில் அரவிந்தன் உணர்வுகள் என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். எனக்கு ஓர் அழைப்பிதழும் அனுப்பி வைத்திருத்தார். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இவ்வெளியீட்டு விழா நடைபெற்றது. அப்போது நான் பல்கலைகழகத்தில் இரண்டாவது வருடத்தில் பயின்று கொண்டிருந்தேன். திருநெல்வேலியில் சிவகாமசுந்தரி யம்மன் ஆலயத்துக்கருகில் எனது வசிப்பிடமிருந்தது.

அங்கிருந்து நான் உடுவில் அரவிந்தனின் நூல் வெளியீட்டு விழாவுக்குச் சைக்கிளில் போனேன். விழாவில் செங்கையாழியானும் செம்பியன் செல்வனும் உடுவில் அரவிந்தனின் கதைகளை விதந்துரைத்தது பிரமிப்பாக இருந்தது. அன்று தான் உடுவில் அரவிந்தனை நேரடியாகச் சந்தித்தேன். அவர் தனது கதைத் தொகுப்பு நூலில் ஒப்பமிட்டுத் தந்தார். என்னைப் பற்றி ஆர்வத்துடன் விசாரித்தார். நான் திருநெல்வேலியில் தங்கியிருப்பதாகச் சொன்னதும் எனது வசிப்பிடத்திற்கருகிலேயே தானும் வசிப்பதாகக் கூறி முகவரி தந்தார். அவரது வசிப்பிடம் ஆடியபாதம் வீதிக்கருகிலிருந்தது. பின்னர் அங்கு சென்று சந்தித்தேன். அச்சந்திப்பைத் தொடர்ந்து அவரும் நானும் மோட்டார் சைக்கிளில் தொல்புரம் போய்க் கதிர்காமநாதனைச் சந்தித் தோம். அவரது வீட்டில் அன்றைய தினம் கோழி சமைத்து எங்களுக்குத் தடல்புடலான விருந்து நடந்தது. அப்போது உடுவில் அரவிந்தன் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் செயலாளராக இருந்தார். தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் கூட்டங்கள் ஆரியகுளச் சந்திக் கருகிலுள்ள ஒன்றியக் கட்டடத்தில் நடக்கும். தொடர்ந்து அக்கூட்டங்க ளில் கலந்து கொள்வேன். அதிலி ருந்துதான் செம்பியன் செல்வன் என்ற உன்னதமான மனிதரின் நட்பு வாய்த்தது. அப்போது ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்றியத் தின் சிறுகதை அரங்கில் நானும், தாட்சாயணி யும் சிறுகதைகள் வாசித்தோம். சட்டநாதன், செம்பியன் செல்வன் இருவரும் விமர்சனம் செய்தனர். அரவிந்தன் 'தாயகம்' சஞ்சிகையுடன் நெருங் கிய தொடர்பினைக் கொண்டிருந்தார். தாயகத்தில் சிறுகதைகளுக்கு ஓவியம் வரைபவரும் அவர்தான். அரவிந்தன் மூலமாக தாயகம் ஆசிரியர் தணிகாசலத்துடன் எனக்கு நெருக்கமேற்பட்டது. தாயகத்தில் ஓரிரு சிறுகதைகளை எழுதியுமிருக்கிறேன். தொடர்ந்து எனது சொந்தப் பெயரில் சஞ்சீவியில் சில சிறுகதைகளை எழுதினேன். பின்னர் நான் சொந்தப் பெயரில் எழுதிய சிறுகதைகள் சில பிரசுரமாகவில்லை. 2000 வருடம் தொடங்கியதும் சித்திரா என்ற பெயரில் சிறுகதை எழுதினேன். 2000 மே மாதம் சஞ்சீவி நின்று போகும் வரையில் சித்திரா என்ற பெயரில் மாதமொரு கதை என்ற அடிப்படையில் ஐந்து கதைகள் பிரசுரமாகின. சஞ்சீவி நின்று போனதும் சுடர் ஒளியில் சிறுகதைகள் எழுதினேன். சுதாரஞ்சன் என்ற பெயரில் அக்கதைகள் வெளிவந்தன பின்னர் சரிநிகருக்கு சுதாரஞ்சன் என்ற பெயரில் இரு கதைகள் எழுதினேன். தொடர்ந்து இரு இதழ்களில் பிரசுரமாயிற்று. அத்தோடு சரிநிகரும் நின்று போயிற்று. அந்நேரம் ஆதவன் என்ற சஞ்சிகை 'ராவய' வெளியீடாக வந்தது. அதற்கொரு கதை எழுதினேன். அது வெளிவந்தது. ஆனால் இதுவரை அவ்விதழ் என் பார்வைக்குக் கிடைக்கவில்லை. அப்போது 'அமுது' என்ற சஞ்சிகை வெளிவரத் தொடங்கியது. அதன் வாயிலாகக் கலாமோகன், சக்கரவர்த்தி, சோபாசக்தி, சாருநிவேதிதா போன்ற பெயர்களை அறிந்து கொண்டேன். அமுது விற்கும் சில கதைகள் எழுதிப் பிரசுரமாயிற்று. இதற்கிடையில் உடுவில் அரவிந்தனுடன் ஏற்பட்ட நட்பினால் கோகுலராகவன், ந.சத்தியபாலன், இரவீந்திரன், இயல்வாணன் ஆகியோரது அறிமுகங் கிடைத்தது. (அப்போது நான் பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருட மாணவன்) உடுவில் அரவிந்தனின் நண்பர்கள் வட்டம் ஒரு கதைத்தொகுப்பைக் கொண்டுவரத் திட்டமிட்டது. இதற்கென ஒவ்வொருவரும் தமது சொந்தக்காசில் ரூ.2000 முதலிட்டு ஒரு தொகுப்பைக் கொண்டு வரலாம் என்ற ஆலோசனை முன் வைக்கப்பட்டது. இதனடிப்படையில் நான், அம்பலம் பிரபாகரன், கோகுலராகவன், கதிர்காமநாதன்,

> **கல்லூரியின் இறுதி வருடத்தில் எங்களுக்கு திருமதி சுவாமிநாதன் மகேஸ்வரி பொருளியல் கற்பித்தார். அவருக்கு கல்லூரி முகவரிக்கு வாரந்தோறும் ஒரு பத்திரிகை வந்து கொண்டிருக்கும். ஒரு நாள் அவர் அதை வகுப்பறைக்குக் கொண்டு வந்தார். அவரது அனுமதியுடன் அதை வாங்கிப் பார்த்தேன். பத்திரிகையின் பெயர் சரிநிகர் என்றிருந்தது. வழமையாக நான் வாசிக்கும் பத்திரிகைகளைப் போன்று அது இல்லாதது அதிசயமாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.சத்தியபாலன், இரவீந்திரன், உடுவில் அரவிந்தன், இயல்வாணன், தாட்சாயணி, சிவாணி, சாரங்கா, குமுதினி ஆகியோர் சேர்ந்து 'இங்கிருந்து... பன்னிரண்டு சிறுகதைகள்' எனும் தொகுப்பை வெளிக்கொண்டு வந்தோம். இத்தொகுப்பிற்கு முன்னுரை எழுதவென குப்பிழான். ஐ. சண்முகனை அணுகிய போது அவருடன் தொடர்பு ஏற்பட்டது. பல்கலைக்கழகத்தில் நான் இறுதி வருடம் பயிலும் போது என்னுடன் பயின்று வந்த சிவாணி ஒரு தொகுப்பாளராகச் செயற்பட்டு பல்கலைக்கழக மாணவர் பதின்மூவரது சிறுகதைகளை உள்ளடக்கி (எனது கதையும் உள்ளடங்களாக) மண்ணின் மலர்கள் என்ற தொகுப்பைச் செங்கையாழியான் மூலமாக மல்லிகைப் பந்தல் வெளியீடாகக் கொண்டு வந்தார். அப்போது தினகரனில் எனது முதலாவது கதையான அகலிகை வெளி வருகிறது. அதைத் தெணியான் பகிரங்கமாகப் பாராட்டியதாகவும் தன்னை வந்து சந்திக்கும் படி சொன்னதாகவும் தகவல் கிடைத்தது. அவரது வீட்டிற்குப் போய் தெணியானைச் சந்தித்தேன் அவரது நட்புக் கிடைக்கின்றது. பின்னர் தெணியான் மூலமாகக் கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை யுடன் தொடர்பு ஏற்படுகிறது. அவர் என்னைக் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் செயலாளராக்குகிறார். நூல் வெளியீட்டு விழாக்கள், அறிமுக விழாக்களில் கலந்து கொள்கிறேன்.

பல்கலைக்கழகத்திலிருந்து கற்கை நெறியை முடித்து வெளியேறிய 2002 காலப்பகுதியில் தேவதாசன் என்பவர் சினிமா ரசனையை வளர்க்கும் நோக்கில் சலன சித்திரம் என்ற அமைப்பைத் தொடங்கினார். நான் போய் அதில் இணைந்து கொள்கிறேன். அங்கே வந்த உமாகாந்தன், பிரணவநாதன் ஆகியோருடன் நெருக்கமான நட்பு ஏற்படுகிறது. பிரணவநாதன் நல்லவாசகர். அவர்தான் எனக்கு ஜே.ஜே சில குறிப்புக்களைக் கொண்டு வந்து வாசிக்கத் தந்தார். அவர் ரஞ்சகுமாரின் உடன் பிறவாச் சகோதரன். தனது அநேகமான புத்தகங்களைத் திருடிய பெருமை ஆதியைச் சாரும் (ஆதி என்பது பிரணவநனின் செல்லப்பெயர்) என ரஞ்சகுமார் ஒரு தடவை என்னிடம் சொல்லியிருக்கிறார். எஸ் ராமகிருஷ்ணன் மொழி பெயர்த்த ஆலிஸின் அற்புத உலகத்தைக் கொண்டு வந்து தந்ததும் பிரணவன் தான். பிரணவன் இப்போது கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளராக வவுனியாவில் கடமையாற்றி வருகிறார்.

உமாகாந்தன் எனக்கு அயலவர். பருத்தித்துறை காணிப்பதிவாளர் அலுவலகத்தில் கடமையாற்றி வருகிறார். அவர் தனது அலுவலகத்திற்கு ஒரு வித்தியாசமான மனிதர் வந்ததாகவும் அவரது வீடு புலோலியில் இருப்பதாகவும் தன்னை ஒரு தடவை வந்து சந்திக்கும் படி சொன்னதாகவும் அவரைச் சந்திப்பதற்கு என்னையும் உடன்வருமாறு ஒருநாள் என்னிடம் கூறினார். அதன்படி ஒருநாள் நாங்களிருவரும் புலோலிக்குச் சென்று அந்த வித்தியாசமான மனிதரைச் சந்தித்தோம். அவரது பெயர் குலசிங்கம். அவர் வீட்டிலொரு நூலகம் இருந்ததைப் பார்த்த போது வியப்படைந்தோம். அன்றையதினம் குலசிங்கத்திடம் ரூ.450 கொடுத்து காலச்சவடு இதழ்கள் 50 வரை உமாகாந்தன் வாங்கினார். அப்போது தான் நான் காலச்சவடு என்ற பெயரை அறிந்தேன். அதிலொரு இதழில் குலசிங்கத்தின் நேர்காணலும் வந்திருந்தது. காலச்சவடு இதழ்களைப் புரட்டியபோது இதுவரை காலமும் இலக்கியம் குறித்து என் மனதிலிருந்த விம்பம் நொருங்கியது. 50 இதழ்களையும் இரண்டாகப் பிரித்து ஒருபகுதியை உமாகாந்தனும் மற்றயதை நானும் கொண்டு வந்து வாசித்தோம். பின்னர் நான் காலச்சுவட்டிற்கு கதை அனுப்பினேன். கதை பிரசுரமாகுமென அரவிந்தன் பதிலனுப்பியிருந்தார். அது நான் எதிர்பார்த்திராத இனிய அதிர்ச்சி.

இதே காலப்பகுதியில் Script net என்ற அமைப்பு திரைக்கதை உருவாக்கல் பயிற்சி முகாமொன்றினை நடத்தவிருப்பதாகவும் அதற்கெனத் திரைக்கதை எழுதியனுப்பும் படியும் உதயன் பத்திரிகையில் விளம்பரம் வருகிறது. நானும் பிரணவனும் திரைக்கதை எழுதியனுப்பி அப்பயிற்சி முகாமிற்கு தெரிவாகிறோம். அப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ளும் போது அ.யேசுராசாவும் அங்கே வருகிறார். அவருடன் தொடர்பு ஏற்படுகிறது. பயிற்சி முகாம் ஒரு வருடத்திற்கு மேல் நடக்கிறது. இதற்கிடையில் அ.யேசுராசா தெரிதல் என்ற இதழைத் தொடங்குகிறார். அதில் எழுதச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. சரிநிகர் நின்றுபோய் 'நிகரி' வரத் தொடங்குகிறது. நிகரிக்கு நான் 'செண்பகங்களின் வருகை' என்ற கதையை எழுதியனுப்புகி றேன். நிகரி இதழ் (11) எனது கதையுடன் வெளிவருகிறது. அத்தோடு நிகரியும் நின்று விட்டது. அக்கதையை நிகரி ஆசிரியர் குழுமம் விதந்து பேசியதாக ஒருவர் தன்னிடம் அலுவலகத்திற்கு வந்த போது கூறியதாகவும் அவரைச் சந்திக்கலாமெனவும் கூறி உமாகாந்தன் என்னை நெல்லியடி முருகன் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே எங்களை வந்து சந்தித்த நபரின் பெயர் நிர்மானுசன். முதற் சந்திப்பிலேயே தனது மென்மையான அணுகுமுறையால் நிர்மானுசன் என்னைக் கவர்ந்து விட்டார். அவர்தான் 'Northeasten Herald' ஐயும் தராக்கியையும் எனக்கு அறிமுகப்படுத்தியவர். பப்ரல் அமைப்பில் பணியாற்றியவர். அவரை ஒரு தடவை சண்முகன் வீட்டிற்கும் அழைத்துச் சென்றிருக்கிறேன். சண்முகன் வீட்டிற்குச் செல்லும் போதுதான் எனக்கு 'மூன்றாவது மனிதன்' கிடைக்கிறது. வாசித்துப் பாரக்கிறேன். அதற்கும் கதை எழுதி அனுப்புகிறேன். 'வாமன அவதாரம்' என்ற அக்கதை மூன்றாவது மனிதனில் பிரசுரமாகிறது. **யாழ் நூலகத்தில்** மூன்றாவது மனிதன் நடத்திய புத்தகக் கண்காட்சிக்குச் சென்று பௌசரைச் சந்திக்கிறேன். அவருடனான நட்பு வலுக்கிறது. மூன்றாவது மனிதனுக்காகத் தெணியான், சண்முகன் ஆகியோரை நேர்காணல் செய்து அனுப்புகிறேன். மூன்றாவது மனிதன் நின்று போன பின்னரும் பௌசருடனான நட்பு தொடரவே செய்கிறது. தொடர்ந்து வந்த நாட்களில் கட்டை வேலிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மூலமாக ரவீந்திரனின் அறிமுகம் கிடைக்கிறது. அவர் அப்போது சஞ்சிகைகளைக் கொண்டு சென்று சந்தைப்படுத்தும் ஒருவராக இருந்தார். பிற்காலத்தில்தான் Book Lab என்ற விற்பனை நிலையத்தை ஆரம்பித்தார். ரவீந்திரன் மூலமாக 'புதுப்புனல் வழங்கும் பன்முகம்' என்ற சஞ்சிகை கிடைக்கிறது. பின்பொருதருணம் சங்கத்தலைவருடன் ரவீந்திரன் வீட்டிற்குச் சென்ற போது பன்முகம் இதழ்கள் அனைத்தும் எனக்குக் கிடைக்கிறது. அவற்றை மொத்தமாக அள்ளி வந்து வாசிக்கிறேன். அதில் வெளிவந்திருந்த கதைகள் எனக்குப்புனைகதை வெளியில் இன்னொரு திசையை அறிமுகப்படுத்துகின்றன. குறிப்பாக யுவன்சந்திசேகர் எழுதிய '1999 இன் சிறந்த கதை' என்ற பிரதி அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அத்தாக்கத்துடன் பன்முகத்திற்கு கதை எழுதியனுப்புகிறேன். 2006 ஜனவரி இதழில் எனது 'எதிர்நோக்கு' என்ற கதை பிரசுரமாகி இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபாலில் வீட்டுக்கு வருகிறது. அதை வாசித்து விட்டு நீங்கள் தொலைபேசியில் அழைத்து பாராட்டுகிறீர்கள். உங்களுக்கே தெரியும் அந்த வருடம் பன்முகம் இதழில் தொடர்ந்து எனது மூன்று கதைகள் பிரசுரமாகின்றன. அ.யேசுராசா மூலமாக எம். ஐ.எம். றஊப்பின் அறிமுகம் கிடைக்கிறது. தொடர்ந்து ஹரிஹரசர்மா வந்து தொடர்புகொள்கிறார். உங்கள் மூலமாக வைகறையில் எதிர்நோக்கு, தேவேந்திரனின் உரையாடல் என்பனவும் எனது நேர்காணலும் பிரசுமாகிறது. ஹரிஹரசர்மா தனது இணையத்தளமான முரண்வெளியல் இளமொட்டைச் சிறுபுழுதி என்ற பெயரில் எதிர்நோக்குப் பற்றி எழுதுகிறார். எம்.ஐ.எம்.றஊப் மூலமாகப் பெருவெளி கிடைக்கிறது. பெருவெளியின் தொடர்பால் மிஹாத், பர்ஸான், அப்துல்ரசாக், றியாஸ்குரானா போன்றோரது அறிமுகம் கிடைக்கிறது. இதே காலப்பகுதியில் குணேஸ்வரன் மூலமாக உயிர்நிழல் லக்ஷ்மியின் தொடர்பு கிடைக்கிறது. மனுபுத்திரனின் எழுத்துலகம் முதலான கதைகள் உயிர்நிழலில் பிரசுரமாகிறது. லக்ஷ்மி எனக்கொரு நீண்டமடல் வரைகிறார். பிரான்ஸிலிருந்து மனுபுத்திரன் படைப்புலகம் தொடர்பாக பிரதீபன் தொலைபேசி வழியே 45 நிமிடங்கள் உரையாடி அப்பிரதியை ஒரு திரைப்படமாக்குவதற்கு சம்மதம் கேட்கிறார். நானும் சம்மதிக்கிறேன். பின்னர் உங்கள் மூலமாக இராமரூபனின் தொடர்பு கிடைக்கிறது. அவர் என்னிடம் வருகிறார். ஒரு முழு நாள் அவருடன் உரையாடுகிறேன். வாழ்க்கையில் அர்த்தம் பற்றிய கேள்வியை இராமரூபன் எழுப்புகிறார். உங்கள் மூலமாக மு.பொவின் பரிச்சயங் கிட்டியது. குணேஸ்வரன் புலம்பெயர் இலக்கியத் தேடலில் சித்தார்த்த சேகுவேரா , சிறிதரன், கலாமோகன், சோபாசக்தி, சக்கரவர்த்தி ஆகியோரின் பிரதிகளை எனக்கு அறிமுகப்படுத்தினார். இன்னும் சிலரது தொடர்புகள் மூலமாக எனது இலக்கியப் பரிச்சயம் நீளுமென்றே நம்புகிறேன். காலத்தின் தீர்மானம் மர்மமானதல்லவா? 1996 என்பதாக ஞாபகம். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி நுழைவுக்காகக் காத்திருந்த வேளை நந்தியின் 'ஊர் நம்புமா?' கதைத்தொகுப்பு வாசிக்கக் கிடைத்தது. அதை வாசித்த தாக்கத்தில் 'சந்தேகக்கோடு' என்றொரு கதையை எழுதினேன். அப்போது வான் வழியாக யாழ்ப்பாணத்திற்கு 'மித்திரன்' வரத் தொடங்கியிருந்தது. அப்போது மித்திரனின் தீவிர வாசகனாகி யிருந்ததால் இராகினி ரங்கராஜன் என்ற பெயரில் சந்தேகக் கோட்டை மித்திரனுக்கு அனுப்பினேன். நான் சற்றும் எதிர்பார்த்திராத வகையில் 'சந்தேகக்கோடு' அடுத்தவாரமே மொறாயஸின் கோட்டுச்சித்திரத்துடன் பிரசுரமாயிற்று. இந்நிகழ்வு தான் என்னைத் தொடர்ந்தெழுதத் தூண்டியது. ஒருவேளை மித்திரனில் சந்தேகக்கோடு வெளிவராமல் போயிருந்தால் நானொரு கதை சொல்லியாக வராமற் போயிருப்பேனோ என்று கூட இப்போதும் நான் நினைப்பதுண்டு.

(மிகுதி அடுத்த இதழில்)

(விமர்சனங்களும் - விவாதங்களும் தொடரும்)

# மீண்டும் தொடக்கப்புள்ளிக்கு

கு.றஜீபன்

உண்மையாகவே அச்சப்பட்ட நாளொன்றில்
ஒளிமிகுந்த சூரியன் புதைந்து போனது
குண்டுகளால் உழப்பட்ட நிலங்களில்
மனிதம் புதைக்கப்பட்டது
கீழ்வானில் இருள்கௌவத்தொடங்கி
எல்லாத்திசைகளையும் அடைத்துக் கொண்டது
இனம் என்கிற அடையாளம் சிதைக்கப்பட்ட



கலப்பின உருவாக்கத்திற்காய்
புணர்ச்சிக்கு அழைக்கப்படுகிறது.
மிகவும் மெலிந்து போனதான
எமது எதிர்காலத்தில்
எந்தவிதமான பயனுள்ள நாட்களும்
இருப்பதாகத் தெரியவில்லை
எத்தனையோ ரணங்களுக்குப் பிறகும்
வரங்கள் கிடைக்குமென்று முடிவில்லை
மீண்டும்
தொடக்கப் புள்ளிக்கே துரத்தப்படுகின்றோம்
எமக்கான ஓவியத்தை வரைந்து
கண்திறக்கும் தறுவாயில்
பலவந்தமாக அழிக்கப்பட்டதால்
இனி!
அவர்கள் விரும்பும் ஓவியத்தை மட்டுமே
வரைந்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம்

✲✲✲



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வரவுகள்

## உடையக் காத்திருத்தல்

### ஜமீல்



அப்துல் றகுமான் அப்துல் ஜமீல் என்ற இயற்பெயர் கொண்ட ஜமீலின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. தனது முதல் தொகுப்பான தனித்தலையும் பறவையின் துயர் கவியும் பாடல்கள் (2007) மூலம் பெரும் கவனிப்பைப் பெற்ற ஜமீலின் கவிகைள் ஒரு போர் வீரனின் கத்தியைப் போன்று எட்டுத்திசைகளிலும் வீசப்படுகின்றது.

கடல்
காடு
காற்று வெளி உட்பட
எல்லாமே பொதுவில் கிடக்கின்றது.
ஆனால் மனிதன் காலூன்றிய
நிலம் மட்டும்
துண்டம் துண்டமாய் கிடக்கிறது
ரத்தமும் சதையுமாக

என நிலத்தைப்பாடும் ஜமீலின் கவிதைகள் மனித வாழ்வியலை அதன் ரத்தமும் சதையுமாக தனது பாடு பொருளில் கொண்டிருப்பதே அதன் வெற்றி.

## இலங்கை அரசியல் வரலாறு இழப்பும் பதிவுகளும்

### குமாரதுரை அருணாசலம்




திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தின் கிளிவெட்டி கிராமத்தைச் சேர்ந்த குமாரதுரை அருணாசலம் எழுதிய இலங்கை அரசியல் வரலாறு தமிழில் வெளிவந்திருக்கும் மிகமுக்கியமான வரலாற்று பதிவாகும். 516 பக்கங்களில் பல புகைப்பட ஆதாரங்களுடன் வெளி வந்திருக்கும் இந்நூலில் ஒரு தனிப் பட்ட மனிதனின் விருப்பு வெறுப்புக்கள் பதிவாகி யுள்ளன. இலங்கை அரசியல் வரலாற்றோடு சமாந்தரமாக பயணிக்கும் தமிழர் அரசியலும் அதன் தொடர்ச்சியான தமிழ் இயக்கங்களின் உருவாக்கமும், செயற்பாடும் என தொடரும் இந்நூலில் யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தியில் 1983ல் நடைபெற்ற 13 இராணுவத்தினர் மீதான கண்ணி வெடித்தாக்குதல் நெல்லியடியில் நடைபெற்றதாக குறிப்பிடப்படுவதை போன்ற பல தகவல் பிழைகளும், ஒருபக்க சார்பும் விரவிக்கிடக்கின்றன. தமிழில் இது ஒரு முக்கியமான ஆவணப் படுத்தல் என்ற வகையில் இலங்கை அரசியல் வரலாறு இழப்பும் பதிவுகளும் தமிழர் தம் அரசியல் வரலாற்றில் மிக முக்கிய பதிவாகிறது.

## எதுவும் பேசாத மழை நாள்

### நபீல்




றிஸ்வி முஹம்மது நபீல் என்ற இயற்பெயரைக்கொண்ட நபீலின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. தனது காலமில்லாக் காலம் கவிதை நூலின் மூலம் பரவலாக அறியப்பட்ட நபீல் விரைவில் தனது இரண்டாவது நூலை வெளிக்கொணர்ந்துள்ளார்.

கவிஞர் சோலைக்கிளி பாணி கவிதை எழுதுவதில் நபீல் முக்கிய மானவர். கவிஞர் சோலைக்கிளியின் பாதிப்பில் கவிதை புனைய வந்தவர்கள் பல பேர். அவரது கவிதைப் பாணியை பின் பற்றிய பலர் அதன் பின்னர் தமக்கான ஒரு பாதையை தெரிந்து கொண்டு பயணிக்க சிலர் இன்னமும் அந்தப்பாதிப்பில் இருந்து விடுபட முடியாதுள்ளது சோலைக்கிளியின் வெற்றியா அல்லது தோல்வியா என்று புலப்படாதொன்று.

சிறகால் ஒருபறவை, அவளை அள்ளியகாற்று, ஒரு நிலாக்கடல், கொக்குக் குஞ்சு மடு, தியானிக்கும் மலைகள் மேல் பாம்புகள் என தனது கவிதைத் தலைப்புக்களில் கூட சோலைக்கிளியின் பாதிப்பை வேண்டிநிற்கும் நபீல் புதிய திசையில் பயணிக்கும் நாளில் கவிதை அவரை வெற்றி கொள்ளும். அவரும் கவிதையை வெற்றி கொள்வார்.

## அவணம்

### சோலைக்கிளி




கிழக்கின் கவிஞர் சோலைக் கிளியின் எட்டுக் கவிதைத் தொகுதி களில் இருந்தும் தேர்ந்தெடுக் கப்பட்டதும் புதிதுமான சில கவிதை களுமான 271 கவிதைகள் அடங்கிய தொரு பெருந் தொகுப்பாக வெளிவந்துள் ளது. அவணம். முப்பது மரைக்கால் ஒரு அவணம் என தானியத்தை அளப்ப வர்கள் குறிப்பிடுவார்கள். கடந்த முப்பது வருட இலக்கிய வாழ்வில் சோலைக் கிளியால் எழுதப்பட்ட கவிதைகளின் முழுமொத்த தொகுப்பு இது. நவீன தமிழ் கவிதைப்புலத்தில் தனக்கென சில வாரிசுக் கவிஞர்களை உருவாக்கியிருப்பவர் கவிஞர் சோலைக்கிளி. இயற்கையையும், மிருகங்களை யும், பறவைகளையும், நாளாந்த மனித வாழ்வின் சகல விதமான நல்லதும் கெட்டது மான பல சொற்களையும் தனது கவிதைகளில் கொண்டு கவிபடைக்கும் சோலைக்கிளியின் கவிதைகள் பல விமர்சனங்களுக்கும் உட்பட்டதுண்டு.

இருந்தாலும் நவீன தமிழ்க்கவிதைப் புலத்தில் நிராகரிக்க முடியாத ஒரு கவிஞராக அடையாளப்படுத்தப்பட்ட இவரின் "அவணம்" கிழக்கு மண்ணின் மண் வாசனைக் கவிதைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைகோதிய தாய்மடி தேடி

*சுபபாலா*



கிளிநொச்சியைச் சேர்ந்த கவிஞர் சுபபாலா நீண்டகால புலம்பெயர்த லுக்குப் பின்னர் மீண்டும் இலங்கையில் வெளியிட்டிருக்கும் கவிதை நூல். என்னதான் புலம்பெயர்வு சொத்து சுகங்களை அள்ளித்தந்திருந்தாலும், வேரடி மண்ணின் நினைவுகளும், தான் வாழ்ந்த சொந்த மண்ணின் நினைவுகளும் ஒவ்வொருவரையும் வாட்டி வதைப்ப தென்பது உண்மை. அதனை வெளிப்படுத்த தெரிந்தவர்கள் தமக்குத்தெரிந்த இலக்கிய வடிவில் வெளிப்படுத்து கின்றார்கள். அந்த வகையில் கவிஞர் சுபபாலா தனது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த எடுத்துக்கொண்ட இலக்கிய வகை கவிதை. இதில் இவர் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதை விட தம் மண்ணையும், சொந்தங் களையும் பிரிந்த ஒரு மனிதன் மீண்டும் தனது தாய் மண்ணை நாடி தன் தலை கோதிய தாய் மடி தேடி தஞ்சம் புகுகையில் அதன் ஆனந்தமே ஒரு கவிதை அல்லவா. அந்த வகையில் விலகிவிடும் சோகங்களும், சுமைகளும் புலம் பெயர் வாழ்வியலின் அவலங்களும் நிறைந்த அழகிய கவிதைத் தொகுப்பே இது.

## நிலம் பிரிந்தவனின் கவிதை

*ப. சுஜந்தன்*



நள்ளிரவொன்றின் எறிகணைகளில்
தப்பி
ஊர் பிரிந்த போது
உயிர் பிரிந்தோர்க்கும்
நான்பிரிந்த சம்பூர்பொன்னிலத்திற்கும்

என தனது கவிதை நூலை சமர்ப்பணம் செய்திருக்கும் ப.சுஜந்த னின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. தன் கண் முன்னாலேயே தான் வாழ்ந்த மண் பறிபோகும் சோகம் ஈழத்து தமிழர்களுக்கு புதியதல்ல. திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தின் "சம்பூர்" என்ற தமிழ்க்கிராமம் இயற்கை வனப்பு மிக்க ஒரு பூஞ்சோலை அனைத்து வளங்களும் நிறைந்த பூமி. ஆனால் அது இன்று "அனல் மின் நிலையம் அமைப்பு" என்ற போர்வையால் தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது. தனது சொந்த மண்ணை இழந்து அகதி முகாமில் வாழும் ஒரு கவிஞனின் வலிகள் நிறைந்த கவிதைகள்.

## எங்களையும் இந்த மண்ணில் மனிதராக வாழவிடுங்கள்

*சேனையூர் அச்சுதன்*




திருகோணமலை மூதூர் சேனையூர்க் கிராமத்தின் இளங் கவிஞன் சேனையூர் அச்சுதனின் "எங்களையும் இந்த மண்ணில் வாழ விடுங்கள்" என்ற கட்டுரைத் தொகுப்பு தமிழர்த்தம் வரலாற்றுத்தடங்களின் பதிவுகளைச் சொல்லும் ஒரு ஆவண மாகும். மூதூர் பிரதேசத்தின் குக்கிரா மங்கள் தமிழர் தம் பூமி என்பதற்காக படும் அவலங்களும் போரின் தாக்கங்களினால் அங்கு எழும் ஓலங்களும் மிக அதிகமாக பதிவு செய்யப்பட்ட கட்டுரைத் தொகுப்பு இது. ஒரு ஊடகவியலாளராக தன்னை அடையா ளப்படுத்திக்கொள்ளும் அச்சுதன் ஏற்கனவே "விடிகாலைக் கனவுகள்" என்ற கவிதைத் தொகுப்பைத் தந்தவர்.

## கற்றதும் பெற்றதும்

*தாமரைத் தீவான்*




திருகோணமலையைச் சேர்ந்த கவிஞர் தாமரைத்தீவானின் 24வது நூலாக வெளிவந்துள்ளது கற்றதும் பெற்றதும். கவிஞர் தாமரைத்தீவான் ஈழத்தின் மிக முக்கியமான கவிஞர்களில் ஒருவர். ஈழத்தின் பாரதிதாசனாக அறியப்பட்ட வர். 80வயதைக் கடந்திருக்கும் கவிஞர் தான் ஆரம்ப கல்வி கற்றபோது கற்ற ஆத்திசூடி தொடக்கம் இற்றைவரை கற்ற புத்தகங்களின் தரவுகளையும், தான் சந்தித்துப் பழகிய இலக்கியப் படைப்பாளிகளின் படைப்புக்கள் மூலமும் அவர்கள் மூலமும் பெற்றதும் கற்றதும் என பலவிடயங்களை சுருக்கமாகத் தந்துள்ளார். அவர் படித்த பல புத்தகங்களின் பெயரைக் கூட நாம் இப்புத்தகத்தின் மூலமே முதல் முதலாக அறியக் கூடியதாகவுள்ளது.

தாமரைத்தீவான் சுருக்கமாகவும் இறுக்கமாகவும் எழுதக்கூடியவர். சிலவேளை அவரது அதீத தமிழ்ப்புலமை காரணமாக பல விடயங்கள் விளங்கா தன்மையையும் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 500க்கு மேற்பட்ட நூல்களும் சந்தித்த நண்பர்களும் என எல்லாவற்றையும் அறிமுகம் செய்யும் ஒரு வகையான வித்தியாசமான தொகுப்பு இது. தான் படித்ததை பதிந்து வைத்து அதனையே புத்தகமாக வெளியிடுவதற்கு அதீத ஞாபகசக்தியும் தைரியமும் வேண்டும். அது தாமரைதீவானிடம் நிறையவே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்று வாசகர் மத்தியில் மேற் கிளம்பும் மிக முக்கியமான குற்றச் சாட்டு சில படைப்புக்கள் விளங்கவில்லை, புரியவில்லை என்பது. அதுவும் பின் நவீனத் துவ எழுத்துக்கள் என்றால் நம்மில் பலருக்கு வேப்பங்காய் சாப்பிடுவது போல. ஒரு படைப்பை அறிவதற்கு குறித்த படைப்பு வெளிப்படுத்தும் உணர்வு வெளியுடன் இணைய வேண்டும். சரியான புரிதல் என்பது எழுத்தின் பல முடிச்சுக் களை அவிழ்த்த நிலையிலேயே சாத்தியமாகிறது. புரிதலை நோக்கிய தெளிவின்மையை - தெளிவுபடுத்தும் ஓர் கண்ணோட்டமே இது

- ஆசிரியர்-

# புரிதலை நோக்கிய ஓர் நகர்வு

- திசேரா -

ஒவ்வொருவரும் ஒரு உணர்வை வெவ்வேறு விதமாய் வெளிப்படுத்துகின்றனர். குழந்தை தனக்கு நேரும் ஒவ்வொரு உறுத்தலுக்கும் அழுகையையே வெளிப்படுத்துகின்றது. அதை தாயினால் என்ன தேவை என உணர்ந்து கொள்ள முடிகிறது. தாய் குழந்தையுடன் இணைந்து இருப்பதனால்.

ஒரு மனிதரை இன்னொரு மனிதர் எப்படிப்புரிந்து கொள்கிறார். அவரின் உணர்வுகளுக்கு மற்றையவர்கள் எப்படிப்பட்ட அங்கீகாரத்தை அளிக்கின்றார்கள் அல்லது எப்படி எடுத்துக் கொள்கின்றார்கள்.

புரிதல் என்பது எதற்கு அவசியப்பட்டது.

இலக்கியம், கலை பற்றியதான புரிதலை இன்னமும் சிக்கலுடன் எதிர்கொள்கின்றோம். இதனால் பலவற்றை நிராகரிப்புச் செய்கின்றோம்.

படைப்பை கொண்டாடுவதென்பது வாழ்க்கையை கொண்டாடுவதே. ஓர் உயர்ந்த படைப்பு நம்முள் நிகழ்த்தும் பரவசமும், அக்களிப்பும், அதிர்வுகளும், அர்த்தங்களும் நம்மை விகாசமடையச் செய்யும் ஆற்றல் மிக்கவை. படைப்பாளியின் கற்பனையிலேயே பிரபஞ்ச ஸ்பரிசம் நிகழ்கிறது. வாழ்வின் மெய்மையை வரலாறல்ல கலையே வெளிப்படுத்துகிறது என்கிறார் நீட்ஷே.

ஒரு படைப்பை படைப்பாளியின் பின்னணியை கொண்டு அவருக்காக பிரதியை நிராகரிக்கும் சிலாகிக்கும் நிலையை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாய தேவையும், குப்பைகளுள் இருந்து நல்லவற்றை தேடிப்பெற வேண்டிய சூழ்நிலையும் எம்மத்தியில் உள்ளது.

நற்குணங்களும் - வீரமும் நிறைந்த நாயகனும், அவனுக்கு எதிர்க்குணங்கள் கொண்ட குரூரமான வில்லனும், பண்பாட்டைக் கட்டிக்காக்கும் பெண்ணும் உள்ள இலக்கியங் களைப் புகழ்ந்து பாராட்டும் நாம், நமது அவலங்களை, உணர்வுகளை வெளிக் காட்டும், மாற்றுச் சிந்தனைகளை காட்டும், மரபை மீறும் படைப்புக்களை ஏற்றுக் கொள்வதில்லை. அதன் நிலைப்பாட்டை, பார்வையின் நுண்ணிய கீற்றுக்களை புரியாமல் அல்லது புரிய எத்தனிக்காமல் - வேண்டாதவை, புரியாதவை என ஒதுக்கி வைக்கின்றோம்.

படைப்பை புரிந்து கொள்வதற்கு எடுக்கக்கூடிய முயற்சிகள் என்னவென்பதை நோக்கமுயலுமுன் அதை பகுத்துக் கொள்வது இலகுவானதாக இருக்கும்.

I. படைப்பு எங்கிருந்து ஆரம்பமாகின்றது?

II. அது என்ன செய்கின்றது?

III. அதைப் புரிவது எப்படி - வாசக நிலையில் எமது பங்கு என்ன,

உணர்வு, அனுபவத்திற்கு அழகியல் தன்மையை கொடுக்கையில் அது கலையாக, இலக்கியமாக பரிணமிக்கின் றது.

அனுபவமும், அறிவும் இணைந்த உணர்வின் புனைவு மொழியே இலக்கியம்.

அறிவு சார்ந்த அனுபவ உணர்வு எங்களின் சமூகத்தில் இருந்து பெறப்படுகின்றது. நானும், நீங்களும் அனுபவித்த ஒன்றாகவும் அல்லது கண்ட - கேட்ட ஒன்றாகவும் கூட இருக்கலாம்.

"கதையையும் ஒரு கலை என்று நம்புகின்ற கலைஞன் தன்னுடைய ஆத்மாவை பிரதிபலிக்க தோதான கண்ணாடித் துண்டுகள் எங்கேயாவது கிடைக்கின்றனவா என்று பார்த்துக் கொண்டே போகின்றான். அதில் ஒரு துண்டைப் பொறுக்கி தன்னுடைய கலை ஆத்மாவின் ரசத்தை கொஞ்சம் அதன் பின்னால் பூசிவைக்கின்றான். அப்போது நமக்கு நம்முடைய முகத்தை அதில் பாரக்க கிடைக்கின்றது ரசிக்கின்றோம், ரசிப்பது கண்ணாடித்துண்டையல்ல கலைஞனின் ஆத்மாவை" என்பார் சுந்தரராமசாமி.

அதாவது சமூகத்துள் இருந்து உள்வாங்கும் விடயமொன்றை தன்னுடைய அனுபவத்துடன் ஒன்றித்து படைப்பாக்குகின்றான். இதிலிருந்து படைப்பை புரிய எழுத்தின் அனுபவத்துடன் ஒன்றிக்க வேண்டிய தன்மை புலப்படும்.

வாசிப்பதன் மூலம் பொழுது கழியலாம். பொழுதைக் கழிக்க வாசிப்பது என்பது வியாபார நோக்கத்தை முதன்மையாகக்கொண்டுவரும் படைப்புகளுக்கு மட்டும் பொருந்தும். இந்த வகைக்குள் அடங்குபவற்றை புரிய வாசிப்பு அறிவு மட்டும் போதுமானது. இலக்கிய தரம் வாய்ந்தவை எனக் கருதும் கலைத்துவத்துடன் கூடிய சமூக அக்கறையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைவுமொழியை உள்வாங்க சிந்தனையும் தேவைப்படும்.

இப்படைப்புகள் பல சாதனைகளை செய்கின்றது. வாசகருக்கு ஒரு புது உணர்வை, புது அனுபவத்தை, புது அறிவை, புது எச்சரிக்கையை ஏற்படுத்தி புதியதொரு மனிதராக நம்மை நமக்கும், பிறருக்கும் காட்டக்கூடியது மட்டுமன்றி நம் நிலையை உணரப்பண்ணுவதிலும் முக்கிய இடம் பெறுகின்றது. இதனூடு இலக்கியங்கள் ஏற்படுத்திய போராட்டங்களையும் கண்டு கொள்ளலாம்.

இத்தகைய படைப்பு ஒன்றை புரிய முனைகையில் முதலாவது அதனுடன் - அது வெளிப்படுத்தும் உணர்வு வெளியுடன் இணைய வேண்டிய நிலை உள்ளது. அப்போது அதன் பூரணமான தாக்கத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

இப்படைப்புக்குறித்து நம்மை சிந்திக்கத்தூண்டும். மேலதிக அடுக்கான கேள்விகளை நம்முள் எழச்செய்யும்.

மலின எழுத்துக்கள் இவை எதையும் செய்வதில்லை அரைத்தவற்றையே மீண்டும் மீண்டும் அரைத்துக்கொண்டு வாசகரை பொம்மையாக கருதி செயற்படுகிறது. காதல் - சோகம் - குடும்பம் என்ற வட்டத்துள் இன்னமும் கட்டிப் போட முனைகின்றன. இவற்றை வாசிப்பின் முதற்படியாக கொள்ளமுடியும்.

அடுத்தடுத்த கட்ட வாசிப்புகள் அனுபவத்தை, உணர்வை, புனைவை, அறிவுசார் கதைவெளியை தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடியதாக அமையவேண்டும்.

புரிதல் என்பது ஒவ்வொருவரின் நிலையைப் பொறுத்தது புரியாமை என்பது முயற்சி செய்யாமை, சோம்பேறித்தனம்.

அதனடிப்படையில் புரிவதற்கு

- விளங்கிக் கொள்ள வேண்டுமென்ற முனைப்பு
- படைப்பை உள்வாங்கும் மனநிலை
- படைப்பின் உணர்வுடன் ஒன்றுபடுதல்
- படைப்பு வெளியை இனங்கண்டு அதனுள் நுழைதல்
- தொடர் வாசிப்பும் - தேடலும்

போன்ற விடயங்களை கவனத்திற் கொள்வதனூடு புரிதலை இலகுபடுத்திக் கொள்ளலாம். புரியாத போது திரும்ப திரும்ப வாசிக்கலாம். ஆரம்பம் சிரமம் தரக்கூடியதாகவும், நேர அவகாசத்தை எடுப்பதாகவும் இருப்பினும் தொடர்பயிற்சியும் - முயற்சியும் சிறிது காலத்தில் பயனளிக்கும்.

படைப்பு என்பது உள்ளதை மட்டும் காட்டுதல் என்பதை தாண்டி - இருக்க - வேண்டியதை இல்லாமையை காட்டக்கூடியது.

சாதாரண ஒருவரால் உள்ளதை கண்டுகொள்ளமுடியும். ஆனால் படைப்பாளி இல்லாமையை காண்கின்றான். இல்லாமையின் தாக்கத்தை விஸ்வரூபத்தை உணர்கின்றான். அது படைப்பாகும் போது அப்புனைவு மொழி வாசக பார்வை புலத்தை விரிவு கொள்ளவும், வலிமை கொள்ளவும் செய்கின்றது.

சரியான புரிதல் பாதை புதிர்கள் நிறைந்த முடிச்சுகளை கொண்டிருக்கும் கோடுகளால் பின்னப்பட்ட பல வழிகளை காட்டிக்கொண்டே செல்லும். அதன் முடிவிடம் ஆச்சரியம். படர்ந்திருக்கும் கோட்டையாக இருக்கும். அங்கு வாசகர் நிலைக்கேற்ற ஏதோ ஒருவகைப்பட்ட காட்சிகளை புலப்படுத்தும். அக்காட்சிப்படிமங்களுக்கு வாசக அனுபவம் நிறங்கொடுத்து புலனுக்கு சித்தரிக்கும். இப்புரிதல் தளம் பல் பரிமாணங்களுடன் கணத்துக்குகணம் மாற்றமடைந்து கொண்டே இருக்கும். ஐன்ஸ்டைனின் இயங்கியல் தத்துவத்துக்கமைய ஒரு புனைவை வாசிக்க ஆரம்பிக்கும் நிலையும், வாசித்து முடிக்கும் போது இருக்கும் நபரும் வேறு வேறாக இருப்பர். இம்மாற்றத்தை காலம்பாதி - படைப்பு பாதி மேற்கொண்டு கொண்டே இருக்கும்.

✲✲✲

# ஈழத்தின் பிரபல நாவலாசிரியர் மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளர் - ஆய்வாளர் - 'மலர்' என்ற சிற்றிதழ் ஆசிரியர்

- அன்புமணி.இரா.நாகலிங்கம் -

ஈழத்து தமிழ் சஞ்சிகை உலகில் ஒரு திருப்பம் என்று சொல்லும் வகையில் மட்டக்களப்பில் இருந்து **மகுடம்** கலை இலக்கிய காலாண்டு சஞ்சிகை மலர்ந்துள்ளது.

காத்திரமான சிந்தனை, காத்திரமான போக்கு, காத்திரமான ஆக்கங்கள் என்பவற்றை **மகுடம்** கொண்டுள்ளது. முற்போக்காளர்கள் இதன் பின்னனியில் உள்ளனர் என்பதை ஊகிக்க முடிகிறது.

(மகுடம் ஆய்வுரையில்) அன்புமணி - வீரசேகரி 15.04.2012

✹ ......... ஏற்கனவே மலையகத்திலிருந்து வெளிவந்த தீர்த்தக்கரை தமிழகத்திலிருந்து வெளிவந்த சுபமங்களா, தற்போதும் வெளிவந்து கொண்டிருக்கும் காலச்சுவடு முதலான தமிழ்ச்சஞ்சிகைகளை நினைவு கூறும் வகையில் **'மகுடம்'** சஞ்சிகை அமைந்துள்ளது. வேறுபல சஞ்சிகைகளும் இதே அளவில் வெளிவந்துள்ளன. ஆனால் இலங்கையில் மட்டக்களப்பில் இருந்து மிகப்பிரமாண்டமாக வெளிவந்திருக்கும் முதல் இதழ் **'மகுடம்'** என கூறலாம். மிகப்பெரிய அளவில் 80 பக்கங்களில் வெளிவந்திருக்கும் **மகுடம்** காலாண்டிதழின் மகுட வாசகம் கூட காத்திரமாகவே அமைந்துள்ளது.

**"மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்**
**தானதுவாகி தழைப்பதும் மகுடம்"**

இந்த மகுட வாசகத்துக்கு அமைவாகவே சஞ்சிகையின் ஆக்கங்கள் அமைந்திருப்பது திருப்தி தருகின்றது.

(மகுடம் ஆய்வுரையில்) அன்புமணி - தினக்குரல் வார வெளியீடு - 29.04.2012

மகுடம் பற்றிய செய்திகளை - குறிப்புகளை - ஆய்வுகளை வெளியிட்ட தேசிய பத்திரிகைகளான வீரகேசரி, தினக்குரல், தினகரன், சுடர்ஒளி மற்றும் இணையத்தளங்கள் - இணைய இதழ்கள் அனைத்துக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள் கருத்துக்கள்

அன்பார்ந்த மகுடம் ஆசிரியர் அவர்களுக்கு,

அன்பு வணக்கம். மட்டக்களப்பிலிருந்து ஒரு ஆக்கபூர்வமான தரமான சிற்றிதழை வெளிக்கொணர வேண்டும் என்கிற இலக்கியப் பெருவேட்கையுடன் புதுவீச்சாக மட்டக்களப்பு இலக்கிய நெஞ்சங்களுக்கு மகுடம் சூட்டும் வகையில் வெளிவரத் தொடங்கியிருக்கும் மகுடம் இதழுக்கு இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

முதலாவது இதழில் தடம்பதித்திருக்கும் ஆக்கங்களை ஒரு இலக்கிய சமூக விஞ்ஞான நோக்கிலிருந்து காய்தல், உவத்தலற்று விமர்சனங்களை முன்வைக்க விளைகின்றேன்.

1. வடிவத்திலும், சிந்தனை முறைமையிலும் புதிய பாய்ச்சல்களை ஏற்படுத்திய புதுக் கவிதை இலக்கியமானது பலவேறு உச்சங்களையும் இன்று தொட்டுநிற்கின்றது. கணையாழிக் காலத்திலிருந்து கலாபிரியா காலம் வரையிலும், வானம்பாடி காலம் தொடங்கி சமகாலம் வரையிலும் தமிழகத்தின் புதுக்கவிதை வீச்சுகள் தனியே பகுப்பாய்விற்குரியன. ஈழத்தைப் பொறுத்தவரை மஹாகவி, நீலாவணன், மு.பொ, சண்முகம் சிவலிங்கம், நுஃமான், ஆத்மா, சிவரமணி, செல்வி, சங்கவை... என்று தொடரும் தலைமுறையினரின் கவிதை வெளிப்பாட்டினிடையே அ.ச.பாய்வாவின் "ஆயிரம் தலைவாங்கி..." இனத்துவ சங்காரத் தினை ஓரளவிற்கு படிம நிலைநின்று வெளிப்படுத்த முற்பட்டுள்ளது. என்றாலும் சு.வில்வரத்தினம் கூறுமாப் போல சொல்லைக் கடப்பதற்கும், சொற்களின் பின்னாலுள்ள மௌனத்தை இறுக்கிப் பிடிப்பதற்கும் கவிஞர் இன்னும் முற்பட வேண்டும்.

2. "பெரு நதியும் ஒரு கிளை நதியும் என்னும் பேராசிரியர் மௌனகுருவின் கட்டுரையானது அவர்தம் சொந்த அனுபவக் கலப்போடு ஈழத்தில் நிகழ்ந்தேறிய நாட்டுக்கூத்து எனப்படும் நிகழ்த்து கலையின் மீட்டுருவாக்கத்திற்கு உழைத்த ஆளுமைகளை இன்றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்வதாக அமைகிறது. நாட்டுக்கூத்துக் கலையின் செவ்விதாக்கம் பற்றியும் அது ஒருவகையான மேட்டுக்குடித் தன்மையையும், ஐரோப்பிய வழியிலான வறட்சியான வெட்டித்தறிக்கும் போக்கினையும் பற்றி பரவலான மீள்வாசிப்புகளும், கேள்விகளும் மேற்கிளம்பிவரும் இன்றைய காலச் சூழலில் அது தொடர்பாகவும் பேராசிரியர் தனது புலமைத்துவ நேர்மையுடனும் அனுபவக் கனிவுடனும் எதிர்வரும் கட்டுரைகளில் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டால் பயனுடையதாக அமையும்.

3. மட்டக்களப்பின் வரலாற்றை அறிதல் பற்றிய பேராசிரியர் செ.யோகராசாவின் கட்டுரை வரலாற்றெழுத்தியல் தொடர்பாகவும், வரலாற்றின் கருத்தியல்களில் ஏற்பட்டு வருகின்ற மாறறங்கள் பற்றியும் பொதுப்படக் கூறி மட்டக்களப்பின் வரலாறு பற்றி இதுகாலவரை ளிவந்த ஆய்வு நூல்கள் தொடர்பான சிறப்புப் பார்வையாகவும் அமைகின்றது. வரலாறு என்பது இன்று மிகக் கேவலமாக அரசியல்மயமாக்கப்பட்டு வரும் இன்றைய சூழலில், மட்டக்களப்பின் வரலாறு பற்றி ஆவணமயமாக்கப்பட்ட ஆய்வு நூல்கள் பற்றி ஒரே பார்வையில் அறிந்துகொள்வதற்கான ஒரு புலமைத்துவப் பலகணியாக இக்கட்டுரையைப் பேராசியர் வரைந்திருப்பது பல்கலைக்கழகத்திற்கு உள்ளும் வெளியிலும் மட்டக்களப்பின் வரலாறு பற்றி நேர்மையான ஆர்வத்துடன் இருப்போர்க்கு சிறந்த வரப்பிரசாதமாகும். பேராசிரியரின் இந்த முன்முயற்சியை ஓர் ஆரம்ப அடியாகக் கொண்டு **"மகுடம்"** எதிர்கால இதழ்களில் மட்டக்களப்பின் வரலாற்றியல் மீது மிக நீண்டகாலமாகப் படிந்திருக்கும் வரலாற்று அந்தகாரத்தைப் போக்குவதற்கு வாய்ப்பாக அமையும்.

4. க.அருள் சுப்பிரமணியத்தின் மிக நீண்ட கால இடைவெளிக்குப் பின் நல்ல சிறுகதையைப் படித்த உணர்வை ஏற்படுத்தியது. சொற்செட்டான வார்த்தைக் கோர்வைகளும் காட்சிப் படிம ரீதியான எடுத்துரைப்பு நடையும் சிறுகதையை மனதில் பதியச் செய்தது. ஒரு காலத்தில் ஈழத்தின் எழுத்துலகை ஆட்சி செய்த அருள் சுப்பிரமணியத்தின் சமகால இருப்புப் பற்றியும் **மகுடம்** அறியத் தந்தால் வாசகருக்கு பயனுடையதாக அமையும்.

5. வி.மைக்கல் கொலினின் பரசுராமபூமி சிறுகதை யுத்தப் பின்னணியில் அமைக்கப்பட்டிருந்தாலும் எனக்குப் புதுமைப்பித்தனின் "சாப விமோசனத்தையும்", லா.ச.ராவின் எழுத்து நடையை ஞாகப்படுத்தி யது.

6. பெரிய ஐங்கரனின் தமிழில் நவீன இலக்கியம் பற்றிய கட்டுரையானது இன்று உரத்துப் பேசப்படுகின்ற சமகாலச் சூழலில் பின்நவீனத்துவம், பின் அமைப்பியல் வாதம் போன்றவற்றின் அறிவார்த்தமான பின்னணிகளை ஒரு பருந்துப் பார்வையாக விளக்க முற்படுகின்றது. மட்டகளப்பின் நவீன வாசகர்கள் ,"ஜே.ஜே சிலகுறிப்புகள், விஷ்ணுபுரம் போன்ற நாவல்களைத் தேடி வாசிப்பதற்கும், இந்த நாவல்கள் மீதான காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை அறிந்துகொள்வதற்கும் ஒரு தூண்டுதலாக அமையும் என்ற வகையில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தியது. அத்துடன் நவீன வாசிப்புக்கான பிரக்ஞைக்கான தேவைப்பாட்டினையும் இக்கட்டுரை வலியுறுத்தி நிற்பது பெறுமதியானது.

7. ஆத்ம விசாரமும் அன்றாட வாழ்வும் என்ற தலைப்பில் அ.ச.பாய்வாவின் சிறுகதைத் தொகுதியை முன்வைத்த பேராசிரியை மௌ.சித்திரலேகா அவர்களின் குறிப்புரையானது ஒரு தேர்ந்த விமர்சனக் குறிப்பு எவ்விதமாக வரையப்பட வேண்டும் என்பதற்கான ஒரு சிறந்த முன்னுதாரணமாக அமைகின்றது. பேராசிரியையின் ஆழ்ந்த வாசிப்பும் மொழியாட்சித் திறனும் இதனைச் சாத்தியமாக்கியிருப்பதாக நான் கருதுகிறேன்.

8. இவற்றைவிட அனாரின் கவிதைகள், திசேராவின் சிறுகதை, எஸ்.பொ பற்றிய மதிப்பீடு, காலனித்துவத் திருகோணமலை எனும் நூல் தொடர்பான ஆய்வு, ஓவிய இரசனை தொடர்பான சிவரத்தினத்தின் கட்டுரை, கோ.நாதனின் கவிதை, நந்தினி சேவியரின் படைப்பாக்க முயற்சி தொடர்பான மதிப்பீடு, சிவனு மனோகரனின் சிறுகதை என்பனவும் ஒரு பன்மைத்துவத்துவமான வாசிப்பானுபவத்தை ஏற்படுத்துகின்றது.

இறுதியாகத் தங்கள் **மகுடம்** வெளியீட்டு நிகழ்வின் போது கொழும்பில் இருந்த காரணத்தினால் பங்குபற்ற முடியவில்லை. அதற்கு வருத்தம் தெரிவிப்பதோடு இலக்கியத்தை இதயத்திற்கு மிக நெருக்கமாக நேசிக்கும் எனக்கு மகுடத்தின் வரவு புதிய நம்பிக்கையைத் தருவதோடு எனது படைப்புகள், அபிப்பிராயங்களையும் அனுப்பிவைக்க முற்படுகிறேன் என்று கூறிக்கொண்டு விடைபெறுகின்றேன்.

ஒரு சிறிய ஞாபகப்படுத்தல் : 2011 ஜனவரி, மட்டக்களப்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சர்வதேச எழுத்தாளர் விழா தொடர்பான அறிமுகக் கூட்டத்தின் போது தங்களைச் சந்தித்து சொல்லாடியிருக்கிறேன்.

மிக்க நேயங்களுடன்,

**சந்திரசேகரன் சசிதரன்,**
**சமூக விஞ்ஞானங்கள் துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**
**0774833575.**

**மகுடம்** சஞ்சிகை வாசித்தேன். ஆக்கங்களும் வடிவமைப்பும் சிறப்பாக இருந்தது. நீண்ட நாட்களுக்குப்பிறகு ஒரு சஞ்சிகையின் அனைத்து ஆக்கங்களும் படிக்கும் மனம் இருந்தது. குறிப்பாக சலிப்பு இருக்கவில்லை. உங்களுடைய சிறுகதை சிறப்பாக இருந்தது. எனக்கு அந்த கதை சொல்லும் முறை பிடிக்கும் ஆதலால் பரசுராமபூமியை இரண்டு முறை வாசித்தேன்.

தவிர பெரிய ஐங்கரனின் கட்டுரையும், திசேராவின் இழத்தலின் காலமும் சஞ்சிகையின் கனதியை அதிகரிக்கிறது. வடிவமைப்பும் நேர்த்தியாக இருந்தது. சந்தோசம்.

**அ.கேதீஸ்வரன், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம்** இதழ் விரித்தால் முன்னே வருவது எழுதேன் என அடம்பிடித்து அமர்ந்திருக்கும் கதைவேந்தன் ஜெயகாந்தன், தாமரைத்தீவான் படைத்தளித்த வாழ்த்துப்பா நன்று.

"ஆயிரம் தலைவாங்கி" அற்புதம்.....! ஆனால் கவிதையல்ல....! பாய்வா அவர்களுக்கும் ஒரு ஓவர்...! மௌனகுரு அவர்களின் நாட்டுக்கூத்து அனுபவங்கள் காலவெள்ளத்துள் அமிழ்ந்த நினைவுகள் சிலவற்றை மேலெழுந்துமிதக்க விடுகின்றன. 'அனார்' கவிதைகள்... புரிதல் என்பது அவரவர் சுயம் என விட்டு விலகி நிற்கும் நவீனத்துவம் பத்து வருடங்களின் பின்பு கேட்கவேண்டும் இன்றைய மன நெருடல் நினைவிருக்கிறதா என்று எழுதுபவர்களிடம்.

'அனுபவம்' சிறுகதை ஒரு சிறிய ஆத்மவிசாரம்...! நனவிடைதோய்தலா....., கனவிடை தோய்தலா... புரிய மறுக்கின்றது. NVQ - பயனுள்ள கட்டுரை. 'பரசுராமபூமி' மிக்க ஆழ நீளமான அர்த்த புஷ்டியான பெயர். நிகழ்வும் அவ்வாறே...! அந்தச் சந்தர்ப்பத்தில் "போராடவா என்று இழுத்துச் செல்லும் இயக்கம்" எனும் வசனம் உண்மைக்கு புறம்பானது தவிர்த்திருக்கலாம்.

நவீன தமிழ் இலக்கியம் நல்லதொரு கட்டுரை சமூக மாற்றங்கள், புதியன தோற்றம் பெறுதல், பழையனகழிதல் என்பன இயக்கவியலின் பால் நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கும். "மரபை உடை... அந்த உடைப்பிலிருந்து புதுச் சிருஷ்டி உதயமாகட்டும். அதற்கு ஒரு புதுப் பெயர்வை...." - என்று இன்றைய சில இலக்கிய விமர்சகர்கள் எழுதுவது போல், ஒரு சமூகப்பிரக்ஞை உள்ள எழுத்தாளனால் 'கல்லூளி மங்கனான' நடமாட முடியாது அவனது பணி மரபை தவிடு பொடியாக்குவதாக இருக்கக்கூடாது.

நிதர்சனத்தை எழுது..., ஆனால்.... வாசகனுக்கு புரியாத...., எழுதுபவனுக்கும் புரியாத படைப்புக்கள் கால வெள்ளத்துள் அள்ளுண்டு போய் விடும். நவீனம்... பின் நவீனத்துவம்... இன்னும் புதிய பெயர் சூட்டுகை.... இவையெல்லாம் படைப்பாளிக்கு தேவையற்ற சொல்லாடல்கள் இலக்கியம்... புலம் பெயர் இலக்கியம்... புலம் திரும்பிய இலக்கியம் இவையெல்லாம் தேவைதானா....? எங்களுக்கும் முன்பு பல தலைமுறைகள் எழுதிக்குவித்தபின் பணிமுடிந்து போய் விட்டன. நாமின்று அவற்றைப் படிக்கின்றோம். எடுத்தாண்டு புதுப்படைப்புக்களை சமூகத்திற்கு கொடுக்கின்றோம். இதனையே பழையன கழிதல்... புதியன புகுதல் என்றார் நன்னூலார். அர்த்தமற்ற வார்த்தைகளால் படைப்பிலக்கியத்தைக் கட்டிப்போடாமல்...., ஏதோ வெளியிலிருந்து தான் எமக்கு பின் நவீனத்துவம் என்ற கோட்பாடு புகட்டப்படவேண்டும், நாங்களின்று உலகமறியாப் படைப்பிலக்கியவாதிகள்.... என்றெல்லாம் சிந்திக்காமல் எழுதுங்கள் சமூக நடைமுறையை இலக்கியமாக....! நவீனத்துவம் என்ற வார்த்தையை படைப்பிலக்கியத் தளத்திலிருந்து தூக்கி எறியுங்கள். உலகு தழுவிய கண்ணோட்டத்துடன் சமூகம் புரிந்து கொள்ளத்தக்கதாக எழுதுங்கள். கால்மாக்சும், ஏங்கெல்சும் இலக்கிய கர்த்தாக்களல்ல. மாஓ... கோட்பாடுகள் இலக்கியமல்ல, ஆனால்.... மக்களுக்கான நடைமுறைத் தேவைகளை...., செல்வழியே படைப்பிலக்கியம் செவ்வனே ஆற்றுதல் வேண்டுமென்பதே அவர்களது தத்துவங்களின் பொதுக்கருத்தாகும்.

சங்க இலக்கியங்களை தமிழ் அகராதியுடனும், உசாத்துணை நூல்களுடனும், அல்லது துறைசார்ந்த கல்வியியலாளருடனும் இருந்து பாட விதானச் சித்தி எய்துகைக்காக படிக்கும் மாணவனாக வாசகன் இருக்கவேண்டுமென இன்று நவீனத்துவம், பின்நவீனத்துவம் என்று பேசும் எழுத்தாளர்கள் கருதுவார்களென்றால்...., தயவு செய்து அவர்கள் எழுதியவற்றை அவர்களது பெட்டகத்துள் வைத்துப் பூட்டிவைப்பார்களாக....! 'திசேரா....' வின் "இழத்தலின் காலம்" நல்ல தொருவிடயத்தை படிமமாக அங்கதச்சுவையுடன் சொல்லவிழைகிறது. ஆனால் அந்த அர்த்தமற்ற நவீனத்துவ வேட்கை அவரை எங்கோ ஓர் இருட்குகையுள் இழுத்துச் சென்று புதைத்து விடுகிறது. நாம் என்ன செய்யலாம்...? புரிதலின்படி புரியட்டும் வாசகர்க்கு....!

எஸ்.பொ.இணையற்ற வல்லபம்....! இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அ.ச.பாய்வாக்கு மீண்டுமொரு பாராட்டும் - நன்றியும்

நான் ஒரு எழுத்தளனாகப் பேனா நிறுத்த முதல்.... க.பொ.த படிக்கும் போதே... கல்முனை மணமகள் புத்தகசாலையில் எஸ்.பொ.வின் நூல்களை வாங்கிப்படித்தவன். "சடங்கு" இவரது நாவல் இலக்கிய ஆளுமைக்கு நிகரற்ற சான்று...!

இன்றைய இலக்கிய உலகம்...., நவீனத்துவம் ஆனாலும் சரி...., பின் நவீனத்துவமானாலும் சரி...., அமைப்பியல்.... பின் அமைப்பியல் என்று தத்துவம் வகுப்பவர்களாயினும் சரி... தலை நிமிர்ந்து அண்ணாந்து பார்க்கவேண்டிய ஒரு இமயச்சிகரம் இந்த எஸ்.பொ.என்றால் மிகையாகாது.

கோ.நாதனின் இரண்டு கவிதைகள் அவரது கவிதை மீதான வேட்கையை கோடிடுகின்றன. கவிதைக்கு யாப்பிலக்கணம் தான் தேவை என்ற கட்டாயமில்லை. ஆனால் கவிதை என்பது முதலில் படிப்பவனின் உணர்வைச் சுண்டி இழுத்து உள்ளத்தில் ஒரு லகரியை - ரசனையை ஏற்படுத்த வேண்டும். நவீனத்துவ மாயைக்குள் ஏமாறாமல் சுயமாக எழுதினால் வெற்றி பெறலாம்.

நந்தினி சேவியரின் சிறுகதை பற்றிய விமர்சனம் நாற்பது வருடங்களுக்கு முந்தி நினைவினை மீட்கச் செய்துவிட்டது. 1973ம் ஆண்டு காலப்பகுதி என்று நினைக்கின்றேன். கொழும்பு BMICH அல்லது திருமலை இந்துக்கல்லூரி.... இரண்டில் ஓரிடம் அந்த மகாநாட்டு இலக்கிய ஆய்வரங்கில் படிக்கப்பட்ட நந்தினி சேவியரது சிறுகதை ஒன்றினை விமர்சனம் செய்யும் பணி எனக்குத் தரப்பட்டது. ஞாபகம் இருந்தால் நந்தினி சேவியர் மறு இதழில் எழுதி ஞாபகமூட்டலாம். இவர் ஒரு சிறந்த யதார்த்த பூர்வமான படைப்பாளி தான் என்பதை நாங்கள் முன்பே இனங்கண்டுள்ளோம்.

மகுடத்தை அலங்கரிக்கும் 'குறுநாவல்' உயிரோட்ட மான படைப்பு - "இன்றைக்காவது"... இது வித்தியாசமான ஒரு நடையில் ஒருவரின் பேச்சுடன் முடிவுவரை நகர்கிறது. கதை உணர்வுபூர்வமாக..., உண்மைத் தன்மையுடன்...., ரசனைத் தன்மையுடன் கதை நடத்திச் செல்லப்பட்டமையால்...., ஏதோ நடந்து முடிந்த ஒரு செய்தியைப் படிப்பது போல் மனதில் முட்டுகிறது. இது போலும் பலநூறு உண்மைச் சம்பவங்கள் எம்மக்களது வாழ்வைப் பெரும் சூறைக்காற்றாய் அலங்கோலப்படுத்தியது யாமறிந்ததே!

"நகர வீதிகளில் நதிப்பிரவாகம்" - நண்பர் ஷெல்லிதாசன் கவிதைக்கு நிறைவான பாராட்டுக்கள். ஒரு சிறிய கருத்துக்குப் பல அடிகளில் பல விடயங்களை எடுத்தாளுதல் கவிதையை ஒரு உச்ச நிலைக்கே கொண்டு விடுகிறது. பவித்ரனின் ஒரு நவீன கவிதை..., புரிதல் முடியுமாயின் ஒரு சிறந்த படைப்பு. சர்வதேச அரங்கில் புஷ்பிக்கும் புதுக்கவிதை போலிருந்தாலும்... சற்று வித்தியாசமான கருத்தாடல்கள்... பாராட்டலாம்...!

சிவனு.மனோகரனின் சிறுகதை சிறந்த உருவகத்துடன் நிமிர்ந்து நிற்கிறது. ஒரு பூரணத்துவமான படைப்பு. சிறுகதைக்கான மரபினின்றும் சற்று விலகி நவீன பாணியில் நல்லதொரு சிறுகதை.... ஜென்சியும் ஜேசுமணி சித்தப்பாவும்.

"முற்றுப் பெறாத பேச்சு வார்த்தை" - முதிர்ந்த அரசியல் ஞானத்தின் ஆழப்பார்வை. பல்வேறுபட்ட தளங்களில் நின்று ஈழத்தமிழ்க்குடியின் வரலாற்றை அன்றிலிருந்து இன்றுவரை ஆதாரங்களுடன் ஆய்வு செய்கின்றது.

**மகுடம்** கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ் என்பதுடன்...., கலை - இலக்கிய - சமூக பண்பாட்டு - அரசியல் காலாண்டிதழ் என்று குறிப்பிடுதல் பொருத்தமாகவிருக்கும்.

இறுதியாக தமிழ்க்கவிதை புலத்தில் முஸ்லீம்கள் என்னும் கட்டுரை சி.ரமேஸ் என்பவர் எழுதியது.., இது ஒரு சில கவிஞர்களது படைப்புக்களையும், அந்தந்தக் கவிஞர்களையும் எடுத்துக் காட்டி நிற்கிறது. இன்னும் பல முஸ்லீம் கவிஞர்களது ஆற்றல் நிறைந்த இலக்கிய வெளிக்காட்டல்களை தொட்டுச் செல்ல இவரால் முடியாமற் போய்விட்டது என்று தான் கூற வேண்டும்.

ஆனால் 1950 - 1980 எனும் காலப்பகுதிக்குள் நின்று ரமேஷ் நிகழ்த்திய தேடல் சிறப்பான ஓர் ஆய்வு என்று எடுத்துக்கொள்ளலாம். அதிகமாக நுஃமான் அவர்களது படைப்புக்கள் பற்றிய ஆய்வுதான் இக் கட்டுரையில் விஞ்சி நிற்கின்றது. மரபுக்கும் - புதுமைக்கும் கவிதை இலக்கியப் பரப்பில் களம் பல கண்ட...., அத்துடன் படைப்பிலக்கியம் மக்களுக்காகவா....? அல்லது படைப்பாளியின் ஆத்ம திருப்திக்காகவா....? என்று விவாத மேடைகளைக் கண்ட காலப்பகுதி இந்த 1950 - 1980 என்பது எனது அனுபவம்.

பொதுவாக **"மகுடம்"** இதழ் தனது முதலாவது வருகையிலேயே அனேக துறைகளில் காலூன்றி நிற்பது புலனாகிறது. பல்நோக்கும், பழமை, புதுமை, நவீனத்துவம், பின் நவீனத்துவம், அமைப்பியல் என்று விரிவடைந்த பார்வை என்பன சிந்திக்கவைக்கிறது.

**"மகுடம்"** நிலை பெற்று நிற்க இலக்கிய நெஞ்சங்கள் பொருளாதார ரீதியாகக் கைகொடுக்க வேண்டுமெனக் கோரி நிறைவு செய்கிறேன்.

**கலாபூஷணம் கவிஞர் - முல்லை வீரக்குட்டி - தம்பிலுவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆண்டில் புதிய அறிமுகம்

**Eastern Association Photographic Art**

EAPA

ஆதரவில்

05.04.2008 அன்று மட்டக்களப்பு அரசடி மகாஜனக் கல்லூரி கலையரங்கில்
இடம்பெற்ற "மக்களுடன் உறவாடல்" கண்காட்சியின் போது கிழக்கில் முதன்முறையாக
"கரிஷ்மா அல்பத்தை" அறிமுகப்படுத்திய
"ஓவியா" ஸ்தாபனத்தாரின் மற்றுமோர்
புதிய அறிமுகம்

## CNT அல்பம்

| | |
|---|---|
| 08x24 | (08x12) |
| 12x24 | (12x12) |
| 10x30 | (10x15) |
| 12x30 | (12x15) |
| 12x36 | (12x18) |

ஆகிய அளவுகளில்

Gloosy - Matt - Velvettouch
Lostor - silktouch Metatlie
ஆகிய தரங்களில் "CNT அல்பங்கள்"
செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

**"ஓவியா ஸ்ரூடியோ"**

28/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.

தொலைபேசி இல.: 077 6127263, 075 9607599

**ஸ்ரூடியோ மற்றும் படப்பிடிப்பாளர்களுக்கு விசேட விலையில்**

---

# எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்

நடிப்பு, இலக்கியம், இசை, நடனம், ஒளிப்பதிவு, இயக்குநர், பாடகர், பாடகி, வசனம், நகைச்சுவை, குணச்சித்திரம் போன்ற எண்ணற்ற திறமைகள் உள்ளவரா நீங்கள்!

## உங்கள் திறமைகளை கலை உலகிற்கு அள்ளித்தரும் திறவு கோலாக நாங்கள்!

மட்டக்களப்பின் கலை இலக்கியச் செயற்பாட்டுடன் **குறும்பட** முயற்சிகளிலும் ஈடுபட உள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் அனுபவம் மற்றும் கலைத்திறமைகளை குறிப்பிட்டு உங்கள் விண்ணப்பப்படிவங்களை எமக்கு அனுப்பிவையுங்கள்.

**மகுடம் கிரியேஷன்ஸ்**
90, பார்வீதி, மட்டக்களப்பு.
தொ.பே.இல.: 0774338878



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடம் வெளியீட்டு விழா - அறிமுகவிழா நிகழ்வுகள்

## மட்டக்களப்பில் வெளியீடு









## அறிமுகம் - திருகோணமலை





## அறிமுகம் - சுன்னாகம் - அல்வாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org